# TAMIL NADU AGRICULTURAL SCHEMES MADE SIMPLE

(Central and State Government Schemes Explained in English and Tamil)

# தமிழ்நாட்டில் வேளாண்மைத் திட்டங்கள் எளிய வழிகாட்டி

(மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்கள் ஆங்கிலம் மற்றும் தமிழில் விளக்கம்)



**Volume/தொகுதி-I**

## Central Sector and Centrally Sponsored Schemes

## மத்திய அரசின் நேரடி ஆதரவு மற்றும் பங்களிப்புப் பெற்ற வேளாண்மை திட்டங்கள்

ICAR-SUGARCANE BREEDING INSTITUTE
இ.வே.ஆ.க.–கரும்பு இனப்பெருக்கு நிறுவனம்
COIMBATORE - 641 007 Tamil Nadu
கோயம்புத்தூர், தமிழ்நாடு

# TAMIL NADU AGRICULTURAL SCHEMES MADE SIMPLE

(Central and State Government Schemes Explained in English and Tamil)

# தமிழ்நாடு வேளாண்மைத் திட்டங்கள் எளிய வழிகாட்டி

(மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்கள்- ஆங்கிலம் மற்றும் தமிழில் விளக்கம்)

## Volume/தொகுதி I

## Central Sector and Centrally Sponsored Schemes

## மத்திய அரசின் நேரடி ஆதரவு மற்றும் பங்களிப்புப் பெற்ற வேளாண்மை திட்டங்கள்

**Viksit Krishi Sankalp Abhiyan (VKSA)**

**வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கம்**

**ICAR - SUGARCANE BREEDING INSTITUTE**

**भा.कृ.अनु.प. गन्ना प्रजनन संस्थान**

**COIMBATORE कोयम्बत्तूर - 641 007**

**TAMIL NADU तमिलनाडु**

**Correct citation of the publication**

R. Karuppaiyan, P. Govindaraj, K. Kannan, P. Murali, A. Suganya, R. Selvakumar, N. Geetha, R. Gomathi, M. Alagupalamuthirsolai, R. Gobu, P. Geetha, K. Elayaraja, R. Raja, M. Gnanavel, K. Selvamuthu, V. Anusheela, P. Amudha, P. Jagadeshwaran, and M. Kowshika. 2026. **Tamil Nadu Agricultural Schemes Made Simple - Central and State Government Schemes Explained in English and Tamil.** Vol I. ICAR-Sugarcane Breeding Institute, Coimbatore, 216p (Bilingual)

இரா.கருப்பையன், பெ. கோவிந்தராஜ், கூ. கண்ணன், ப. முரளி, அ. சுகன்யா, இரா. செல்வகுமார், ந. கீதா, இரா. கோமதி, மு. அழகுபழமுதிர்சோலை, ரா. கோபு, பொ. கீதா, க. இளையராஜா, ரெ. ராஜா, மு.ஞானவேல், க. செல்வமுத்து, வ. அனுஷீலா, ப. அமுதா, ப. ஜகதீஷ்வரன், மற்றும் மா. கௌசிகா. 2026. **தமிழ்நாடு வேளாண்மைத் திட்டங்கள் எளிய வழிகாட்டி- மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்கள் ஆங்கிலம் மற்றும் தமிழில் விளக்கம்.** தொகுதி I. இ.வே.ஆ.க.-கரும்பு இனப்பெருக்கு நிறுவனம், கோயம்புத்தூர். 216p (இருமொழி)

| Note to the Readers |
| --- |
| Volume I of this book presents the basic details of the Central Sector and Centrally Sponsored Schemes. Volume II provides State Government Schemes and subsidy details specific to the State of Tamil Nadu for the year 2025-26. For a better understanding of the scheme's implementation, readers are requested to consult both volumes. |

**Printed and Published by**
The Director
ICAR-Sugarcane Breeding Institute
Coimbatore - 641 007, Tamil Nadu, India

February, 2026

E-Book

ISBN No. 978-93-85267-50-5

Copyrights

All Rights reserved
@ ICAR-Sugarcane Breeding Institute, Coimbatore-641 007, TN, India

डॉ. देवेश चतुर्वेदी
सचिव
**Dr. Devesh Chaturvedi**
**Secretary**

सत्यमेव जयते

भारत सरकार
कृषि एवं किसान कल्याण मंत्रालय
कृषि एवं किसान कल्याण विभाग
**Government of India**
**Ministry of Agriculture & Farmers Welfare**
**Department of Agriculture & Farmers Welfare**



## FOREWORD

Agricultural extension plays a crucial role in translating policies, technologies, and welfare measures into tangible benefits for farmers. Creating awareness about Government schemes, entitlements, and support systems is as important as developing new technologies. Well-informed farmers are better equipped to adopt innovations, manage risks, and improve their livelihoods. Therefore, strengthening agriculture extension efforts and ensuring clear communication of scheme guidelines at the grassroots level remain central to inclusive and sustainable agricultural development.

The ICAR and the Ministry of Agriculture & Farmers Welfare, Government of India has launched the *Viksit Krishi Sankalp Abhiyan* (VKSA) in 2025, an outreach pan-India programme that aims to ensure that the latest and improved agro-technologies developed by the ICAR institutes and SAUs in the concerned State, as well as the benefits of various development schemes on agriculture and allied sector launched by the Central and State Governments reaches every farmer across the country.

In this context, the bilingual publication "Tamil Nadu Agricultural Schemes Made Simple" is a timely and commendable initiative. The book systematically compiles and explains Central and State Government agricultural schemes in English and Tamil, making it accessible to a wide spectrum of users, including farm scientists, extension officials, and farmers. The information has been presented in a clear, concise, and field-oriented manner. Such efforts significantly enhance the outreach and impact of public investments in the farm sector.

I appreciate the efforts of the authors from the ICAR–Sugarcane Breeding Institute, Coimbatore, for undertaking this comprehensive documentation. I urge all agricultural officers, scientists, and field-level extension workers to use this resource actively during village-level interactions. Let us reaffirm our commitment to the farmers' welfare by ensuring that no scheme remains unknown and no opportunity untapped.

I am sure that this book will serve as a valuable guide for all stakeholders and contribute meaningfully to the goal of prosperous farmers and a resilient agricultural sector in Tamil Nadu and the country as a whole.

**(Dr. Devesh Chaturvedi)**

**New Delhi**

Office : Krishi Bhawan, New Delhi-110001, दूरभाष / Phone : 23382651, 23388444, E-mail : secy-agri@gov.in

# PREFACE

Indian agriculture is undergoing a phase of rapid transformation driven by technological innovations, policy reforms, and a strong focus on farmers' welfare. Both the Government of India and the Government of Tamil Nadu have launched a wide range of schemes, incentives, subsidies, and awards to enhance farm productivity, sustainability, income security, and resilience of the farming community. The effectiveness of these initiatives will, however, largely depend on timely awareness, clarity of information, and proper guidance at the grassroots level.

It is with this objective that the present bilingual publication titled "Tamil Nadu Agricultural Schemes Made Simple **/** தமிழ்நாடு வேளாண்மைத் திட்டங்கள் எளிய வழிகாட்டி" has been compiled by the staff of the ICAR–Sugarcane Breeding Institute, Coimbatore, a premier Central Government's sugarcane research institute and also a State Nodal Office for the 'Viksit Krishi Sankalp Abhiyan (VKSA)' outreach programme in the State of Tamil Nadu.

This E-book is published in two volumes as part of the VKSA activities. Volume I presents the basic features and operational details of 33 Central Sector and Centrally Sponsored Schemes, while Volume II comprehensively documents 107 State-specific schemes, subsidies, incentives, and awards implemented in Tamil Nadu for the year 2025–26. Care was taken to present the information with accuracy, simplicity, and relevance to the local conditions.

The primary target users of this book include scientists of the ICAR institutes, SMS of the KVK, faculty of State Agricultural Universities in Tamil Nadu (TNAU, TANUVAS and TNJFU), and agriculture extension officials of the Tamil Nadu State. These stakeholders play a pivotal role in farmer outreach activities such as the VKSA, which involves frequent village visits, farmers-scientists' interactions, and technology dissemination. We hope that this publication will support the VKSA activities in the State. We presented the information in a simple style and bilingual Tamil, along with English. This book will therefore empower farmers to easily understand various government schemes, eligibility criteria, benefits, application procedures, etc.

We place on record our gratitude to the Indian Council of Agricultural Research (ICAR), Secretary, M/o AFW, Agriculture Production Commissioner, Tamil Nadu for their support. We acknowledge the encouragement received from the Director and colleagues of the ICAR-Sugarcane Breeding Institute in the preparation of this book. We extend our gratitude to Dr. Devesh Chaturvedi, IAS, Secretary, M/o. Agriculture and Farmers' Welfare, Govt. of India and Smt. M. Tamil Selvi, Joint Director of Agriculture, Coimbatore for graciously contributing Foreword to the book. Their thoughtful words not only enrich the book but also lend it greater credibility and inspiration.

We sincerely hope that this publication will serve as a ready reference, training manual, and awareness tool for all stakeholders involved in agricultural development in the State.

16.2.2026 — Authors

CONTENT (Volume I)


| # | Title | Page |
|---|---|---|
| 1 | An Introduction to the Central Sector and Centrally Sponsored Agricultural Schemes | 1 |
| | மத்திய அரசின் நேரடி ஆதரவு மற்றும் பங்களிப்புப் பெற்ற வேளாண்மை திட்டங்கள்: ஓர் அறிமுகம் | 3 |
| 2 | Agri-Clinics & Agri-Business Centres (AC&ABC) | 5 |
| | விவசாய ஆலோசனை மையங்கள் (AC) மற்றும் வேளாண் வணிக மையங்கள் (ABC) | 7 |
| 3 | Agricultural Technology Management Agency (ATMA) | 10 |
| | வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) | 12 |
| 4 | Agriculture Infrastructure Fund (AIF) | 14 |
| | விவசாய உட்கட்டமைப்பு நிதி (AIF) | 18 |
| 5 | e-NAM | 24 |
| | மின்னணு தேசிய வேளாண்மை சந்தை (eNAM) | 28 |
| 6 | Farmers Grievance Redressal System (FGRS) | 33 |
| | விவசாயிகள் குறைதீர்க்கும் முறைமை (FGRS) | 35 |
| 7 | Farmers Producer Organisations (FPO) | 37 |
| | உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPO) | 41 |
| 8 | Integrated Scheme for Agricultural Marketing (ISAM) | 46 |
| | வேளாண் சந்தைப்படுத்தலுக்கான ஒருங்கிணைந்த திட்டம் (ISAM) | 49 |
| 9 | Kisan Call Centre (KCC) | 53 |
| | விவசாயிகள் அழைப்பு மையம் (KCC) | 56 |
| 10 | Kisan Credit Card (KCC) | 60 |
| | உழவர் கடன் அட்டை (KCC) | 64 |
| 11 | m-Kisan | 70 |
| | எம்-கிசான் | 72 |
| 12 | National Food Security and Nutrition Mission (NFSNM) | 75 |
| | தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கம் (NFSNM) | 78 |
| 13 | National Pest Surveillance System (NPSS) | 82 |
| | தேசியப் பூச்சி கண்காணிப்பு முகமை (NPSS) | 84 |
| 14 | Pradhan Mantri Dhan Dhanya Krishi Yojana (PMDDKY) | 87 |
| | பிரதம மந்திரி வேளாண்மை தானியங்கள் செழிப்புத் திட்டம் (PMDDKY) | 89 |
| 15 | Pradhan Mantri Fasal Bima Yojna (PMFBY) | 92 |
| | பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டம் (PMFBY) | 101 |
| 16 | Pradhan Mantri Kisan Maandhan Yojna (PMKMY) | 113 |
| | பிரதம மந்திரி விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் (PMKMY) | 116 |

| # | Title | Page |
|---|---|---|
| 17 | Pradhan Mantri Kisan Samman Nidhi (PM-KISAN) | 119 |
| | பிரதம மந்திரி விவசாயிகள் கௌரவ நிதித் திட்டம் (PM-KISAN) | 122 |
| 18 | Pradhan Mantri Krishi Sinchayee Yojana (PMKSY) | 125 |
| | பிரதம மந்திரி வேளாண்மை நீர்ப்பாசனத் திட்டம் (PMKSY) | 128 |
| 19 | Rashtriya Krishi Vikas Yojana (RKVY) | 132 |
| | தேசிய வேளாண்மை முன்னேற்றத் திட்டம் (RKVY) | 135 |
| 20 | Self-Help Groups (SHGs) | 138 |
| | சுய உதவிக் குழுக்கள் (SHG) | 147 |
| 21 | Soil Health Card (SHC) Scheme | 158 |
| | மண்வள அட்டைத் திட்டம் (SHC) | 161 |
| 22 | The National Beekeeping and Honey Mission (NBHM) | 165 |
| | தேசிய தேனீ வளர்ப்பு மற்றும் தேன் இயக்கம் (NBHM) | 170 |
| 23 | Schemes related to Natural and Organic Farming | 177 |
| | இயற்கை மற்றும் அங்கக வேளாண்மை சார்ந்தத் திட்டங்கள் | 183 |
| 23.1 | Jaivik Kheti Portal / Organic Product Marketing | 179 |
| | ஜெய்விக் கேத்தி இணையதளம் / அங்ககப் பொருட்களை சந்தைப்படுத்துதல் | 186 |
| 23.2 | National Mission on Natural Farming (NMNF) | 179 |
| | தேசிய இயற்கை வேளாண்மை இயக்கம் (NMNF) | 186 |
| 23.3 | National Programme for Organic Production (NPOP) | 180 |
| | தேசிய அங்கக உணவு உற்பத்தித் திட்டம் (NPOP) | 187 |
| 23.4 | Paramparagat Krishi Vikas Yojana (PKVY) | 180 |
| | பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (PKVY) | 188 |
| 24 | Schemes Related to Chemical Fertilizers | 192 |
| | இரசாயன உரங்கள் தொடர்பானத் திட்டங்கள் | 201 |
| 25 | Recently launched Schemes | 212 |
| | சமீபத்தில் தொடங்கப்பட்ட திட்டங்கள் | 214 |
| 25.1 | Mission for Aatmanirbharta in Pulses (Self-reliance in Pulses) | 212 |
| | பருப்பு உற்பத்தி ஆத்மநிர்பார் இயக்கம் (பருப்பு வகைகளில் தன்னிறைவு) | 214 |
| 25.2 | Mission for Cotton Productivity (Cotton Mission) | 212 |
| | பருத்தி உற்பத்தித்திறனுக்கான இயக்கம் (பருத்தி இயக்கம்) | 215 |
| 25.3 | National Mission on High Yielding Seeds (NMHYS) | 213 |
| | உயர் விளைச்சல் விதைகளுக்கான தேசிய இயக்கம் (NMHYS) | 215 |

Volume / தொகுதி II

## State and Central Schemes Implemented in Tamil Nadu
## தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் மாநில மற்றும் மத்திய வேளாண்மைத் திட்டங்கள்

Content


| # | Title |
|---|---|
| 1 | Kalaignarin All Village Integrated Agricultural Development Programme (KAVI-ADP) |
| | கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் (KAVI-ADP) |
| 2 | Chief Minister's Mannuyir Kaathu Mannuyir Kaappom Scheme (CM MK MKS) |
| | முதலமைச்சரின் மண்ணுயிர்க்காத்து மண்ணுயிர்க்காப்போம் திட்டம் (CM MK MKS) |
| 3 | Welfare Schemes for Farmers, Milk Producers and Fishermen |
| | விவசாயிகள், பால் உற்பத்தியாளர்கள் மற்றும் மீனவர்களுக்கான நலத்திட்டங்கள் |
| 3.1 | Chief Minister's Uzhavar Pathukappu Thittam (CMUPT) |
| | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் (CMUPT) |
| 3.2 | Pradhan Mantri Kisan Samman Nidhi (PM-KISAN) |
| | பிரதம மந்திரியின் விவசாயிகள் கௌரவ நிதித் திட்டம் (PM- KISAN) |
| 3.3 | Tamil Nadu Farmer Welfare & Safety Scheme |
| | தமிழ்நாடு விவசாயிகள் நலன் மற்றும் பாதுகாப்புத் திட்டம் |
| 3.4 | Peraringnar Anna Co-Operative Milk Producers' Welfare Fund |
| | பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நல நிதி |
| 3.5 | Fishermen Welfare Schemes |
| | மீனவர் நலத்திட்டங்கள் |
| 4 | Special Package to Increase Crop Area and Food Grain Production |
| | பயிர் பரப்பளவு மற்றும் உணவு தானிய உற்பத்தியை அதிகரிப்பதற்கான சிறப்புத் தொகுப்பு |
| 5 | Rashtriya Krishi Vikas Yojana (RKVY) Schemes in TN |
| | தேசிய வேளாண்மை முன்னேற்றத் திட்டங்கள் (RKVY) |
| 6 | Food and Nutrition Security (FNS) Scheme |
| | உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்புத் திட்டம் (FNS) |
| 7 | Important National Mission Schemes Implemented in TN |
| | தமிழகத்தில் செயல்படுத்தப்படும் சில முக்கிய தேசிய இயக்கத் திட்டங்கள் |
| 7.1 | National Mission on Edible Oils (NMEO)- Oilseeds and Oil Palm |
| | தேசிய சமையல் எண்ணெய் இயக்கம் (NMEO): எண்ணெய் வித்துக்கள் மற்றும் எண்ணெய் பனை |

| # | Title |
|---|---|
| 7.2 | National Mission on Organic Farming (NMOF) and National Mission on Natural Farming (NMNF) |
| | தேசிய உயிர்ம வேளாண்மை இயக்கம் (NMOF) மற்றும் தேசிய இயற்கை வேளாண்மை இயக்கம் (NMNF) |
| 7.2.1 | National Mission on Organic Farming (NMOF) |
| | இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (NMNF) |
| 7.2.2 | Paramparagat Krishi Vikas Yojana (PKVY) |
| | பாரம்பரிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் (PKVY) |
| 7.2.3 | Organic Certification under Organic Farming Promotion Scheme |
| | அங்கக வேளாண்மை ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் அங்ககச் சான்றிதழ் |
| 7.3 | Nutrition Farming Mission (NFM) / Nutrient-Sensitive Agriculture Mission |
| | ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் |
| 7.4 | National Horticulture Mission (NHM) |
| | தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) |
| 7.5 | Tamil Nadu Millet Mission |
| | தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் |
| 7.6 | National Bamboo Mission |
| | தேசிய மூங்கில் இயக்கம் |
| 7.7 | Palmyrah Development Mission (PDM) |
| | பனை மேம்பாட்டு இயக்கம் (PDM) |
| 7.8 | National Horticulture Mission (NHM) of the MIDH |
| | MIDH-இன் தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) |
| 8 | Integrated Coconut Development Scheme (ICDS) |
| | ஒருங்கிணைந்த தென்னை மேம்பாட்டுத் திட்டம் (ICDS) |
| 9 | Schemes related to Agriculture Mechanization in Tamil Nadu |
| | தமிழ்நாட்டில் வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கா திட்டங்கள் |
| 9.1 | Sub-Mission on Agricultural Mechanization (SMAM) |
| | வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கம் (SMAM) |
| 9.2 | End to End Mechanization |
| | விதைப்பு முதல் அறுவடை வரை இயந்திரமயமாக்குதல் |
| 9.3 | e-Vaadagai Services |
| | e-வாடகை சேவைகள் |
| 9.4 | Skill Development Training for Operating Agricultural Machinery |
| | வேளாண் இயந்திரங்களை இயக்குவதற்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி |

| # | Title |
| --- | --- |
| 10 | Schemes Promoting Solar Power for Agriculture in Tamil Nadu<br>வேளாண்மையில் சூரிய சக்தியை ஊக்குவிக்கும் திட்டங்கள் |
| 10.1 | Chief Minister's Scheme of Solar Powered Pump Sets<br>முதலமைச்சரின் சூரிய சக்தி பம்ப் செட்டுகள் திட்டம் |
| 10.2 | Solar Fencing System<br>சூரிய மின்வேலி அமைத்தல் |
| 10.3 | Solar Driers<br>சூரிய ஒளிக் கூடார உலர்த்தி |
| 10.4 | Agricultural Feeders Solarisation (Feeder Segregation) by TANGEDCO<br>TANGEDCO-இன் வேளாண் பாசன மின்வழித் தடங்களை சூரிய ஆற்றல் மயமாக்கும் திட்டம் |
| 11 | Agriculture Extension Schemes Implemented in Tamil Nadu<br>தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் வேளாண் விரிவாக்கத் திட்டங்கள் |
| 11.1 | Chief Minister's Famers Service Centre<br>முதலமைச்சரின் உழவர் நல சேவை மையம் |
| 11.2 | Village Outreach Campaign / Uzhavarai Thedi Velanmai - Uzhavar Nalathurai<br>உழவரைத் தேடி வேளாண்மை-உழவர் நலத்துறை |
| 11.3 | Uzhavar Aluvalar Thodarbu Thittam (UATT 2.O)<br>உழவர் அலுவலர் தொடர்புத் திட்டம் 2.0 (UATT 2.0) |
| 11.4 | Sub-Mission on Agricultural Extension (SMAE) under NMAET<br>NMAET-இன் வேளாண்மை விரிவாக்கத் துணை இயக்கம் (SAME) |
| 11.5 | One Village, One Crop Demonstration<br>ஒரு கிராமம் – ஒரு செயல் விளக்கம் |
| 12 | Schemes/ Programmes related to Seed Quality and Certification<br>விதைத் தரம் மற்றும் சான்றளிப்பு தொடர்பான திட்டங்கள் |
| 12.1 | Seed Certification Programme<br>விதைச் சான்றளிப்பு செயல்பாடுகள் |
| 12.2 | Seed Quality Control Programme<br>விதை தரக் கட்டுப்பாட்டுச் செயல்பாடுகள் |
| 12.3 | Seed Testing Scheme<br>விதைப் பரிசோதனைத் திட்டம் |
| 12.4 | Production of Quality / Certified Seeds<br>தரமான மற்றும் சான்று விதைகள் உற்பத்தித் திட்டம் |

| # | Title |
|---|---|
| 12.5 | Sub-Mission of Seeds and Planting Materials<br>விதைகள் மற்றும் நடவுப் பொருட்கள் துணைத் திட்டம் |
| 12.6 | Training Scheme on Certified Seed Production and Quality Control<br>சான்று விதை உற்பத்தி மற்றும் தரக் கட்டுப்பாட்டிற்கான பயிற்சிகள் |
| 13 | Schemes related to Post Harvest Processing and Value Addition<br>வேளாண் விற்பனை, அறுவடைக்குப் பிந்தைய பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டல் தொடர்பான திட்டங்கள் |
| 13.1 | AGMARK Quality Certification<br>அக்மார்க் தரச் சான்றிதழ் |
| 13.2 | Agriculture Infrastructure Fund (AIF)<br>வேளாண் உட்கட்டமைப்பு நிதி (AIF) |
| 13.3 | electronic National Agriculture Market (eNAM)<br>மின்னணு தேசிய வேளாண் சந்தை (eNAM) |
| 13.4 | National Agriculture Development Project (NADP)<br>தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டம் (NADP) |
| 13.5 | National Horticulture Mission (NHM) of the MIDH<br>MIDH இன் தேசிய தோட்டக்கலை இயக்கம் |
| 13.6 | Pledge Loan for Farmers and Traders<br>விவசாயிகள் மற்றும் வணிகர்களுக்கான அடமான (பொருளீட்டு) கடன் |
| 13.7 | Pradhan Mantri Kisan SAMPADA Yojana (PMKSY)<br>பிரதான் மந்திரி கிசான் சம்பதா யோஜனா (PMKSY) |
| 13.8 | Establishment of Start-up in the Agriculture, Horticulture, Animal Husbandry and Fisheries Sectors<br>வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்வளத் துறைகளில் புத்தாக்க நிறுவனங்கள் தொடங்குதல் |
| 13.9 | Supply Chain Management Project (SCMP)<br>தமிழ்நாடு விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம் (SCMP) |
| 13.10 | Tamil Nadu Irrigated Agriculture Modernization Project (TNIAMP)<br>தமிழ்நாடு இறவைப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP) |
| 13.11 | Uzhavar Sandhai<br>உழவர் சந்தை |
| 13.12 | Value chain development of MSME<br>குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் மதிப்புக் கூட்டல் திட்டம் |

| # | Title |
|---|---|
| 14 | Schemes related to Water Management, Watershed Development, Rainwater Harvest and Dryland Development |
| | நீர் மேலாண்மை, நீர்வடிப் பகுதி மேம்பாடு, மழைநீர் சேகரிப்பு மற்றும் மானாவாரி நில மேம்பாடு தொடர்பான திட்டங்கள் |
| 14.1 | Climate Proofing of Rainfed Watersheds in Salem and Virudhunagar Districts |
| | சேலம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் மானாவாரி நீர்வடிப் பகுதிகளின் பருவநிலை மாற்றப் பாதுகாப்புத் திட்டம் |
| 14.2 | Creation and Maintenance of Rainwater Harvesting Structures |
| | மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல் |
| 14.3 | Dam Rehabilitation and Improvement Programme |
| | அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் |
| 14.4 | Desilting of ‘C’ and ‘D’ Channels |
| | ‘C’ மற்றும் ‘D’ வகை வாய்க்கால்களைத் தூர் வாருதல் / கடைமடை உழவர்களுக்கும் தடையற்ற பாசனம் |
| 14.5 | Pradhan Mantri Krishi Sinchayee Yojana (PMKSY-HKKO & PDMC) |
| | பிரதம மந்திரி வேளாண் பாசனத் திட்டம்: ஒவ்வொரு வயலுக்கும் நீர் & ஒரு துளியில் அதிக விளைச்சல் (PMKSY-HKKO & PDMC) |
| 14.6 | Rainfed Area Development (RAD) / Dryland Development Scheme |
| | மழைசார்ந்த பகுதி மேம்பாட்டுத் திட்டம் (RAD) / மானாவாரிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் |
| 14.7 | Rehabilitation of Open Irrigation Wells |
| | திறந்தவெளிப் பாசனக் கிணறுகளைப் புனரமைத்தல் |
| 14.8 | Scheme on Electric Motor Pump Set |
| | மின் மோட்டார் பம்ப் செட் திட்டம் |
| 14.9 | Special Area Development Programme |
| | சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் |
| 15 | Other Schemes Implemented by the Departments of the Agriculture, Horticulture, Agricultural Engineering |
| | வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பிறத் திட்டங்கள் |
| 15.1 | Agroforestry Scheme |
| | வேளாண்காடுகள் திட்டம் |
| 15.2 | Crop Diversification Programme (CDP) |
| | மாற்றுப் பயிர் சாகுபடி திட்டம் (CDP) |

| # | Title |
|---|---|
| 15.3 | Crop Insurance Scheme<br>பயிர் காப்பீட்டு திட்டம் |
| 15.4 | Hill Farmers Development Scheme<br>மலைவாழ் உழவர் முன்னேற்றத் திட்டம் |
| 15.5 | Kisan Credit Card<br>உழவர் கடன் அட்டை |
| 15.6 | Soil Health Card<br>மண் வள அட்டை |
| 15.7 | State Horticulture Development Scheme (SHDS)<br>மாநில தோட்டக்கலை வளர்ச்சி திட்டங்கள் (SHDS) |
| 15.8 | Sugarcane Development Scheme<br>கரும்பு மேம்பாட்டு திட்டங்கள் |
| 15.9 | TN Cotton Production Enhancement Scheme<br>தமிழக பருத்தி உற்பத்தி மேம்பாட்டு திட்டம் |
| 16 | Animal Husbandry and Dairy Development Schemes<br>கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள மேம்பாட்டுத் திட்டங்கள் |
| 16.1 | Animal Husbandry Schemes<br>கால்நடை பராமரிப்புத் திட்டங்கள் |
| 16.2 | Mini Dairy Scheme<br>சிறிய (மினி) பால் பண்ணைத் திட்டம் |
| 16.3 | Mobile Veterinary Unit (MVU)<br>நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு (MVU) |
| 16.4 | National Livestock Mission (NLM)<br>தேசிய கால்நடை இயக்கம் (NLM) |
| 16.5 | Rashtriya Gokul Mission (RGM)<br>ராஷ்ட்ரிய கோகுல் இயக்கம் / தேசிய பசு மேம்பாட்டு இயக்கம் (RGM) |
| 16.6 | State Fodder Development Schemes (SFDS)<br>மாநில தீவன அபிவிருத்தித் திட்டங்கள் (SFDS) |
| 16.7 | The Rural Backyard Poultry / Backyard Poultry Development Scheme<br>ஊரக கொல்லைப்புற கோழி வளர்ப்புத் திட்டம் / புறக்கடை கோழி வளர்ப்பு அபிவிருத்தித் திட்டம் |
| 16.8 | Vallalar Palluyir Kappagangal<br>வள்ளலார் பல்லுயிர்க் காப்பகங்கள் |
| 17 | Fisheries Development and Fishermen Welfare Schemes<br>மீன்வள மேம்பாடு மற்றும் மீனவர் நலத்திட்டங்கள் |

| # | Title |
|---|---|
| 17.1 | Fishermen Welfare Schemes<br>மீனவர்களுக்கான நலத்திட்டங்கள் |
| 17.2 | Pradhan Mantri Matsya Sampada Yojana (PMMSY)<br>பிரதான் மந்திரி மத்ஸய சம்பதா யோஜனா (PMMSY) / பிரதம மந்திரி மீன்வளத் திட்டம் |
| 17.3 | Schemes for Inland Fisheries & Aquaculture<br>உள்நாட்டு மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்புக்கானத் திட்டங்கள் |
| 17.4 | Schemes for Marine Fisheries<br>கடல்சார் மீன்வளத் திட்டங்கள் |
| 17.5 | Schemes for Reservoir Development<br>நீர்த்தேக்கங்களில் மீன்வளர்ப்புத் திட்டங்கள் |
| 18 | Digital Agricultural Initiatives in Tamil Nadu<br>தமிழ்நாட்டில் டிஜிட்டல் வேளாண்மை முன்முயற்சிகள் |
| 18.1 | Aavin Plus and Aavin Covai<br>ஆவின் பிளஸ் மற்றும் ஆவின் கோவை |
| 18.2 | AgriStack / Tamil Nadu Farmers' Registry<br>அக்ரிஸ்டேக் / தமிழ்நாடு விவசாயிகள் பதிவேடு |
| 18.3 | Bharat Sanjeevani<br>பாரத் சஞ்சீவனி |
| 18.4 | e-NAM<br>இ-நாம் |
| 18.5 | e-Thottam<br>இ-தோட்டம் |
| 18.6 | e-Vaadagai<br>இ-வாடகை |
| 18.7 | FARMS<br>பார்ம்ஸ் |
| 18.8 | GRAINS<br>க்ரைன்ஸ் |
| 18.9 | Meengal<br>மீன்கள் |
| 18.10 | Tamil Mannvalam Portal<br>தமிழ் மண்வளம் இணைய தளம் |
| 18.11 | Thoondil<br>தூண்டில் |
| 18.12 | Uzhavar<br>உழவர் |

| # | Title |
|---|---|
| 19 | Awards and Prize for Farmers and Researchers<br>விவசாயிகள் மற்றும் வேளாண் விஞ்ஞானிகளுக்கான விருதுகள் மற்றும் பரிசுகள் |
| 19.1 | Awards for Agriculture Innovation<br>வேளாண் கண்டுபிடிப்புகளுக்கான புதுமை விருதுகள் |
| 19.2 | Best Exporter-Farmer Award<br>சிறந்த ஏற்றுமதி-விவசாயி விருது |
| 19.3 | Best performing farmers/ producers/self-help groups<br>சிறப்பாகச் செயல்படும் விவசாயிகள் / உற்பத்தியாளர்கள் / சுய உதவிக் குழுக்கள் |
| 19.4 | Bharat Ratna Dr. M.G.R traditional paddy variety conservator award<br>பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பாரம்பரிய நெல் இரகங்கள் பாதுகாவலர் விருது |
| 19.5 | District Level Yield Competition Award<br>மாவட்ட அளவிலான விளைச்சல் போட்டி விருது |
| 19.6 | Dr. M.S. Swaminathan Research Grant<br>டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிதி |
| 19.7 | Gopal Ratna Awards and State Awards<br>கோபால் ரத்னா விருதுகள் மற்றும் மாநில விருதுகள் |
| 19.8 | International Exposure Visit to Farmers<br>விவசாயிகளுக்கான சர்வதேச கண்டுணர் சுற்றுலா /அனுபவப் பயணம் |
| 19.9 | Nammazhvar Award for Best organic Farmers<br>சிறந்த இயற்கை விவசாயிகளுக்கான நம்மாழ்வார் விருது |
| 19.10 | Prize / Awards for High Yielding / Best Performing Farmer Award<br>அதிக விளைச்சல் பெற்ற மற்றும் சிறந்த விவசாயிகளுக்கு விருதுகள் |
| 19.11 | Tamil Nadu Scientist Award (TANSA)<br>தமிழ்நாடு விஞ்ஞானி விருது (TANSA) |
| 19.12 | Thiru C. Narayanasamy Naidu Award<br>திரு. சி. நாராயணசாமி நாயுடு விருது |

## (1) An Introduction to the Central Sector and Centrally Sponsored Agricultural Schemes

Almost all the Central Government schemes and initiatives on agriculture and allied sectors implemented at present are aligned to fulfil the Government's vision on "doubling farmers' income (DFI)". The Hon'ble PM Shri Narendra Modi ji on 28 February 2016 announced the goal of doubling farmers' income by 2022. The target was to improve the economic well-being of farmers through multidimensional reforms in agriculture and allied sectors (i.e., increase farmers' real income, not just by production).

In 2016, the Government constituted a committee under Dr. Ashok Dalwai, IAS to examine the issue. The Dalwai Committee suggested a multidimensional strategy to achieve the vision. These strategies may be grouped under the 7 pillars.

1. Increase in crop productivity
2. Increase in livestock productivity
3. Resource use efficiency — reduction in the cost of production
4. Increase in cropping intensity
5. Diversification to high-value agriculture
6. Remunerative prices on farmers' produce
7. Shift of surplus manpower from farm to non-farm occupations

Although agriculture is a state subject, to implement the above seven strategies, the Government of India supplements the efforts of states through appropriate policy measures, Schemes/Programmes, and budgetary support. The Government has substantially enhanced the budget allocation of the Department of Agriculture & Farmers Welfare from ₹22,000 crores in 2013-14 to ₹1,23,000 crores in 2024-25.

Currently, the Government of India, through the Department of Agriculture and Farmers' Welfare (DA&FW), is implementing 28 major schemes and programmes aimed at enhancing farmers' income and ensuring remunerative returns in the agriculture sector.

1. Pradhan Mantri Kisan Samman Nidhi (PM-KISAN)
2. Pradhan Mantri Kisan MaanDhan Yojana (PM-KMY)
3. Pradhan Mantri Fasal Bima Yojana (PMFBY) / Restructured Weather-Based Crop Insurance Scheme (RWBCIS)
4. Modified Interest Subvention Scheme (MISS)
5. Agriculture Infrastructure Fund (AIF)
6. Formation and Promotion of 10,000 new Farmer Producers Organizations (FPOs)
7. National Bee Keeping and Honey Mission (NBHM)
8. Namo Drone Didi
9. National Mission on Natural Farming (NMNF)
10. Pradhan Mantri Annadata Aay SanraksHan Abhiyan (PM-AASHA)
11. Agri Fund for Start-Ups & Rural Enterprises' (AgriSURE)

12. Per Drop More Crop (PDMC)
13. Sub-Mission on Agriculture Mechanisation (SMAM)
14. Sub-Mission on Agriculture Extension (SMAE)
15. Sub-Mission on Seed and Planting Material (SMSP)
16. Paramparagat Krishi Vikas Yojana (PKVY)
17. Soil Health & Fertility (SH&F)
18. Rainfed Area Development (RAD)
19. Agroforestry
20. Crop Diversification Programme (CDP)
21. National Food Security and Nutrition Mission (NFSNM)
22. Integrated Scheme for Agriculture Marketing (ISAM)
23. Mission for Integrated Development of Horticulture (MIDH)
24. National Mission on Edible Oils (NMEO)-Oil Palm
25. National Mission on Edible Oils (NMEO)-Oilseeds
26. Mission Organic Value Chain Development for North Eastern Region
27. Digital Agriculture Mission
28. National Bamboo Mission

In the Union Budget 2025-26, the Hon'ble Minister for Finance and Corporate Affairs, Smt. Nirmala Sitharaman emphasised that **'Agriculture is the first engine'** for India's development journey, and announced a slew of measures to spur agricultural growth and productivity, thereby benefitting the *Annadata* (=farmers or those who give food to the world).

29. National Mission on High-Yielding Seeds
30. Mission for Cotton Productivity
31. Atmanirbharta (self-reliance) in Pulses

The Indian Council of Agricultural Research (ICAR), New Delhi, in 2022, released success stories of more than 75,000 farmers who have increased their income more than twice by adopting improved agricultural practices, supported partly by these schemes (https://icar.gov.in).

**Sources:**

AFW, 2024. Annual Report: 2024-25. Department of Agriculture & Farmers Welfare, M/o A&FW, New Delhi

Press Information Bureau, Government of India. 11th March 2025, Release ID: 211044

## (1) மத்திய அரசின் நேரடி ஆதரவு மற்றும் பங்களிப்புப் பெற்ற வேளாண்மை திட்டங்கள்: ஓர் அறிமுகம்

தற்போது நடைமுறையில் உள்ள பெரும்பாலான வேளாண்மை மற்றும் அத்துறை சார்ந்த மத்திய அரசுத் திட்டங்கள், முன்னெடுப்புகள் யாவும், "**விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல்**" என்ற அரசின் தொலைநோக்கு கொள்கையை நிறைவேற்றும் வகையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. 28 பிப்ரவரி , 2016 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள், 2022-ஆம் ஆண்டிற்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க வேண்டும் என்ற இலக்கை அறிவித்தார்கள். இதன் நோக்கம், விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் பல்வேறு சீர்திருத்தங்கள்மூலம் விவசாயிகளின் பொருளாதார நிலையை உயர்த்துவதாகும்- அதாவது, வெறும் உற்பத்தி அளவை உயர்த்துவது மட்டுமல்லாமல், விவசாயிகளின் நிஜ-வருமானத்தை இரட்டிப்பாக்குவதாகும்.

2016-ஆம் ஆண்டு, இந்த விவகாரத்தை ஆய்வு செய்வதற்காக, அரசு திரு. அசோக் தல்வாய், IAS அவர்கள் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. தல்வாய் குழு, இந்த நோக்கை அடைய பல்துறை ஒருங்கிணைப்பு உத்தி ஒன்றைப் பரிந்துரைத்தது. அந்த உத்திகள் கீழ்கண்ட ஏழு கட்டமைப்புகளின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன:

1. பயிர் உற்பத்தித்திறனை அதிகரித்தல்
2. கால்நடை உற்பத்தித்திறனை உயர்த்துதல்
3. இடுபொருள் (அ) வளங்களின் பயன்பாட்டுத் திறனைக் கூட்டி உற்பத்தி செலவைக் குறைத்தல்
4. பயிரிடும் தீவிரத்தன்மையை அதிகரித்தல்
5. மதிப்புக் கூட்டு விவசாயத்திற்கு மாறுதல்
6. விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நியாயமான விலையை உறுதி செய்தல்
7. மிகுதியான விவசாயத் தொழிலாளர்களை விவசாயப் பணியிலிருந்து பண்ணை-சாரா தொழில்களுக்கு மாற்றுதல்

வேளாண்மை (துறை) என்பது மாநிலப் பட்டியலில் இருந்தாலும், மேற்கண்ட ஏழு உத்திகளை உயிரூட்டுவதற்காக, இந்திய அரசு, மாநிலங்களின் முயற்சிகளுக்குப் பொருத்தமான கொள்கைகள், திட்டங்கள் / முன்னெடுப்புகள் மற்றும் நிதி ஆதரவுகள் மூலம் துணைநிற்கின்றது. மத்திய அரசு, வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறைக்கு (DA&FW) வழங்கப்படும் பட்ஜெட் ஒதுக்கீட்டைக் குறிப்பிடத்தக்க அளவில் உயர்த்தியுள்ளது. உதாரணமாக, வேளாண்மைத்துறைக்கான 2013–14 ஆம் ஆண்டின் மத்திய நிதி ஒதுக்கீடு ரூ. 22,000 கோடியில் இருந்தது. இது 2024–25 ஆம் ஆண்டில் ரூ. 1,23,000 கோடியாக உயர்த்தப்பட்டது.

விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும், விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இலாபகரமான வருவாய் கிடைப்பதை உறுதி செய்யவும், இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத் துறை வழியாக மொத்தம் 28 முக்கியத் திட்டங்கள் தற்சமயம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவையாவன:

1. பிரதம மந்திரி விவசாயிகள் கௌரவ நிதித் திட்டம் (PM-KISAN)
2. பிரதம மந்திரி விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் (PM-KMY)
3. பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டம் (PMFBY) & மறுசீரமைக்கப்பட்ட வானிலை அடிப்படையிலான பயிர்க் காப்பீட்டுத் திட்டம் (RWBCIS)
4. மாற்றியமைக்கப்பட்ட வட்டி- மானிய சலுகைத் திட்டம் (MISS)
5. வேளாண் உள்-கட்டமைப்பு நிதி (AIF)

6. 10,000 புதிய உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை (FPOs) உருவாக்குதல்
7. தேசிய தேனீ வளர்ப்பு மற்றும் தேன் இயக்கம் (NBHM)
8. நமோ ட்ரோன் தீதி திட்டம்
9. அங்கக (உயிர்ம) விவசாயதிற்கான தேசிய இயக்கம் (NMNF)
10. அன்னமளிக்கும் விவசாயிகள் வருமானப் பாதுகாப்பு இயக்கம் (PM-AASHA)
11. வேளாண் தொடக்க நிறுவனங்கள் மற்றும் கிராமப்புற நிறுவனங்களுக்கு நிதி (AgriSURE)
12. சிறு துளியில் அதிக விளைச்சல் (PDMC)
13. வேளாண் இயந்திரமயமாக்கல் துணை இயக்கம் (SMAM)
14. வேளாண்மை விரிவாக்க துணை இயக்கம் (SMAE)
15. விதை மற்றும் நடு பொருட்களுக்கான துணை இயக்கம் (SMSP)
16. பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (PKVY)
17. மண் ஆரோக்கியம் மற்றும் வளம் (SH&F)
18. மானாவாரிப் (மழை-சார்ந்த) பகுதி மேம்பாட்டுத் திட்டம் (RAD)
19. வேளாண் காடுகள் திட்டம் (Agroforestry)
20. மாற்றுப் பயிர் சாகுபடி திட்டம் (CDP)
21. தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் (NFSNM)
22. ஒருங்கிணைந்த வேளாண் சந்தைத் திட்டம் (ISAM)
23. ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டு இயக்கம் (MIDH)
24. தேசிய உணவு எண்ணெய் இயக்கம் (NMEO – எண்ணெய் பனை (Oil Palm)
25. தேசிய உணவு எண்ணெய் இயக்கம் – எண்ணெய் வித்துக்கள் (Oilseeds)
26. வடகிழக்கு மாநிலங்களுக்கான இயற்கை விவசாய மதிப்புக் கூட்டல் இயக்கம்
27. மின்னணு வேளாண்மை இயக்கம்(DAM)
28. தேசிய மூங்கில் இயக்கம் (NBM)

மத்திய அரசின் 2025–26-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது, மாண்புமிகு நிதி மற்றும் நிறுவனங்கள் விவகாரத்துறை அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்கள், “விவசாயம் என்பது இந்திய முன்னேற்றப் பயணத்தின் முதல் இயந்திரம்” என்பதை வலியுறுத்தி பேசினார்கள். வேளாண்மை வளர்ச்சி மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்தி, உலகுக்கு அன்னமளிக்கும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் பல புதிய திட்டங்களை அறிவித்தார்கள். அவற்றில் சில:

29. உயர் விளைச்சல் தரும் விதைகளை மேம்படுத்துவதற்கான தேசிய இயக்கம்
30. பருத்தி உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான இயக்கம்
31. பருப்பு தானியங்களில் தன்நிறைவு அடைவதற்கான திட்டம்

நவீன வேளாண்மை தொழில்நுட்பங்களைப் பின்பற்றி மற்றும் மேற்கண்ட திட்டங்களால் பயன்பெற்று தங்கள் வருமானத்தை இரட்டிப்பாக்கிய 75,000-க்கும் மேற்பட்ட விவசாயிகளின் வெற்றிக் கதைகளை புது தில்லியில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் (ICAR), 2022-ஆம் ஆண்டில் தொகுத்து வெளியிட்டுள்ளது (https://icar.gov.in).

**ஆதாரங்கள்:**

AFW, 2024. Annual Report: 2024-25. Department of Agriculture & Farmers Welfare, M/o A&FW, New Delhi

Press Information Bureau, Govt of India. 11th March 2025, Release ID: 211044

## (2) Agri-Clinics and Agri-Business Centres (AC & ABC)

**What is AC&ABC?** Establishment of the Agri-clinics (AC) and Agri-business Centres (ABC) scheme is a flagship programme of the Government of India, launched in April 2002 to promote agriculture-based self-employment opportunities among agriculture graduates and diploma holders. In other words, this scheme encourages trained agri-professionals to establish commercial ventures like Agri-clinics or Agri-service centres that provide extension, technical, and business support services to farmers. This scheme supports both agricultural development as well as creates gainful self-employment opportunities to unemployed agricultural graduates, agricultural diploma holders, intermediate in agriculture and biological science graduates.

**Nodal Ministry:** This is a Centrally Sponsored Scheme under the Sub-Mission on Agricultural Extension (SMAE) of the National Mission on Agricultural Extension and Technology (NMAET), Ministry of Agriculture & Farmers Welfare, GoI.

**Implementing Agency:** The National Institute of Agricultural Extension Management (MANAGE), Hyderabad, is the implementing agency. The State Agricultural Management and Extension Training Institutes (SAMETIs), ATMA, and SAUs will function as Coordinating Institutions. The National Bank for Agriculture and Rural Development (NABARD) and Commercial Banks (for credit-linked subsidies) will serve as financial Institutions.

**Salient features**

(i) Forty-five days of training are imparted to eligible selected candidates through Nodal Training Institutes (NTIs) identified across the country by the MANAGE. This is followed by one year of a hand-holding period (it is a post-training phase of in-depth, step-by-step support and supervision provided by an expert to ensure that the newly trained individual or team can perform their tasks independently). The cost of training charged by MANAGE is ₹ 48,400 per candidate. After successful completion, participants are eligible to **apply for loans and subsidies** under the scheme.

(ii) Candidates with a minimum gap of one year after completion of educational qualification shall be considered for training and establishment of ventures. The scheme covers full financial support for training and handholding, provision of a loan, and credit linked back ended composite subsidy.

(iii) The NABARD is the implementing agency for the disbursement of subsidy and monitoring the credit support to agri-clinics through commercial banks.

(iv) The scheme has a provision of credit support (start-up loan) up to ₹ 20 lakhs for an individual project and ₹ 100 lakhs for a group project. Financial assistance is provided through commercial banks (public and private), Regional Rural Banks (RRBs), and State Cooperative Banks. The interest rate will be the same as per the prevailing bank norms. The repayment period is generally 5–7 years (including moratorium).

(v) There is a provision of Credit linked back-ended upfront composite subsidy on the bank loan availed by trained candidates under the Scheme. The subsidy is 44% of the project cost with respect to women, SC/ST, and all categories of candidates from North-Eastern and Hill States, and 36% of the project cost with respect to other categories.

**Components of the Scheme:** The scheme has two major components:

**A. Agri-Clinics (ACs):** Provide expert services and advice to farmers on various aspects of agriculture, such as: Crop selection, soil health, nutrient management, pest control; Efficient use of inputs (seeds, fertilisers, irrigation); Market intelligence and value addition. It aims to improve farm productivity and reduce input costs

**B. Agri-Business Centres (ABCs):** It aims to create rural entrepreneurship and generate local employment. The ABC will engage in establishing commercial ventures to provide goods and services required by farmers, like establishing input dealership, custom hiring centres, farm machinery, processing units, veterinary clinics, dairy units, etc.

**Types of Ventures supported under AC & ABCs**: Over 60 model projects are approved under AC&ABC. Examples include:

- Soil, water, and seed testing labs
- Agri-input retail outlets
- Custom hiring service centres
- Poultry and dairy units
- Vermicompost, biopesticide production
- Agro-processing, packaging, and value-addition units
- Farm machinery repair and service units
- Floriculture enterprises
- Agri-clinics for pest and disease management
- Contract farming
- Crop production and demonstration
- Mushroom production
- Production, processing, and marketing of medicinal and aromatic plants
- Production units like dairy, poultry, piggery, fisheries, sheep rearing, goat rearing, emu rearing, rabbit rearing, etc.
- Agri-Drone operation, maintenance, and repair
- Protected Cultivation etc.

**Who can apply for financial support under ABCs?**

1. Agriculture Graduates
2. Diploma holders in agriculture and allied subjects
3. Graduates in allied sectors: horticulture, animal husbandry, forestry, fishery, Veterinary science, agri-engineering, dairy technology, sericulture, biotechnology, etc.

**Source:**

DA&FW, 2025. Compendium of instructions for Implementation of revised Agri-clinics and agri-business centres (AC&ABC) Programme-2025. Directorate of Extension, Ministry of Agriculture & Farmers' Welfare, Government of India.

## (2) விவசாய ஆலோசனை மையங்கள் (AC) & வேளாண் வணிக மையங்கள் (ABC)

**அக்ரி கிளினிக் (AC) மற்றும் அக்ரி பிசினஸ் சென்டர் (ABC) என்றால் என்ன?** விவசாய ஆலோசனை மையங்கள் (AC) மற்றும் வேளாண் வணிக மையங்களை (ABC) நிறுவுதல் என்பது விவசாயப் பட்டதாரிகள் மற்றும் பட்டயம் பெற்றவர்கள் விவசாயம் சார்ந்த சுய-வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்ள ஏப்ரல், 2002-இல் மத்திய அரசால் தொடங்கப்பட்ட ஒரு முதன்மைத் திட்டமாகும். இந்தத் திட்டத்தின் மூலம், பயிற்சி பெற்ற விவசாய நிபுணர்களைக் கொண்டு விவசாயிகளுக்கு வேளாண்மை சார்ந்த தகவல்கள், தொழில்நுட்பங்கள் மற்றும் வேளாண் சார்ந்த வணிகம் தொடங்கத் தேவையான ஆதரவு மற்றும் சேவைகளை வழங்கும் விவசாய சேவை மையங்களை ஏற்படுத்த உதவிகள் செய்யப்படுகின்றன. இந்தத் திட்டம் விவசாய வளர்ச்சியை ஊக்குவிப்பதோடு அரசு பணியில் இல்லாத விவசாய பட்டதாரிகள், விவசாய பட்டயம் / சான்றிதழ், விவசாயத்தில் இடைநிலை அல்லது தொழிற்கல்வி படித்த இளைஞர்களுக்கு இலாபகரமான சுய வேலை வாய்ப்புகளையும் உருவாக்குகிறது.

**முதன்மை ஒருங்கிணைப்பு அமைச்சகம்:** இந்தத் திட்டம் மத்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் நிதியுதவிபெற்ற திட்டமாகும். இது வேளாண் விரிவாக்கம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான தேசிய திட்டத்தின் (NMAET) கீழ் வரும் வேளாண் விரிவாக்கத்திற்கான துணை இயக்கம் (SMAE) ஆகும்.

**செயல்படுத்தும் நிறுவனங்கள்:** தேசிய வேளாண் விரிவாக்க மேலாண்மை நிறுவனம் (MANAGE), ஹைதராபாத் செயல்படுத்தும் நிறுவனமாக இருக்கும். இந்தத் திட்டத்தில், மாநில வேளாண்மை மேலாண்மை மற்றும் விரிவாக்கப் பயிற்சி நிறுவனங்கள் (SAMETIs), வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA), மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் (SAUs) ஒருங்கிணைப்பு நிறுவனங்களாக செயல்படும். தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி (NABARD) மற்றும் வணிக வங்கிகள் நிதி நிறுவனங்களாக செயல்படும்.

**முக்கிய அம்சங்கள்**

(i) நாடு முழுவதும் உள்ள, தகுதியான தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சியாளர்களுக்குத் தேசியப் பயிற்சி நிறுவனங்கள் (NTIs) மூலம் 45 நாட்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதைத் தொடர்ந்து MANAGE-இல் ஒரு வருட காலம் துணை-பயிற்சி வழங்கப்படுகிறது (hand-holding period என்பது புதிதாகப் பயிற்சி பெற்ற நபர் தான் கற்ற தொழில்களை/பணிகளைச் சுயமாகச் செய்ய முடியும் என்பதை உறுதி செய்வதற்காக ஒரு நிபுணர் அல்லது வழிகாட்டியால் வழங்கப்படும் பயிற்சிக்குப் பிந்தைய கட்டத்தைக் குறிக்கிறது). ஒருவருக்கு பயிற்சிக்கான செலவு ₹ 48,400 ஆகும். பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பிறகு, பயிற்சி பெற்றவர்கள் AC&ABC திட்டத்தின் கீழ் கடன் மற்றும் மானியங்களுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் ஆகிறார்கள்.

(ii) கல்வித் தகுதியை முடித்த பின் குறைந்தது ஒரு ஆண்டு இடைவெளி கொண்ட வேளாண் பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரர்கள், பயிற்சி பெறவும், வேளாண் ஆலோசனை மையங்கள் மற்றும் வேளாண் வணிக மையங்களை நிறுவவும் தேர்வு செய்யப்படுவார்கள். இந்தத் திட்டம், பயிற்சி மற்றும் பயிற்சிக்குப் பிந்தைய முழு நிதி உதவி, கடன் மற்றும் கடன் இணைக்கப்பட்ட பின்-ஏற்பு மானியத்தை உள்ளடக்கியது.

(iii) வணிக வங்கிகள்மூலம் வேளாண்மை ஆலோசனை மையங்களுக்கு மானியம் வழங்குவதைக் கண்காணிக்கவும், மானியத்தை வழங்கவும் நபார்டு வங்கி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(iv) இந்தத் திட்டத்தில் தனிநபர் திட்டத்திற்கு ரூ. 20 லட்சம் வரையிலும், குழு திட்டத்திற்கு ரூ. 100 லட்சம் வரையிலும் கடன் உதவி (தொடக்கக் மூலதனம்) வழங்கப்படுகிறது. வணிக வங்கிகள் (பொது மற்றும் தனியார்), பிராந்திய கிராமப்புற வங்கிகள் (RRB) மற்றும் மாநில கூட்டுறவு வங்கிகள்மூலம் நிதி உதவி வழங்கப்படுகிறது. இதற்கான வட்டி விகிதம் நடைமுறையில் உள்ள வங்கி விதிமுறைகளின்படி இருக்கும். கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம் பொதுவாக 5–7 ஆண்டுகள் (கடனைத் தள்ளிப் போடுவதற்கான உரிமை காலம் உட்பட).

(v) திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற விண்ணப்பதாரர்கள் பெறும் வங்கிக் கடனுக்கு கடன்-இணைக்கப்பட்ட பின்-ஏற்பு மானியம் வழங்கப்படுகிறது. வடகிழக்கு மற்றும் மலைப்பகுதி மாநிலங்களைச் சேர்ந்த பெண்கள் மற்றும் SC/ST விண்ணப்பதாரர்களுக்கும் திட்டச் செலவில் 44% மானியமும், பிற பிரிவுகளைப் பொறுத்தவரை திட்டச் செலவில் 36% மானியமும் வழங்கப்படுகிறது.

**AC&ABC திட்டத்தின் கூறுகள்:** இந்தத் திட்டம் இரண்டு முக்கிய கூறுகளைக் கொண்டுள்ளது:

**A. வேளாண்மை ஆலோசனை மையங்கள் (Agri-Clinics):** பயிர் தேர்வு, மண் வள மேலாண்மை, ஊட்டச்சத்து மேலாண்மை, பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு, உள்ளீடுகளின் திறமையான பயன்பாடு (விதைகள், உரங்கள், நீர்ப்பாசனம்), சந்தைத் தகவல் மற்றும் மதிப்பு கூட்டல் போன்ற வேளாண்மை தொடர்பான அம்சங்களில் விவசாயிகளுக்கு வேளாண் நிபுணர்கள் ஆலோசனை மற்றும் சேவைகள் வழங்குவார்கள். இதன் நோக்கம்: பண்ணை உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மற்றும் இடு பொருட்களின் செலவுகளைக் குறைத்தல்.

**B. வேளாண் வணிக மையங்கள் (Agri-Business Centres):** இதன் நோக்கம், கிராமப்புறத் தொழில்முனைவோரை உருவாக்குதல் மற்றும் உள்ளூர் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல். விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருட்கள் மற்றும் சேவைகளை வழங்க வணிக மையங்களை நிறுவுவதில் ABC ஈடுபடும், அதாவது அங்கீகரிக்கப்பட்ட இடுபொருட்களை விற்பனை செய்யும் உரிமம், தனித்துவமான வேலைக்குத் தகுந்த ஆட்களைப் பணியமர்த்த மையங்கள் அமைத்தல், பண்ணை இயந்திர வாடகை மையங்கள், உணவு-தானியங்கள்-பழங்கள் பதப்படுத்துதல் மையங்கள், கால்நடை மருத்துவமனைகள், பால் பண்ணைகள் அமைத்தல் போன்றவை சில எடுத்துக்காட்டுகளாகும்.

**AC&ABC ஆதரிக்கும் மாதிரித் திட்டங்கள்:** சுமார் 60-கும் மேற்பட்ட மாதிரி திட்டங்கள் AC&ABC திட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. சில உதாரணங்கள்:

- மண், நீர் மற்றும் விதை சோதனை ஆய்வகங்கள் அமைத்தல்
- வேளாண் இடுபொருள் சில்லறை விற்பனை நிலையங்கள்
- வாடகை சேவை மையங்களை உருவாக்குதல்
- கோழி மற்றும் பால் பண்ணை அமைத்தல்
- மண்புழு உரம், உயிரி பூச்சிக்கொல்லி உற்பத்தி செய்தல்
- வேளாண் பொருட்கள் பதப்படுத்துதல், பேக்கேஜிங் மற்றும் மதிப்புக் கூட்டல் மையங்கள்
- பண்ணை இயந்திரங்கள் பழுதுபார்ப்பு மற்றும் சேவை மையங்கள்
- மலர் வளர்ப்பு /விற்பனை நிறுவனங்கள்
- பூச்சி மற்றும் நோய் மேலாண்மைக்கான வேளாண் மருத்துவமனைகள்

- ஒப்பந்த விவசாயம்
- பயிர் உற்பத்தி மற்றும் செயல் விளக்கம்
- காளான் உற்பத்தி
- மருத்துவ மற்றும் நறுமணத் தாவரங்களின் உற்பத்தி, பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்தல்
- பால் பண்ணை, கோழி, பன்றி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, ஆடு/ செம்மறி ஆடு வளர்ப்பு, ஈமு கோழி வளர்ப்பு, முயல் வளர்ப்பு போன்ற உற்பத்தி மையங்கள்
- வேளாண்- ட்ரோன் வாடகை, பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு
- பாதுகாக்கப்பட்ட சாகுபடி போன்றவை.

**AC&ABC -ன் கீழ் நிதி உதவி பெற யார் விண்ணப்பிக்கலாம்?**

1. வேளாண் பட்டதாரிகள்
2. வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த பாடங்களில் பட்டயம் பெற்றவர்கள்
3. தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, வனவியல், மீன்வளம், கால்நடை அறிவியல், வேளாண் பொறியியல், பால் தொழில்நுட்பம், பட்டுப்புழு வளர்ப்பு, உயிரித் தொழில்நுட்பம் போன்ற துணைத் துறைகளில் பட்டம்/பட்டயம் பெற்றவர்கள்.

**ஆதாரம்:**

DA&FW, 2025. Compendium of instructions for Implementation of revised Agri-clinics and agri-business centres (AC&ABC) Programme-2025. Directorate of Extension, Ministry of Agriculture & Farmers' Welfare, Govt of India.

## (3) Agricultural Technology Management Agency (ATMA)

**What is ATMA?** The Agricultural Technology Management Agency (ATMA) is a district-level autonomous institution for agricultural extension reform, launched in 2005–06 by the Government of India under the Sub-Mission on Agricultural Extension (SMAE) of the National Mission on Agricultural Extension and Technology (NMAET), Ministry of Agriculture & Farmers Welfare, GoI. Since the FY 2017-18, this Centrally Sponsored Scheme support to the State Extension Programme Scheme (ATMA) has been subsumed under the Umbrella Scheme 'Krishonnati Yojana'.

In Tamil Nadu, ATMA operates in all 38 districts under the State Department of Agriculture and Farmers Welfare. The 2025 Revised ATMA scheme support of the Government of India is aimed at promoting decentralized, farmer friendly extension system in the country to support State Government's efforts to revamp the agricultural extension system focusing on Natural Farming, Climate Resilient Agriculture, Crop Diversification, National Pest Surveillance System, Soil Health Card, Digital Agriculture Mission and making available the latest agricultural technologies and good agricultural practices to the farmers.

### Functions of ATMA in Tamil Nadu

1. Preparation of Strategic Research and Extension Plan (SREP) and District Agriculture Action Plan (DAAP).
2. Conducting Farm Schools, Demonstrations, Exposure Visits, and Training Programmes for farmers and extension workers.
3. Promoting Farmer Interest Groups (FIGs), Farmer Producer Organisations (FPOs), and Commodity Interest Groups (CIGs).
4. Strengthening Public-Private Partnership (PPP) in agricultural extension.
5. Linking farmers to Krishi Vigyan Kendras (KVKs) and Research Institutions for field-level technology adoption.
6. Supporting women farmers, youth, and marginal farmers through tailored extension programs.

**Changes in ATMA's Objectives**: Keeping in view the changed focus of the ATMA scheme, the changes in the existing ATMA scheme will be revised in 2025, from production to market orientation. Focus of extension services will be given on marketing aspects (on themes like Post-Harvest Management, Surplus Management, Agriculture Marketing, various initiatives of the Government, etc.) along with quality production. All extension personnel (ATMA & Non-ATMA) are targeted to be trained in market-led extension training programmes. Farmers' training programmes (within District) under the scheme henceforth shall be two days duration. The training module shall include RPL-based (Recognise Prior Learning) farmers' training followed by their up-skilling.

### ATMA Set-up

*State Level:* The State Level Sanctioning Committee (SLSC) set up under the Rashtriya Krishi Vikas Yojana (RKVY) is the apex body to approve the State Extension Work Plan (SEWP), which will form a part of the State Agriculture Plan (SAP). The State Nodal Cell (SNC), consisting of the State Nodal Officer, State Coordinator, Gender Coordinator, and Computer Assistant, etc., will receive the Action Plan from the District ATMA Centre,

examine, approve, and monitor implementation of the work plans of the State Agricultural Management & Extension Training Institutes (SAMETIs) and ATMAs. The SAMETIs will draw up and execute an Annual Training Calendar for capacity building of the Extension Functionaries in the State. The Department of Agriculture and Farmers Welfare, Tamil Nadu, is the State Nodal Agency (SNA) for implementing the ATMA scheme in the State.

*District Level:* ATMA is an autonomous institution set up at the district level to ensure the delivery of extension services to farmers. District ATMA Governing Board, headed by the District Collector, is the apex body of ATMA, which provides overall policy direction. There will be a District ATMA Management Committee (MC) headed by the Joint Director of Agriculture; implements and monitors extension activities.

*Block Level*: The Block Technology Team (BTT), consisting of Officers of agriculture and other allied departments within the block and the Block Farmers' Advisory Committee, will prepare the Block Action Plan. The 'Farm Schools' will serve as a mechanism for farmer-to-farmer extension at every Block.

*Village Level*: The Farmer Friend (FF) will serve as a link between the extension system and farmers at the village level (one for every two villages). Agri-entrepreneurs, diploma holders in Agricultural Extension, input dealers, etc., may also supplement the village extension activities.

**Financial Support for ATMA:** 60:40 (Centre: State) for General States; 90:10 for NE & Hilly States.

**Source:**

DA&FW, 2025. Operational Guidelines of ATMA Scheme, 2025. Ministry of Agriculture & Farmers' Welfare, Government of India.

## (3) வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA)

**ATMA என்றால் என்ன?** வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) என்பது வேளாண் விரிவாக்கச் சீர்திருத்தத்திற்காக மாவட்ட அளவில் செயல்படும் ஒரு தன்னாட்சி அமைப்பாகும். இது வேளாண்மை விரிவாக்கத்தைக் கிராமப்புற அளவில் மேம்படுத்தும் நோக்கில், இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை மூலம் 2005–06 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இது தேசிய வேளாண் விரிவாக்க மற்றும் தொழில்நுட்ப இயக்கத்தின் (NMAET) கீழ் உள்ள வேளாண் விரிவாக்கத் துணை இயக்கத்தின் (SMAE) கீழ் செயல்படுகிறது. 2017–18 ஆம் ஆண்டிலிருந்து, ATMA திட்டம் 'கிருஷி உன்னோத்தி' என்ற குடை திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில், இது மாநில வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையின் கீழ், 38 மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகிறது. 2025-ஆம் ஆண்டு திருத்தப்பட்ட ATMA திட்டம், இயற்கை விவசாயம், காலநிலை சார்ந்த விவசாயம், மாற்றுப் பயிர் சாகுபடி, மண்வள அட்டை, பூச்சி-நோய் கண்காணிப்பு, மின்னணு (டிஜிட்டல்) விவசாயம் போன்ற அம்சங்களில் கவனம் செலுத்தி, விவசாயிகளுக்கு நவீனத் தொழில்நுட்பங்களைக் கொண்டுசேர்க்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு ATMA இன் முக்கிய செயல்பாடுகள்**

1. மாவட்ட அளவில் திட்டங்கள் தயாரித்தல்
    - உத்தி சார் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத் திட்டம் (SREP)
    - மாவட்ட விவசாய செயல் திட்டம் (DAAP)
2. விவசாயிகளுக்குப் பயிற்சிகள் நடத்துதல்
    - பண்ணைப் பள்ளிகள்,
    - செயல் விளக்கங்கள்
    - நடைமுறை அனுபவப் பயணம்
3. விவசாயிகள் குழுக்கள் உருவாக்கம்
    - விவசாயி ஆர்வலர் குழுக்கள் (FIGs)
    - விவசாயி உற்பத்தியாளர் அமைப்புகள் (FPOs)
    - பொருட்கள் சார்ந்த குழுக்கள் (CIGs)
4. பொது–தனியார் கூட்டாண்மை (PPP) மூலம் விரிவாக்கச் சேவைகளை வலுப்படுத்தல்
5. விவசாயிகள்-விஞ்ஞானிகள்-நிறுவனங்களுடன் இணைப்பு
    - விவசாயிகளுக்கு *வேளாண் ஆராய்ச்சி நிலையங்கள் (KVKs)* மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொடுத்தல்
6. பெண் விவசாயிகள், இளைஞர்கள் மற்றும் சிறு விவசாயிகளுக்கான சிறப்புப் பயிற்சிகள் வழங்கல்.

**ATMA-வின் மாற்றியமைக்கப்பட்ட / புதிய நோக்கங்கள்**

2025 முதல், ATMA திட்டத்தின் கவனம் "உற்பத்தியிலிருந்து சந்தை நோக்கிய நிலைக்கு" மாறுகிறது. அதாவது, அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை, விளைபொருட்களை சேதாரமின்றி சேமித்தல், அவற்றை சந்தைப்படுத்தல், அரசின் புதிய முயற்சிகளை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஆகியவற்றில் அதிகக் கவனம் செலுத்தப்படும். அனைத்து வேளாண்மை விரிவாக்கப் பணியாளர்களும் சந்தை சார்ந்த பயிற்சிகளில் கலந்து கொள்ள வேண்டும். விவசாயி பயிற்சிகள் இரண்டு நாட்கள் நீடிக்கும் மற்றும் முன்னர்-கற்றதை அங்கீகரிக்கும் (Recognize Prior Learning-based) திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் வழங்கப்படும்.

**ATMA வின் கட்டமைப்பு**

**அ) மாநில அளவில்**

**(1) மாநில ஒப்புதல் குழு (SLSC):** மாநில வேளாண் திட்டத்தின் (SAP) ஒரு அங்கமாக இருக்கும் மாநில வேளாண்மை விரிவாக்கப் பணித் திட்டத்தை (SEWP) தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் (RKVY) கீழ் அமைக்கப்பட்ட மாநில ஒப்புதலளிப்பு குழு SEWP -யை அங்கீகரிக்கும்.

**(2) மாநில ஒருங்கிணைப்பு பிரிவு (SNC):** ATMA-வின் மாவட்ட திட்டங்களை மதிப்பாய்வு செய்து அனுமதிக்கும். இந்த மாநில ஒருங்கிணைப்பு பிரிவு மாநில திட்டச் சுழல் அதிகாரி, மாநில ஒருங்கிணைப்பாளர், பாலின ஒருங்கிணைப்பாளர் மற்றும் கணினி உதவியாளர் போன்றவர்களைக் கொண்ட அமைப்பாகும். இது மாவட்ட ATMA மையங்களிலிருந்து செயல் திட்டத்தைப் பெறும், மற்றும் SAMETI மற்றும் ATMA மையங்களின் திட்டங்களை ஆய்வு செய்து, ஒப்புதலுக்கு அனுப்பி, கண்காணித்து செயல்படுத்தும்.

**(3) மாநில வேளாண் மேலாண்மை மற்றும் விரிவாக்கப் பயிற்சி முகமை (SAMETI),** ஆண்டு முழுவதும் விரிவாக்கப் பணியாளர்களுக்குத் தேவைப்படும் பயிற்சி கால அட்டவணையைத் தயாரித்து அதனை செயல்படுத்தும்.

**(4) மாநில திட்ட செயலாக்க முகமை (SNA):** மாநில வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறைதான் ATMA திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான மாநில மாநில ஒருங்கிணைப்பு பிரிவு.

**(ஆ) மாவட்ட அளவில்**

- மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்ட ATMA நிர்வாகக் குழு, ATMA இன் உச்ச அமைப்பாகும். இது ஒட்டுமொத்த கொள்கை வழிகாட்டுதலை வழங்குகிறது.
- வேளாண் இணை இயக்குநர் தலைமையில் மாவட்ட ATMA மேலாண்மைக் குழு (MC) இருக்கும். இது விரிவாக்க நடவடிக்கைகளைச் செயல்படுத்துகிறது மற்றும் கண்காணிக்கிறது.

**(இ) வட்டார அளவில்**

- வட்டாரத்தில் உள்ள வேளாண்மை மற்றும் பிற தொடர்புடைய துறைகளின் அதிகாரிகள் மற்றும் வட்டார விவசாயிகள் ஆலோசனைக் குழுவைக் கொண்ட தொகுதி தொழில்நுட்பக் குழு (BTT) வட்டார செயல் திட்டத்தைத் தயாரிக்கும். ஒவ்வொரு வட்டாரத்திலும் 'பண்ணைப் பள்ளிகள்' செயல்படும்.

**(ஈ) கிராம அளவில்:**

- விவசாயி நண்பர் (FF) என்ற அமைப்பு கிராம அளவில் விரிவாக்க அமைப்புக்கும் விவசாயிகளுக்குமிடையே ஓர் இணைப்பாகச் செயல்படும்.
- இரண்டு கிராமங்களுக்கு ஒரு விவசாயி நண்பர் நியமிக்கப்படுவார்.
- வேளாண் தொழில்முனைவோர், விவசாய விரிவாக்கத்தில் பட்டயம் பெற்றவர்கள், வேளாண் இடுபொருள் விநியோகஸ்தர்கள் ஆகியோர்கள் கிராம விரிவாக்க நடவடிக்கைகளுக்குத் துணைபுரிவார்கள்.

**நிதி உதவி:**

- பொது மாநிலங்களுக்கு- 60:40 (மத்தியஅரசு: மாநிலம்)
- வடகிழக்கு மற்றும் மலைப்பாங்கான மாநிலங்கள்- 90:10

## (4) Agriculture Infrastructure Fund (AIF)

**What is AIF?** With an objective to create agricultural infrastructure and mobilise investment in agricultural infrastructure, the AIF was launched in 2020-21 under the Aatmanirbhar Bharat Package. AIF is a medium to long term debt financing facility for investment in viable projects related to **post-harvest management infrastructure** and creation of viable **community Farming Assets** through interest subvention of 3% per annum (for maximum 7 years) and credit guarantee support under Credit Guarantee Fund Trust for Micro and Small Enterprises (CGTMSE) scheme & NABARD's NABSanrakshan, for loans up to ₹ 2 crores (the loanee need not arrange personal guarantee for the loan).

**Budget Outlay:** ₹ 1 lakh crore under the scheme will be disbursed through commercial banks and financial institutions like PACS, NCDC, RRBs, NBFCs after signing with NABARD. The loans are disbursed from 2020-21 to 2025-26, and other supports under the scheme will be continued till 2032-33.

**Eligible Beneficiaries**: Farmers, Agri-entrepreneurs, Start-ups, Primary Agricultural Credit Societies (PACS), Marketing Cooperative Societies, Farmer Producers Organizations (FPOs), Self Help Groups (SHGs), Joint Liability Groups (JLGs), Multipurpose Cooperative Societies, Central/State Agency or Local Body sponsored Public Private Partnership Projects, State Agencies, Agricultural Produce Market Committees (Mandis), National & State Federations of Cooperatives, Federations of FPOs and SHGs.

**Eligible Projects**

**(A) Post-Harvest Management Projects:** Supply chain services including e-marketing platforms, Warehouses, Silos, Pack houses, Assaying units, Sorting & grading units, Cold chains, Logistics facilities, Ripening Chambers, Primary processing activities and integrated primary and secondary processing activities (see a few eligible and ineligible projects/processes given below)

| Example of eligible Primary Processing Activities | Example of eligible Integrated Secondary Processing Activities | Ineligible activities |
|---|---|---|
| Cereals & Millets | | |
| Cleaning, De-stoning, Sorting & grading, Hulling, Milling, Parboiling, Soaking, Drying, Sieving, Irradiation, Packaging, Flaking, Storage (warehouse, silos) | Making products like Bread, Millet cookies / Biscuits, Pasta, Snack foods, etc., starch, Oat Meal, Sorghum Syrup, vinegar, Roasted, Fortified, Puffed products, animal feed, etc. | Malting and alcoholic beverage making |
| Fruits & vegetables | | |
| Washing, Cleaning, Drying, Sorting, Grading, Freezing (IQF & blast), Blanching for primary processing, Cooling, Waxing, Conditioning, Packhouse, Cold | Making fruit juices, pulp, etc. Ketchup, fruit concentrates, Jams, Jellies, Candies, marmalades, fruit fillings, | Alcoholic beverage making |

| | | |
|---|---|---|
| store, Ripening chamber, Reefer, van Bucket elevators, Packaging, etc. | and canned fruits. Canned vegetables, vegetable juices, pickles, chutneys, and vegetable purees, vinegar, dehydrated fruit and vegetables, Fruit and Vegetable Powders & flour | |
| Oilseeds & Oil palms | | |
| Cleaning, De-stoning, De-husking (decorticating machines), Winnowing, Oil extraction (ghani, hydraulic press, etc.), Solvent Extraction, Oilseed cake making | Refining | Oil-based lubricants, Biodiesel |
| Pulses | | |
| Cleaning, De-stoning, Drying, Sorting & grading, De-husking, Splitting, De-hulling, Milling (Besan), Irradiation, Packaging, Storage, etc. | Pulse-based snacks (roasted chickpeas, lentil chips, and pea crisps), Canned pulses, guar gum, Pulse-based flake, animal feed, ready to cook & ready to eat foods, Papads, etc. | Pulse-based protein powders |
| Spices | | |
| Cleaning, curing (Turmeric), drying, sorting, Boiling, Polishing, Grinding, Packaging, Storage, Irradiation, Grading, etc. | Spice pastes, spice mixes, extracts and essential oils, infused oils and vinegars, Pickled spices, Turmeric Soaps and Cosmetics, etc. | Spice-based protein powders |
| Cotton | | |
| Cleaning Drying Ginning Pressing & Baling Linting Cotton seed oil Seed cake | Fibre making, Fibre scouring | Weaving, Textiles, plastics, synthetic rubber, |
| Sugarcane | | |
| Cane unloading, Cleaning, Cane breaking, Cane milling, Straining, Evaporators, Centrifugation, Storage tanks, Dryers, Sugar crystals, Jaggery, Packaging & storage, etc. | Making Misri/khand sugar | White sugar manufacture |
| Jute | | |
| Cutting, Retting, Stripping, Washing, Drying, Baling, Packing, Storage, etc. | Jute rope making | Making Jute Cloth, Bags, Sacks |
| Tea, Coffee & Cocoa | | |

| | | |
|---|---|---|
| Cleaning & Washing, Withering, Rolling, Fermentation, Drying, Sorting, Drying of Cherries, Hulling, Pulping, Oxidation, Packaging, White Tea, Green Tea, Black Tea, etc. | Cocoa butter, Cocoa bar, Instant/ beaten coffee | Cosmetic products such as scrub, body wash, etc. |
| Coconut | | |
| Dehusking, Deshelling, Cutting, Drying (copra), Grinding, Extraction of coconut water & Coconut milk, Centrifugation, Hot processing, Virgin coconut oil, Packaging, etc. | Butter, coir rope making. | |
| Rubber | | |
| Mastication, Mixing, Shaping, Curing, Irradiation | | Products like Tyres, Boots, Mattresses, Bottles, etc. |
| Tobacco | | |
| Cleaning, Grading, Sorting, Curing, Drying, Storage, etc. | | Making of Chew, Cigars, Dips Etc.. |
| Nuts | | |
| Cleaning, Grading, Streaming in boiler, Drying, Peeling, Grading, Packaging, Shelling, Separation, Packaging, Hulling, Washing, Storage, Packaging, Conveying belts, etc. | Nut butter, roasted nuts, nut milk, nut flour, candied nuts, and nut oils and snacks. | |
| Medicinal & Aromatic Plants | | |
| Cleaning, Sorting, Drying, Milling, Extraction of oil, Packaging, Storage, etc. | Syrup | Herbal supplements like capsules, tablets, or other forms, Pills, Cream, etc. |
| Bamboo | | |
| Drying, Cutting, Stripping, Formation of sheets, Bamboo Charcoal Powder, Granules, Bamboo treatment plant, Bamboo depots & godown, etc. | Processed Food Products like Pickles, ready to eat, etc., Products such as Fibre, etc. | Furniture, Bamboo textiles, Agarbatti |
| Fodder crops | | |
| Cutting, Mixing, Grinding | Feed blocks, Fodder meals, Hay cubes and pellets | Protein concentrates |
| Tapioca | | |
| Peeling and washing Grating Fermentation Drying Sieving Milling Storage | Chips, flour, Starch | Alcoholic Products |
| Arecanut | | |

| | | |
|---|---|---|
| Cleaning, Dehusking, Peeling, Splitting, Boiling, Drying, Packaging | | Hardboard, Insulation Wool, Cushions, Paper, Paper Board, etc. |
| Banana | | |
| De-handling (removing bunches from mother plant), Stowing (arranging bunches with cut end upward), cleaning, grading, pre-cooling, ripening, packaging, storage, etc. | Making banana chips, powder (flour), jam, juice, squash, halwa, stem candy, puree, banana fibre, paper, flower pickles, soup and baby foods, etc. | Banana beverages, wines |

**(B) Creation of Viable Farming Assets like** Organic inputs production, Bio-stimulant production units, Infrastructure for smart and precision agriculture, Purchase of drones, putting up specialized sensors on field, block chain and AI in agriculture, Remote sensing and Internet of Things (IOT) such as Automatic Weather Station, Farm Advisory Services through GIS applications, Farm/Harvest Automation, Integrated production and processing unit for sericulture, apiculture and spirulina, Plant Quarantine unit, PM Kusum-Components A, B & C (solar based pump set), Hydroponic Farming, Mushroom farming, Vertical farming, Poly house/ Greenhouse, Nurseries, Tissue Culture, Seed Processing, Vertical Farming, Honey Processing, Projects identified for providing supply chain infrastructure for clusters of crops including export clusters, Projects promoted by Central/State/Local Governments or their agencies under PPP for building viable farming assets or post-harvest management projects etc.

**Other details:** It is mandatory for the borrowers to contribute at least 10% of the total project cost, irrespective of available capital subsidy. An applicant can put up to 25 projects in different locations, and each of such projects will be eligible under the scheme for a loan of up to ₹ 2 crore. Multiple projects in one location are also eligible, with an overall cap of ₹ 2 crore. About 24% of total grants-in-aid will be given to the SC/ST entrepreneurs.

**How to apply**? Register as a beneficiary online at https://agriinfra.dac.gov.in/ and get a Beneficiary ID. Download the DPR template from the above website, fill it out, and upload on the same website. After reviewing, the Ministry of Agriculture & Farmers Welfare will forward the eligible applications to the selected bank for credit appraisal. The Bank will review the project for financial viability and, accordingly, sanction the project. This process will be completed in 60 days.

**Sources:**
https://www.myscheme.gov.in/schemes/aif
https://agriinfra.dac.gov.in/

## (4) விவசாய உட்கட்டமைப்பு நிதி (AIF)

**AIF என்றால் என்ன?** விவசாய உட்கட்டமைப்பு நிதி என்பது வேளாண் உட்கட்டமைப்பை உருவாக்கி, அதற்கான முதலீட்டை ஊக்குவிக்கும் நோக்கில், "ஆத்மநிர்பார் பாரத்" (சுயசார்பு இந்தியா) திட்டத்தின் கீழ் 2020–21 ஆம் ஆண்டு வேளாண் உட்கட்டமைப்பு நிதி (AIF) உருவாக்கப்பட்டது. இது நடுத்தர மற்றும் நீண்டகாலக் கடன் வசதியைக் கொண்ட திட்டமாகும். இது அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை உட்கட்டமைப்புகள் மற்றும் சமூக வேளாண்மை சொத்துக்கள் உருவாக்கம் போன்ற பயனுள்ள திட்டங்களுக்கு முதலீடு செய்ய உதவுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், வருடத்திற்கு 3% வட்டி சலுகை (அதிகபட்சம் 7 ஆண்டுகள்வரை) மற்றும் ரூ. 2 கோடிவரை கடன்களுக்கு உத்தரவாதம் வழங்கப்படுகிறது. இந்த உத்தரவாதம், குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாத நிதி அறக்கட்டளை (CGTMSE) மற்றும் நபார்டு வங்கியின் NABSanrakshan திட்டங்கள்மூலம் வழங்கப்படுகிறது (கடன் பெறுபவர் சுய உத்தரவாதம் அளிக்கக் கட்டாயமில்லை).

**நிதி ஒதுக்கீடு:** இத்திட்டத்தின் கீழ் ரூ. 1 லட்சம் கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவை வணிக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் (PACS, NCDC, RRBs) நபார்டு வங்கியுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் கடன்கள் 2020-21 முதல் 2025-26 ஆம் ஆண்டுவரை வழங்கப்படும்; இதர உதவிகள் 2032-33 வரை தொடரும்.

**தகுதியுடைய பயனாளிகள்:** விவசாயிகள், வேளாண் தொழில்முனைவோர், துளிர்/புத்தாக்க நிறுவனங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் (PACS), வணிகக் கூட்டுறவு சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPOs), சுய உதவிக்குழுக்கள் (SHG), கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் (JLG), பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள், மத்திய/ மாநில அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் ஆதரவில் நடைபெறும் பொதுத்துறை மற்றும் தனியார் கூட்டாண்மை திட்டங்கள் (PPP), மண்டிகள், தேசிய மற்றும் மாநில கூட்டுறவு கூட்டமைப்பு மற்றும் FPO / SHG கூட்டமைப்பு.

**தகுதியுடைய திட்டங்கள்:**

**(அ) அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மைத் திட்டங்கள்:** மின்னணு சந்தைப்படுத்தல் தளங்கள், கிடங்குகள், சேமிப்புக் களஞ்சியம், சிப்பம் கட்டுமிடம், பரிசோதனை அறைகள், வகைப்படுத்தும்/ தரம்பிரிக்கும் அலகுகள், குளிர்ப்பதனக் கிடங்குகள், தளவாட வசதிகள், பழங்களைப் பழுக்க வைக்கும் அறைகள், முதன்மை அல்லது ஒருங்கிணைந்த முதன்மை மற்றும் இரண்டாம் நிலை பதனிடும் செயற்பாடுகள் உள்ளிட்ட மதிப்பு கூட்டல் /விநியோகச் சேவைகள் உள்ளடக்கிய விநியோகச் சங்கிலி சேவைகள் இத்திட்டத்தின் கீழ் தகுதியானவையாகும். கீழே கொடுக்கப்பட்டுள்ள சில தகுதியுடையவை மற்றும் தகுதியில்லாத திட்டங்கள் / செயல்முறைகள் /உதாரணங்களைக் காண்க.

| சில தகுதியான முதன்மை பதனிடும் செயல்கள் | சில தகுதியான முதன்மை மற்றும் இரண்டாம் நிலை பதனிடும் செயல்கள் | தகுதியற்ற செயற்பாடுகள் |
|---|---|---|
| தானியங்கள் மற்றும் சிறுதானியங்கள் | | |
| சுத்தம் செய்தல், கல் நீக்குதல், வகைப் படுத்துதல்/ தரம் பிரித்தல், உமி நீக்குதல், அரைத்தல், புழுங்குதல், | ரொட்டி, தினை ரொட்டி/பிஸ்கட், பாஸ்தா, சிற்றுண்டி உணவுகள், மாவுச்சத்து, ஓட் மீல், | தானியங்களை ஊறலாக்குதல் (Malting) மற்றும் |

| | | |
|---|---|---|
| ஊறவைத்தல், உலர்த்துதல், சலித்தல், கதிர்வீச்சு சிப்பம் கட்டுதல், மெலிதாகச் சீவுதல், சேமித்தல் (கிடங்குகள்/ சைலோக்களில்). | சோளம் சிரப், வினிகர், வறுத்த, செறிவூட்டப்பட்ட, பஃப் செய்யப்பட்ட பொருட்கள், கால்நடைத் தீவனம் போன்ற தயாரிப்புகளை உருவாக்குதல் | மதுபானங்கள் தயாரித்தல் |
| பழங்கள் மற்றும் காய்கறிகள் | | |
| கழுவுதல், சுத்தம் செய்தல், உலர்த்துதல், வகைப்படுத்துதல் / தரம் பிரித்தல், உறைவித்தல் (IQF& blast), முதன்மை பதப்படுத்துவதற்கு வெளுத்தல், குளிரூட்டுதல், மெழுகிடுதல், கண்டிஷனிங், சிப்பம் கட்டுமிடம், குளிர்பதனக் கிடங்கு, பழுக்க வைக்கும் அறை, ரீஃபர் (குளிர்சாதனப்பெட்டி) வான் பக்கெட் எலிவேட்டர், பொட்டலம் கட்டுதல் ஆகியன. | பழச்சாறுகள், கூழ், கெட்சப், பழச் செறிவுகள், ஜாம்கள், ஜெல்லிகள், மிட்டாய்கள், பழப்பாகு, டப்பாவில் அடைக்கப்பட்ட பழங்கள் / காய்கறிகள் தயாரித்தல். காய்கறிச் சாறு, ஊறுகாய், சட்னி மற்றும் காய்கறிக்கூழ், வினிகர், உலர்ந்த பழங்கள் மற்றும் காய்கறிகள், பழங்கள் மற்றும் காய்கறி பொடிகள் மற்றும் மாவு | மதுபானம் தயாரித்தல் |
| எண்ணெய் வித்துக்கள் மற்றும் எண்ணெய்ப் பனை | | |
| சுத்தம் செய்தல், கல் நீக்குதல், உமி நீக்குதல் (இயந்திரங்கள் மூலம்), தூற்றுதல், எண்ணெய் பிரித்தெடுத்தல் (மரச்செக்கு, ஹைட்ராலிக் பிழிந்தெடுத்தல்) , கரைப்பான் மூலம் எண்ணெய் பிழிந்தெடுத்தல், புண்ணாக்கு கேக் தயாரித்தல் போன்றவை. | சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் தயாரித்தல் | மசகு எண்ணெய் மற்றும் பயோ-டீசல் தயாரித்தல் |
| பருப்பு வகைகள் | | |
| சுத்தம் செய்தல், கல் நீக்குதல், உலர்த்துதல், வகைப்படுத்துதல் / தரம் பிரித்தல், உமி நீக்குதல், பருப்பு உடைத்தல், அரைத்தல், கதிர்வீச்சு மூலம் சுத்திகரித்தல், பொட்டலம் கட்டுதல், சேமிப்பு போன்றவை | பருப்பு வகைகளை அடிப்படையாகக் கொண்ட தின்பண்டங்கள் (வறுத்த கொண்டைக்கடலை, பயறு சிப்ஸ், பட்டாணி வறுவல்), டப்பாவில் அடைக்கப்பட்ட பருப்பு வகைகள், கொத்தவரை பிசின் தயாரித்தல், பருப்பு அடிப்படையிலான உடனடி கலவை பொடிகள், மாட்டுத் தீவனம், உடனடியாக சமைக்க / சாப்பிடத் தயாராக உள்ள உணவுகள், அப்பளம் போன்றவை. | பருப்பு அடிப்படையிலானப் புரத பொடிகள் |

| | | |
|---|---|---|
| நறுமணப் பொருட்கள் | | |
| சுத்தம் செய்தல், வேகவைத்தல் (மஞ்சள்), உலர்த்துதல், வகைப் படுத்துதல், கொதிக்கவைத்தல், மெருகூட்டுதல், அரைத்தல், பொட்டலமிடுதல், சேமிப்பு, கதிர்வீச்சு மூலம் சுத்திகரித்தல், தரம் பிரித்தல் போன்றவை | மசாலா பேஸ்ட்டுகள், மசாலா கலவைகள், சாறுகள் மற்றும் நறுமண எண்ணெய்கள், நறுமணப் பொருட்கள் உள்ளார்ந்த எண்ணெய் அல்லது சத்து சேர்க்கப்பட்ட எண்ணெய், வினிகர், மசாலா ஊறுகாய், மஞ்சள் சோப்புகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் போன்றவை | மசாலா அடிப்படையிலா ன புரதப் பொடிகள் |
| பருத்தி | | |
| சுத்தம் செய்தல், உலர்த்துதல், விதை நீக்குதல், பொதியில் அமுத்தி மூட்டைகளாகக் கட்டுதல், பருத்தி விதை எண்ணெய், பருத்தி புண்ணாக்கு தயாரித்தல். | பருத்தி இழை/ நூல் தயாரித்தல், நூல் இழை தேய்த்தல். | நெசவு, ஜவுளி, பிளாஸ்டிக், செயற்கை ரப்பர். |
| கரும்பு | | |
| ஆலையில் கரும்பை சரக்குந்திலிருந்து இறக்குதல், சுத்தம் செய்தல், கரும்பை அரைத்தல், சாறு வடிகட்டுதல், சிரப்பை ஆவியாக்குதல், சேமிப்பு தொட்டிகள், உலர்த்திகள், தயாரித்தல், வெல்லத்தை பொட்டலத்தில் கட்டுதல், வெல்லத்தை சேமித்துப் பாதுகாத்தல் போன்றவை. | கற்கண்டு தயாரித்தல், | ஜீனி தயாரித்தல் |
| சணல் | | |
| செடி வெட்டுதல், நார் / இழைப் பிரித்தெடுத்தல்/ உரித்தல், நார் கழுவுதல், உலர்த்துதல், நார் உருட்டுவது, பேக்கிங், சேமித்தல் போன்றவை | சணல் கயிறு தயாரித்தல் | சணல் துணி, பைகள், சாக்குகள் தயாரித்தல் |
| தேநீர், காபி மற்றும் கோக்கோ | | |
| சுத்தம் செய்தல் / கழுவுதல், வதங்க/உலர வைத்தல், உருட்டுதல், நொதித்தல், உலர்த்துதல், வகைப் படுத்துதல், காப்பி பழங்களை உலர்த்துதல், தோல் நீக்குதல், கூழ் செய்தல், ஆக்ஸிஜனேற்றம், பொட்டலம் கட்டுதல், வெள்ளை தேயிலை, | கோக்கோ வெண்ணெய், கோகோ பார், உடனடி/ நொறுக்கு காபி | ஸ்க்ரப், பாடி வாஷ் போன்ற ஒப்பனை பொருட்கள் தயாரித்தல் |

| | | |
|---|---|---|
| கிரீன் டீ, கருப்பு தேயிலை போன்றவை | | |
| தேங்காய் | | |
| மட்டை உரித்தல், தேங்காய் ஓடு நீக்குதல், உடைத்தல், உலர்த்துதல் (கொப்பரை) , அரைத்தல், இளநீர் மற்றும் தேங்காய்ப் பால் பிரித்தெடுத்தல், வெப்ப பதனிடுதல், உருக்கு எண்ணெய், பொட்டலம் கட்டுதல் போன்றவை. | வெண்ணெய், நார்க்கயிறு தயாரித்தல் | |
| ரப்பர் | | |
| கூழாக்குதல், கலத்தல், வடிவமைத்தல், பதனப்படுத்துதல், கதிர்வீச்சு மூலம் சேமித்தல் | | டயர்கள், மெத்தைகள், பாட்டில்கள், பூட்ஸ் போன்ற தயாரிப்புகள். |
| புகையிலை | | |
| சுத்தம் செய்தல், தரம் பிரித்தல், வகைப்படுத்துதல், பதனப்படுத்துதல், உலர்த்துதல், சேமித்தல் போன்றவை | | மெல்லும் வகைப் புகையிலை தயாரிப்புகள், சுருட்டுகள், டிப்ஸ் போன்றவற்றைத் தயாரித்தல். |
| உலர் கொட்டைகள் | | |
| சுத்தம் செய்தல், தரப்படுத்துதல், கொதிகலனில் நீராவியில் வேகவைத்தல், ஓடு வெட்டுதல், உலர்த்துதல், தோல் உரித்தல், தரப்படுத்துதல், பொட்டலமிடுதல், பிரித்து அடைத்தல், தோல் நீக்குதல், கழுவுதல், சேமிப்பு, கன்வேயர் பெல்ட்டில் நகர்த்துதல் போன்றவை | கொட்டை வெண்ணெய், வறுத்த கொட்டைகள், கொட்டைப் பால், கொட்டை மாவு, பாகில் ஊறிய கொட்டைகள், கொட்டை எண்ணெய்கள் மற்றும் தின்பண்டங்கள். | |
| மருத்துவ மற்றும் நறுமணத் தாவரங்கள் | | |
| சுத்தம் செய்தல், வரிசைப்படுத்துதல், உலர்த்துதல், அரைத்தல், எண்ணெய் பிரித்தெடுத்தல், பொட்டலமிடுதல், சேமிப்பு போன்றவை | இனிப்புக்கூழ் | காப்ஸ்யூல்கள், மாத்திரைகள் அல்லது பிற வடிவங்கள், மருந்துகள், கிரீம் போன்ற மூலிகை சப்ளிமெண்ட்ஸ் |
| மூங்கில் | | |

| | | |
|---|---|---|
| உலர்த்துதல், வெட்டுதல், உரித்தல், தாள்கள் தயாரித்தல், மூங்கில் கரித்தூள், மூங்கில் பரல்கள், மூங்கில் சுத்திகரிப்பு நிலையம், மூங்கில் பண்டகசாலைகள் மற்றும் கிடங்குகள் போன்றவை | பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களான ஊறுகாய், உண்ணத் தயார் நிலையில் உள்ள உணவுப் பொருட்கள், நார்ச்சத்து போன்ற பொருட்கள். | தளவாடம், மூங்கில் ஜவுளிகள், அகர்பத்தி |
| தீவனப் பயிர்கள் | | |
| வெட்டுதல், கலத்தல், அரைத்தல் | மாட்டுத் தீவனக் கட்டிகள், தீவன உணவுகள், வைக்கோல் கட்டிகள் மற்றும் துகள்கள் | புரதச் செறிவுகள் |
| மரவள்ளி | | |
| தோல் உரித்தல், கழுவுதல், அரைத்தல், நொதித்தல், உலர்த்துதல், சலித்தல், இயந்திர அரைப்பு, சேமிப்பு போன்றவை | சிப்ஸ், மாவு, மாவுச்சத்து | மதுபானப் பொருட்கள் |
| பாக்கு | | |
| சுத்தம் செய்தல், கொட்டை உரித்தல், தோல் நீக்குதல், கொட்டை பிளத்தல், கொதிக்க வைத்தல், உலர்த்துதல், பொட்டலமிடுதல், | | மரக்கூழ் போர்டு, இன்சுலேஷன் கம்பளி, மெத்தைகள், காகிதம், காகிதப் பலகை போன்றவை. |
| வாழைப் பழம் | | |
| தாய் மரத்திலிருந்து இருந்து தார்களை அகற்றுதல், தார்களை அடுக்குதல் (வெட்டப்பட்ட முனையுடன் கொத்துக்களை மேல்நோக்கி ஒழுங்கமைத்தல்), சுத்தம் செய்தல், தரப்படுத்துதல், முன் குளிரூட்டுதல், பழுக்க வைத்தல், பேக்கேஜிங், சேமிப்பு போன்றவை | வாழைப்பழ சிப்ஸ், மாவு, பழப்பாகு, பழச்சாறு, ஸ்குவாஷ், அல்வா, வாழைத்தண்டு மிட்டாய், கூழ், வாழை நார் காகிதம், வாழைப் பூ ஊறுகாய், சூப் மற்றும் குழந்தைகளுக்கான உணவுகள் தயாரித்தல் | வாழைப் பழ பானங்கள், ஓயின்கள் தயாரித்தல் |

**(ஆ) பயனுள்ள வேளாண் சொத்துகள் உருவாக்கம்:** இயற்கை விவசாய இடுபொருட்கள் உற்பத்தி, உயிர் ஊக்கி உற்பத்தி அலகுகள், திறன்மிகு மற்றும் துல்லிய விவசாயத்திற்கான உட்கட்டமைப்பு உருவாக்குதல், ட்ரோன்கள் வாங்குதல், வயல்களில் சிறப்பு சென்சார்களை (உணர்கருவிகள்) நிறுவுதல், தொகுதி சங்கிலி மேலாண்மை (டிஜிட்டல் பதிவேடு) மற்றும் வேளாண்மையில் செயற்கை நுண்ணறிவு, தானியங்கி வானிலை நிலையம் மற்றும் இணையதள விஷயங்கள், GIS பயன்பாடுகள் மூலம் பண்ணை ஆலோசனை சேவைகள், பண்ணை/ அறுவடை தானியங்கி மயமாக்கல், பட்டுப்புழு வளர்ப்புக்கான ஒருங்கிணைந்த உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் பிரிவு, தேனீ வளர்ப்பு மற்றும் சுருள்பாசி (நீலப்பச்சைப்பாசி) உற்பத்தி, தாவர கோரண்டைன் பிரிவு, PM Kusum- Components A, B & C (சூரிய சக்தி

அடிப்படையிலான பம்ப் செட்), நீரியல் விவசாயம், காளான் வளர்ப்பு, செங்குத்து சாகுபடி (உயரடுக்கு விவசாயம்), பாலிஹவுஸ்/ பசுமைக்குடில் சாகுபடி, நாற்றங்கால்கள், திசு வளர்ப்பு, விதைப் பதப்படுத்துதல், தேன் பதப்படுத்துதல், ஏற்றுமதி தொகுப்புகள் உள்ளிட்ட பயிர்களின் தொகுப்புகளுக்கு விற்பனை-தொடர் உள்கட்டமைப்பை வழங்குவதற்காக அடையாளம் காணப்பட்ட திட்டங்கள், மேலும் மத்திய/மாநில/உள்ளாட்சி அரசுகள் அல்லது அவற்றின் நிறுவனங்கள் PPP முறையில் நிலையான வேளாண் சொத்துகள் அல்லது அறுவடை பிந்தைய மேலாண்மைத் திட்டங்களை உருவாக்க முன்வைக்கும் திட்டங்கள் ஆகியவை இத்திட்டத்தின் கீழ் தகுதியானவையாகும்.

**மற்ற விவரங்கள்:** கடன் வாங்குபவர்கள் மொத்தத் திட்ட செலவில் குறைந்தது 10% பங்களிப்பு செய்வது கட்டாயமாகும். ஒரு விண்ணப்பதாரர் வெவ்வேறு இடங்களில் 25 திட்டங்களை மேற்கொள்ளலாம். அத்தகைய ஒவ்வொரு திட்டமும் ரூ. 2 கோடி வரை கடன் பெறத் தகுதியுடையவை. ஒரே இடத்தில் பல திட்டங்கள் உண்டெனில் அவையும் ரூ. 2 கோடி ஒட்டுமொத்த உச்சவரம்புக்கு உட்பட்டு கடன் பெறத் தகுதியுடையவை. மொத்த மானியத்தில் சுமார் 24% ஆதிதிராவிட /பழங்குடியின தொழில்முனைவோருக்கு வழங்கப்படும்.

**எப்படி விண்ணப்பிப்பது?** https://agriinfra.dac.gov.in/ என்ற இணையதளத்தில் பயனாளியாகப் பதிவு செய்து, தங்களுக்குரிய ஓர் அடையாள எண்ணைப் பெறவும். மேலே உள்ள இணையதளத்திலிருந்து விரிவான திட்ட அறிக்கை மாதிரியைப் பதிவிறக்கம் செய்து, அதைப் பூர்த்தி செய்து அதே இணையதளத்தில் பதிவேற்றவும். DPR-ஐ மதிப்பாய்வு செய்தபிறகு, மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் தகுதியான விண்ணப்பங்களைக் கடன் மதிப்பீட்டிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கிக்கு அனுப்பும். வங்கி நிதி நம்பகத்தன்மைக்காகக் கருத்திட்டத்தின் மீளாய்வு செய்து அதற்கேற்ப திட்டத்திற்கு அனுமதி வழங்கும். இந்தச் செயல்முறை 60 நாட்களில் முடிக்கப்படும்.

**ஆதாரங்கள்:**
https://www.myscheme.gov.in/schemes/aif
https://agriinfra.dac.gov.in/

## (5) e-NAM

**What is eNAM?** The electronic National Agriculture Market (eNAM) is a pan-India electronic trading portal, launched by the Government of India in April 2016. It integrates existing Agricultural Produce Market Committees (APMCs) across the country to create a unified national market for agricultural products. The main goal of the eNAM is to improve transparency in agricultural trade, enhance price discovery (real-time price information allows farmers to get better and more competitive prices), ease of sale (farmers can sell their produce to buyers from anywhere in India) and ensure better income for farmers by minimising intermediaries. NAM is a "virtual" market, but it has a physical market at the back end. Entire arrivals of agricultural commodities selected for trading on eNAM will be traded online only.

**Implementing Agencies**

- Small Farmers Agribusiness Consortium (SFAC) is the lead agency for implementing eNAM under the aegis of M/o Agriculture and Farmers' Welfare, Government of India.
- As of now, 1500+ mandis across India are integrated, with continuous expansion.
- States are encouraged to reform APMC Acts to align with eNAM principles.
- The Directorate of Marketing and Inspection (DMI) will scrutinise the DPR submitted by the State/UT and assist SFAC on any technical issues relating to marketing and the status of marketing reforms in the various States.
- The National Informatics Centre (NIC) act as the technical partner of eNAM and will look after the hosting of e-NAM software on Meghraj cloud.

**How eNAM Works?**

1. Registration
    - Farmers, traders, and commission agents shall have to register on the eNAM portal.
    - Farmers receive a unique ID linked to their Bank A/c and Aadhaar for payments.
    - A mobile App (eNAM) has been developed by the Nodal Agency. It may be downloaded from the Google Play Store.
2. Weighing & Grading
    - Produce is weighed and quality-graded at the mandi by authorised assayers.
    - Grading ensures transparency in trade.
3. Bidding & Selling
    - Buyers can place bids on the platform in real-time.
    - The highest bid is accepted, and farmers receive payment directly to their bank account.
4. Payment & Delivery
    - eNAM facilitates digital payment for farmers.
    - Physical delivery of produce can be local or interstate, depending on the trade.

**Key Features**

- Single market across India
- Mobile app and online portal access

- Real-time price display for commodities
- Online payment settlement
- Interoperable trading between states
- Integration with quality assaying and grading systems

**Commodities Covered**

Initially, eNAM started with major cereals, pulses, oilseeds, fruits, and vegetables. Now, it has expanded to over 200 commodities, including:

- Paddy, wheat, maize
- Pulses, oilseeds
- Fruits: mango, banana, apple
- Vegetables: tomato, onion, potato

**Eligibility criteria for availing assistance under the scheme**

- The State/UT making three mandatory changes in their Agriculture Produce Market Committee (APMC) Acts *w.r.t.* (i) single trading license to be valid across the State/ UT; (ii) single point levy of market fee across the State; and (iii) provision for e-auction/e-trading as a mode of price discovery to be facilitated by the State Agriculture Marketing Department / Board / APMCs / Regulated Market Committees (RMCs), as the case may be are eligible for applying assistance under the eNAM scheme.
- The DA&FW will provide eNAM software at no cost, a one-time fixed cost of ₹30 lakh per market for the purchase of hardware, making internet connection, etc.
- Support for Staff (1 person per market) provided for 1 year at no cost.
- Provision to use Cold Storages & Warehouses as market sub-yards.
- Infrastructure Support (based on their Detailed Project Report-DPR) will be provided to States / UTs for setting up:
    - e-auction halls
    - Assaying labs
    - Electronic weighbridges
    - Training facilities
- The applicant must commit to: Trading 100% of selected commodities through e-NAM in the proposed markets. Providing or linking markets to Soil Testing Laboratories (STLs). Covering extra implementation costs beyond the sanctioned amount. Bearing the costs of software maintenance after 5 years. Registering the implementing agency on the PFMS portal and submitting the necessary bank details to the Department.
- The applicant of the private market, if applying, must be recommended by the concerned authority. Provide all necessary infrastructure and services (e.g., analyst, assaying facilities) at its own expense.

**eNAM Implementation in Tamil Nadu**

- Tamil Nadu commenced its eNAM integration in the third phase starting October 2017 (http://agrimark.tn.gov.in).
- The State hosts a total of 284 regulated markets under 27 market committees. As of March 2025, 63 regulated markets in Tamil Nadu have been integrated with the eNAM platform.

- Farmers in Tamil Nadu utilise eNAM to trade a variety of agricultural commodities, including:

| | |
|---|---|
| Cereals | : Rice, Jowar, Ragi, Bajra, Maize |
| Pulses | : Various pulses cultivated in TN |
| Oilseeds | : Groundnut, Sunflower, etc. |
| Fruits | : Banana, Mango |
| Vegetables | : Tomato, Onion, etc. |
| Others | : Cotton, Sugarcane, Tea, Coffee, Coconut |

**Registration Guidelines for Farmers**

1. Users can register by clicking the website link https://enam.gov.in/NAMV2/home/other_register.html#
2. Select Registration Type as 'Farmer' and select the desired 'APMC'.
3. Provide a valid email ID, as you will receive your Login ID and Password on it.
4. Once successfully registered, you will receive a login ID and a temporary password at the given email.
5. Log in to the dashboard by clicking the icon on www.enam.gov.in/web.
6. You will see a flashing message on the dashboard: "Click here to register with APMC."
7. Click on the flashing link, which will redirect you to the registration page for filling in or updating details.
8. Your application will be sent for approval to your selected APMC after KYC is completed.
9. After successfully logging in to your dashboard, you will be able to see all APMC address details.
10. After successful submission, the user will receive an email confirming that the application has been submitted to the concerned APMC, with the status shown as Submitted, In Progress, Approved, or Rejected.
11. Once approved by the APMC, you will receive your eNAM Farmer Permanent Login ID (e.g., HR866F00001) and password for complete access to the e-NAM platform at your registered email address.
12. Alternatively, you can contact your respective Mandi/APMC for the same or call the e-NAM helpline Number 1800-270-0224

**Registration Guidelines for Traders**

1. Users will have to register by visiting http://enam.gov.in/NAMV2/home/other _register.html.
2. Select "Registration Type" as 'Trader' and choose the appropriate 'APMC' or State Level option.
3. Provide your passport-size photograph and correct email ID to receive your login ID and password at the same address.
4. After successful registration, you will receive your login ID and a temporary password at your provided email ID.
5. Log in to the dashboard by clicking the icon on www.enam.gov.in.
6. Then you will see a flashing message on the dashboard: "Click here to register with APMC."
7. Click on the flashing link, which will redirect you to the registration page for filling in or updating details.

8. Your application will be submitted for approval to your selected APMC or State Agricultural Marketing Board- SAMB (in case of a Unified License).
9. After successfully logging in to your dashboard, you will be able to see the arrivals and trade activities happening in the APMC for notified commodities in eNAM.
10. You will see a flashing message on the dashboard: "Click on the link."
11. It will redirect you to the registration page to submit your license and KYC details as a trader.
12. Your details will be submitted for approval by your selected APMC.
13. Once successfully submitted, you will receive an email confirming the status of the application as Submitted, In Progress, Approved, or Rejected.
14. Its status can be viewed by logging in to the dashboard, as explained earlier.
15. For a permanent login ID (e.g., HR866T00001) and password, visit your respective Mandi/APMC and verify your license number.
16. After successful approval by the APMC, the eNAM Trader/ Commission Agent ID and passwords will be sent to the provided email address.
17. Trader/ Commission Agent users can participate in online trade using the provided login ID and password.

**FPO Registration**

FPOs/FPCs can register on the e-NAM Portal via the website (www.enam.gov.in) or mobile app (eNAM, which can be downloaded from Google Play Store / Apple store) or provide your details such as FPO name, address, email ID and contact number, bank account number, etc. to the nearest eNAM mandi or call eNAM helpline Number 1800-270-0224.

**Sources:**


- https://enam.gov.in/web/
- DAFW. 2016. Operational Guidelines for Promotion of National Agriculture Market (NAM) through Agri-Tech Infrastructure Fund (ATIF). Ministry of Agriculture and Farmers' Welfare, Government of India, New Delhi
- https://www.myscheme.gov.in/schemes/e-nam

## (5) மின்னணு தேசிய வேளாண்மை சந்தை (eNAM)

**eNAM என்றால் என்ன?** மின்னணு தேசிய வேளாண்மை சந்தை (இ-நாம்) என்பது அகில இந்திய அளவில் செயல்படும் டிஜிட்டல் வர்த்தகத் தளமாகும். இது இந்திய அரசால் ஏப்ரல் 2016-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இ-நாம் திட்டம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் செயல்படும் விவசாய உற்பத்தி சந்தை குழுக்களை (APMCs) ஒருங்கிணைத்து, தேசிய அளவிலான வேளாண் சந்தையை உருவாக்குவதற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. eNAM திட்டத்தின் முதன்மை நோக்கங்கள்: வேளாண் வர்த்தகத்தில் வெளிப்படைத்தன்மையை அதிகரித்தல், விற்பவர்-வாங்குபவர்களிடையே விலை நிர்ணயத்தை எளிதில் தீர்மானித்தல் (நேரடி விலைத் தகவல்கள் மூலம் விவசாயிகள் தங்கள் பொருட்களுக்கு சிறந்த விலையைப் பெற உதவுகிறது), விற்பனையை எளிதாக்குதல் (விவசாயிகள் இந்தியாவின் எங்கு இருந்தாலும் தங்கள் பொருட்களை விற்பனை செய்ய முடியும்) மற்றும் இடைத்தரகர்களைக் குறைத்தல், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துதல் ஆகியனவாகும். eNAM என்பது ஓர் 'மெய்நிகர்' சந்தையாகும், ஆனால் அதன் பின்னணியில் ஒரு உண்மையான சந்தை உள்ளது. டிஜிட்டல் தேசிய வேளாண்மை சந்தையில் வர்த்தகத்திற்காகக் கொண்டுவரப்பட்ட அனைத்து விவசாயப் பொருட்களும், ஆன்லைனில் மட்டுமே வர்த்தகம் செய்யப்படும்.

**eNAM செயல்படுத்தும் அமைப்புகள்**

- இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையின் கீழ் செயல்படும் சிறு விவசாயிகள் வேளாண் வணிகக் கூட்டமைப்பு (SFAC) eNAM-ஐ செயல்படுத்தி வருகிறது.
- தற்போது, இந்தியா முழுவதும் 1500-க்கும் மேற்பட்ட சந்தைகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன, தொடர்ந்து விரிவாக்கமும் நடந்து வருகின்றது.
- மாநில APMC-இன் சட்டங்களை eNAM-இன் கொள்கைகளுடன் மாற்றியமைக்க மாநிலங்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளன.
- மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் தாக்கல் செய்யும் விரிவான திட்ட அறிக்கையை வேளாண் பொருட்களைச் சந்தைப்படுத்துதல் மற்றும் ஆய்வு இயக்குநரகம் (DMI) ஆராய்ந்து, அவற்றை SFAC-க்கு அனுப்பும். இந்த DMI, பல்வேறு மாநிலங்களில் மேற்கொள்ள வேண்டிய சந்தைப்படுத்தல் தொடர்பான சீர்திருத்தங்களில் ஏற்படும் தொழில்நுட்ப சிக்கல்களுக்குத் தீர்வு காண SFAC-க்கு உதவியாக இருக்கும்.
- தேசியத் தகவல் மையம் (NIC), eNAM-இன் தொழில்நுட்ப பங்குதாரராக விளங்கும். இது, eNAM-இன் மென்பொருள் மேக்ரஜ் கிளவுடில் இயங்குவதைக் கண்காணிக்கும்.

**eNAM எப்படி செயல்படுகிறது?**

**1. பதிவு செய்தல்:** விவசாயிகள், வர்த்தகர்கள் மற்றும் தரகு முகவர்கள் eNAM வலைதளத்தில் பதிவுசெய்ய வேண்டும். விவசாயிகள் தங்கள் வங்கிக் கணக்கு மற்றும் ஆதார் இணைக்கப்பட்ட தனிப்பட்ட அடையாளத்துடன் பதிவு செய்யப்பட வேண்டும். தொழில்நுட்ப முகமை மூலம் eNAM என்ற கைபேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது. அதைக் கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து (Google Play Store) பதிவிறக்கம் செய்யலாம்.

**2. எடை மற்றும் தரம் பிரித்தல்:** அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டாளர்களால் விளை பொருட்கள் மண்டியில் எடைபோடப்பட்டு தரம் பிரிக்கப்படுகிறது. தரம் பிரிப்பதனால் வர்த்தகத்தில் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்படுகிறது.

**3. ஏலம் மற்றும் விற்பனை:** வாங்குபவர்கள் பொருட்களுக்கான விலையை நிகழ்நேரத்தில் eNAM மின்னணு தளத்தில் ஏலமாக முன்மொழியலாம். அதிக ஏலம் பொருட்களுக்கான விற்பனை விலையாக ஏற்றுக்கொள்ளப்படும். ஏலத் தொகையை விவசாயிகள் தங்கள் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைத்துக்கொள்ளலாம்.

**4. பணம் செலுத்துதல் மற்றும் விநியோகம்:** விவசாயிகளுக்கு டிஜிட்டல் பணம் பரிமாற்றத்தை eNAM எளிதாக்குகிறது. வர்த்தகத்தின் தன்மையைப் பொறுத்து, விளைபொருட்களின் விநியோகம் மாநிலத்திற்குள் அல்லது மாநிலங்களுக்கு இடையே நடைபெறலாம்.

**முக்கிய அம்சங்கள்**

- இ-நாம் என்பது இந்தியா முழுவதற்குமான ஓர் ஒற்றை சந்தையாகும்
- கைபேசி செயலி மற்றும் இணையவழியாக வணிகம் நடைபெறும்
- பொருட்களுக்கு நேரடி விலை கிடைக்கும்
- இணையவழியாக உடனடி பணம் பரிவர்த்தனை
- பல மாநிலங்களுக்கு இடையே எளிதான வர்த்தகம்
- மாநிலங்களுக்கு இடையேயான இயங்கக்கூடிய வர்த்தகம்
- தரம் பிரித்தல் மற்றும் தர மதிப்பீடு செய்யும் அமைப்புகளுடன் ஒருங்கிணைந்த வர்த்தகம் நடைபெறும்

**வர்த்தகம் செய்யப்படும் பொருட்கள்**

ஆரம்பத்தில், மின்னணு தேசிய வேளாண்மை சந்தையானது முக்கிய தானியங்கள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பழங்கள் மற்றும் காய்கறிகளுடன் தொடங்கியது. தற்போது, இந்தச் சந்தையானது 200-க்கும் மேற்பட்ட பொருட்களுக்கு விரிவடைந்துள்ளது. அவற்றில் சில:

- தானியங்கள்: நெல், கோதுமை, சோளம்
- பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள்
- பழங்கள்: மா, வாழைப்பழம், ஆப்பிள்
- காய்கறிகள்: தக்காளி, வெங்காயம், உருளைக்கிழங்கு

**இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கான தகுதிகள்/நிபந்தனைகள்**

- விண்ணப்பதாரர் அரசு நிறுவனமாக இருந்தால், eNAM திட்டத்தின் கீழ் உதவிபெற மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்கள், தங்கள் வேளாண் உற்பத்தி சந்தைக் குழு (APMC) சட்டங்களில் மூன்று கட்டாய மாற்றங்களைச் செய்ய வேண்டும்: (i) 'ஒற்றை வர்த்தக உரிமம்' என்ற முறை மாநிலம்/ யூனியன் பிரதேசம் மாநிலம் / யூனியன் பிரதேசம் முழுவதும் செல்லுபடியாகும் ஒரே வர்த்தக உரிமம் (Single Trading Licence), (ii) மாநிலம் முழுவதும் உள்ள சந்தைகளுக்கு, சந்தைக் கட்டணம்/ வரியை ஒரே இடத்தில் செலுத்துதல் (ஒற்றைப் புள்ளி வரி முறை), மற்றும் (iii) மாநில வேளாண் சந்தைப்படுத்தல் துறை/ வணிக வாரியங்கள் / மண்டி அல்லது வேளாண் உற்பத்தி சந்தைக் குழு / ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அல்லது கமிட்டி மேற்பார்வையில் மின் ஏலம்/இ-வர்த்தகத்திற்கு ஏற்பாடு செய்து, விலையை நிர்ணயம் செய்யச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும்.
- வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை, eNAM-யின் மென்பொருளை இலவசமாக மாநிலங்களுக்கு வழங்கும்; மேலும், கணினி உள்ளிட்ட பொருட்களை வாங்குவதற்கும், இணையதள வசதியை உருவாக்குவதற்கும் ஒரு eNAM சந்தைக்கு ரூ. 30 லட்சம் வரை ஒருமுறை நிலையான நிதியுதவியாக வழங்கும்.

- ஒரு சந்தைக்கு 1 நபர் அல்லது 1 பணியாளரின் சம்பளத்தை ஒரு வருடத்திற்கு வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத் துறை ஏற்கும்.
- ஏற்கனவே உள்ள குளிர் சேமிப்பு மற்றும் கிடங்குகளை மின்னணு வர்த்தகத்திற்குப் பயன்படும் துணை-சந்தை வளாகங்களாகப் பயன்படுத்துவதற்கான வசதிகள் செய்து தரப்படும்.
- விரிவான திட்ட அறிக்கையின் அடிப்படையில், மாநிலங்கள்/ யூ.பிரதேசங்கள் கீழ்க்கண்ட உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த நிதியுதவி வழங்கப்படும்.
  a. மின்னணு-ஏல அரங்குகள்
  b. ஆய்வுக்கூடங்கள்
  c. மின்னணு எடைமேடைகள்
  d. பயிற்சி வசதிகள்

- விண்ணப்பதாரர் கடைப்பிடிக்க வேண்டிய மேலும் சில நிபந்தனைகள்: அறிவிக்கப்பட்ட eNAM சந்தைகளில் விற்பனைக்கு வரும் பொருட்களை 100% மின்னணு வர்த்தகம்மூலம் வணிகம் செய்ய வேண்டும்; புதிதாகத் தோற்றுவிக்கப்படும் eNAM சந்தைகளை அங்குள்ள மண் பரிசோதனை ஆய்வகங்களுடன் இணைக்க இசைவு தெரிவிக்க வேண்டும்சந்தைகளை மண் பரிசோதனை ஆய்வகங்களுடன் இணைத்தல் அல்லது அவற்றின் சேவைகளை வழங்க ஏற்பாடு செய்தல்; அனுமதிக்கப்பட்ட தொகைக்கு அப்பால் உள்ள கூடுதல் செலவுகளை தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்; 5 ஆண்டுகளுக்குப் பிறகு eNAM மென்பொருளின் பராமரிப்புக்கான செலவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்; eNAM சந்தையை செயல்படுத்தும் நிறுவனத்தின் வங்கிக் கணக்கு உட்பட்ட விவரங்களை PFMS இணையதளத்தில் பதிவேற்றம் செய்திட வேண்டும்.
- விண்ணப்பதாரர் தனியாராக இருந்தால், விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட அரசு துறையின் பரிந்துரையுடன் அனுப்ப வேண்டும். தேவையான அனைத்து உள்கட்டமைப்பு மற்றும் சேவைகளை (எ.கா., மதிப்பீட்டாளர், மதிப்பீட்டு வசதிகள்) அவர் தன் சொந்த செலவில் அமைத்துக்கொள்ள வேண்டும்.

**தமிழ்நாட்டில் eNAM-இன் செயல்பாடுகள்**

- தமிழ்நாடு அரசு அக்டோபர் 2017 ஆம் ஆண்டில் eNAM இணைப்பை மூன்றாவது கட்டத்தில் தொடங்கியது (http://agrimark.tn.gov.in).
- தற்சமயம், தமிழ்நாட்டில் 27 சந்தைக் குழுக்களின் கீழ் மொத்தம் 284 சந்தைகள் உள்ளன, மார்ச் 2025 நிலவரப்படி, 63 ஒழுங்குமுறை சந்தைகள் eNAM இயங்கு தளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகள் கீழ்க்கண்ட பல்வேறு வேளாண்மை பொருட்களை வர்த்தகம் செய்ய eNAM-யை பயன்படுத்து வருகின்றனர்.
  i. தானியங்கள்அரிசி : சோளம், ராகி, கம்பு, மக்காச்சோளம்
  ii. பருப்பு வகைகள் தமிழ்நாட்டில் பயிரிடப்படும் பல்வேறு பருப்பு : வகைகள்
  iii. எண்ணெய் வித்துக்கள்நிலக்கடலை :, சூரியகாந்தி
  iv. பழங்கள்வாழை : மாம்பழம்
  v. காய்கறிகள்தக்காளி : வெங்காயம் முதலியன.
  vi. மற்றவைபருத்தி : கரும்பு, தேயிலை, காபி, தேங்காய்

**விவசாயிகள் பதிவு செய்வது எப்படி?**

1. விவசாயிகள் அல்லது பயனர்கள் http://enam.gov.in/NAMV2/home/other_register.html என்ற இணையதளத்தில் தங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

2. 'பதிவு வகை' என்பதில் ‘Farmer’ எனத் தேர்ந்தெடுத்து, உங்கள் பகுதியில் உள்ள ‘APMC/மண்டியை’-யை தேர்வு செய்ய வேண்டும்.
3. உங்கள் login ID என்னும் உள்நுழைவு பதிவு மற்றும் கடவுச்சொல்லை மின்னஞ்சல் முகவரியில் பெறுவீர்கள். எனவே, சரியான மின்னஞ்சல் முகவரியை வழங்கவும்.
4. வெற்றிகரமாகப் பதிவு செய்தவுடன், உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு உள்நுழைவு பதிவு மற்றும் தற்காலிகக் கடவுச்சொல் அனுப்பப்படும்.
5. www.enam.gov.in இணையதளத்தில் உள்ள “முகப்பு/ கட்டுப்பாட்டுப் பக்கத்தில்” உள்நுழையவும்.
6. பின்னர், கட்டுப்பாட்டுப் பலகையில் APMC உடன் பதிவு செய்ய “இங்கே பொத்தானை அழுத்தவும்” என்ற செய்தி தெரியும்.
7. மேற்படி இணைப்பை அழுத்தி, கேட்கப்படும் விவரங்களைப் பூர்த்தி செய்யவும் அல்லது புதுப்பிக்கும் பதிவுப் பக்கத்திற்கு திரும்பச் செல்லவும்.
8. “வாடிக்கையாளரை அறியும் செயல்முறை” (KYC) படிவம் பூர்த்திசெய்து முடிந்ததும் உங்கள் விண்ணப்பம் நீங்கள் தேர்ந்தெடுத்த APMC-க்கு ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்படும்.
9. உங்கள் கட்டுப்பாட்டுப் பலகையில் உள்நுழைந்த பிறகு, அனைத்து APMC முகவரி விவரங்களையும் நீங்கள் பார்க்க முடியும்.
10. வெற்றிகரமாகச் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, உங்கள் விண்ணப்பத்தின் நிலை “சமர்ப்பிக்கப்பட்டது”, அல்லது “செயல்முறையில் உள்ளது”, அல்லது “அங்கீகாரம் பெற்றது” அல்லது “நீக்கப்பட்டது” எனும் உறுதிப்படுத்தும் மின்னஞ்சலைப் பயனர்கள் பெறுவார்கள்.
11. உங்கள் பதிவு, APMC-யால் அங்கீகரிக்கப்பட்டதும், நீங்கள் பதிவு செய்த மின்னஞ்சல் முகவரிக்கு e-NAM இயங்குதளத்தை முழுமையாக அணுகுவதற்கான eNAM-ன் “விவசாயி நிரந்தர login ID" எ.கா., HR866F00001) மற்றும் கடவுச்சொல் அனுப்பி வைக்கப்படும்.
12. மாற்றாக, நீங்கள் சம்பந்தப்பட்ட மண்டி/ சந்தை / சந்தை வாரியத்தை நேரில் தொடர்பு கொள்ளலாம் அல்லது **eNAM-ன் உதவி எண் 1800-270-0224**-ஐ பயன்படுத்தி தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொள்ளலாம்.

**வர்த்தகர்கள் பதிவு செய்வது எப்படி?**

1. வர்த்தகர்கள் / தரகு முகவர்கள்/ பயனர்கள் http://enam.gov.in/NAMV2/home/other_register.html என்ற இணையதளத்தினுள் சென்று தங்களை பதிவு செய்து கொள்ளலாம்.
2. “பதிவு வகையை” –யை ‘Trader’ எனத் தேர்ந்தெடுத்து பொருத்தமான ‘APMC/ மண்டி’ அல்லது 'மாநில அளவிலான வணிக' விருப்பத்தைத் தேர்வு செய்யவும்.
3. உங்கள் உள்நுழைவு பதிவு மற்றும் கடவுச்சொல்லை சரியான முகவரியில் பெற உங்கள் நடப்பு பாஸ்போர்ட் அளவு புகைப்படம் மற்றும் சரியான மின்னஞ்சல் முகவரியை உள்ளீடு செய்யவும்.
4. வெற்றிகரமான பதிவுக்குப் பிறகு, உங்கள் உள்நுழைவு பதிவு மற்றும் தற்காலிகக் கடவுச்சொல்லை நீங்கள் வழங்கிய மின்னஞ்சல் முகவரியில் பெறுவீர்கள்.
5. www.enam.gov.in-ல் உள்ள பொத்தானை அழுத்துவதன் மூலம் “முகப்பு பலகையில்” உள் செல்லமுடியும்.
6. பின்னர் நீங்கள் முகப்பு பலகையில் ஒளிரும் செய்தியைக் காண்பீர்கள்: APMC-யில் பதிவு செய்ய “இங்கே பொத்தானை அழுத்த வேண்டும்".
7. மேற்படி ஒளிரும் இணைப்பை அழுத்த, அது உங்கள் விவரங்களை நிரப்ப / புதுப்பிக்க பதிவுப் பக்கத்திற்கு திருப்பிவிடும்.

8. உங்கள் விண்ணப்பம் நீங்கள் தேர்ந்தெடுத்த APMC அல்லது மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் (ஒற்றை உரிமம் அமலில் உள்ளபோது) ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படும்.
9. உங்கள் முகப்பு பலகையில் வெற்றிகரமாக உள்நுழைந்த பிறகு, APMC-க்கு வரும் சரக்கு மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை நீங்கள் பார்க்க முடியும்.
10. கட்டுபாட்டுப் பலகையில் ஒளிரும் “இணைப்பு பட்டனை அழுத்தவும்.” செய்தியை நீங்கள் காண்பீர்கள்.
11. மேற்படி பட்டனை அழுத்த, அது உங்கள் வணிக உரிமம் மற்றும் KYC பற்றிய விவரங்களைச் சமர்ப்பிக்கும் பதிவு பக்கத்திற்கு திருப்பிவிடும்.
12. நீங்கள் உள்ளீடு செய்யும் விவரங்கள் உங்கள் மண்டி/APMC-இன் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படும்.
13. வெற்றிகரமாகச் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, உங்கள் விண்ணப்பத்தின் நிலை “சமர்ப்பிக்கப்பட்டது”, அல்லது “செயல்முறையில் உள்ளது”, அல்லது “அங்கீகாரம் பெற்றது” அல்லது “நீக்கப்பட்டது” எனும் உறுதிப்படுத்தும் மின்னஞ்சலைப் பயனர்கள் பெறுவார்கள்.
14. முன்பு குறிப்பிட்டுள்ளது போல், கட்டுபாட்டுப் பலகையில் உள்நுழைவதன் மூலம் உங்கள் விவரங்களை / வர்த்தக விவரங்களைப் பார்க்கலாம்.
15. நிரந்தர login பதிவு (எ.கா., HR866T00001) மற்றும் கடவுச்சொல்லுக்கு, அருகிலுள்ள மண்டி/APMC-க்கு சென்று உங்கள் உரிமம் எண்ணை உறுதிசெய்தபின்னர், பெற்றுக்கொள்ளலாம்.
16. APMC-இன் வெற்றிகரமான ஒப்புதலுக்குப் பிறகு, உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு eNAM வர்த்தகர் (trader) அல்லது கமிஷன் ஏஜென்ட் (CA) நிரந்தர login ID மற்றும் கடவுச்சொற்கள் அனுப்பப்படும்.
17. வர்த்தகர்/ தரகு முகவர்களுக்கு வழங்கப்பட்ட உள்நுழைவு பதிவு மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி நீங்கள் ஆன்லைன் வர்த்தகத்தில் பங்கேற்கலாம்.

**FPO-கள் பதிவு செய்வது எப்படி?**

உழவர் உற்பத்தியாளர் அமைப்பு (FPO) அல்லது உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FPC), eNAM இணையதளத்தின் மூலமாக (www.enam.gov.in) அல்லது eNAM கைபேசி செயலி (இது Google Play Store / Apple Store-லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்) வழியாகவும் பதிவு செய்யலாம். மேலும், FPO பெயர், முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் போன் நம்பர், வங்கிக் கணக்கு எண் போன்ற விவரங்களை அருகிலுள்ள eNAM மண்டியில் சமர்ப்பித்தும் அல்லது eNAM-இன் உதவி தொலைபேசி எண் 1800-270-0224-ஐ தொடர்பு கொண்டும் பதிவு செய்து கொள்ளலாம்.

**ஆதாரங்கள்:**


- https://enam.gov.in/web/
- DAFW. 2016. Operational Guidelines for Promotion of National Agriculture Market (NAM) through Agri-Tech Infrastructure Fund (ATIF). Ministry of Agriculture and Farmers' Welfare, Govt. of India, New Delhi
- https://www.myscheme.gov.in/schemes/e-nam

## (6) Farmers Grievance Redressal System (FGRS)

**What is FGRS?** The Farmers Grievance Redressal System (FGRS) is a Central Government initiative to provide a dedicated platform for farmers to register and resolve issues related to central and centrally sponsored agricultural schemes in a time-bound and transparent manner. The FGRS is a crucial step toward responsive governance in agriculture**,** ensuring farmers' voices are heard and acted upon efficiently. Strengthening digital access, local-level participation, and accountability mechanisms can make it more effective.

**Types of Grievances covered**

- Non-receipt or delay of government benefits (PM-Kisan, crop insurance, etc.)
- Quality issues in seeds, fertilisers, or pesticides.
- Problems with crop procurement or MSP payment delays.
- Issues related to credit, irrigation, extension, or technology transfer.
- Land and input subsidy disputes.

**Institutional Linkages:**

The Ministry of Agriculture & Farmers Welfare (M/o A&FW), New Delhi, is the Central coordinating agency. The State Agriculture Departments also implement state-level redressal systems. The District Grievance Cells of each State functioning under the District Collector's office are also involved in the redressal system. The Central / State Government Institutes, like ICAR, KVKs, and ATMA, provide support in field-level awareness and follow-up.

**Key Features or Mechanisms**

*1. Online Portal and Helpline*: The Centralised Public Grievance Redress and Monitoring System (CPGRAMS) (https://pgportal.gov.in) serves as the primary digital platform for grievance submission to the M/o. A&FW. Some states also operate their own FGRS portals (e.g., Tamil Nadu, Maharashtra, Karnataka, etc.). Farmers may also register grievances through a dedicated helpline with IVRS support of Krishi Rakshak Portal Helpline No. 14447, through M-KISAN Scheme Helpline No. 155261 or 011-24300606, or through Kisan Call Centres-1800-180-1551 or National Agricultural Cooperative Marketing Federation (NAFED) Helpline number 1800-111-622 or through TN State's Agriculture Department helpline number 9363440360 for issues such as fertilizer supply (WhatsApp supported) or a written petitions to District Agriculture Offices or CP & PRO, Indian Council of Agricultural Research, Room No 210, Krishi Bhavan, New Delhi – 110001.

*2. Multilingual support*: The system provides support in multiple languages to ensure accessibility for all farmers.

*3. Real-time tracking*: Each grievances receive a unique ID for real-time tracking and automated updates on its status and progress, increasing transparency.

*4. Automated assignment*: The system automatically assigns registered grievances to the appropriate Level (L1) officer for initial review. If misassigned, it can be rerouted by the FGRS helpline or web portal to the correct Department or Subject Matter Expert.

*5. Action and Update*: Grievances are assigned to relevant departments and officials for resolution, with a clear escalation matrix to ensure timely action. The responsible officials take action to resolve the grievance (usually 15-30 days) and update its status on the FGRS portal.

*6. Notification:* Both the farmer and the concerned official receive SMS notifications regarding the registration and status of the grievance. Status and feedback are monitored through dashboards.

*7. Nodal Officers*: Each department or organisation (like ICAR institutes, State Agriculture Universities, input agencies, etc.) designates Grievance Redressal Officers (GROs).

**Source:**

https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=2056695&reg=3&lang=2

## (6) விவசாயிகள் குறைதீர்க்கும் முறைமை (FGRS)

**FGRS என்றால் என்ன?** மத்திய அரசின் முன்னெடுப்பு திட்டமான இந்த விவசாயிகள் குறைதீர்க்கும் முறைமை என்பது, மத்திய அரசின் நேரடி மற்றும் மத்திய அரசின் நிதியுதவி பெற்ற வேளாண் திட்டங்களுடன் தொடர்புடைய பிரச்சனைகளை விவசாயிகள் பதிவுசெய்து தக்க நேரத்திலும், வெளிப்படையான முறையிலும் தீர்வு காண விவசாயிகளுக்கு ஏற்படுத்தப்பட்ட ஒரு குறைதீர்க்கும் முறைமையாகும். FGRS வேளாண்மைத் துறையில் பொறுப்பான நிர்வாகத்தை நோக்கி எடுக்கப்பட்ட முக்கியமான முன்னெடுப்பாகும். இது விவசாயிகளின் கோரிக்கைகளைக் கேட்டறிந்து, அதற்கேற்ப விரைவாக நடவடிக்கை எடுக்க வழிவகுக்கிறது. மேலும், இத்திட்டத்தின் செயல்திறனை மேம்படுத்த டிஜிட்டல் அணுகல், உள்ளூர் அளவிலான பங்கேற்பு மற்றும் பொறுப்பு முறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

**விவசாயிகளிடமிருந்து பெறப்படும் குறைகளின் வகைகள்**

- அரசாங்க சலுகைகள் கிடைக்கப் பெறாதது அல்லது தாமதப்படுவது (PMKISAN, பயிர்க் காப்பீடு போன்றவை)
- விதைகள், உரங்கள் அல்லது பூச்சிக்கொல்லிகளின் தரத்தில் உள்ள குறைகள்
- பயிர் கொள்முதல் அல்லது குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) கிடைக்கப் பெறுவதில் ஏற்படும் தாமதம்
- கடன், நீர்ப்பாசனம், வேளாண் விரிவாக்கம் அல்லது தொழில்நுட்ப பரிமாற்றம் தொடர்பான குறைகள்
- நிலம் மற்றும் வேளாண் இடுபொருட்களின் மானியம் தொடர்பான பிரச்சனைகள்

**தொடர்புடைய நிறுவனங்கள்**

புது தில்லியில் உள்ள வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் (MoA&FW) இந்தக் குறைதீர்க்கும் முறைமையில் மத்திய ஒருங்கிணைப்பு நிறுவனமாகச் செயல்படும். மாநிலத்திலுள்ள வேளாண் துறைகள் மாநில அளவிலான குறைதீர்வு முறைகளைச் செயல்படுத்தி வருகின்றன. மேலும் ஒவ்வொரு மாநிலத்திலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் கீழ் செயல்படும், மாவட்ட குறை தீர்க்கும் பிரிவுகளும் இந்தத் தீர்வு முறைமையில் ஈடுபட்டுள்ளன. மத்திய / மாநில அரசு நிறுவனங்களான, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் (ICAR), வேளாண் அறிவியல் மையங்கள் (KVKs) மற்றும் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) போன்ற நிறுவனங்கள் விவசாயிகளுக்குக் கள-அளவிலான விழிப்புணர்வை ஏற்படுத்தியும், தொடர் நடவடிக்கை (கண்காணிப்பு) செயல்கள் மூலமும் விவசாயிகள் குறைதீர்க்கும் முறைமைக்கு உதவுகின்றன.

**முக்கிய அம்சங்கள் அல்லது வழிமுறைகள்**

*1. இணையவழி தளம் மற்றும் உதவி மையங்கள்*: மத்தியமக்கள் குறை தீர்க்கும் மற்றும் கண்காணிப்பு அமைப்பானது (CPGRAMS) (https://pgportal.gov.in) வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்திற்குக் குறைகளை சமர்ப்பிக்கும் முதன்மை டிஜிட்டல் தளமாக செயல்படுகிறது. சில மாநிலங்கள் தங்களது சொந்த குறைதீர்க்கும் முறைமை இணைய தளங்களைக் கொண்டுள்ளன (எ.கா., தமிழ்நாடு, மகாராஷ்டிரா, கர்நாடகா, முதலியன). விவசாயிகள் தங்கள் குறைகளை ஐ.வி.ஆர்.எஸ் (IVRS) என்னும் தானியங்கி தொலைபேசி மூலம் கீழ்க்காணும் பிரத்தியேக உதவி எண்கள் மூலமாகவும் பதிவு செய்யலாம். கிருஷி ரக்ஷக் போர்டல் உதவி எண். 14447, எம்-கிசான் திட்ட உதவி எண். 155261 / 011-24300606, அல்லது கிசான் அழைப்பு மையங்கள்- 1800-180-1551 அல்லது இந்தியத் தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பு (NAFED) உதவி எண். 1800-111-622 அல்லது தமிழ்நாடு மாநில வேளாண்மைத் துறை

உதவி எண். 93634-40360 (இதன் மூலம் உரம் தொடர்பான பிரச்சனைகளை, வாட்ஸ் ஆப் உதவியுடன் பதிவு செய்யலாம்), அல்லது எழுத்துப்பூர்வமாக மனுக்களை மாவட்ட வேளாண் அலுவலகங்கள் அல்லது CP & PRO, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், அறை எண் 210, கிருஷி பவன், புது தில்லி- 110001 என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

2. *பன்மொழி சேவை:* அனைத்து விவசாயிகளும் பயன்பெறும் வகையில் இந்த அமைப்பு பல மொழிகளில் சேவையை வழங்குகிறது.

3. *நிகழ்நேரக் கண்காணிப்பு*: ஒவ்வொரு குறைகளுக்கும் தனித்துவமான அடையாள எண் (ID) கொடுக்கப்பட்டு, நிகழ்நேரக் கண்காணிப்பின் மூலம் அவற்றின் நிலை மற்றும் முன்னேற்றம்குறித்து தானியங்கு முறையில் அமைக்கப்பட்டுள்ளதால், FGRS-இன் செயல்பாடுகளின் வெளிப்படைத்தன்மை அதிகரிக்கிறது.

4. *தானியங்கி ஒதுக்கீடு:* பதிவுசெய்யப்பட்ட குறைகளை ஆரம்பக்கட்ட மதிப்பாய்வுக்காக FGRS தானாகவே சம்பந்தப்பட்ட நிலை (L1) அதிகாரிக்கு அனுப்புகிறது. ஒருவேளை, அவை தவறாகப் பிற அதிகாரிக்கு/ துறைக்கு அனுப்பப்பட்டால், அதை FGRS உதவி மையம் அல்லது இணையதளத்தின் மூலம் சரியான துறை அல்லது நிபுணருக்குத் திருப்பி அனுப்ப முடியும்.

5. *நடவடிக்கை எடுத்தல் மற்றும் புதுப்பித்தல்*: குறைகளின் மீது சரியான நேரத்தில் நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்யும்பொருட்டு தெளிவான வழிமுறைகளுடன், தீர்வுக்கான தொடர்புடைய துறை மற்றும் அதிகாரிகளுக்குக் குறைகள் அனுப்பப் படுகின்றன. பொறுப்பான அதிகாரிகள் விவசாயிகள் குறையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கிறார்கள் (பொதுவாக 15-30 நாட்கள்) மற்றும் FGRS தளத்தில் அதன் நிலையை புதுப்பிக்கவும் செய்கிறார்கள்.

6. *அறிவிப்பு*: முறையிட்ட விவசாயி மற்றும் குறைதீர்க்கும் அதிகாரி ஆகிய இருவருக்கும் குறையின் பதிவு மற்றும் நிலை குறித்த குறுஞ்செய்தி (SMS) செல்கிறது. இதன் நிலை மற்றும் கருத்துகள் இணையக் கட்டுப்பாட்டகம் (Dashboards) மூலம் கண்காணிக்கப்படுகிறது.

7. *ஒருங்கிணைப்பு அதிகாரிகள்*: ஒவ்வொரு துறை அல்லது அமைப்புகளும் (எ.கா. ICAR நிறுவனங்கள், மாநில வேளாண் பல்கலைக்கழகங்கள், வேளாண் இடுபொருட்கள் தொடர்புடைய நிறுவனங்கள் ஆகியன) குறை தீர்க்கும் அதிகாரிகளை (GRO) நியமிக்கின்றன.

**ஆதாரம்:**

https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=2056695&reg=3&lang=2

## (7) Farmers Producer Organisations (FPO)

**What is FPO?** A Farmers' Producer Organisation (FPO) is a legal entity formed by primary producers, such as a group of farmers, to collectively carry out the production, procurement, processing, and marketing of agricultural produce. An FPO can be a producer company, a cooperative society or any other legal form that provides for the sharing of profits/benefits among the members. Producers are shareholders in the FPO, and an FPO reflect collective power of farmer-producers in which farmers pool their resources, knowledge, and efforts to achieve economies of scale in production and better marketing. Small producers do not have the volume individually (both inputs and production) to get the benefit of economies of scale. However, an FPO enables small and marginal farmers to gain collective strength, better bargaining power, and improved access to technology, credit, and markets. The Formation of FPOs is promoted by the Ministry of Agriculture & Farmers Welfare, Government of India, with the support of implementing agencies (IAs) and State Governments.

**Formation of 10,000 FPOs:** A Central sector scheme for 'Formation & Promotion of 10,000 FPOs (10K FPOs)' across the country till 2027-28 was launched and in operation since 2020-21. The Budget allocation was ₹ 6,866 crore (for the 2020–2027 period). Under the scheme, the formation and promotion of FPO is based on "**Produce Cluster Area approach and specialised commodity-based approach".** While adopting a cluster-based approach, the formation of FPOs will be focused on "One District One Product" for the development of product specialisation. The Scheme is implemented through 14 implementing agencies (IAs).

The target assigned to each IA is shown below.

| Sr. No | Implementing Agencies (IAs) | Target / Allocations |
|---|---|---|
| 1 | Central Agricultural University (CAU), Manipur | 60 |
| 2 | Farmer Development and Rural Value Chain under Ministry of Rural Development – National Rural Livelihood Mission (FDRVVC MoRD-NRLM) | 800 |
| 3 | Gujarat National Forensic Sciences University (GNFSU) | 97 |
| 4 | National Bank for Agriculture and Rural Development (NABARD) | 1,694 |
| 5 | National Agricultural Cooperative Marketing Federation of India Ltd (NAFED) | 1,191 |
| 6 | National Cooperative Development Corporation (NCDC) | 1,863 |
| 7 | National Dairy Development Board (NDDB) | 126 |
| 8 | North Eastern Regional Agricultural Marketing Corporation Ltd (NERAMAC) | 220 |
| 9 | Pravesh Agri Marketing Cooperative Ltd (PAMCL) | 25 |
| 10 | Small Farmers' Agribusiness Consortium (SFAC) | 3,711 |
| 11 | SFAC – Tamil Nadu | 50 |
| 12 | Tribal Cooperative Marketing Development Federation of India Ltd. (TRIFED) | 13 |
| 13 | Uttar Pradesh Diversified Agriculture Support Project (UPDASP) | 50 |
| 14 | Watershed Development Department (WDD), Karnataka | 100 |
| | Grand Total | **10,000** |

Special Role:

- *The SFAC will also focus on the Equity Grant & Credit Guarantee Fund Scheme for FPOs.*
- *The NAFED & TRIFED would form the specialised FPOs, which should necessarily be forwardly linked to the market, agri-value chain, etc.*
- *The NABARD will also look into capacity building and financial assistance to FPOs*
- *The NCDC will focus on assistance under Cooperative Development Schemes*

**Assistance available to the FPOs**

*1. Financial:* FPOs will be provided financial assistance up to ₹ 18 lakh per FPO for a period of three years. The one-time registration charges of the FPO with the Company Act/ Society Registration Act, Salary of CEO/Manager and Accountant, Office rent, Travel and Meeting cost, etc. of the FPO are reimbursable within the grant shown above. In addition, provision is made for giving matching equity grant up to ₹ 2000 per farmer member of FPO with a limit of ₹ 15 lakh per FPO and a credit guarantee facility up to ₹ 2 crore of project loan per FPO from eligible lending institution to ensure institutional credit accessibility to FPOs i.e. Producer members' own equity is supplemented by a matching Equity Grant from Government, which is required to strengthen financial base of FPOs and help them to get credit from financial institutions for their projects and working capital requirements for business development.

*2. Training*. There are well-defined training structures in the scheme, and institutions like Bankers Institute of Rural Development (BIRD), Lucknow and Laxmanrao Inamdar National Academy for Co-operative Research & Development (LINAC), Gurugram have been chosen as the lead training institutes for capacity development & training of FPOs. A Learning Management System (LMS) portal for Farmers (https://10kfpo.lms.gov.in/) has been designed to build the capacity and knowledge of all the stakeholders (FPOs/CBBOs/IAs/Farmers) under the 10K FPOs scheme. The LMS portal has 837 modules ranging from the FPO promotion-related topics, crop-specific trainings, value addition topics and DPRs for convergence with other schemes.

*3. Facilitating various licenses supports:* The Department of A&FW, Government of India, with the help of the State Government, are facilitating FPOS to obtain input licenses (seed, fertiliser, pesticide), APMC trade licenses, FSSAI, GST licenses, etc. Thus, FPOs have established backward input linkages by stocking the entire range of inputs like seeds, fertilisers, bio-pesticides, & pesticides for their farmer members. Through this initiative, farmers act collectively and obtain group discounts on the purchase of various inputs (seed, fertilisers, pesticides, etc.) and, thus, eventually get a better price for the sale of their produce. Through this intervention, Farmer members will have easy accessibility to quality agricultural inputs without the fear of spurious products and assured availability of the inputs at fair prices throughout the season.

*4. Onboarding of FPOs on ONDC Network*: As of March 2025, about 7757 FPOs have been onboarded on the Open Network for Digital Commerce (ONDC), which aims to expand the market reach of these FPOs beyond local boundaries, facilitate B2B transactions, enabling them to connect directly with consumers across India.

**How to Form an FPO?**

1. *Mobilisation of Farmers*: Identify and mobilize minimum of about 300 farmers in a cluster area (if it is a hilly region, NEH Region, minimum 100 farmers). It would be better if the number of farmers in an FPO is close to 500.

2. *Formation of Producer Group (PG)*: Farmers form informal groups based on common interests/crops. Farmer Interest Group (FIG) or Self-Help Group (SHG), Farmers Club (FC), Joint Liability Group (JLG), Rythu Mitra Group, etc., located with almost the same interest, are to be mobilised to form an FPO.
3. *Registration of FPO under different Acts*: Register the FPO either as a 'Producer Company' or as a 'Cooperative' under the relevant Act. FPOs are generally registered under one of the following Acts: Part IXA of the Companies Act, 2013, as a Producer Company (most common), or the Co-operative Societies Act, 2002 (including the Mutually Aided Cooperative Societies (MACS) Act) or Societies Registration Act, 1860. The Alagh Committee (Y.K. Alagh Committee) recommended amending the Companies Act to allow for the formation of FPOs, a legal structure combining the ideals of cooperatives with a company's business-friendly framework.
4. *Formation of Board*: Elect the Board of Directors (5–15 members) and one CEO for management.
5. *Preparation of Business Plan:* Develop a plan on aggregation, input supply, value addition, and marketing.
6. *Linkage with Implementing Agencies*: Connect with implementing agencies like SFAC, NABARD, NCDC, NAFED, etc., for financial and technical support. At the national level, a National Project Management Agency (NPMA) set up by SFAC will provide overall project guidance, data maintenance through an integrated portal and information management and monitoring.

Formation & promotion of FPOs is the first step for converting agriculture into Atmanirbhar Krishi. This will enhance cost-effective production and productivity, and higher net incomes for the members of the FPO. Also, improve the rural economy and create job opportunities for rural youths in the villages themselves. This was the major step towards improving farmers' income substantially.

**Services and Activities undertaken by FPOs**

1. Procurement & Supply of inputs like seed, fertiliser, pesticides, etc. at reasonably lower wholesale rates & facilitating finance for inputs
2. Make available need-based production and post-production machinery on a custom hiring basis for members to reduce the per-unit production cost
3. Dissemination of technology and innovations
4. Make available value addition like cleaning, assaying, sorting, grading, packing and also farm level processing facilities at user charge basis on reasonably cheaper rate.
5. Undertake higher income-generating activities like seed production, beekeeping, mushroom cultivation, etc.
6. Undertake aggregation of smaller lots of farmer-members' produce; add value to make them more marketable
7. Facilitate market information about the produce for judicious decisions in production and marketing
8. Facilitate logistics services such as storage, transportation, loading/unloading, etc., on a shared cost basis

9. Market the aggregated produce with better negotiation strength to the buyers and in the marketing channels, offering better and remunerative prices
10. Participation in commodity exchanges and export of agri products

**Eligibility Criteria for Equity Grant**

An FPO fulfilling the following criteria shall be eligible to apply for an **Equity Grant** under the Scheme.

1. It shall be a legal entity (registered under any Act).
2. It has raised equity from its members as laid down in its Articles of Association/ Bye laws, as the case may be.
3. The number of its individual shareholders is in accordance with the terms hereto read together with the Scheme.
4. Minimum 50% of its shareholders are small, marginal and landless tenant farmers as defined by the Agriculture Census carried out periodically by the Ministry of Agriculture, GoI. Women farmers' participation as shareholders is to be preferred.
5. Maximum shareholding by any one member shall not be more than 10% of the total equity of the FPO.
6. A farmer can be a member of more than one FPO with different produce clusters, but he/she will be eligible only once(for any one FPO that he/she is a member of) for the matching equity grant up to his/her share.
7. In the Board of Directors (BoD) and Governing Body (GB), as the case may be, there shall be adequate representation of women farmer member(s) and there should be at least one woman member.
8. It has a duly constituted Management Committee responsible for the business of the FPO.
9. It has a business plan and budget for the next 18 months that is based on a sustainable revenue model, as may be determined by the Implementing Agency

**Sources:**


- DAFW, 2020. Formation and Promotion of 10,000 Farmer-Producer Organisations (FPOs) Operational Guidelines. Ministry of Agriculture & Farmers' Welfare, Government of India.
- NABARD, 2015. Farmer-Producer Organisation. Frequently Asked Questions (FAQs). National Bank for Agriculture, Mumbai
- PIB 2021. Farmer Producer Organisations (FPOs). https://www.pib.gov.in /FactsheetDetails.aspx?Id=148588.

## (7) உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPO)

**FPO என்றால் என்ன?** உழவர் உற்பத்தியாளர் அமைப்பு (FPO) என்பது முதன்மை உற்பத்தியாளர்களால் (எ.கா. விவசாயிகள் குழு போன்றவை) இணைந்து உருவாக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வமான அமைப்பாகும். இதன் மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களின் உற்பத்தி, கொள்முதல், பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றைக் கூட்டாக மேற்கொள்வதற்காக உருவாக்கப்படும் அமைப்பாகும். FPO என்பது உற்பத்தியாளர் நிறுவனமாகவோ அல்லது கூட்டுறவு சங்கமாகவோ அல்லது உறுப்பினர்களிடையே இலாபங்களைப் பகிர்ந்துகொள்ளும் ஏதேனும் பிற சட்டரீதியான அமைப்பாகவோ இருக்கலாம். FPO-இல் உற்பத்தியாளர்கள் அல்லது உறுப்பினர்கள் அனைவரும் பங்குதாரர்களாக இருப்பார்கள். ஆகவே, FPO என்பது விவசாயிகள் ஒன்றிணைந்த கூட்டு சக்தியின் பிரதிபலிப்பு ஆகும். இதில் விவசாயிகள் தங்கள் வளங்கள், அறிவு மற்றும் ஆற்றலை ஒருங்கிணைத்து மிகச் சிறந்த உற்பத்தி மற்றும் வணிக வாய்ப்புகளைத் உருவாக்கிக் கொள்கின்றனர். சிறு மற்றும் குறு விவசாயிகள் தனித்தனியாகப் பாடுபட்டால் சிறந்த பொருளாதார பலன்களைப் பெற முடியாது. ஆனால், அவர்கள் FPO-களாக மாறுவதன்மூலம் அவர்களின் கூட்டு வலிமையால் பேரம்பேசும் திறன், உயர் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்தல், கடன்பெறும் திறன் மற்றும் சிறந்த வணிக வாய்ப்புகள் முதலியவற்றைப் பெறமுடிகிறது. FPO-களை உருவாக்குவதற்காக மத்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம், மாநில அரசுகள் மற்றும் பிற செயல்படுத்தும் முகமைகள் இணைந்து செயலாற்றி வருகின்றன.

**10,000 FPO-களை உருவாக்கும் திட்டம்**: 2027-28 வரை நாடு முழுவதும் '10,000 FPO-களை (10K FPO-கள்) உருவாக்குதல் மற்றும் ஊக்குவித்தல்' என்ற மத்திய அரசின் நேரடித் திட்டம் தொடங்கப்பட்டு 2020-21 முதல் செயல்பாட்டில் உள்ளது. இதற்காக, ரூ. 6,866 கோடி (2020–2027 காலகட்டத்திற்கு) பட்ஜெட் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் FPO உருவாக்குவதற்கு “விளைபொருள் தொகுப்பு அணுகுமுறை” மற்றும் “சிறப்பு விளைபொருள் அடிப்படையிலான அணுகுமுறை” என்ற அணுகுமுறைகள் பின்பற்றப்படுகின்றன. தொகுப்பு அணுகுமுறையைப் பின்பற்றும் அதே வேளையில், FPO-களை உருவாக்கும்பொழுது நிபுணத்துவத்தை/தனித்துவத்தை மேம்படுத்துவதற்காக "ஒரு மாவட்டம்-ஒரு தயாரிப்பு" என்ற கொள்கையிலும் கவனம் செலுத்தப்படுகிறது. இந்தத் திட்டம் 14 செயல்படுத்தும் முகமைகள் (IAs) மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு IA க்கும் ஒதுக்கப்பட்ட இலக்கு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| # | செயல்படுத்தும் முகமைகள் (IAs) | இலக்கு / ஒதுக்கீடுகள் |
|---|---|---|
| 1 | மத்திய வேளாண் பல்கலைக்கழகம், மணிப்பூர் | 60 |
| 2 | கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் விவசாயிகள் மேம்பாடு மற்றும் கிராமப்புற மதிப்புச் சங்கிலி – தேசியக் கிராமப்புற வாழ்வாதார இயக்கம் | 800 |
| 3 | குஜராத் தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழகம் | 97 |
| 4 | தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி | 1,694 |
| 5 | தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை கூட்டமைப்பு லிமிடெட் (NAFED) | 1,191 |
| 6 | தேசியக் கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் | 1,863 |
| 7 | தேசியக் பால்வள மேம்பாட்டு வாரியம் | 126 |
| 8 | வடகிழக்குப் பிராந்திய வேளாண் விற்பனைக் கழகம் லிமிடெட் | 220 |

| | | |
|---|---|---|
| 9 | பிரவேஷ் அக்ரி மார்க்கெட்டிங் கூட்டுறவு லிமிடெட் | 25 |
| 10 | சிறு விவசாயிகள் வேளாண் வணிக கூட்டமைப்பு (SFAC) | 3,711 |
| 11 | SFAC – தமிழ்நாடு | 50 |
| 12 | இந்தியப் பழங்குடி மக்கள் கூட்டுறவு வணிக மேம்பாட்டுக் கூட்டமைப்பு லிமிடெட் (TRIFED) | 13 |
| 13 | உத்திரப் பிரதேச மாற்றுப்பயிர் விவசாய ஆதரவு திட்டம் | 50 |
| 14 | நீர்நிலை மேம்பாட்டுத் துறை, கர்நாடகா | 100 |
| | மொத்தம் | **10,000** |

*சிறப்புப் பங்காற்றுதல்:*

- *SFAC என்னும் செயல்படுத்தும் முகமை, FPO-களுக்கான பங்கு மானியம் & கடன் உத்தரவாத நிதித் திட்டத்திலும் கவனம் செலுத்தும்.*
- *NAFED & TRIFED ஆகிய முகமைகள் சிறப்பு FPO-களை உருவாக்கும். இத்தகைய FPO-கள் கட்டாயம் சந்தை, வேளாண் பொருட்கள் மதிப்புச் சங்கிலி ஆகியவற்றுடன் இணைக்கப்படும்.*
- *நபார்டு வங்கி கூடுதலாகத் திறன் மேம்பாடு மற்றும் FPO-களுக்கு நிதி உதவி ஆகியவற்றையும் கவனிக்கும்.*
- *கூட்டுறவு மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் உதவி வழங்குவதில் NCDC கவனம் செலுத்தும்.*

**FPO-களுக்கு கிடைக்கும் உதவிகள்**

***1. நிதி***: FPO-களுக்கு மூன்று வருட காலத்திற்கு ஒரு FPO-விற்கு ரூ. 18 லட்சம்வரை நிதி உதவி வழங்கப்படுகிறது. FPO-களை நிறுவன சட்டம்/ சங்கப் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யச் செலுத்தப்படும் ஒரு-முறை பதிவுக் கட்டணம், FPO-வின் முதன்மை செயல் அலுவலர்/மேலாளர் மற்றும் கணக்காளரின் சம்பளம், அலுவலகக் கட்டிடம் வாடகை, பயண மற்றும் கூட்டம் போன்ற செலவினங்களை மேலே குறிப்பிட்டுள்ள மானியத்திற்கு மிகாமல் FPO-கள் பெற்றுக் கொள்ளலாம். இதுமட்டுமின்றி, இத்திட்டத்தில் ஒவ்வொரு விவசாயி உறுப்பினருக்கும் அதிகபட்சம் ரூ. 2,000 வரை 'சமமான பங்கு மானியம்த' வழங்குவதற்கு ஒரு FPO-விற்கு தலா ரூ. 15 லட்சம் வரை நிதி உதவி வழங்கப்படுகிறது. அத்துடன், ஒவ்வொரு FPO- விற்கும் தகுதியுள்ள நிதி நிறுவனங்களிடமிருந்து திட்டக் கடனுக்கு அதிகபட்சம் ரூ. 2 கோடிவரை கடன் உத்தரவாத வசதி வழங்கப்படுகிறது. இது FPO-களுக்கு நிறுவன ரீதியான கடன் பெறுதலை எளிதாக்குகிறது. அதாவது, FPO உறுப்பினர்களின் சொந்தப் பங்குத்தொகைக்கு ஈடாக அரசாங்கத்திடமிருந்து சமமான மேட்சிங் மானியம் கூடுதலாக வழங்கப்படுகிறது. இது FPO-களின் நிதி ஆதாரத்தை வலுப்படுத்தவும், அவர்களின் திட்டங்கள் மற்றும் வணிக மேம்பாட்டிற்கான பணி மூலதனத் தேவைகளுக்கு நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற உதவியாக இருக்கும்.

***2. பயிற்சி***: இந்தத் திட்டத்தில் நன்கு வரையறுக்கப்பட்ட பயிற்சி கட்டமைப்புகள் உள்ளன. லக்னோவில் உள்ள வங்கியாளர்கள் கிராமப்புற மேம்பாட்டு நிறுவனம் (BIRD) மற்றும் குருகிராமில் உள்ள லக்ஷ்மண்ராவ் இனாம்தார் தேசியக் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அகாடமி (LINAC) போன்ற நிறுவனங்கள் FPO-க்களின் திறன் மேம்பாடு மற்றும் பயிற்சிகளுக்கான முன்னணி பயிற்சி நிறுவனங்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. 10K FPOs திட்டத்தின் கீழ் அனைத்து பங்குதாரர்களின் (FPOs/CBBOs/IAs/Farmers) திறன் மற்றும் அறிவை வளர்ப்பதற்காக விவசாயிகளுக்கான கற்றல் மேலாண்மை அமைப்பு (LMS) வலைதளம் (https://10kfpo.lms.gov.in/) வடிவமைக்கப்பட்டுள்ளது. LMS வலைதளத்தில் FPO ஊக்குவிப்பு தொடர்பான செய்தி-பக்கங்கள், பயிர் சார்ந்த பயிற்சி-பக்கங்கள், மதிப்புக் கூட்டல் தகவல் பக்கங்கள், மற்றும் பிற திட்டங்களுடன் ஒருங்கிணைப்பதற்கான DPRகள் என 837 செய்தி-தொகுதிகள் உள்ளன.

***3. பல்வேறு உரிமங்கள் பெறுவதை எளிதாக்குதல்***: இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை, மாநில அரசின் உதவியுடன், FPO-க்களுக்கு இடுபொருள் விற்பனை உரிமங்கள் (விதை, உரம், பூச்சிக்கொல்லி), APMC வர்த்தக உரிமங்கள், FSSAI, GST உரிமங்கள் போன்றவற்றைப் பெற உதவி செய்கிறது. இதனால், FPO-கள் விதைகள், உரங்கள், உயிரிப் பூச்சிக்கொல்லிகள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் போன்ற இடுபொருட்களை சேமித்து வைத்து அதன் மூலம் தங்கள் உறுப்பினர்களுக்குத் தக்க சமயத்தில் வழங்க முடியும். மேலும், இத்தகைய முயற்சியின் மூலம், விவசாயிகள் கூட்டாகச் செயல்பட்டு பல்வேறு இடுபொருட்களை (விதை, உரங்கள், பூச்சிக்கொல்லிகள் போன்றவை) வாங்குவதில் தள்ளுபடி / மானியத்தைப் பெறுகிறார்கள், இறுதியில் தங்கள் விளைபொருட்களின் விற்பனைக்கு சரியான விலையைப் பெறுகிறார்கள். FPO-க்கள் உருவாவதன் மூலம், விவசாயிகள் போலியான பொருட்களின் பயம் இல்லாமல் தரமான விவசாய இடுபொருட்களை எளிதாக வாங்க முடியும் மற்றும் பருவம் முழுவதும் நியாயமான விலையில் இடுபொருட்கள் கிடைப்பதை உறுதி செய்ய முடியும்.

***4. ONDC நெட்வொர்க்கில் FPO-களை இணைத்தல்***: மார்ச் 2025 நிலவரப்படி, சுமார் 7757-க்கு மேற்பட்ட FPO-க்கள் டிஜிட்டல் வர்த்தகத்திற்கான திறந்த வலையமைப்பில் (ONDC) சேர்க்கப்பட்டுள்ளன. இந்த ONDC தளம் FPO-களின் வியாபாரத்தை உள்ளூர் எல்லைகளுக்கு அப்பால் விரிவுபடுத்துவதற்கும், B2B பரிவர்த்தனைகளை எளிதாக்குவதற்கும், இந்தியா முழுவதும் உள்ள நுகர்வோருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் உதவி வருகிறது.

**FPO-வை எவ்வாறு உருவாக்குவது?**

*1. விவசாயிகளை அணிதிரட்டுதல்*: ஒரு கிளஸ்டர் அல்லது தொகுப்பில் குறைந்தபட்சம் 300 விவசாயிகளை அணிதிரட்ட வேண்டும் (மலைப்பாங்கான பகுதி மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் ஒரு கிளஸ்டருக்கு குறைந்தபட்சம் 100 விவசாயிகள் போதுமானது). ஒரு FPO-வில் சேர்க்கப்படும் விவசாயிகளின் எண்ணிக்கை 500-ஐ நெருங்கினால் நன்றாக இருக்கும்.

*2. உற்பத்தியாளர் குழு (PG) உருவாக்கம்*: பல விவசாயிகள் ஒன்றுசேர்ந்து பொதுவான நலன்கள் /பயிர்களின் அடிப்படையில் முறைசாரா உற்பத்தியாளர் குழுக்களை உருவாக்குகிறார்கள். விவசாயிகள் ஆர்வக் குழு (FIG) அல்லது சுய உதவிக் குழு (SHG), விவசாயிகள் சங்கம் (FC), கூட்டுப் பொறுப்புக் குழு (JLG), ரிது மித்ரா குழு போன்ற கிட்டத்தட்ட ஒரே ஆர்வத்துடன் அமைந்துள்ள குழுக்களை ஒன்றுதிரட்டி FPO-ஐ உருவாக்கலாம்.

*3. சம்பந்தப்பட்ட சட்டத்தின் கீழ் FPO பதிவு செய்தல்*: FPO-வை 'தயாரிப்பாளர் நிறுவனம்' அல்லது 'கூட்டுறவு' என்று தொடர்புடைய சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டும். FPO-கள் பொதுவாகப் பின்வரும் சட்டங்களில் ஒன்றின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன: நிறுவனங்கள் / நிறுவன சட்டம், 2013-இன் பகுதி IXA ஓர் உற்பத்தியாளர் நிறுவனமாக (இது அதிகம் பதிவாகிறது), அல்லது கூட்டுறவு சங்கங்கள் சட்டம், 2002 (பரஸ்பர உதவி பெறும் கூட்டுறவு சங்கங்கள் (MACS) சட்டம் உட்பட) அல்லது சங்கங்கள் பதிவுச் சட்டம், 1860. YK அலக் குழு தான் FPO-களுக்கு சட்ட அனுமதி கிடைக்கும் வகையில் நிறுவன சட்டத்தைத் திருத்துமாறு பரிந்துரைத்தது. FPO-கள் கூட்டுறவு சங்கங்களின் கொள்கைகளையும் நிறுவனங்களின் வணிகக் கட்டமைப்பு இரண்டையும் தன்னகத்தே கொண்டிருக்கும்.

*4. வாரியம் உருவாக்கம்*: சுமார் 5–15 உறுப்பினர்களை இயக்குனர்களாகக் கொண்ட ஒரு வாரியத்தையும் மற்றும் நிர்வாகத்திற்கு ஒரு தலைமை நிர்வாக அதிகாரியையும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

*5. வணிகத் திட்டத்தைத் தயாரித்தல்*: இடுபொருட்கள் மற்ற தளவாடப் பொருட்களை எங்ஙனம் திரட்டுவது, இடுபொருட்களை எவ்வாறு உறுப்பினர்களுக்கு வழங்குவது, விளைபொருட்களுக்கு எவ்வாறு மதிப்புக் கூட்டுவது / சந்தைப்படுத்துவது உள்ளிட்ட தகவல்கள் அடங்கிய திட்டத்தை உருவாக்க வேண்டும்.

*6. செயல்படுத்தும் நிறுவனங்களுடன் இணைப்பு*: நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவுகளுக்காக SFAC, NABARD, NCDC, NAFED போன்ற செயல்படுத்தும் நிறுவனங்களுடன் FPO இணைக்கப்பட வேண்டும். தேசிய அளவில், SFAC ஆல் அமைக்கப்பட்ட தேசிய திட்ட மேலாண்மை நிறுவனம் (NPMA), திட்ட வழிகாட்டுதல், ஒருங்கிணைந்த போர்ட்டல் மூலம் தரவுகளைப் பராமரித்தல் மற்றும் தகவல் மேலாண்மை மற்றும் கண்காணிப்பு ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.

வளர்ந்து வரும் இந்திய வேளாண்மையை சுயசார்பு வேளாண்மையாக (ஆத்மநிர்பர் கிரிஷி) மாற்றுவதற்கான முதல் படியாக இந்த உழவர் உற்பத்தியாளர் அமைப்பை உருவாக்குதல் மற்றும் ஊக்குவித்தல் அமைந்துள்ளது. FPO-கள் மூலம் செலவு குறைந்த உற்பத்தி, அதிக உற்பத்தித்திறன், மற்றும் உறுப்பினர்களுக்கு அதிக நிகர வருமானம் கிடைக்கும். கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தி கிராமப்புற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும். விவசாயிகளின் வருமானத்தைக் கணிசமாக மேம்படுத்துவதற்கான முக்கிய படியாக இது அமையும்.

**FPO-களால் மேற்கொள்ளப்படும் சேவைகள் மற்றும் செயல்பாடுகள்**

1. விதை, உரம், பூச்சிக்கொல்லிகள் போன்ற இடுபொருட்களை நியாயமான, குறைந்த, மொத்த விலையில் கொள்முதல் செய்து வழங்குதல் மற்றும் இடுபொருட்களுக்கு நிதியுதவி செய்தல்.
2. உறுப்பினர்களுக்கு தேவைப்படும் வேளாண் இயந்திரங்களை வாடகைக்குக் கிடைக்கச் செய்தல். இதனால் உற்பத்திச் செலவைக் குறைக்க முடியும்.
3. புதிய வேளாண் தொழில்நுட்பம் மற்றும் புதுமைகளை விவசாயிகளிடம் பரப்புதல்.
4. வேளாண் பொருட்களுக்கான மதிப்புக் கூட்டல் வசதிகளை (எ.கா. தானியங்களை சுத்தம் செய்தல், வகைப் படுத்துதல், தரம் பிரித்தல், சிப்பம் அல்லது பொட்டலம் கட்டுதல் மற்றும் பண்ணை அளவிலான பதப்படுத்தும் வசதிகளை) உறுப்பினர்களுக்கு நியாயமான மலிவான விலையில் கிடைக்கச் செய்தல்.
5. விதை உற்பத்தி, தேனீ வளர்ப்பு, காளான் வளர்ப்பு போன்ற அதிக வருமானம் ஈட்டும் தொழில்களை மேற்கொள்ளுதல்.
6. உறுப்பினர்களின் சிறிய அளவிலான விளைபொருட்களை ஒருங்கிணைத்து, அவற்றை மேலும் சந்தைப்படுத்தக்கூடியதாக மாற்ற மதிப்புக் கூட்டுதல்.
7. உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலில் விவேகமான முடிவெடுப்பதற்கு விளைபொருட்கள் பற்றிய சந்தை தகவல்களைப் பகிர்தல்.
8. தானியங்கள் /பழங்கள்/காய்கறிகள் ஆகியவற்றை சேமித்து வைத்தல், சரக்குப் போக்குவரத்து, சரக்கு ஏற்றுதல் / இறக்குதல் போன்ற தளவாடச் சேவைகளைக் கூட்டுச் செலவுமூலம் எளிமையாக்குதல்.
9. உறுப்பினர்கள் விளைவித்த பொருட்களை ஒன்றுசேர்த்து நல்ல விலை தரும் சந்தைகளில், பேரம் பேசி, இலாபகரமான விலைக்கு விற்பனை செய்தல்.
10. வேளாண் பொருட்களின் ஏற்றுமதி மற்றும் பண்டப் பரிமாற்ற சந்தைகளில் பங்கேற்றல்.

**சமபங்கு மானியம் பெறுவதற்கான தகுதிகள்**

கீழ்க்கண்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் இத்திட்டத்தின் கீழ் சமபங்கு மானியத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையனதாகும்.

1. FPO ஓர் சட்டப்பூர்வ நிறுவனமாக அதாவது, ஏதேனுமொரு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதாக இருக்க வேண்டும்.
2. அதன் சங்க விதிகள்/ துணை சட்டங்களில் குறிப்பிட்டுள்ளபடி, FPO அதன் உறுப்பினர்களிடமிருந்து பங்குத் தொகையை திரட்டியிருக்க வேண்டும்.
3. தனிநபர் பங்குதாரர்களின் எண்ணிக்கை, திட்டத்தின் விதிகளுடன் இணைந்து நிர்ணயிக்கப்பட்டு இருக்க வேண்டும்.
4. குறைந்தபட்சம் 50% பங்குதாரர்கள் இந்திய அரசின் வேளாண் அமைச்சகம் வரையறை செய்துள்ள சிறு, குறு மற்றும் நிலமில்லா குத்தகை விவசாயிகளாக இருக்க வேண்டும். பெண் விவசாயிகளைப் பங்குதாரர்களாக சேர்ப்பது வரவேற்கத்தக்கது.
5. ஓர் உறுப்பினர் வைத்திருக்கும் அதிகபட்ச பங்குத்தொகை, FPO-வின் மொத்த பங்குத் தொகையின் 10% ஐ மீறக்கூடாது.
6. ஒரு விவசாயி பல FPO-களில் உறுப்பினராக இருக்கலாம் (வெவ்வேறு உற்பத்தி தொகுதிகளில்), ஆனால் பங்கு நிதி உதவிக்காக அவர் ஒரு FPO-வில் மட்டுமே (அவர் உறுப்பினராக உள்ள FPO) தகுதியுள்ளவராகக் கருதப்படும்.
7. இயக்குநர்கள் குழு மற்றும் நிர்வாகக் குழுவில், பெண் விவசாயி உறுப்பினர்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும். குறைந்தபட்சம் ஒரு பெண் உறுப்பினராவது ஒரு FPO-வில் இருத்தல் வேண்டும்.
8. FPO-வின் வணிக நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான மற்றும் முறையாக அமைக்கப்பட்ட நிர்வாகக் குழு இருக்க வேண்டும்.
9. எதிர்வரும் 18 மாதங்களுக்குண்டான வணிகத் திட்டம் மற்றும் நிதிநிலை அறிக்கை வைத்திருக்க வேண்டும். இது நிரந்தர வருமானத்தை ஈட்டும் வகையிலும், FPO-ஐ செயல்படுத்தும் முகமையின் வழிகாட்டுதலின்படியும் இருத்தல் வேண்டும்.

**ஆதாரங்கள்:**


- DAFW, 2020. Formation and Promotion of 10,000 Farmer Producer Organizations (FPOs) Operational Guidelines. Ministry of Agriculture & Farmers' Welfare, Govt of India.
- NABARD, 2015. Farmer Producer Organization. Frequently Asked Questions (FAQs). National Bank for Agriculture, Mumbai
- PIB 2021. Farmer Producer Organisations (FPOs). https://www.pib.gov.in /FactsheetDetails.aspx?Id=148588.

## (8) Integrated Scheme for Agricultural Marketing (ISAM)

**What is ISAM?** In November 2013, the Ministry of A&FW, Government of India, merged several earlier schemes under one umbrella to streamline agricultural marketing reforms and infrastructure support. The Integrated Scheme for Agricultural Marketing (ISAM) was launched on 1st April 2014. The ISAM now has the following five components:

1. Agricultural Marketing Infrastructure (AMI)
2. Marketing Research and Information Network (MRIN)
3. Strengthening of Agmark Grading Facilities (SAGF),
4. Agri-Business Development (ABD) through Venture Capital Assistance (VCA) and Project Development Facility (PDF)
5. Choudhary Charan Singh National Institute of Agriculture Marketing (NIAM).

**Implementing Agencies**

The ISAM scheme is implemented by the Ministry of Agriculture & Farmers' Welfare, Government of India, in collaboration with

1. Directorate of Marketing & Inspection (DMI)
2. Small Farmers Agribusiness Consortium (SFAC) and
3. National Institute of Agricultural Marketing (NIAM).

**Components or Sub-schemes of ISAM**

**1. Agricultural Marketing Infrastructure (AMI)**

The earlier schemes like Grameen Bhandaran Yojana and Development / Strengthening of Agricultural Marketing Infrastructure, Grading and Standardisation were merged as AMI. This component supports the creation/improvement of marketing infrastructure such as markets, market yards, rural godowns (capacity from 25 MT to 30,000 MT), cold storage, pack houses, and grading units. Also supports post-harvest operations, including reefer vans, Stand-alone cold storages (note: up to 1000 MTs alone, for cold storage above 1000 MT, WDRA accreditation is mandatory), and Integrated Value Chain (IVC) Projects up to primary processing. Assistance is provided to individual entrepreneurs, cooperatives, farmers, and FPOs for setting up these facilities to reduce post-harvest losses and improve marketing efficiency.

*Eligibility:* Anyone can apply for the scheme. Individuals, farmers, and entrepreneurs who own or lease land for agricultural or allied activities, Farmer Producer Organisations (FPOs), Self-Help Groups (SHGs), Cooperatives, and NGOs engaged in agricultural marketing. Agricultural Produce Market Committees (APMCs), Panchayats, Marketing Boards, and State or UT Governments. Private and public sector companies, including partnership firms involved in post-harvest management and value chain development.

*Subsidy details*: The applicant will be eligible for a subsidy @ 25% for the general category and up to 33.33% for the special category and women, towards capital cost for institutions eligible for refinance by NABARD or any other FI, such as State Financial Corporations (SFCs) approved by DAC&FW. The promoters of AMI can also avail interest subvention under the AIF scheme.

**Application procedures** (Offline mode)

1. Promoter applies for Term Loan (TL) to Financial Institution (FI)
2. Term loan sanctioned by FIs
3. FI applies for the Advance Subsidy within 90 days of disbursal of the first instalment of TL through the ENSURE portal of NABARD
4. NABARD sanctions and releases the Advance Subsidy to the FI
5. After completion of the project, FI will submit the final subsidy claim to NABARD and requests for Joint Monitoring Inspection (JMI)
6. NABARD will initiate action for the conduct of JMI, and the Geo-tagged photograph taken during JMI will be uploaded to the Ensure Portal
7. NABARD sanctions and releases the final subsidy to the FI

**2. Marketing Research and Information Network (MRIN)**

MRIN focuses on strengthening market information systems by collecting, analysing, and disseminating real-time price and arrival data for agricultural commodities. This network links Agricultural Produce Market Committees (APMCs) and State Agricultural Marketing Boards with a central database to ensure transparency in price discovery. The portal AGMARKNET, which operates under this component, provides updated market intelligence to farmers, traders, and policymakers.

*Who can apply?*

- State Agricultural Marketing Boards and APMCs with computer connectivity and capacity to upload market data are eligible to apply under this scheme.
- Directorates of Marketing & Inspection (DMI) regional offices and State Government departments engaged in data collection.
- Recognised research and academic institutions conducting studies on agricultural marketing, price behaviour, and information systems.

**3. Agri-Business Development (ABD) through Venture Capital Assistance (VCA):** This sub-scheme, implemented through the Small Farmers' Agribusiness Consortium (SFAC), promotes agribusiness ventures and entrepreneurship in the agricultural value chain. It provides venture capital assistance to agribusiness projects that add value to agricultural produce, such as food processing, cold chain logistics, grading, packaging, and export promotion, thereby creating rural employment and attracting private investment.

*Who can apply?*

- Entrepreneurs, agripreneurs, and agribusiness companies operating in the production, processing, storage, or marketing of agricultural produce.
- Registered FPOs, cooperatives, and SHGs engaged in value addition and processing.
- Partnership firms and private limited companies supported under the SFAC Venture Capital Assistance Scheme.

**4. Strengthening of Agmark Grading Facilities (SAGF)**

This component focuses on improving the quality assurance and standardisation system in agricultural marketing through the AGMARK certification process. It supports modernization of State and Regional Agmark Laboratories, the establishment of new grading laboratories, and the training of technical personnel for quality control and grading of agricultural and allied products.

*Who can apply?*

- State Agmark Grading Laboratories (SAGLs) and Regional Agmark Laboratories (RALs) functioning under the Directorate of Marketing and Inspection (DMI).
- State Governments, UT Administrations, and accredited institutions seeking to establish new or upgrade existing grading and quality control facilities.
- Training and testing institutions recognised for AGMARK certification.

**5. Choudhary Charan Singh National Institute of Agricultural Marketing (CCS-NIAM):**

This sub-scheme provides training, research, consultancy, and policy support in agricultural marketing. CCS-NIAM acts as the national-level institution for capacity building of officials, FPO leaders, and agribusiness managers. It conducts advanced training programmes on market-led extension, value chain management, digital marketing, and agri-start-ups, aligning the marketing system with global best practices.

**Funding**

Financial assistance under ISAM follows a 60:40 sharing ratio between the Centre and States (90:10 for North Eastern and Hilly States).

The ISAM scheme promotes reforms in the agricultural marketing sector, including the adoption of the model of the Agricultural Produce and Livestock Marketing (APLM) Act, promotion of e-NAM (National Agriculture Market) for digital trading, and integration of physical markets through electronic platforms. By creating an efficient, integrated marketing ecosystem, ISAM enhances farmers' access to markets, minimises intermediaries, reduces post-harvest wastage, and contributes significantly toward achieving the vision of Doubling Farmers' Income (DFI).

**Sources:**


- DAFW. 2018. Operational Guidelines 2018. Agricultural Marketing Infrastructure Sub-Scheme of the Integrated Scheme for Agricultural Marketing. Department of Agriculture & Farmers' Welfare, Government of India
- DAFW. 2014. Operational Guidelines 2014. Integrated Scheme for Agricultural Marketing (ISAM). Department of Agriculture & Cooperation, Government of India
- https://www.mofpi.gov.in/sites/default/files/ISAM%20-GuidelinesXII-Plan.pdf
- https://dmi.gov.in/Documents/AMI_OG_Scheme.pdf

## (8) வேளாண் சந்தைப்படுத்தலுக்கான ஒருங்கிணைந்த திட்டம் (ISAM)

**ISAM என்பது என்ன?** மத்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சகம், வேளாண் சந்தைப்படுத்தல் துறையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளவும் மற்றும் உள்கட்டமைப்பு நிதி ஆதரவை நெறிப்படுத்தவும் பல்வேறு முந்தைய திட்டங்கள் மற்றும் நடைமுறை திட்டங்களை ஒன்றிணைத்து நவம்பர் 2013-இல், வேளாண் சந்தைப்படுத்தலுக்கான ஒருங்கிணைந்த திட்டத்தை (ISAM) உருவாக்கியது. இந்தத் திட்டம், 1 ஏப்ரல், 2014-இல் அறிமுகப்படுத்தப்பட்டது. நடைமுறையில் உள்ள வேளாண் சந்தைப்படுத்தலுக்கான ஒருங்கிணைந்த திட்டம் கீழ்க்காணும் ஐந்து முக்கிய கூறுகளை/துணைத் திட்டங்களைக் கொண்டுள்ளது:

1. வேளாண் சந்தை உள்கட்டமைப்பு (AMI)
2. சந்தை ஆராய்ச்சி மற்றும் தகவல் வலையமைப்பு (MRIN)
3. அக்மார்க் தரச்சான்று வசதிகளை வலுப்படுத்தல் (SAGF)
4. துணிகர மூலதன உதவி (VCA) மற்றும் திட்ட மேம்பாட்டு வசதி (PDF) மூலமாக வேளாண் வணிக வளர்ச்சி (ABD)
5. சௌதிரி சரண் சிங் தேசிய வேளாண் சந்தை நிறுவனம் (CCS-NIAM)

### செயல்படுத்தும் முகமைகள்

வேளாண் சந்தைப்படுத்தலுக்கான ஒருங்கிணைந்த திட்டம் கீழ்க்கண்ட நிறுவனங்களின் மேற்பார்வையில் செயல்படுத்தப்படுகிறது.

1. வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை, இந்திய அரசு
2. வேளாண் பொருட்கள் சந்தைப்படுத்தல் மற்றும் ஆய்வு இயக்குநரகம் (DMI)
3. சிறு விவசாயிகள் வேளாண் வணிகக் கூட்டமைப்பு (SFAC)
4. சௌதிரி சரண் சிங் தேசிய வேளாண் சந்தை நிறுவனம் (CCS-NIAM)

### ISAM-இன் கூறுகள் அல்லது துணைத் திட்டங்கள்

#### 1. வேளாண் சந்தை உள்கட்டமைப்பு (AMI)

முன்பு இருந்த கிராமப்புறக் கிடங்கு கட்டும் திட்டம் மற்றும் வேளாண் சந்தை உட்கட்டமைப்பு-தரம் பிரித்தல்- தரப்படுத்தல் (தர அளவீடு) மேம்பாட்டு/வலுப்படுத்தல் திட்டங்கள் AMI-இல் ஒன்றிணைக்கப்பட்டன. இந்தத் திட்டம், சந்தை மையங்கள், சந்தை வளாகங்கள், கிராமியக் கிடங்குகள் (சுமார் 25 டன் முதல் 30,000 டன் வரை), குளிர்சாதனக் கிடங்குகள், பொதி அல்லது சிப்பம் கட்டும் கூடம், தரம் பிரிக்கும் கூடம் போன்றவற்றை உருவாக்கவும், மேம்படுத்தவும் வகை செய்கிறது. மேலும், அறுவடைக்குப் பிந்தைய பதப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் குளிர்பதன வாகனம் (reefer van) வாங்குதல், தனித்து இயங்கும் குளிர்பதனக் கிடங்கு அமைத்தல் (குறிப்பு: 1000 மெட்ரிக் டன்கள் வரை, 1000 டன்களுக்கு மேல் உள்ள குளிர்சாதன சேமிப்பிற்கு WDRA அங்கீகாரம் கட்டாயம்) மற்றும் முதன்மை பதப்படுத்துதல் வரையிலான ஒருங்கிணைந்த மதிப்புச் சங்கிலி ஆகிய திட்டங்களுக்கும் ஆதரவு அளிக்கப்படுகிறது. தனிநபர்கள், கூட்டுறவு சங்கங்கள், விவசாயிகள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் இந்த வசதிகளை அமைத்து, அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைத்து, சந்தைத்திறனை மேம்படுத்துவதற்காக இத்திட்டத்தின் மூலம் உதவி பெறலாம்.

தகுதி: இத்திட்டத்திற்கு அனைவரும் விண்ணப்பிக்கலாம். தனிநபர்கள், தொழில்முனைவோர், விவசாயிகள், அல்லது அது சார்ந்த நடவடிக்கைகளுக்காக

நிலத்தை சொந்தமாகவோ அல்லது குத்தகைக்கு எடுத்தோ வைத்திருக்கும் தனிநபர்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள், கூட்டுறவு சங்கங்கள், அரசு சாரா நிறுவனங்கள், வேளாண் விளைபொருள் சந்தைக் குழுக்கள், பஞ்சாயத்துகள், சந்தைப்படுத்தல் வாரியங்கள், தனியார் மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள், அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் மதிப்புச் சங்கிலி மேம்பாட்டில் ஈடுபட்டுள்ள கூட்டாண்மை முகமைகள் உட்பட அனைவரும் விண்ணப்பிக்கலாம்.

*மானிய விவரம்:* பொதுப் பிரிவினருக்கு 25 சதவீதம் மானியமும், சிறப்புப் பிரிவினர் மற்றும் பெண்களுக்கு 33.33 சதவீதம் மானியமும் அளிக்கப்படுகிறது. இவை நபார்ட் வங்கி அல்லது மற்ற நிதி நிறுவனங்கள் (உ.ம்., மாநில நிதி கார்பொரேசன்) மூலம் வழங்கப்படும். AMI திட்டத்தின் பயனாளிகள், வேளாண் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழும் வட்டி மானியத்தைப் பெறலாம்.

**விண்ணப்ப நடைமுறை (காகித முறை)**

1. ப்ரோமோட்டர்/முதலாளி/உரிமையாளர் ஒரு நிதி நிறுவனத்தில் காலக்கெடுக் கடனுக்காக விண்ணப்பிக்கிறார்.
2. நிதி நிறுவனம் கடனுக்கான ஒப்புதல் அளிக்கிறது.
3. விண்ணப்பதாரருக்கு முதல் தவணை வழங்கப்பட்ட 90 நாட்களுக்குள், மேற்படி நிதி நிறுவனம் முன்பண மானியத்திற்கு நபார்டு வங்கியின் ENSURE வலைத்தளத்தில் விண்ணப்பிக்கிறது.
4. நபார்டு முன்பண மானியத்தை நிதி நிறுவனத்திற்கு அளிக்கிறது.
5. திட்டம் முடிந்தபின் நிதி நிறுவனம் இறுதி உதவித்தொகைக்கான கோரிக்கை மற்றும் அதனோடு கூட்டு கண்காணிப்பு ஆய்வுக்கான கோரிக்கையை நபார்ட்-க்கு சமர்ப்பிக்கிறது.
6. நபார்டு கூட்டு கண்காணிப்புக் குழு ஆய்வுகளை மேற்கொள்ளும், மேலும் புவி-குறியிடப்பட்ட (ஜியோ-டேக்) புகைப்படங்கள் ENSURE வலைதளத்தில் பதிவேற்றப்படும்.
7. கூட்டு கண்காணிப்பு ஆய்வு முடிந்தபின் நபார்டு இறுதி உதவித்தொகையை நிதி நிறுவனத்திற்கு அளிக்கும்.

**2. சந்தை ஆராய்ச்சி மற்றும் தகவல் வலையமைப்பு**

சந்தை ஆராய்ச்சி மற்றும் தகவல் வலையமைப்பு என்பது வேளாண் பொருட்களுக்கான நிகழ்நேர (நேரடி) விலை, சந்தை-வருகைத் தரவுகளை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், மற்றும் தொடர்புடைய தகவல்களை வழங்கி சந்தைத் தகவல் அமைப்புகளை வலுப்படுத்துகிறது. விலை நிர்ணயத்தில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்வதற்காக இந்த வலையமைப்பு வேளாண் உற்பத்தி சந்தை குழுக்கள் மற்றும் மாநில வேளாண் சந்தைப்படுத்துதல் வாரியங்களையும் ஒரு மைய தரவுத்தளத்துடன் இணைக்கின்றது. இந்த கூறின் கீழ் செயல்படும் AGMARKNET வலைத்தளம், விவசாயிகள், வர்த்தகர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கு சந்தைத் தகவல்களை வழங்குகிறது.

*யார் விண்ணப்பிக்கலாம்?*

- கணினி இணைப்பு வசதி மற்றும் சந்தைத் தரவைப் பதிவேற்றும் திறன் கொண்ட மாநில வேளாண் சந்தை வாரியங்கள் மற்றும் வேளாண் உற்பத்தி சந்தை குழுக்கள் இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கலாம்.

- தரவு சேகரிப்பில் ஈடுபடும் சந்தைப்படுத்தல் மற்றும் ஆய்வு இயக்குநரகம், பிராந்திய அலுவலகங்கள் மற்றும் மாநில அரசுத் துறைகள்.
- வேளாண் சந்தைப்படுத்தல், விலை நடத்தை மற்றும் தகவல் அமைப்புகள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்கள்.

**3. துணிகர மூலதன உதவி மற்றும் திட்ட மேம்பாட்டு வசதி உதவியுடன் வேளாண் வணிக வளர்ச்சி**

இந்தத் துணைத் திட்டம், சிறு விவசாயிகள் வேளாண் வணிகக் கூட்டமைப்பு (SFAC) வழியாகச் செயல்படுத்தப்படுகிறது. இதன் நோக்கம், வேளாண் மதிப்புச் சங்கிலியில் தொழில்-முனைவுத்தன்மையையும், வேளாண் வணிக முயற்சிகளையும் ஊக்குவிப்பதாகும். இது, உணவு பதப்படுத்துதல், குளிர்சாதனச் சங்கிலி தளவாடங்கள், தரப்படுத்துதல், பொதி கட்டுதல் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு போன்ற மதிப்பைக் கூட்டும் வேளாண் வணிகத் திட்டங்களுக்குத் துணிகர மூலதன உதவி வழங்குகிறது. இதன்மூலம் ஊரக வேலைவாய்ப்பை உருவாக்கி, தனியார் முதலீட்டை ஈர்க்க முடியும்.

*யார் விண்ணப்பிக்கலாம்?*

- தொழில்முனைவோர், வேளாண் தொழில்முனைவோர் மற்றும் வேளாண் உற்பத்தி, பதப்படுத்துதல், சேமிப்பு அல்லது சந்தைப்படுத்தலில் ஈடுபட்டுள்ள வேளாண் தொழில்முனைவு நிறுவனங்கள்.
- பதிவுசெய்யப்பட்ட உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள், மதிப்புக்கூட்டல் மற்றும் பதப்படுத்துவதில் ஈடுபட்டோர்.
- துணிகர மூலதன உதவித் திட்டத்தின்கீழ் உதவி பெறும் கூட்டாண்மை நிறுவனங்கள் மற்றும் தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள்.

**4. அக்மார்க் தரச்சான்று வசதிகளை வலுப்படுத்துதல்**

அக்மார்க் சான்றிதழ் செயல்முறையின் மூலம், வேளாண் சந்தைப்படுத்தலில் தர உறுதி மற்றும் தரநிலையாக்க முறைமையை மேம்படுத்துவதில் இந்தத் திட்டம் கவனம் செலுத்துகிறது. மேலும் இத்திட்டத்தின் கீழ், மாநில மற்றும் பிராந்திய அக்மார்க் ஆய்வகங்களை நவீனமயமாக்கல், புதிய தரப்படுத்துதல் ஆய்வகங்கள் அமைத்தல், தரக் கட்டுப்பாடு மற்றும் தரப்படுத்துதலில் ஈடுபடும் தொழில்நுட்ப நிபுணர்களுக்குப் பயிற்சி வழங்குதல் ஆகியவை இடம்பெறும்.

*யார் விண்ணப்பிக்கலாம்?*

- வேளாண் பொருட்கள் சந்தைப்படுத்துதல் மற்றும் ஆய்வு இயக்குநரகம் கீழ் செயல்படும் மாநில மற்றும் பிராந்திய அக்மார்க் ஆய்வகங்கள் (SAGLs & RALs).
- மாநில அரசுகள், யூனியன் பிரதேச நிர்வாகங்கள், மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் – புதிய அல்லது மேம்படுத்தப்பட்ட தர மற்றும் தரக்கட்டுப்பாட்டு வசதிகளை அமைக்க விரும்புவோர்.
- அக்மார்க் சான்றிதழுக்காக அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி மற்றும் சோதனை நிறுவனங்கள்.

**5. சௌதிரி சரண் சிங் தேசிய வேளாண் சந்தைப்படுத்தல் நிறுவனம் (CCS-NIAM)**

இந்தத் துணைத் திட்டம், வேளாண் சந்தைப்படுத்தல் துறையில் பயிற்சி, ஆராய்ச்சி, ஆலோசனை மற்றும் கொள்கைகள் வகுக்க உதவி செய்கிறது. அதிகாரிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் தலைவர்கள் மற்றும் வேளாண் வணிக

மேலாளர்களின் திறன் மேம்பாட்டிற்குத் தேசிய அளவிலான நிறுவனமாக செயல்படுகிறது. இதில் சந்தை சார்ந்த விரிவாக்கம், மதிப்புச் சங்கிலி மேலாண்மை, இணைய வழி சந்தைப்படுத்தல், வேளாண் புத்தாக்க நிறுவனங்கள் குறித்த மேம்பட்ட பயிற்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன. இதில் அளிக்கப்படும் அனைத்து மேம்பட்ட பயிற்சித் திட்டங்களும் உலகளாவிய சிறந்த நடைமுறைகளுடன் இணைந்த வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**நிதியுதவி**

இத்திட்டத்திற்கு, மத்திய மற்றும் மாநிலங்களின் நிதி பங்களிப்பு 60:40 விகிதமாகும். வடகிழக்கு மற்றும் மலைப்பகுதி மாநிலங்களுக்கு 90:10 விகிதத்தில் நிதிப் பகிர்வு செய்யப்படுகிறது.

வேளாண் சந்தைப்படுத்தலுக்கான ஒருங்கிணைந்த திட்டம், வேளாண் சந்தை துறையில் பல முக்கிய சீர்திருத்தங்களை ஊக்குவிக்கின்றது. குறிப்பாக, வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை சந்தைப்படுத்தல் சட்டத்தை (APLM Act) போன்ற நடைமுறைகளைப் பின்பற்றுதல், டிஜிட்டல் வர்த்தகத்திற்காக மின்னணு வேளாண் சந்தையை (e-NAM) முன்னெடுத்தல், நேரடிச் சந்தைகளை மின்னணு தளங்கள் மூலம் ஒருங்கிணைத்தல் ஆகிய சீர்திருத்தங்களைக் கூறலாம். இத்திட்டத்தின் மூலம், திறமையான, ஒருங்கிணைந்த சந்தை அமைப்பை உருவாக்கி, விவசாயிகள் தங்கள் பொருட்களின் விற்பனையை அதிகரிக்க முடியும், மேலும், இத்திட்டம் இடைத்தரகர்களைக் குறைத்து, அறுவடைக்குப் பிந்தைய இழப்பைக் குறைத்து விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் இலக்கை அடையச் சிறந்த பங்களிப்பாற்றுகிறது.

**ஆதாரங்கள்:**


- DAFW. 2018. Operational Guidelines 2018. Agricultural Marketing Infrastructure Sub-Scheme of Integrated Scheme for Agricultural Marketing. Dept of Agriculture & Farmers' Welfare, Govt of India
- DAFW. 2014. Operational Guidelines 2014. Integrated Scheme for Agricultural Marketing (ISAM). Dept of Agriculture & Cooperation, Govt of India
- https://www.mofpi.gov.in/sites/default/files/ISAM%20-GuidelinesXII-Plan.pdf
- https://dmi.gov.in/Documents/AMI_OG_Scheme.pdf

## (9) Kisan Call Centre (KCC)

**What is KCC?** The Kisan Call Centre (KCC) scheme was launched in January 2004 by the Ministry of Agriculture & Farmers Welfare (M/o. A&FW), Government of India, to provide real-time, location-specific agricultural information and advisory services to farmers through a toll-free number **1800-180-1551** in their local language. KCC is a fully Centrally Sponsored Scheme (100%) under Sub-Mission on Agricultural Extension (SMAE) of the Krishonnati Yojana and is managed by a Service Provider, *i.e.,* IFFCO Kisan Sanchar Limited (IKSL). These call Centres are working in 21 different locations covering all the States and UTs.

### Objectives

- To provide timely, accurate, and region-specific agricultural advice.
- To enable direct communication between farmers and experts.
- To disseminate the latest technologies and government schemes.
- To collect feedback and field information for policy improvement.
- To empower farmers with information on inputs, markets, and weather.

### Implementing Departments/Agency:

- Nodal Ministry: M/o Agriculture & Farmers Welfare, Government of India
- Implementing Agency: Department of Agri & Farmers Welfare (DA&FW)
- Knowledge Partner: National Institute of Agricultural Extension Management, Hyderabad, is the national-level monitoring and capacity-building agency.
- Coverage: All States and Union Territories

### Structure and How KCC Works?

Kisan Call Centres operate through a three-tier system ensuring expert guidance at every level.

| Level | Designation / Role | Function |
|---|---|---|
| Level 1 | Call Centre Agents (Farm Tele Advisors) | Receive farmers' calls and answer general queries using preloaded databases in the local language. |
| Level 2 | Subject Matter Specialists (SMSs) | Provide expert answers to complex queries referred from Level 1. |
| Level 3 | Nodal Officers (State Agricultural Universities / ICAR Institutions) | Handle unresolved or critical queries and ensure quality control. |

### Operational Steps

1. Farmer dial toll-free number 1800-180-1551. The call routed automatically to the nearest KCC.
2. Level 1 (Farm Tele Advisor) answers in the local language.
3. If unresolved, the call is escalated to Level 2 (Expert).
4. Complex queries go to Level 3 (Nodal Expert).
5. Solutions and follow-up are recorded in the database.
6. Feedback collected from farmers for quality improvement.

**Functional Features**

- Toll-Free Phone Number: 1800-180-1551 (available across India).
- Working Hours: 6 AM – 10 PM (7 days a week).
- Languages: 22 Indian languages (Tamil, Hindi, Telugu, Bengali, etc.).
- Automatic Call Routing: Based on the caller's location.
- Knowledge Management System (KMS): Online platform for frequently asked questions and updated advisories.
- **Upgraded Version KCC 2.0**: It is integrated with mKisan Portal, SMS alerts, mobile app, data dashboard, and AI-based voice recognition.

**KCC in Tamil Nadu**

- Operated in the Tamil language, serving all districts.
- Managed jointly by the Department of Agriculture & Farmers Welfare, TN and TNAU, Coimbatore.
- Experts from TNAU, KVKs, and line departments provide advisory services.
- Focus areas: Crop protection, pest management, nutrient management, rainfed farming, market information, etc.
- Helps in rapid response during natural disasters or pest outbreaks (e.g., Fall Army worm, Floods).

**Benefits of KCC**

- Free Service: Toll-free call (no cost to farmers).
- Instant Access to Experts: Farmers can contact specialists from home.
- Localised Information: Advice provided in the regional language based on the agro-climatic zone.
- Time-Saving: Reduces dependence on local intermediaries.
- Knowledge Upgradation: Improves awareness of modern technologies and schemes.
- Disaster Support: Vital during droughts, pest outbreaks, and epidemics.
- Policy Feedback: Farmers' feedback helps the government in extension planning.

**Registration of Farmers in KCC**

*1. Kisan Call Centre Registration:* Farmers can call up KCC through a toll-free number 1800-180-1551. Registration of the farmers is done by a '**KCC Agent**' at the Kisan Call Centre, who records personal details of the farmer in the Kisan Knowledge Management System (KKMS). Farmers are then asked to opt for their mode of receiving information/advice, *i.e.,* Text message (SMS) or Voice message.

*2. Web Registration:* A farmer can also register in the KCC through the web portal (http://mkisan.gov.in/wbreg.aspx) or go to the nearest Common Service Centre (CSC) to register with the help of a Village Level Entrepreneur (VLE). A one-time fee of ₹ 3 per registration will be charged by the VLE. After pressing the 'Register' button, a verification code will be sent to the farmer's mobile, which needs to be entered on the webpage to complete the registration process.

*3. Registration through SMS:* Farmers can also register by sending an SMS to 51969 or 7738299899. Format for typing in the message text box is "KISAAN REG < NAME >, <STATE NAME >, <DISTRICT NAME>, and <BLOCK NAME>" (only first 3 letters of State, District, & Block Names are needed; the commas (,) are necessary). The farmer will be charged for this SMS. There will, however, be no charge for subsequent SMS received from experts & officers.

*4. Through the mKisan portal, Extension Workers*: All Block Technology Managers (BTM), Assistant Technology Managers (ATM) and all other extension functionaries at District / Block level will be collecting data of farmers for the mKisan Portal during their field visits and enter or get the same entered in the database. The ATM and BTM may be contacted for entering the details.

Over 3 crore farmer calls handled annually across India, over 600 experts engaged nationwide, high adoption in States like Tamil Nadu, Maharashtra, UP, and MP. And improved awareness of pest management, fertiliser use, and market trends.

**Difference between KCC and mKisan**: Through KCC, farmers call to get advice. Through the mKisan Portal, the Government sends information/advisories to farmers' mobiles. Both complement each other — KCC handles live queries, while mKisan disseminates large-scale advisories digitally.

**Sources**


- https://dackkms.gov.in
- https://agriwelfare.gov.in/sites/default/files/KCC%20WEBSITE.pdf
- https://www.manage.gov.in/fpoacademy/CGSchemes/KCC.pdf

## (9) விவசாயிகள் அழைப்பு மையம் (KCC)

**கிசான் கால் சென்டர் என்றால் என்ன?** விவசாயி அழைப்பு மையத் திட்டம் இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சகம் மூலம், ஜனவரி 2004-இல் தொடங்கப்பட்டது. இதன் நோக்கம் விவசாயிகளுக்கு அவர்களின் தாய் மொழியில், இலவச **தொலைபேசி எண் 1800-180-1551** வழியாக, பிராந்தியம் சார்ந்த விவசாயத் தகவல் மற்றும் ஆலோசனைகளை உடனடியாக வழங்குவதாகும். KCC திட்டம் மத்திய அரசின் நேரடி நிதியுதவி (100%) திட்டமாகும். இது 'கிருஷி உன்னோத்தி' என்ற குடைத்திட்டத்தின் விவசாய விரிவாக்கத் துணை இயக்கத்தின் (SMAE) கீழ் செயல்படுகிறது. இந்த அழைப்பு மையங்கள், இஃப்கோ கிசான் தகவல் தொடர்பு லிமிடெட் (IKSL) என்ற சேவை வழங்கும் முகமையால் நிர்வகிக்கப்படுகின்றன. தற்போது, விவசாய அழைப்பு மையங்கள் 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் செயல்பட்டு வருகின்றன.

### நோக்கங்கள்

- விவசாயிகளுக்கு சரியான, துல்லியமான மற்றும் பிராந்தியம் சார்ந்த விவசாய ஆலோசனைகளைத் தகுந்த நேரத்தில் வழங்குதல்.
- விவசாயிகள் மற்றும் நிபுணர்கள் இடையே நேரடித் தொடர்பை ஏற்படுத்துதல்.
- புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் அரசுத் திட்டங்களைப் பரப்புதல்.
- களத் தகவல் மற்றும் கருத்துகளை சேகரித்து, கொள்கை மேம்பாட்டுக்கான ஆதாரமாகப் பயன்படுத்துதல்.
- இடுபொருட்கள், சந்தை விலை மற்றும் வானிலை தகவல்கள் குறித்த தகவல்களை அளித்து விவசாயிகளை முன்னேற்றமடையச் செய்தல்.

### செயல்படுத்தும் துறை / நிறுவனம்

- முதன்மை செயல்படுத்தும் அமைச்சகம்: இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சகம் (MoA&FW)
- செயல்படுத்தும் நிறுவனம்: வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை (DA&FW)
- அறிவுசார் பங்காளர்: தேசிய வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிறுவனம், ஹைதராபாத். இது தேசிய அளவிலான கண்காணிப்பு மற்றும் திறன் மேம்பாட்டு நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- திட்டம் நடைமுறையிலுள்ள இடங்கள்: அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள்

### விவசாயிகள் அழைப்பு மையத்தின் அமைப்பு மற்றும் செயல்பாடுகள்

விவசாயிகள் அழைப்பு மையங்கள் மூன்றடுக்கு நிலை அமைப்பில் செயல்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு நிலையிலும் நிபுணர்கள் வழிகாட்டும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

| நிலை | பதவி / பொறுப்பு | செயல்பாடு |
|---|---|---|
| நிலை 1 | அழைப்பு மைய முகவர்கள்/வேளாண்மை தொலைபேசி ஆலோசகர் | விவசாயிகளின் அழைப்புகளைப் பெற்று, முன்னரே ஏற்றப்பட்ட தரவுத்தளங்களைப் பயன்படுத்தி, தாய்மொழியில் பொதுவான கேள்விகளுக்குப் பதிலளிக்கின்றனர். |
| நிலை 2 | துறை நிபுணர்கள் | நிலை 1-ல் தீர்க்கப்படாத சிக்கலான கேள்விகளுக்கு துறை சார்ந்த நிபுணர்கள் ஆலோசனைகளை வழங்குவர். |

| | | |
|---|---|---|
| நிலை 3 | மாநில வேளாண் பல்கலைக்கழகங்கள் / ஐ.சி.ஏ.ஆர். நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு அலுவலர்கள் | மிகவும் சிக்கலான அல்லது தீர்க்கப்படாத கேள்விகளை கையாள்வது மற்றும் சேவைகளின் தரத்தை உறுதிசெய்வது. |

**செயல்பாட்டுப் படிகள்**

1. விவசாயி 1800-180-1551 என்ற இலவச எண்ணை அழைக்கிறார். அழைப்பு தானாகவே அருகிலுள்ள விவசாயிகள் அழைப்பு மையத்திற்கு மாற்றப்படுகிறது.
2. நிலை 1 அலுவலர் (வேளாண்மை தொலைபேசி ஆலோசகர்) தாய்மொழியில் பதிலளிக்கிறார்.
3. தீர்வு கிடைக்காவிட்டால், தொலைபேசி அழைப்பு நிலை 2-க்கு (நிபுணர்கள்) அனுப்பப்படுகிறது.
4. சிக்கலான கேள்விகள் நிலை 3-க்கு (ஒருங்கிணைப்பு மைய நிபுணர்கள்) அனுப்பப்படுகின்றன.
5. அழைப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட தீர்வுகள் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் தரவுத்தளத்தில் பதிவு செய்யப்படுகின்றன.
6. தரம் மேம்படுத்துவதற்காக விவசாயிகளிடமிருந்து கருத்துக் கேட்கப்படுகிறது.

**முக்கிய அம்சங்கள்**

1. இலவச தொலைபேசி எண் 1800-180-1551 நாடு முழுவதும் பயன்பாட்டில் உள்ளது.
2. அலுவல் நேரம்: காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை (வாரத்தின் 7 நாட்களும்)
3. மொழிகள்: KCC தமிழ், ஹிந்தி, தெலுங்கு, வங்காளம் உள்ளிட்ட 22 இந்திய மொழிகள்களில் செயல்படுகிறது.
4. தானியக்க அழைப்பு வழிமாற்று: அழைப்பாளர் இருப்பிடத்தின் அடிப்படையில் அழைப்புகள் அருகாமையில் உள்ள அழைப்பு மையங்களுக்கு அனுப்பப் படுகிறது.
5. அறிவு மேலாண்மை தள அமைப்பு: அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட ஆலோசனைகள் உள்ள வலைதளம்.
6. மேம்படுத்தப்பட்ட பதிப்பு KCC 2.0: இது mKisan வலைதளம், குறுஞ்செய்தி அறிவிப்பு, கைபேசி செயலி, தரவு தள கட்டுப்பாட்டகம் மற்றும் செயற்கை நுண்ணறிவு மூலம் குரல் ஓசையை அறிதல் ஆகிய அம்சங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டில் விவசாயிகள் அழைப்பு மையம்**

1. தமிழ் மொழியில் செயல்படுகிறது, மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் சேவையளிக்கிறது.
2. தமிழ்நாடு வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU) ஆகியவை இணைந்து நிர்வகிக்கின்றன.
3. TNAU, KVKs, மற்றும் தொடர்புடைய துறைகளின் நிபுணர்கள் ஆலோசனைகளை வழங்குகின்றனர்.

4. முக்கிய ஆலோசனைப் பிரிவுகள்: பயிர் பாதுகாப்பு, பூச்சி மேலாண்மை, ஊட்டச்சத்து மேலாண்மை, மழை சார்ந்த விவசாயம், சந்தைத் தகவல் போன்றவை.
5. இயற்கை பேரழிவுகள் அல்லது பூச்சி தாக்குதல்கள் நேரங்களில் (எ.கா., மக்காச்சோளத்தில் படைப்புழு தாக்கம், வெள்ள அபாயம்) விரைவாகத் தகவல்களை வழங்குகிறது.

**KCC-இன் நன்மைகள்**

- இலவச சேவை: கட்டணமில்லா அழைப்பு, விவசாயிகளுக்கு செலவு இல்லை.
- நிபுணர்களுடன் உடனடி தொடர்பு: வீட்டிலிருந்தே நிபுணர்களைத் தொடர்புகொள்ள முடியும்.
- பிராந்தியத் தகவல்: உள்ளூர் காலநிலை மற்றும் பயிர் மண்டலத்தின் அடிப்படையில் ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.
- நேரச் சேமிப்பு: இடைநிலை அலுவலர்களின் சார்பைக் குறைத்து, நேர விரையத்தை குறைக்கின்றது.
- அறிவு மேம்பாடு: நவீனத் தொழில்நுட்பங்கள் மற்றும் அரசுத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கிறது.
- அவசரகால உதவி: வறட்சி, பூச்சித் தாக்குதல், பெருந்தொற்று நோய்ப் பரவல் காலங்களில் முக்கிய பங்கு வகிக்கிறது.
- கருத்து கேட்பு: விவசாயிகளின் கருத்துகளைக் கேட்பதன் மூலம், KCC அரசின் விரிவாக்கத் திட்டங்கள் மேம்பாட்டிற்குப் பயன்படுகின்றன.

**விவசாயிகள் பதிவு செய்யும் முறைகள்**

(1) *விவசாயி அழைப்பு மையம்வழிப் பதிவு*: விவசாயிகள் 1800-180-1551 என்ற இலவச எண் மூலம் அழைக்கலாம். விவசாய அழைப்பு மைய முகவர்கள் விவசாயியின் தனிப்பட்ட விவரங்களை Kisan Knowledge Management System-த்தில் பதிவு செய்கிறார்கள். பின்னர் சம்பந்தப்பட்ட விவசாயியிடம் தகவல் பெறும் முறைகளை (SMS அல்லது Voice message) தேர்வு செய்ய அறிவுறுத்தப்படும்.

(2) *இணையவழிப் பதிவு*: விவசாயிகள் http://mkisan.gov.in/wbreg.aspx என்ற இணைய தளத்தின் மூலம் அல்லது அருகிலுள்ள பொது சேவை மையத்தில் தங்கள் விவரங்களைக் கிராம-அளவில் தொழில்முனைவோர் (VLE) உதவியுடன் பதிவு செய்யலாம். ஒவ்வொரு பதிவுக்கும் ரூ. 3 கட்டணமாக வசூலிக்கப்படும். 'பதிவு' என்ற பொத்தானை அழுத்திய பின் விவசாயியின் கைபேசிக்கு ஒரு OTP (Verification Code) அனுப்பப்படும். அதனை இணையப் பக்கத்தில் உள்ளிடுவதன் மூலம் பதிவு நிறைவுபெறும்.

(3) *குறுஞ்செய்தி சேவைவழிப் (SMS) பதிவு:* விவசாயிகள் 51969 அல்லது 7738299899 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பிப் பதிவு செய்யலாம். அனுப்ப வேண்டிய செய்தி வடிவம்: "KISAAN REG < பெயர் >, < மாநிலத்தின் பெயர் >, < மாவட்டத்தின் பெயர் >, < தொகுதிப் பெயர்>" (மாநிலம், மாவட்டம், தொகுதிப் பெயர்களின் முதல் 3 எழுத்துகள் மட்டும் போதுமானது; கமா (,) அவசியம்). இந்த குறுஞ்செய்திக்கு மட்டுமே விவசாயி கட்டணம் செலுத்த வேண்டும். நிபுணர்களிடமிருந்து பெறப்படும் அடுத்தடுத்த குறுஞ்செய்திகளுக்கு கட்டணம் இல்லை.

(4) *எம்-கிசான் தளம் வழியாகப் பதிவு*: தொகுதி தொழில்நுட்ப மேலாளர்கள் (BTM), தொகுதி தொழில்நுட்ப மேலாளர்கள் (ATM) மற்றும் மாவட்ட / தொகுதி அளவிலான

அனைத்து விரிவாக்க அதிகாரிகளும் களப் பயணத்தின் போது விவசாயிகளின் தரவுகளை சேகரித்து mKisan Portal-இல் பதிவுசெய்கிறார்கள்.

இந்திய அளவில் ஆண்டுதோறும் 3 கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகளின் அழைப்புகள் பதிவு செய்யப்படுகின்றது. நாடு முழுவதும் சுமார் 600-க்கும் மேற்பட்ட நிபுணர்கள் இணைந்து இதில் பணியாற்றுகின்றனர். தமிழ்நாடு, மகாராஷ்டிரா, உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அதிக உபயோகம் காணப்படுகிறது. இதன் மூலம் பூச்சி மேலாண்மை, உரப் பயன்பாடு, சந்தை நிலவரம் குறித்த விழிப்புணர்வு பெரிதும் உயர்ந்துள்ளது.

**விவசாய அழைப்பு மையம் (KCC) மற்றும் எம்கிசான் (mKisan) இடையேயான வேறுபாடு**: விவசாயிகள் KCC-க்கு தொலைபேசியில் அழைத்து நேரடியாக நிபுணர்களிடம் கேள்விகள் கேட்டு பதில்களைப் பெறலாம். ஆனால் mKisan தளம் மூலம் அரசு விவசாயிகளின் தொலைபேசிக்கு தகவல்கள் மற்றும் ஆலோசனைகளை அனுப்புகிறது. இவை இரண்டும் ஒரே நோக்கத்துடன் செயல்படுகின்றன — KCC நேரடி உதவியை வழங்குகிறது; mKisan பலருக்கும் ஒரே நேரத்தில் தகவல்களை டிஜிட்டல் வழியில் பகிர்கிறது.

**ஆதாரங்கள்:**


- https://dackkms.gov.in
- https://agriwelfare.gov.in/sites/default/files/KCC%20WEBSITE.pdf
- https://www.manage.gov.in/fpoacademy/CGSchemes/KCC.pdf

## (10) Kisan Credit Card (KCC)

**What it Kisan Credit Card?** The Kisan Credit Card (KCC) Scheme was introduced in 1998 by the Government of India in collaboration with the Reserve Bank of India (RBI) and the National Bank for Agriculture and Rural Development (NABARD), to provide adequate and timely **short-term crop loans** (credit) to the farmers for their agricultural operations at a reduced interest rate. The scheme was further extended for the investment credit (**term loan**) requirement of farmers in allied and non-farm activities in the year 2004, and further modified in 2012 with the issue of Electronic Kisan Credit Cards. At present (2025-26), the KCC scheme is implemented by the Ministry of Agriculture and Farmers' Welfare with the Modified Interest Subvention Scheme (MISS).

**Purpose of loan under KCC**: 1) The KCC offers credit for various short-term needs, including cultivation of crops (**crop loan**), **post-harvest expenses**, produce marketing loans, household consumption requirements of farmers, working capital for maintenance of farm assets and activities allied to agriculture. 2) Farmers can avail a **term loan** for investment-related activities in agriculture and allied activities.

**Who is issuing the KCC?** 1) Public Sector Banks, 2) Private Sector Scheduled commercial Banks, 3) Small Finance Banks, 4) Regional Rural Banks, 5) Rural Cooperative Banks, *viz.* State Cooperative Banks & District Central Cooperative Banks (DCCBs), and 6) Computerised Primary Agricultural Credit Societies ceded with Scheduled Commercial Banks.

**Types of cards:** Different types of cards, such as Magnetic stripe cards with PIN (Personal Identification Number) and with Aadhar authentication, EMV (Europay, MasterCard and VISA) cards, etc., are issued. The SBI issue Rupay debit card.

**Where can the cards be used?** The KCC card can be used to withdraw through ATMs / Micro ATM / Bank Correspondents (BCs) using smart cards/ PoS machines/mobile banking with IMPS capabilities / Aadhaar-enabled cards. Once the card is issued and a credit limit is fixed on the card, farmers can withdraw money at any time using the card.

**Interest Rates & Subsidies**

- The interest rate for KCC credit will be left to the discretion of the bank, but it is generally low (say, 8.5%).
- The KCC has two interest-related benefits, namely, Interest Subvention (IS) offered by the Central Government and Prompt Repayment Incentive (PRC) offered by the Banks /RBI/GoI. The IS scheme is now renamed as the **Modified Interest Subvention Scheme** (MISS). The MISS offered by the Central Government for short-term loan/crop loan during the FY 2025-26 is **1.5%.**
- As per the MISS, the bank will offer credit to farmers directly at **7% interest rate.** The Government will pay 1.5% interest subvention to the bank which gave the loan under KCC. **The maximum loan limit eligible for interest subvention is as follows:**

  1) **Agriculture purposes or crop loan,** *i.e.,* for cultivation of crops: **₹3 lakhs per annum.**

  2) For allied activities related to Animal husbandry, such as Dairy, Fisheries, Lac cultivation, Mulberry cultivation, Sericulture and beekeeping, etc., **₹2 lakhs per annum.**

- If a borrower promptly repays the loan **within the time** prescribed by the bank (immediately after harvest and marketing of the crop, or a maximum of 12 months), an incentive benefit of 3% on the loan will be available to the farmer. This incentive applies to an overall limit of ₹ 3 lakh per annum or 2 lakh per annum as per the condition cited in the above paragraph.
- **So, the net interest rate under the KCC scheme will be 4% (7%-3%), for loans of up to 3 lakh or 2 lakhs as per the conditions mentioned above.**
- The interest rate for the **long-term loan,** if obtained by a farmer under KCC, will be charged as per the Marginal Cost of Funds-based Lending Rate (MCLR). No interest subvention is available for the long-term loan.

**Other benefits of the Kisan credit card**

- KCC offers revolving credit for up to **five years**.
- If any unutilized amount or credit is left on the KCC account of the farmer will earn interest as per the savings bank rates.
- Crop loans are meant to cover the entire cost of cultivation. Hence, no margin (margin is the borrower's contribution to the total cost of the activity), no moratorium for loans under the KCC scheme, and no processing fee.
- The KCC cardholders will receive personal accident cover up to ₹50,000 for death and permanent disability, and up to ₹ 25,000 for other risks.

**Validity & Repayment**

The KCC loan is typically **valid for five years**, with annual renewals. However, the loans are to be repaid after the harvest and sale of crops or within 12 months after sanction of the loan (18 months in case of sugarcane and Banana). In case of natural calamities, interest relief continues for **up to one year**, and up to **five years** in severe disasters. If the loan is repaid within one year or the stipulated time limit, the farmers will get the benefits of interest subvention and incentives for prompt repayment.

**When does the KCC account/ card become inactive?** Certain banks will treat the KCC account as a Non-Performing Asset (NPA) if the card remains inactive for one or two crop seasons after the due date of repayment. The account would also be considered inactive, a) if there are no credits for two consecutive crop seasons as per the balance sheet date, b) the credits available in the account are not enough to pay the interest debited for the two crop seasons or c) if the outstanding amount is more that the two crops seasons' limits as per the balance sheet date.

**Credit card limit** (applicable for all farmers except marginal farmers)**:** A loan of any amount may be obtained using KCC. This includes crop loan (*e.g.,* raising paddy, coconut, etc.) and investment in allied activities in animal husbandry, fisheries, etc. (*e.g.,* making a borewell, purchase of a pump set, purchase of a cow, etc.). The credit limit is determined based on the scale of finance for the crop decided by the District Level Technical Committee (DLTC), the area of the crop to be cultivated, and other factors as decided by the banks. Let us see the example below.

**a) First year credit (Loan) limit for crop Loan (if single crop is cultivated)**: For the first year and if loan is needed for a single crop, the maximum limit of loan will be equal to the scale of finance for the concerned crop determined by the DLTC, multiplied by the area of crop, plus 10% of the limit towards post-harvest/ household/ consumption

requirements, and 20% towards repairs and maintenance expenses of farm assets plus charges for crop insurance. For second and subsequent years and up to 5 years, the loan/credit limit will be equal to the loan limit determined for a single crop for the first year, plus add 10% for each year towards cost escalation/increase.

**b) Loan for multi-crop:** If a farmer wishes to cultivate more than one crop in a year, the credit limit will be fixed as cited above, i.e., add the scale of finance determined by the DLTC for each crop, multiply by the area of the crops in the cropping pattern proposed by the farmers. This is for the first year.

**c) Second and subsequent year credit limit**: For subsequent years, add 10% of the limit towards cost escalation/increase in the scale of finance for every successive year (2nd, 3rd, 4th and 5th year). It is assumed that the farmer adopts the same cropping pattern for the remaining four years also. In case the cropping pattern adopted by the farmer is changed in the subsequent year, the limit may be reworked.

**d) Term loans limit for investments**: Under the KCC scheme bank is issuing term loans for the farmers. The loan may be used for land development, minor irrigation, purchase of farm equipment and allied agricultural activities. The bank will fix the quantum of credit for the term loan and working capital limit for agricultural and allied activities, etc., based on the unit cost of the assets proposed to be acquired by the farmer, the allied activities already being undertaken on the farm, the bank's judgment on repayment capacity *vis-a-vis* total loan burden devolving on the farmer, including existing loan obligations.

**e) Maximum Permissible credit Limit for Kisan credit card**: The short-term crop loan limit arrived for the fifth year, as mentioned above, plus the estimated term loan requirement for allied activities will be the Maximum Permissible Limit (MPL) and treated as the Kisan Credit Card Limit.

**f) Credit limit for Marginal Farmers who have less than one hectare land:** A flexible limit of ₹ 10,000 to ₹ 50,000 will be provided (as Flexi KCC) by the bank, based on the land holding and crops grown including post-harvest warehouse storage related credit needs and other farm expenses, consumption needs, etc., plus small term loan investment(s) like purchase of farm equipment(s), establishing mini dairy/backyard poultry as per assessment of the Branch Manager of the concerned bank without relating it to the value of land.

**Drawing limit:** The borrower will be permitted to make any number of withdrawals and make repayments within the sanctioned limit. But, at any point in time, the total liability should be within the drawing limit of the concerned year. The bank will make an annual review and decide whether the withdrawal facility permitted for 5 years has to be continued or ceased based on the repayments made by the borrower.

### Loan security

1. For short term-loan limits up to ₹ 2 lakh (individual farmer) or ₹ 3 lakh (in case of tie-up), the usual security is the hypothecation of crops (No collateral security is needed).
2. For limits above the specified norms, a mortgage of land/ or a third-party guarantee is demanded by the bank in addition to hypothecated crops/asset.

### Who can apply?

a) Farmers, individuals/ Joint borrowers who are owner-cultivators;
b) Tenant farmers, oral lessees & share croppers;

c) Self Help Groups (SHGs) or Joint Liability Groups (JLG) of farmers, including share croppers, etc.

**Other conditions**

1) *Location*: The farmers' residence or their operation unit/farm should be within the operational area of the Bank to be eligible for the KCC.

2) *Age limit: 18 to 75 years*. If a farmer is a senior citizen, then it is mandatory to have a co-borrower who is a legal heir.

3) *Other liability*: If finance is given for a single crop, for example, for sugarcane cultivation and even if the farmer has taken credit for other crops from other financial institutions, the loan for the sugarcane crop can be provided, if a no-dues certificate is submitted.

4) *Insurance coverage*: All Banks are now insisting that the KCC loanee take Crop Insurance under the National Crop Insurance Scheme or Pradhan Mantri Fasal Bima Yojana (PMFBY), immediately after the crop loan is released. Secondly, a borrower should opt for Personal Accident Insurance and Health Insurance (wherever applicable).

**How to apply?**

**Documents required**: Filled and signed application form, Identity proof (Aadhaar Card, Voter ID, Driving License), Address proof (Aadhaar Card, Voter ID, Driving License), Land ownership documents or lease agreements, Passport-sized photographs, Proof of landholding duly certified by the revenue authorities, Cropping pattern (Crops grown) details with acreage, Security documents for loan limit above ₹2.0 lakhs / ₹3.0 lakhs, as applicable and other document as per bank norms.

- Visit the website of the bank where you wish to apply for the KCC scheme.
- From the list of options, choose the Kisan Credit Card.
- On clicking the option of 'Apply', the website will redirect you to the application page.
- Fill the form with the required details and click on 'Submit'.
- On doing so, an application reference number will be sent.
- If you are eligible, the bank will get back to you for further processing within 3-4 working days.
- A Kisan Rin Portal (KRP) was launched by the Central Government to track interest subvention claims digitally.

The TN Government opened a portal for issuing crop loans under the KCC scheme. Visit the Website https://rcs.tn.gov.in/rcsweb/kcc-loan/form and fill in the details.

**Sources:**

https://www.rbi.org.in/commonman/English/scripts/Notification.aspx?Id=2311
https://www.myscheme.gov.in/schemes/kcc
https://eseva.csccloud.in/kcc/Default.aspx?AspxAutoDetectCookieSupport=1
https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=2132139#

## (10) உழவர் கடன் அட்டை (KCC)

**கிசான் கிரெடிட் கார்டு என்றால் என்ன?** உழவர் கடன் அட்டைத் திட்டம் (KCC) 1998-ஆம் ஆண்டு இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் கிராம மேம்பாட்டு வங்கி ஆகியவற்றுடன் இணைந்து மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இது விவசாயிகளுக்கு வேளாண்மை சார்ந்த தேவைகளுக்குக் குறைந்த வட்டியில், சரியான நேரத்தில், போதுமான குறுகியகாலப் பயிர்க் கடன் வழங்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டம் 2004-ஆம் ஆண்டில் வேளாண்மை-சார்ந்த மற்றும் பண்ணை-சாரா தேவைகளுக்கும் முதலீட்டுக் கடன் (காலக் கடன்) தேவைக்காகவும் நீட்டிக்கப்பட்டது. 2012-இல் இது மேலும் மாற்றியமைக்கப்பட்டு, மின்னணு உழவர் கடன் அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது (2025-26) கே.சி.சி (KCC). திட்டம் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தால் மாற்றியமைக்கப்பட்ட வட்டி மானியத் திட்டத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**உழவர் கடன் அட்டை வாயிலாக வழங்கப்படும் கடன்:** 1) பயிர்க் கடன், அறுவடைக்குப் பிந்தைய செலவுகள், உற்பத்தியைச் சந்தைப்படுத்துவதற்கு, விவசாயிகளின் சிற்சில வீட்டுத் தேவைகள், பண்ணை பராமரிப்பதற்கான மூலதனச் செலவுகள் மற்றும் விவசாயத்துடன் தொடர்புடைய குறுகியகாலத் தேவைகளுக்கு KCC மூலமாகக் கடன் வழங்குகிறது. 2) வேளாண்மை மற்றும் வேளாண்-சார்ந்த தொழில்களில் முதலீடு தொடர்பான தேவைகளுக்கு விவசாயிகள் (நீண்ட) காலக் கடனை KCC மூலம் பெறலாம்.

**உழவர் கடன் அட்டையை யார் வழங்குகிறார்கள்?** 1) பொதுத்துறை வங்கிகள், 2) அட்டவணைப்படுத்தப்பட்ட தனியார்த்துறை வணிக வங்கிகள், 3) சிறு நிதி வங்கிகள், 4) மண்டல ஊரக வங்கிகள், 5) கிராமப்புறக் கூட்டுறவு வங்கிகள் அதாவது மாநில கூட்டுறவு வங்கிகள் மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், மற்றும் 6) அட்டவணைப்படுத்தப்பட்ட வணிக வங்கிகளுடன் இணைக்கப்பட்ட கணினிமயமாக்கப்பட்ட முதன்மை வேளாண் கடன் சங்கங்கள்.

**அட்டைகளின் வகைகள்:** PIN-நம்பர் மற்றும் ஆதார் அங்கீகாரத்துடன் கூடிய காந்தக் கோடு அட்டை, EMV அட்டைகள் (யூரோ-பே, மாஸ்டர்-கார்டு மற்றும் விசா-கார்டு) போன்ற பல்வேறு வகையான அட்டைகள் வழங்கப்படுகின்றன. பாரத ஸ்டேட் வங்கி Rupay டெபிட் கார்டை வழங்குகிறது.

**கடன் அட்டைகளை எங்கு பயன்படுத்தலாம்?** பணம் எடுப்பதற்காக கே.சி.சி. அட்டையை ஏ.டி.எம் / மைக்ரோ ஏ.டி.எம் / ஊரகப் பகுதிகளில் உள்ள வங்கி நிருபர்கள் (BC) மூலம் பயன்படுத்தலாம். மேலும் ஸ்மார்ட் கார்டுகள் / பி.ஓ.எஸ் இயந்திரம் / ஐ.எம்.பி.எஸ் திறன்களுடன் கூடிய மொபைல் வங்கி / ஆதார் அட்டைகளைப் பயன்படுத்தி பணம் எடுக்கப்படும் செயலி போன்றவற்றிலும் KCC-ஐ பயன்படுத்தலாம். கடன் அட்டை வழங்கப்பட்டு, அட்டையில் கடன் வரம்பு நிர்ணயிக்கப்பட்டதும், விவசாயிகள் எந்த நேரத்திலும் அட்டையைப் பயன்படுத்தி பணத்தை எடுக்கலாம்.

**வட்டி & மானியங்கள்**

- கே.சி.சி. கடனுக்கான வட்டி விகிதம் வங்கியைப் பொறுத்து அமையும், ஆனால் அவை பொதுவாகக் குறைந்த வட்டியாகவே இருக்கும் (அதாவது, 8.5 சதவீதம்).
- உழவர் கடன் அட்டை, வட்டி தொடர்புடைய இரு நன்மைகளைக் கொண்டுள்ளது, அவை மத்திய அரசால் வழங்கப்படும் வட்டி மானியம் (IS)

மற்றும் வங்கிகள்/ ஆர்.பி.ஐ/ இந்திய அரசு வழங்கும் கடனை உடனடியாகத் திருப்பிச் செலுத்தியதற்கான ஊக்கத்தொகை (PRC). IS திட்டம் இப்போது, மாற்றியமைக்கப்பட்ட வட்டி மானியத் திட்டம் (MISS) என மறுபெயரிடப்பட்டுள்ளது. 2025-26 நிதியாண்டில் குறுகிய காலக் கடன் / பயிர்க் கடனுக்காக மத்திய அரசு வழங்கும் MISS 1.5 சதவீதம் ஆகும்.

- MISS-இன் படி, விவசாயிகளுக்கு வங்கி நேரடியாக 7 சதவீதம் வட்டியில் கடன் வழங்குகிறது. கே.சி.சி-இன் கீழ் கடன் வழங்கிய வங்கிக்கு அரசாங்கம் 1.5 சதவீதம் வட்டி மானியத்தை செலுத்தும். வட்டி மானியத்திற்குத் தகுதியான அதிகபட்சக் கடன்வரம்பு பின்வருமாறு:
    1. விவசாய நோக்கங்கள் அல்லது பயிர்க் கடன் அதாவது பயிர் சாகுபடிக்கு: ஆண்டுக்கு ரூ. 3 இலட்சம்
    2. பால் பண்ணை, மீன் பண்ணை, அரக்கு சாகுபடி, மல்பெரி சாகுபடி, பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் தேனீ வளர்ப்பு போன்ற கால்நடை தொடர்பான துணை நடவடிக்கைகளுக்கு ஆண்டுக்கு ரூ. 2 லட்சம்
- கடன் பெற்றவர் வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் (பயிர் அறுவடை மற்றும் சந்தைப்படுத்தலுக்குப் பிறகு உடனடியாக அல்லது அதிகபட்சம் 12 மாதங்களுக்குள்) கடனைத் திருப்பிச் செலுத்தினால், கடனில் 3 சதவீதம் ஊக்கத்தொகை அவர்களுக்குக் கிடைக்கும். இந்த ஊக்கத்தொகை மேலே உள்ள பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனையின்படி ஆண்டுக்கு ரூ. 3 லட்சம் அல்லது ஆண்டுக்கு ரூ. 2 இலட்சம் என்ற ஒட்டுமொத்த வரம்பிற்குள் இருக்கும்.
- எனவே, கே.சி.சி திட்டத்தின் கீழ் நிகர வட்டி விகிதம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி ரூ. 3 அல்லது 2 இலட்சம் வரையிலான கடனுக்கு 4 சதவீதமாக (7-3=4%) இருக்கும்.
- கே.சி.சி-யின் கீழ் விவசாயிகள் நீண்ட காலக் கடனைப் பெற்றால், அதற்கான வட்டி விகிதம், நிதி சார்ந்த கடன் விகிதத்தின் விளிம்பு செலவுப்படி (MCLR) வசூலிக்கப்படும். நீண்ட காலக் கடனுக்கு வட்டி மானியம் எதுவும் கிடையாது.

**பிற நன்மைகள்**

- கே.சி.சி. திட்டம் ஐந்து ஆண்டுகள் வரை சுழலும் கடனை வழங்குகிறது.
- விவசாயிகளின் கே.சி.சி. கணக்கில் பயன்படுத்தப்படாத தொகை அல்லது வரவு ஏதேனும் இருப்பின், அவற்றிற்கு சேமிப்புக் கணக்குக்கு உண்டான வட்டி கிடைக்கும்.
- பயிர்க்கடன் என்பது சாகுபடிக்கான முழுச் செலவையும் ஈடுகட்டுவதாகும். எனவே, KCC திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடனுக்கு மார்ஜின் இல்லை (அதாவது கடனைப் பெறுபவர் லோன் போக கையிலிருந்து செய்ய வேண்டிய தொகை), கடனைத் திருப்பிச் செலுத்த தாமதக்காலம் இல்லை; மற்றும் லோன் விண்ணப்பப் பரிசீலனைக் கட்டணம் இல்லை.
- கே.சி.சி அட்டை வைத்திருப்பவர்கள் இறந்துவிட்டால் அல்லது நிரந்தர ஊனம் ஏற்பட்டால் ரூ. 50,000 வரை தனிப்பட்ட விபத்து காப்பீட்டைப் பெறுவார்கள், மேலும் பிற விபத்துகளுக்கு ரூ. 25,000 வரை காப்பீடு கிடைக்கும்.

**கடன் அட்டை செல்லுபடியாகும் காலம் மற்றும் திருப்பிச் செலுத்துதல்**

- கே.சி.சி கடன் பொதுவாக வருடாந்திர புதுப்பித்தல்களுடன், ஐந்து ஆண்டுகள் காலக்கெடு கொண்டது. இருப்பினும், பயிர்களை அறுவடை செய்து விற்பனை செய்த பிறகு அல்லது கடன் அனுமதிக்கப்பட்ட 12 மாதங்களுக்குள் (கரும்பு மற்றும்

வாழைக்கு 18 மாதங்கள்) கடனை திருப்பிச் செலுத்த வேண்டும். இயற்கைப் பேரிடர் ஏற்பட்டால், வட்டி நிவாரணம் ஒரு வருடம் வரை தொடரும், கடுமையான பேரிடர்களின்போது நிவாரணம் ஐந்தாண்டுகள் வரை நீடிக்கும். ஒரு வருடத்திற்குள் அல்லது நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள், விவசாயிகள் உடனடியாகத் திருப்பிச் செலுத்தினால் வட்டி மானியம் மற்றும் பிற சலுகைகளைப் பெறலாம்.

**KCC கணக்கு/ கடன் அட்டை எப்பொழுது செயலற்றதாக இருக்கும்?** கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய தேதிக்குப் பிறகு ஒன்று அல்லது இரண்டு பயிர் பருவங்களுக்கு அட்டை செயலற்றதாக இருந்தால், சில வங்கிகள் கே.சி.சி கணக்கை செயல்படாத சொத்தாக (NPA) மாற்றியமைக்கும். பின்வரும் காரணங்களுக்காக கே.சி.சி கணக்கு செயலற்றதாகக் கருதப்படும்: 1) தொடர்ச்சியான இரண்டு பயிர்ப் பருவங்களுக்குக் கடன் இல்லை என்றால், 2) வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்த இரண்டு பயிர் பருவங்கள் வரை ஒருவர் கணக்கில் இருப்பு போதுமானதாக இல்லையெனில், அல்லது 3) இரண்டு பயிர்ப் பருவங்களைக் கடந்தும் கடன் நிலுவைத் தொகை அதிகமாக இருந்தால்.

**கடன் அட்டையின் வரம்பு** (குறு விவசாயிகள் தவிர அனைத்து விவசாயிகளுக்கும் பொருந்தும்): கே.சி.சி.-ஐப் பயன்படுத்தி எந்தத் தொகையும் கடனாகப் பெறலாம். இதில் பயிர்க் கடன் (எ.கா. நெல், தென்னை பயிரிடுதல்) மற்றும் கால்நடை வளர்ப்பு, மீன்வளம் தொடர்புடைய தொழில்களில் முதலீடு செய்தல் (எ.கா. ஆழ்துளைக் கிணறு அமைத்தல், பம்ப்செட் வாங்குதல் போன்றவை) ஆகியன அடங்கும். பொதுவாக, ஒவ்வொரு வங்கியும் பயிர்க் கடன் வரம்பை மாவட்ட அளவிலான தொழில்நுட்பக் குழு (DLDC) முடிவு செய்யும் பயிர்க் கடன் வழிகாட்டி மதிப்பு, பயிரிடப்படும் பயிரின் பரப்பளவு மற்றும் பிற காரணிகளின் அடிப்படையில் தீர்மானிக்கிறார்கள். கீழே உள்ள சில எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம்.

*a*) *பயிர்க் கடனுக்கான முதல் ஆண்டு கடன் வரம்பு* (ஒற்றைப் பயிர் விளைவித்தால்): முதல் ஆண்டு மற்றும் ஒரு பயிருக்குக் கடன் தேவைப்பட்டால், அதிகபட்சக் கடன் வரம்பு டி.எல்.டி.சி (DLTC) ஆல் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு சமமாக இருக்கும். இது பயிரின் பரப்பளவால் பெருக்கப்படும். மேலும் அறுவடைக்குப் பிந்தைய செலவுகள் / வீட்டுத் தேவைகளுக்காக 10 சதவீதமும், பண்ணை சொத்துக்களின் பழுதுபார்த்தல் அல்லது பராமரிப்புக்காக 20 சதவீதமும் மற்றும் பயிர்க் காப்பீட்டுக்கான முழுக் கட்டணம் ஆகிய அனைத்தும் சேர்த்து அதிகபட்சக் கடன் வரம்பு நிர்ணயிக்கப்படும். இரண்டாவது மற்றும் அடுத்தடுத்த ஆண்டுகளில் (5 ஆண்டுகள் வரை) கடன்/ கடன் வரம்பு முதல் ஆண்டுக்கு ஒரு பயிருக்கு நிர்ணயிக்கப்பட்ட கடன் வரம்புக்கு சமமாக இருக்கும். இத்துடன், செலவு அதிகரிப்புத் தொகையாக ஒவ்வொரு ஆண்டும் 10 சதவீதம் கூடுதலாக சேர்க்கப்படும்.

b) *பல பயிர்களுக்கான கடன்*: ஒரு விவசாயி ஒரு வருடத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பயிர்களைப் பயிரிட விரும்பினால், கடன் வரம்பு மேலே குறிப்பிட்டுள்ளபடி நிர்ணயிக்கப்படும், அதாவது ஒவ்வொரு பயிருக்கும் டி.எல்.டி.சி ஆல் நிர்ணயிக்கப்பட்ட நிதி அளவை ஓராண்டில் பயிரிடப்படும் பயிர்களின் பரப்பளவால் பெருக்கப்படும். இந்தத் தொகை முதல் ஆண்டிற்கானது.

*c*) *இரண்டாம் மற்றும் அடுத்தடுத்த ஆண்டு கடன் வரம்பு*: அடுத்தடுத்த ஆண்டுகளுக்கு, ஒவ்வொரு தொடர்ச்சியான ஆண்டிற்கும் (2-வது, 3-வது, 4-வது மற்றும் 5-வது ஆண்டு) முதலாம் ஆண்டு நிதி அளவில் செலவு அதிகரிப்புக்காக கூடுதலாக 10 சதவீதம் சேர்க்கப்படும் (மீதமுள்ள நான்கு ஆண்டுகளுக்கும் விவசாயி அதே பயிர் முறையைப் பின்பற்றுகிறார் என்று கருதப்படுகிறது). விவசாயி

முன்மொழிந்த பயிர் முறையில் அடுத்தடுத்த ஆண்டுகளில் மாற்றம் ஏற்பட்டால், பயிர்க் கடன் வரம்பு மீண்டும் மாற்றியமைக்கப்படும்.

*d) முதலீடுகளுக்கான நீண்டகாலக் கடன் வரம்பு*: கே.சி.சி. திட்டத்தின் கீழ் வங்கிகள் விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடனையும் வழங்குகிறது. நில மேம்பாடு, சிறு நீர்ப்பாசன திட்டம், பண்ணை உபகரணங்கள் வாங்குதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய விவசாய நடவடிக்கைகளுக்கு இந்தக் கடனைப் பயன்படுத்தலாம். ஒரு விவசாயி தான் வாங்குவதாக முன்மொழியப்பட்ட சொத்துக்களின் அலகு விலை, பண்ணையில் ஏற்கனவே மேற்கொள்ளப்படும் விவசாய நடவடிக்கைகள், தற்போதுள்ள கடன் பொறுப்பு, விவசாயி கடனைத் திருப்பிச் செலுத்தும் திறன் குறித்த வங்கியின் கணிப்பு ஆகியவற்றின் அடிப்படையில், விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய முன்னெடுப்புகளுக்கான 'நீண்ட காலக் கடன்' மற்றும் 'தொழில் மூலதன' வரம்பிற்கான முதலீடு அளவை வங்கிகள் நிர்ணயிக்கும்.

*e) கே.சி.சி-கான அதிகபட்ச அனுமதிக்கப்பட்ட கடன் வரம்பு*: மேலே குறிப்பிட்டுள்ள கணக்குகள் படி ஐந்தாவது ஆண்டுவரை நிர்ணயிக்கப்பட்ட குறுகியகால பயிர்க் கடன் வரம்பு மற்றும் வேளாண்-சார்ந்த தொழில்களுக்கான நீண்ட காலக் கடன் தேவை ஆகிய இரண்டும் சேர்த்து அதிகபட்ச அனுமதிக்கப்பட்ட கடன் வரம்பாக (MPL) நிர்ணயிக்கப்படும். இதுவே, கே.சி.சி. கார்டுக்கான உச்ச கடன் லோன் வரம்பாகக் கருதப்படும்.

*f) ஒரு ஹெக்டேருக்கும் குறைவான நிலம் வைத்திருக்கும் குறு விவசாயிகளுக்கான கடன் வரம்பு*: நிலத்தின் அளவு மற்றும் அறுவடைக்குப் பிந்தைய கிடங்கு சேமிப்பு தொடர்பான கடன் தேவைகள் மற்றும் பிற பண்ணை செலவுகள், நுகர்வுத் தேவைகள் உள்ளிட்ட செலவுகளைப் பொறுத்து, வங்கியால் ரூ. 10,000 முதல் ரூ. 50,000 வரை நெகிழ்வு கடன் வரம்பாக (Flexi KCC ஆக) வழங்கப்படும். மேலும் பண்ணை உபகரணங்கள் வாங்குதல், சிறிய பால் பண்ணை அமைத்தல், புறக்கடை கோழி வளர்ப்பு போன்ற சிறிய காலக் கடன் முதலீடுகள், சம்பந்தப்பட்ட வங்கிக் கிளை மேலாளரின் மதிப்பீட்டின்படி (நிலமதிப்புடன் தொடர்புப்படுத்தாமல்) வழங்கப்படும்.

**பணம் எடுக்கும் வரம்பு (Drawing Limit)**

விவசாயி தனக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட வரம்புக்குள் எத்தனை முறை வேண்டுமானாலும் பணம் எடுத்துக்கொள்ளலாம், திருப்பிச் செலுத்தலாம். ஆனால் எந்த நேரத்திலும், மொத்தக் கடன்/செலவு அந்த ஆண்டுக்கான லோன் வரம்புக்குள் இருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட வங்கி ஆண்டுதோறும் மதிப்பாய்வு செய்து, 5 ஆண்டுகளுக்கு அனுமதிக்கப்பட்ட பணம் எடுக்கும் வசதியைத் தொடர வேண்டுமா அல்லது நிறுத்த வேண்டுமா என்பதைக் கடன் வாங்குபவர் கடனைத் திருப்பிச் செலுத்திய நிலையைப் பார்த்து முடிவு செய்யும்.

**கடன் பாதுகாப்பு**

1. குறுகிய காலக் கடன் வரம்புகள் ரூ. 2 லட்சம் (தனி விவசாயி) அல்லது ரூ. 3 லட்சம் (குழுக்கள்/இணைப்புகள்), வழக்கமான பாதுகாப்பாகக் கேட்பது, சம்பந்தப்பட்ட பயிரின் அடமானமாகும் (துணைப் பிணையம் தேவையில்லை).

2. குறிப்பிட்ட வரம்புக்கு மேலாக லோன் வாங்குவதற்கு, பயிர்கள் / சொத்துக்களின் அடமானத்துடன் நில அடமானம் அல்லது மூன்றாம் தரப்பு உத்தரவாதத்தை வங்கிகள் கோரும்.

**யார் விண்ணப்பிக்கலாம்?**

அ) விவசாயிகள், தனிநபர்கள் / கூட்டுக் கடன் வாங்குபவர்கள் உள்ளிட்ட சுயமாக சாகுபடி செய்பவர்கள்.
ஆ) குத்தகை விவசாயிகள், வாய்வழி குத்தகைதாரர்கள் மற்றும் போக்கியத்திற்குப் பயிர் செய்யும் விவசாயிகள்.
இ) சுய உதவிக்குழுக்கள், விவசாயிகள் அடங்கிய கூட்டுப் பொறுப்புக் குழுக்கள், போக்கியத்திற்குப் பயிர் செய்யும் விவசாயிகள் உட்பட.

**பிற நிபந்தனைகள்**

1) *இடம்*: கே.சி.சி. திட்டத்தில் தகுதி பெற விவசாயிகளின் குடியிருப்பு அல்லது அவரது பண்ணை, வங்கியின் செயல்பாட்டுப் பகுதிக்குள் இருக்க வேண்டும்.

2) *வயது வரம்பு*: 18 முதல் 75 வயது வரை. ஒரு விவசாயி மூத்த குடிமகனாக இருந்தால், சட்டப்பூர்வ வாரிசாக இருக்கும் ஒருவர் இணைக் கடன்வாங்குபவராக இருக்க வேண்டும்.

3) *பிற பொறுப்பு*: கரும்பு சாகுபடி போன்ற ஒற்றைப் பயிருக்குக் கடன் வழங்கும்பொழுது, ஒரு விவசாயி மற்ற நிதி நிறுவனங்களிடமிருந்து பிற பயிர்களுக்குக் கடன் வாங்கியிருந்தாலும் மேற்படி பயிருக்கு சில நிபந்தனைகளுடன் பயிர்க் கடன் வழங்கப்படுகிறது (பிற வங்கியிடமிருந்து 'கடன் நிலுவை இல்லாத சான்றிதழ்' சமர்ப்பிக்கப்பட வேண்டும்).

4) *காப்பீடு*: அனைத்து வங்கிகளும் இப்போது கே.சி.சி. கடன் பெறுபவரை வலியுறுத்துவது என்னவெனில் பயிர்க் கடன் விடுவிக்கப்பட்ட உடனேயே, தேசியப் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் அல்லது பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயிர்க் காப்பீடு செய்ய வேண்டும். மேலும், தனிநபர் விபத்து காப்பீட்டையும் (சில இடங்களில் சுகாதாரக் காப்பீடு) எடுக்க வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை?**

*தேவையான ஆவணங்கள்*: நிரப்பப்பட்டு, கையொப்பமிடப்பட்ட விண்ணப்பப் படிவம், அடையாளச் சான்று (ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை, ஓட்டுநர் உரிமம்), முகவரிச் சான்று (ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை, ஓட்டுநர் உரிமம்), நில உரிமை ஆவணங்கள் அல்லது குத்தகை ஒப்பந்தங்கள், பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள், சிட்டா, அடங்கல், ரூ. 2.0 / 3.0 இலட்சத்திற்கு மேல் கடன் தேவைப்பட்டால் அதற்கான உத்தரவாதப் பாதுகாப்பு ஆவணங்கள் மற்றும் பிற.

- கே.சி.சி திட்டத்திற்கு விண்ணப்பிக்க நீங்கள் விரும்பும் வங்கியின் வலைதளத்தைப் பார்வையிடவும்.
- விருப்பங்களின் பட்டியலிலிருந்து, கிசான் கிரெடிட் கார்டை (உழவர் கடன் அட்டை) தேர்ந்தெடுக்கவும்.
- 'விண்ணப்பிக்கவும்' என்ற விருப்பத்தைக் கிளிக் செய்தவுடன், வலைதளம் உங்களை விண்ணப்பப் பக்கத்திற்கு திருப்பிவிடும்.
- தேவையான விவரங்களுடன் படிவத்தை நிரப்பி 'சமர்ப்பி' என்பதைக் கிளிக் செய்யவும்.
- அவ்வாறு செய்தவுடன், விண்ணப்பக் குறிப்பு எண் உங்களுக்கு அனுப்பப்படும்.

- நீங்கள் தகுதியுடையவராக இருந்தால், 3-4 வேலை நாட்களுக்குள் வங்கி அலுவலர் உங்களைத் தொடர்பு கொள்வார்.
- வட்டி மானியக் கோரிக்கைகளை டிஜிட்டல் முறையில் கண்காணிக்க மத்திய அரசு 'கிசான் ரின் போர்டல்' என்ற வலைதளத்தை தொடங்கியுள்ளது.

கே.சி.சி திட்டத்தின் கீழ் பயிர்க் கடன் வழங்குவதற்காக தமிழ்நாடு அரசு ஒரு வலைதளத்தைத் நிறுவியுள்ளது. இதில் https://rcs.tn.gov.in/rcsweb/kcc-loan/form என்ற பக்கத்தில் நுழைந்து விவரங்களை நிரப்பவும்.

**ஆதாரங்கள்:**

https://www.rbi.org.in/commonman/English/scripts/Notification.aspx?Id=2311
https://www.myscheme.gov.in/schemes/kcc
https://eseva.csccloud.in/kcc/Default.aspx?AspxAutoDetectCookieSupport=1
https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=2132139#

## (11) mKisan

**What is mKisan?** *The* mKisan scheme is a mobile-based advisory service for farmers, launched by the Ministry of Agriculture & Farmers Welfare, Government of India, in July 2013. The main objective of the scheme is to provide timely and relevant agricultural information and advisories to farmers through **mobile SMS and voice messages to the farmers** in their own language.

**Key Features**

1. Communication Medium: SMS and Voice Messages (IVRS)
2. Languages: Messages sent in 12 regional languages, including Tamil
3. Users Covered: All registered farmers across India
4. Message Types: 1. Advisory messages from experts 2. Weather alerts from IMD 3. Market price information 4. Government schemes and subsidy details
5. Technology Support: Integrated with the NIC platform for message dissemination.
6. Data Source: Farmer database from State Agriculture Departments and other schemes like Kisan Call Centres (KCC), ATMA, etc.

**How does it work?**

The mkisan programme uses a centralised SMS portal, along with other mobile-based services, to connect farmers with agricultural experts, government agencies, and market information in their local language, to reach farmers in remote areas with or without internet access.

1. *Registration*: Farmers can register by contacting the Kisan Call Centre (Toll-Free No. 1800-180-1551) or through Common Service Centres (CSCs), Agriculture Offices, or via SMS.
2. *Profile Creation*: Create a profile for farmers. It includes details like name, mobile number, crops grown, district, block, and language preference.
3. *Message Delivery*: Experts and officers send customised advisories through the mKisan Portal. Registered farmers receive targeted, location-specific SMS or pre-recorded voice messages on their phones. Farmers can proactively request specific information by sending a simple text message or using USSD codes.
4. *Interactive Voice Response System (IVRS)*: This automated telephony system allows farmers to interact with a pre-recorded menu to get information or provide feedback. For semi-literate or illiterate farmers, voice messages are an effective tool for information dissemination
5. *Kisan Call Centres (KCCs):* For more complex queries, farmers can call a toll-free number (1800-180-1551) to speak directly with agricultural experts, known as Farm Tele Advisors, in their local language.
6. *Mobile Apps*: The mKisan portal also links to a range of free mobile applications, such as Kisan Suvidha and AgriMarket, which offer more detailed and interactive services.

**Components Integrated with mKisan**

- *Kisan Call Centres (KCC):* For direct farmer queries.
- *Farm Machinery Banks, Soil Health Card, e-NAM*: Linked for information sharing.

- *Weather Forecasts:* Linked with the India Meteorological Department (IMD) for timely alerts.

**The kind of information offered to the farmers**

- *Agricultural advisories*: Receive information on pests and diseases, specific farming technologies, and government benefits.
- *Weather forecasts*: Get location-specific weather and rainfall predictions.
- *Government scheme updates*: Stay informed about various central and state government schemes related to agriculture and allied sectors.
- *Soil health card status*: Track the status of your soil health card applications.
- *Training and Insurance alert*: Farmers receive insurance and farmers trainings related information.
- *Buyer-seller platform*: Use the online platform to connect farmers with potential buyers like exporters, traders, and food processors.
- *Online licensing*: Manage licenses for agricultural inputs like seeds, fertilisers, and pesticides. SMS alert to be sent after the generation of the permit slip. Farmers may also receive SMS alerts on the distribution of subsidy seed to farmers.

**Benefits of the Scheme**

- Quick and direct communication with farmers.
- Cost-effective method for knowledge dissemination.
- Helps farmers make informed decisions on sowing, irrigation, fertiliser use, and pest management.
- Reduces dependence on middlemen for information.

**How to register?**

1. *Online*: Use the web registration feature on the official mKisan portal (mkisan.gov.in).
2. *Kisan Call Centre (KCC):* Call the toll-free number 1800-180-1551; a KCC agent will assist you with registration.
3. *SMS*: Send a text message to mkisan toll-free number 51969 or 7738299899 to register.
4. *Common Service Centres (CSCs):* Register with the help of a Village Level Entrepreneur (VLE) at a nearby CSC.
5. *State agriculture offices*: With the help of the District or block agriculture offices, registration can be done.

**Progress**

Over 5 crore farmers registered on the portal; More than 4 billion messages sent since launch, and significant improvement in awareness of best farming practices and timely crop protection.

**Source:**

https://mkisan.gov.in

## (11) எம்-கிசான்

**எம்-கிசான் என்றால் என்ன?** எம்-கிசான் திட்டம் விவசாயிகளுக்கு, மொபைல் போன் வாயிலாக ஆலோசனைகளை வழங்குவதற்காக இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையால் ஜூலை 2013-இல் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம், விவசாயிகளுக்கு அவர்களின் தாய்மொழியில் பொருத்தமான விவசாயத் தகவல்கள் மற்றும் ஆலோசனைகளை சரியான நேரத்தில் கைபேசி குறுஞ்செய்தி (எஸ்.எம்.எஸ்.) மற்றும் குரல் அழைப்புமூலம் வழங்குவதாகும்.

**முக்கிய அம்சங்கள்**

1. தகவல் பரிமாற்றம்: எஸ்.எம்.எஸ். மற்றும் குரல் தகவல்கள் (IVRS)
2. மொழிகள்: தமிழ் உள்ளிட்ட 12 பிராந்திய மொழிகளில் தகவல்கள் அனுப்பப்படுகின்றன
3. பயனாளர்கள்: பதிவு செய்த அனைத்து இந்திய விவசாயிகளும்
4. தகவல் வகைகள்: 1) வல்லுநர்களிடமிருந்து ஆலோசனை செய்திகள், 2) வானிலை எச்சரிக்கைகள் (IMD மூலம்), 3) சந்தை விலை தகவல்கள், மற்றும் 4) அரசுத் திட்டங்கள் மற்றும் சலுகை விவரங்கள்.
5. தொழில்நுட்ப ஆதரவு: தகவல் பரிமாற்றத்திற்காக NIC தளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.
6. தரவு ஆதாரங்கள்: விவசாயிகள் தொடர்பான மாநில வேளாண் துறை மற்றும் பிறத் திட்டங்கள் (எ.கா., விவசாயிகள் அழைப்பு மையம், விவசாய தொழில்நுட்ப மேலாண்மை முகமை) வைத்திருக்கும் தரவுதளங்கள்.

**எப்படி செயல்படுகிறது?**

mKisan திட்டம், மையப்படுத்தப்பட்ட SMS தளத்தையும் பிற கைபேசி அடிப்படையிலான சேவைகளையும் பயன்படுத்தி, விவசாயிகளை வேளாண் நிபுணர்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் சந்தைத் தகவல்களுடன் அவர்களது உள்ளூர் மொழியில் இணைக்கிறது. இது இணையவசதியில்லாத தொலைதூர பகுதிகளில் கூட விவசாயிகளுக்குத் தகவலை அனுப்ப உதவுகிறது.

*1. பதிவு*: விவசாயிகள் விவசாயிகள் அழைப்பு மையம் (கட்டணமில்லா தொலைபேசி நம்பர் 1800-180-1551), பொது சேவை மையங்கள் மற்றும் விவசாய அலுவலகங்களைத் தொடர்பு கொண்டும் அல்லது குறுஞ்செய்தி மூலமும் பதிவு செய்யலாம்.

*2. சுயவிவர உருவாக்கம்*: விவசாயியின் பெயர், தொலைபேசி எண், பயிர்கள், மாவட்டம், வட்டம் மற்றும் மொழி விருப்பம் போன்ற தகவல்களை உள்ளடக்கிய சுயவிவரம் உருவாக்கப்படுகிறது.

*3.செய்தி விநியோகம்*: வேளாண் வல்லுநர்கள் (அ) அலுவலர்கள் mKisan போர்டல் மூலம் பிராந்திய ரீதியான பிரத்யேகமான வேளாண் தகவல்களைப் பதிவு செய்த விவசாயிகளுக்கு குறுஞ்செய்தி (அ) முன் பதிவுசெய்யப்பட்ட குரல் தகவல்கள் மூலம் அனுப்புவார்கள். விவசாயிகள் தங்களுக்குத் தொடர்புடைய அல்லது சில குறிப்பிட்டத் தகவல்களை மட்டும் குறுஞ்செய்தி அனுப்பி அல்லது USSD கோடுகளைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

*4.தானியங்கி தொலைபேசி சேவை* (IVRS): இந்த தானியங்கி தொலைபேசி அமைப்பு, முன்பதிவு செய்யப்பட்ட குரல் பட்டியலின் (pre-recorded menu) மூலம் விவசாயிகள் தகவல்களைப் பெறவும், தங்களது கருத்துகளைப் பதிவு செய்யவும் வசதியளிக்கிறது. விவசாயிகள் முன் பதிவுசெய்யப்பட்ட மெனுவுடன் தொடர்பு கொண்டு *தானியங்கி தொலைபேசி சேவை மூலம் சில* தகவல்களைப் பெறலாம் அல்லது கருத்து

அளிக்கலாம். குறைந்த கல்வி பெற்ற விவசாயிகள் குரல் செய்திகளைப் பயன்படுத்தி தகவல் பெறலாம்

5. *விவசாயிகள் அழைப்பு மையம் (KCC)*: சிக்கலான கேள்விகளுக்கு விவசாயிகள் 1800-180-1551 இலவச எண்ணிற்கு அழைத்து நேரடியாக வேளாண் வல்லுநர்களுடன் பேசலாம்.

6. *மொபைல் செயலிகள்*: mKisan போர்டலானது, Kisan Suvidha மற்றும் AgriMarket போன்ற இலவச செயலிகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. இது விரிவான மற்றும் கலந்துரையாடல் சேவைகளை வழங்குகிறது

**mKisan உடன் இணைக்கப்பட்ட பிற செயலிகள் / தளங்கள்**

- *விவசாயி அழைப்பு மையம் (KCC)*: நேரடி விவசாயி கேள்விகளுக்கு
- பண்ணை இயந்திர வங்கி, மண்வள அட்டை மற்றும் e-NAM: தகவல் பகிர்விற்காக இணைக்கப்பட்டுள்ளன
- *வானிலை முன்னறிவிப்புகள்:* இந்திய வானிலைத் துறையுடன் (IMD) இணைக்கப்பட்டு குறித்த நேரத்தில் எச்சரிக்கைகள் வழங்கப்படுகிறது

**விவசாயிகளுக்கு வழங்கப்படும் தகவல்கள்**

- *விவசாய ஆலோசனைகள்*: பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, சிறப்புப் பயிர் நுட்பங்கள், அரசு நன்மைகள்
- *வானிலை முன்னறிவிப்புகள்*: இடம் சார்ந்த வானிலை மற்றும் மழை கணிப்பு
- *அரசுத் திட்டங்கள் குறித்த சமீபத் தகவல்கள்*: மத்திய மற்றும் மாநில அரசு வேளாண் திட்டங்கள்
- *மண்வள அட்டை நிலை:* மண்வள அட்டை விண்ணப்ப நிலையை கண்காணிக்க
- *பயிற்சி மற்றும் காப்பீட்டு எச்சரிக்கை:* பயிர்க் காப்பீடு மற்றும் பயிற்சி தகவல்கள்
- *விற்பனையாளர்–வாங்குபவர் இணையதளம்*: விவசாயிகள் இறக்குமதியாளர்கள், வணிகர்கள், உணவு பதப்படுத்துபவர்கள் போன்றவர்களுடன் இணைக்க
- இணையவழி உரிமம் பதிவு: விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் போன்ற விவசாய இடுபொருள் உரிமங்களை நிர்வகிக்க

**திட்டத்தின் நன்மைகள்**

- விவசாயிகளுடன் விரைவான நேரடி தொடர்பு
- குறைந்த செலவில் அறிவுத் தகவல் பரிமாற்றம்
- விதை, நீர்வளப் பயன்பாடு, உரம் மற்றும் பூச்சி மேலாண்மையில் தெளிவான முடிவுகள் எடுக்கும் உதவி
- வேளாண் தகவல்களுக்காக இடைநிலை நபர்களின் சார்பு குறைக்கப்படுகிறது

**பதிவு செய்வது எப்படி?**

1. *இணையவழி:* அதிகாரப்பூர்வ mKisan போர்டல் (mkisan.gov.in) வழியாகப் பதிவு செய்யலாம்

2. *விவசாயிகள் அழைப்பு மையம் (KCC):* இலவச எண் 1800-180-1551-ஐ அழைத்து, KCC மைய உதவியாளர் மூலமாக பதிவு செய்யலாம்.

3. *குறுஞ்செய்தி*: 51969 அல்லது 7738299899 என்ற இலவச எண்ணிற்கு எஸ்.எம்.எஸ் அனுப்பி பதிவு செய்யலாம்

4. *பொது சேவை மையங்கள்* (CSC): அருகிலுள்ள பொது சேவை மையங்களுக்குச் சென்று கிராமத் தொழில்முனைவோர் (VLE) உதவியுடன் பதிவு செய்யலாம்

5. *மாநில வேளாண்மை அலுவலகங்கள்*: மாவட்டம் அல்லது வட்டார விவசாய அலுவலகத்திற்கு சென்று பதிவு செய்யலாம்.

**திட்ட முன்னேற்றம்**

சுமார் 5 கோடிக்கு மேலான விவசாயிகள் mKisan தளத்தில் பதிவு செய்துள்ளனர். இதுவரை, 400 கோடிக்கும் அதிகமான குறுஞ்செய்திகள் விவசாயிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது; இதன் மூலம் சீரிய விவசாய முறைகள் குறித்த விழிப்புணர்வும், தக்கச் சமயத்தில் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுப்பதில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

**ஆதாரம்:**
https://mkisan.gov.in

## (12) National Food Security and Nutrition Mission (NFSNM)

**What is NFSNM?** The National Food Security and Nutrition Mission (NFSNM) is a Centrally sponsored Scheme, being implemented since 2023-24 by the Government of India to ensure sustainable food and nutritional security for the nation by increasing production of rice, wheat, pulses, coarse cereals (maize & barley), commercial crops (cotton, jute & sugarcane) and nutri-cereals (shree anna) through area expansion, adoption of different cropping patterns and productivity enhancement in a sustainable manner. The mission also aimed at enhancing post-harvest value addition at the farm gate for better price realisation to farmers through efficient market linkages, enhancing the Seed Replacement Rate (SRR) and Varietal Replacement Rate (VRR) and improving the infrastructure of the Seed Sector in the country.

The NFSNM has evolved by merging earlier programmes such as the National Food Security Mission (NFSM) of 2007-08, National Mission on Oilseeds and Oil Palm (NMOOP), and National Mission on Sustainable Agriculture (NMSA) and by expanding its scope to include coarse cereals (w.e.f. 2014-15), nutri-cereals (Shree Anna w.e.f. 2018-19), commercial crops, and other crops/components. The NFSNM is now having seven components, namely:-

1. NFSNM-Rice
2. NFSNM-Wheat
3. NFSNM-Pulses
4. NFSNM-Coarse Cereals (Maize & Barley)
5. NFSNM-Sub Mission on Nutri Cereals (Shree Anna)
6. NFSNM-Commercial Crops
7. NFSNM-Seed Components (erstwhile Sub-Mission for Seed and Planting Material).

### A) NFSNM on Rice, Wheat, Pulses, and Coarse Cereals

1. Demonstrations: Cluster demonstrations by SAUs, Cluster Frontline Demonstrations (CFLDs) by KVKs, and FLDs by the ICAR institutes to showcase improved technologies and high-yielding, bio-fortified varieties.
2. Need-based inputs support for certified seed production and distribution, seed minikit distribution, nutrient management, and plant protection measures; the use of FCO-approved nano-fertilisers and drones for IPM and INM applications is also emphasised.
3. Cropping System Trainings: Capacity-building programmes for farmers and extension personnel at critical stages of crop seasons, conducted in collaboration with ICAR, SAUs, CAUs, and KVKs.
4. Flexi interventions: State-specific innovative activities, including precision farming, adoption of new machinery or digital tools not covered under existing schemes, with 50% cost assistance.
5. Seed Hubs: Creation and strengthening of seed processing and storage units (with ₹ 50 lakh infrastructure support and ₹ 100 lakh revolving fund) for pulses and nutri-cereals, fully mapped through the SATHI portal.
6. Research Support: Funding for innovative, time-bound, and non-overlapping research projects to improve crop productivity and resilience, monitored *via* Krishi Mapper.

7. Exposure Visits: International exposure programmes for officials to organisations such as IRRI, CIMMYT, and ICRISAT to enhance technical capacities.

**B) Sub-Mission on Nutri-Cereals (Shree Anna)**

This component promotes millets (Jowar, Bajra, Ragi, and small millets) for their nutritional value and climate resilience.

1. Demonstrations: Field trials showcasing improved agronomy and intercropping systems with pulses and oilseeds.
2. Need-Based inputs: Support for breeder and certified seed production, bio-fortified varieties, and nutrient management inputs.
3. Seed Hubs: Support for community-based millet seed banks and decentralised processing units.
4. Research & Innovation: Strategic adaptive research on nutri-cereal productivity, resilience, and market integration.
5. Centres of Excellence (CoEs): Financial assistance for strengthening CoEs in millet-producing regions.
6. Promotion and Publicity: National and state-level campaigns for awareness creation, branding, and market linkages under the "Shree Anna" initiative.

**B) NFSNM-Commercial Crops (Cotton, Jute, and Sugarcane)**

Under the commercial crops component, interventions follow a cropping system approach to enhance both productivity and value-chain integration.

1. Cotton-Based Systems: Support for high-density planting systems, IPM technologies, drip irrigation, and short-duration Bt/non-Bt hybrids.
2. Sugarcane-Based Systems: Focus on high sugar recovery varieties, ratoon management, sett treatment devices, and sustainable irrigation systems. All interventions include demonstrations, seed multiplication, training, and support for mechanisation, improving both farmer income and raw material availability for industry.
3. Jute and Allied Fibres: Assistance for high-yielding varieties, retting technology, and mechanisation support for fibre extraction.

**D) NFSNM-Seed Components**

This component strengthens the seed supply chain from breeder to certified seed, ensuring quality and timely availability to farmers.

1. Freight Assistance for inter-state and inter-agency seed transport to bridge supply gaps.
2. Support for Fostering New Varieties, particularly bio-fortified and climate-resilient cultivars.
3. Infrastructure Development for seed processing, storage, and quality testing at the Gram Panchayat level.
4. Seed Quality Assurance: Establishment and strengthening of Seed Testing Laboratories, DNA Fingerprinting Labs, and Seed Health Testing Facilities.

5. National Seed Reserve: Maintenance of buffer seed stocks to mitigate losses from natural calamities.
6. Private Sector Support: Incentives for seed entrepreneurs to enhance the reach of certified seed production and distribution.

**Funding**

- Each component operates under a three-tier governance structure involving National, State, and District-level committees supported by Project Management Units (PMUs) and Teams (PMTs).
- The funding pattern remains 60:40 for General States, 90:10 for North-Eastern and Himalayan states, and 100% for Union Territories.
- The Mission integrates Direct Benefit Transfer (DBT) for all beneficiary-oriented activities and leverages Krishi Mapper and SATHI platforms for real-time monitoring and evaluation.

**Incentives for farmers**

- Under the programme, various incentives like production and distribution of seeds, supply of seed mini kits, Front Line/Cluster Demonstrations, improved farm implements, bio-pesticides, micronutrients, bio-fertilisers, etc., are provided to the farmers.
- Demonstration: Incentive of ₹ 9,000 per ha for sole crop and ₹ 15,000 per ha for cropping system-based demonstration. In the case of coarse cereals, it is ₹ 9,000 per ha.
- Seed Distribution: Assistance for the purchase of seeds will be available to selected farmers for areas not exceeding 2 ha each in a crop season, as per provisions in the DBT. The rate varies for each crop.

**Selection criteria**

- Districts with an area of more than 50,000 ha and yield below the state average yield under NFSM-Rice and NFSM-Wheat have been selected. In case of coarse cereals (Maize and Barley), the districts covering 70% of the total coarse cereals area of the state have been selected.
- At least 33% allocation of the fund is to be made for small and marginal farmers, & 30% for women farmers.
- For a Cluster Front Line Demonstration (CFLD) organised by ICAR, each cluster must be at least 25 ha
- For a Front-Line Demonstration (FLD) organised by ICAR, each cluster must be at least 1 ha
- For a Demonstration organized by the state government, each cluster must be at least 100 ha (25 ha for Hilly and North East states)

**Sources:**

https://www.nfsm.gov.in

DAFW, 2024. Annual Report: 2024-25. Department of Agriculture & Farmers Welfare, M/o A&FW, New Delhi

DAFA. 2025. Operational Guidelines. National Food Security & Nutrition Mission (NFSNM). Ministry of Agriculture & Farmers Welfare, New Delhi

## (12) தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கம் (NFSNM)

**NFSNM என்பது என்ன?** தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கம் என்பது இந்திய அரசின் ஆதரவுடன் அனைத்து மாநிலங்கள்/யூ.பிரதேசங்களில் செயல்படும் திட்டமாகும். இது 2023–24 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் நோக்கம் நாட்டில் நிலையான உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதிசெய்தல் ஆகும். இதற்காகத் தானியப் பயிர்கள் (நெல், கோதுமை, பருப்பு வகைகள், சோளம் மற்றும் பார்லி போன்றவை), வர்த்தகப் பயிர்கள் (பருத்தி, சணல், கரும்பு) மற்றும் ஊட்டச்சத்து சிறுதானியங்கள் (ஸ்ரீ அன்னா) ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தினை பயிர் பரப்பளவு விரிவாக்கம், பல்பயிர் முறைகளை ஊக்குவித்தல் மற்றும் நிலையான பயிர் உற்பத்தி முறைகளை ஊக்குவிக்கும் வகையில் வடிவமைத்துள்ளனர். மேலும், இத்திட்டம் அறுவடைக்குப் பிந்தைய மதிப்புக்கூட்டல் மற்றும் சந்தை இணைப்பை மேம்படுத்தி விவசாயிகளுக்கு நியாயமான விலையைக் கிடைக்கச் செய்தல், புது விதை மாற்று விகிதம் (SRR) & இரக மாற்று விகிதத்தை (VRR) உயர்த்துதல், மற்றும் விதைத் துறையில் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**NFSNM உருவாக்கம்:** இத்திட்டம் பல முந்தைய திட்டங்களை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டுள்ளது. அவையாவன:- தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் (NFSM, 2007–08), தேசிய எண்ணெய் வித்துக்கள் மற்றும் எண்ணெய் பனை திட்டம் (NMOOP), தேசிய நிலைத்த வேளாண்மை திட்டம் (NMSA) முதலியன. 2014–15 முதல் இத்திட்டத்தில் பெருந்தானியங்கள் சேர்க்கப்பட்டன, 2018–19 முதல் ஊட்டச்சத்து சிறுதானியங்கள் (ஸ்ரீ அன்னா), பணப் பயிர்கள் மற்றும் பிற கூறுகள் சேர்க்கப்பட்டு விரிவாக்கப்பட்டுள்ளது. தற்போது NFSNM-இல் ஏழு கூறுகள்/துணைத் திட்டங்கள் உள்ளன:

1. NFSNM – நெல்
2. NFSNM – கோதுமை
3. NFSNM – பருப்பு வகைகள்
4. NFSNM – பெருந்தானியங்கள் (சோளம் & பார்லி)
5. NFSNM – ஊட்டச்சத்து சிறுதானியத் துணை இயக்கம் (ஸ்ரீ அன்னா)
6. NFSNM – வர்த்தகப் பயிர்கள்
7. NFSNM– விதைகள் (முன்னர், விதை & நடவுப்பொருட்கள் துணை இயக்கம்)

### A) NFSNM- நெல், கோதுமை, பருப்பு மற்றும் பெருந்தானியங்கள்

1. செயல்முறை விளக்கம்: மாநில வேளாண் பல்கலைக்கழகங்கள் (SAUs) மூலம் தொகுப்பு செயல்விளக்கத் திடல், KVK-கள் மூலம் தொகுப்பு முதல்நிலை செயல் விளக்கம் (CFLDs), மற்றும் ICAR நிறுவனங்கள் மூலம் முதல்நிலை செயல்விளக்கங்கள் (FLDs) நடத்தி, உயர் விளைச்சல் மற்றும் உயிர்ச்சத்து மிகுதியான (செறிவூட்டப்பட்ட) புதிய இரகங்கள்/ தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல்.

2. சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தி மற்றும் விநியோகத்திற்குத் தேவையான இடுபொருட்கள் வழங்குதல், விதை சிறு-தளைகள் வழங்குதல், ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் பூச்சி பாதுகாப்பு நடவடிக்கைகள், FCO அங்கீகரித்த நானோ உரங்கள் மற்றும் ட்ரோன் தொழில்நுட்பம் மூலம் IPM மற்றும் INM பயன்பாடுகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

3. பயிர்முறை பயிற்சிகள்: ICAR, SAUs மற்றும் KVK-கள் இணைந்து பயிர் பருவத்தின் முக்கிய கட்டங்களில் விவசாயிகள் மற்றும் விரிவாக்க அதிகாரிகளுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் நடத்தப்படும்.

4. தேவைக்கேற்ற தலையீடுகள்: தற்போதுள்ள திட்டங்களின் கீழ் வராத, துல்லிய வேளாண்மை, புதிய இயந்திரங்கள் அல்லது டிஜிட்டல் கருவிகளைப் பயன்படுத்துதல் போன்ற மாநிலத்திற்கேற்ற புதுமையான செயல்பாடுகளுக்கு 50 சதவீதம் வரை உதவித்தொகை வழங்கப்படும்.

5. விதை மையம் (குவியம்) உருவாக்குதல்: பயறு வகைகள் மற்றும் ஊட்டச்சத்து தானிய விதைகளைப் பதப்படுத்துதல், சேமிப்புக் கூடங்களை உருவாக்குதல் மற்றும் வலுப்படுத்துதல் (ரூ. 50 லட்சம் உட்கட்டமைப்பு ஆதரவு மற்றும் ரூ. 100 லட்சம் வரை சுழல் நிதி வழங்கப்படுகிறது) ஆகியவற்றிற்கு உதவிகள் வழங்குதல். இவை சத்தி (SATHI) இணையதளம் மூலம் நிறைவேற்றப்படுகிறது.

6. ஆராய்ச்சி ஆதரவு: பயிர் உற்பத்தித்திறனை மேம்படுத்தப் புதுமையான, காலக்கெடுவுடன் கூடிய, தனித்துவமான ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதி வழங்குதல். இது க்ரிஷி மேப்பர் (Krishi Mapper) மூலம் செயல்படுத்தப்படுகிறது.

7. கண்டுணர் சுற்றுப்பயணங்கள்: வேளாண் அதிகாரிகளுக்கு IRRI, CIMMYT, ICRISAT போன்ற சர்வதேச நிறுவனங்களில் பயிற்சி வழங்கும் திட்டங்கள்.

**B) ஊட்டச்சத்து சிறுதானியத் துணை இயக்கம் (ஸ்ரீ அன்னா)**

இந்தத் திட்டத்தின் மூலம் ஊட்டச்சத்து மிகுந்த மற்றும் மாறிவரும் தட்பவெப்பநிலையைத் தாங்கி வளரும் சோளம், கம்பு, கேழ்வரகு மற்றும் சிறுதானியங்களின் உற்பத்தி ஊக்குவிக்கப்படுகிறது.

1. செயல்முறை விளக்கம்: பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களுடன் மேம்படுத்தப்பட்ட வேளாண்மை மற்றும் ஊடுபயிர் முறைகளைக் காண்பிக்கும் கள ஆய்வுகள்.

2. தேவைக்கேற்ப இடு பொருட்கள்: வல்லுநர் மற்றும் சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தி, செறிவூட்டப்பட்ட பயிர் இரகங்கள் மற்றும் மனவள மேலாண்மைக்குத் தேவைப்படும் இடுபொருட்களுக்கான மானியம் வழங்கப்படுகிறது.

3. விதை மையம் (குவியம்) உருவாக்குதல்: சமூக விதை வங்கிகள் மற்றும் மைய பதப்படுத்தும் அலகுகள் நிறுவ உதவி அளிக்கப்படுகிறது.

4. ஆராய்ச்சி & புதுமை: ஊட்டச்சத்து தானிய உற்பத்தி, சந்தை ஒருங்கிணைப்பு மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் ஆராய்ச்சிகளுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.

5. திறன்மிகு மையங்கள்: சிறுதானிய உற்பத்திப் பகுதிகளில் உள்ள திறன்மிகு மையங்களை வலுப்படுத்த நிதியுதவி வழங்குதல்.

6. விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு: “ஸ்ரீ அன்னா” முன்னெடுப்பின்கீழ் தேசிய மற்றும் மாநில அளவிலான பிரச்சாரங்கள், பிராண்டிங், மற்றும் சந்தை இணைப்புகளுக்கு நிதியுதவி.

**C) NFSNM- வர்த்தகப் பயிர்கள் (பருத்தி, கரும்பு, சணல்)**

இந்தத் துணைத் திட்டத்தின் கீழ், பயிர்சுழற்சி/பயிர் முறைமை அணுகுமுறை மூலம் உற்பத்தி திறன் மற்றும் மதிப்புச் சங்கிலி ஒருங்கிணைப்பு மேம்படுத்தப்படுகிறது.

1. பருத்தி அடிப்படையிலான பயிர் முறைமைகள்: உயர் அடர்த்தி நடவு முறை, ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை, சொட்டு நீர்ப்பாசனம், குறுகிய கால Bt / non-Bt கலப்பின விதைகளுக்கான ஆதரவு.

2. கரும்பு அடிப்படையிலான பயிர் முறைமைகள்: அதிகச் சர்க்கரை கட்டுமானமுடைய இரகங்கள், கட்டைப்பயிர் (மருதாம்பு) மேலாண்மை, கரணை நேர்த்திக் கருவிகள், நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் போன்ற அனைத்து நடவடிக்கைகளிலும் செயல்விளக்கம், விதைப் பெருக்கம், பயிற்சி, இயந்திரமயமாக்கல் ஆகியவற்றுக்கு உதவியளிக்கப்படுகிறது. இதன் மூலம் விவசாயிகளின் வருமானமும், பிற தொழிகளுக்கு மூலப்பொருட்கள் கிடைப்பதும் மேம்படும்.

3. சணல் மற்றும் பிற நார்ப்பயிர்கள்: அதிக மகசூல் தரும் இரகங்களுக்கான உதவி, நார் பிரித்தெடுக்கும் தொழில்நுட்பம் மற்றும் இயந்திரமயமாக்களுக்கான ஆதரவு.

**D) NFSNM- விதைகள்**

இந்த துணைத்திட்டம், விதை உற்பத்தித் தொடர் வசதிகளை வலுப்படுத்தி, விவசாயிகளுக்குத் தரமான விதைகளை சரியான நேரத்தில் கிடைக்கச் செய்வதை உறுதிசெய்கிறது.

1. மாநிலங்கள்/ முகமைகளுக்கிடையிலான விதைப் போக்குவரத்துக்கு நிதி உதவி.
2. புதிய இரகங்கள், செறிவூட்டப்பட்ட மற்றும் காலநிலை மாற்றத்தைத் தாங்கி வளரும் இரகங்களை உருவாக்குவதற்கு ஊக்குவிப்பு.
3. விதை பதப்படுத்துதல், சேமிப்பு மற்றும் தர பரிசோதனை மையங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்.
4. விதைத் தர உறுதி: விதை/இரக மரபணு பரிசோதனை மற்றும் விதை ஆரோக்கிய சோதனை ஆய்வகங்கள் அமைத்தல்.
5. தேசிய விதை இருப்பு பாதுகாப்பு: இயற்கை பேரழிவுகளின்பொழுது ஏற்படும் இழப்புகளை ஈடு செய்ய விதை இருப்புகளை வைத்திருத்தல்.
6. தனியார்த் துறைகளை ஊக்குவித்தல்: விதை தொழில்முனைவோருக்கு ஊக்கத் தொகை வழங்கி சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தி மற்றும் விநியோகத்தை விரிவுபடுத்துதல்.

**நிதி மற்றும் நிர்வாக அமைப்பு**

- NFSNM-இன் ஒவ்வொரு கூறும் தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவிலான மூன்றடுக்கு நிர்வாக அமைப்புகளுடன் செயல்படுத்தப்படுகிறது.
- நிதி பங்கீடு: பொதுப்பிரிவு மாநிலங்களுக்கு 60:40 மத்திய-மாநில நிதி, வடகிழக்கு மற்றும் மலை மாநிலங்களுக்கு 90:10, யூனியன் பிரதேசங்களுக்கு 100 சதவீதம் மத்திய நிதி.
- அனைத்துப் பயனாளர்களுக்கும் நேரடிப் பலன் பரிமாற்றம் (DBT) மூலம் உதவித்தொகை செலுத்தப்படும். மேலும், இத்திட்டம், க்ரிஷி மேப்பர் மற்றும் சத்தி வலைதளங்கள் மூலம் நேரடி கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டை மேற்கொள்கிறது.

**விவசாயிகளுக்கான ஊக்கத்தொகை**

- விதை உற்பத்தி & விநியோகம், விதை மினி-கிட் (சிறுதளை), செயல் விளக்கம், மேம்பட்ட இயந்திரங்கள், உயிரி பூச்சிக்கொல்லிகள், நுண்ணூட்டச் சத்துக்கள், உயிர் உரங்கள் ஆகியவற்றிற்கு உதவித்தொகை வழங்கப்படும்.

- செயல் விளக்கம்: தனிப்பயிர் செயல் விளக்கத்திற்கு ரூ. 9,000/ஹெக்டேர், பயிர்சுழற்சி முறைமை செயல் விளக்கத்திற்கு ரூ. 15,000/ஹெக்டேர், பெருந்தானியங்களுக்கு ரூ. 9,000/ஹெக்டேர்.
- விதை விநியோகம்: தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒவ்வொரு பருவத்திலும் அதிகபட்சம் 2 ஹெக்டேர் வரை மானியம், நேரடிப் பலன் பரிமாற்றம் வழியாக வழங்கப்படும்.

**தேர்வுக்கான அளவுகோல்கள்**

- NFSM–நெல் மற்றும் கோதுமை: 50,000 ஹெக்டேருக்கு மேல் பரப்பும், மாநில சராசரியை விடக் குறைந்த விளைச்சல் திறன் கொண்ட மாவட்டங்கள் தேர்வு செய்யப்படும். சோளம் மற்றும் பார்லியைப் பொறுத்தவரை மாநிலத்தின் மொத்தத் தானியப் பரப்பளவில் 70 சதவீதம் பரப்பளவைக் கொண்ட மாவட்டங்கள் தேர்வு செய்யப்படும்.
- நிதியில் குறைந்தது 33 சதவீதம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, மற்றும் 30 சதவீதம் பெண் விவசாயிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.
- ICAR மூலம் மேற்கொள்ளப்படும் தொகுப்பு முதல்நிலை செயல்விளக்கத் திடலுக்கு குறைந்தது 25 ஹெக்டேர் இருக்க வேண்டும்.
- ICAR மூலம் மேற்கொள்ளப்படும் முதல்நிலை செயல்விளக்கத் திடலுக்கு குறைந்தது 1 ஹெக்டேர் இருக்க வேண்டும்.
- மாநில அரசால் மேற்கொள்ளப்படும் செயல் விளக்கங்களில், ஒவ்வொரு தொகுப்பிற்கும் குறைந்தது 100 ஹெக்டேர் பரப்பளவு இருக்க வேண்டும் (மலை சார்ந்த மற்றும் வடகிழக்கு மாநிலங்களுக்கு இது 25 ஹெக்டேர் எனத் தளர்த்தப்பட்டுள்ளது).

**ஆதாரங்கள்:**

https://www.nfsm.gov.in


DAFW, 2024. Annual Report: 2024-25. Department of Agriculture & Farmers Welfare, M/o A&FW, New Delhi.

DAFA. 2025. Operational Guidelines. National Food Security & Nutrition Mission (NFSNM). Ministry of Agriculture & Farmers Welfare, New Delhi.

## (13) National Pest Surveillance System (NPSS)

**What is NPSS?** The National Pest Surveillance System (NPSS) is an AI-powered initiative launched on 15 Aug 2024 by the Government of India, Ministry of Agriculture and Farmers Welfare, with involvement from the Directorate of Plant Protection, Quarantine & Storage (DPPQS), ICAR- National Research Centre for Integrated Pest Management (NRIIPM), ICAR- Indian Agricultural Statistics Research Institute (ICAR-IASRI), private IT partners like Plantix, and Wadhwani AI to enhance pest and disease management across the country. This is an Artificial Intelligence (AI) and Machine Learning (ML) enabled system designed for identification, monitoring insect pests and diseases in crops and providing real-time crop protection advisory to the farmers regarding pest attacks, crop diseases, crop damages, etc. The Mobile Apps and Web portal of NPSS facilitates direct communication between farmers and crop experts, provides scientific data-driven, more specific, localised advisories to farmers and reduces farmers' dependence on pesticide retailers/ unauthentic information sources.

**What does it contain**? The NPSS includes a user-friendly **Mobile App & a Web Portal** for identification of pests and disease mitigation. Farmers can use the mobile app to upload images of pests/diseases and report observations from fields. The web portal may be used as dashboards and a visualisation of data. The NPSS system contains pest and disease identification of 61 crops and pest / disease management advisories for 15 major crops, namely cotton, paddy, wheat, maize, pigeon pea, moong, soyabean, sugarcane, brinjal, tomato, apple, banana, grapes, and pomegranate. The NPSS is currently available in four languages, namely English, Hindi, Marathi and Punjabi.




**The Mobile app (NPSS)** is available in google play store and may be downloaded freely. The app has three modules: (i) pest/disease identification, (ii) pest data entry through quantitative and qualitative pest surveillance and (iii) pest advisories.


In the Pest Identification Modules, pest and disease identification of 61 crops is embedded. The user can directly capture photos from the mobile camera or can upload from the phone gallery. An AI-based system will analyse the uploaded image, identify the pest/disease using the available database, and provide information on the symptoms caused by the identified pest. It will also instantly suggest IPM practices for effective pest control.

The Pest Surveillance Module has two sub-menus: *A) Quantitative surveillance* (Science-based): This is usually done by Registered scouts in the portal to avoid irrelevant data. It is for specialists of CIPMCs (Central Integrated Pest Management Centre) of the DPPQS, State Agri/Horti Department, KVKs, etc. It involves taking scientific observations randomly in the field, which varies from pest to pest. This module cannot be accessed by users who don't have a Scout ID & Password. *B) Trap-based Quantitative surveillance* (Science-based): This is for recording and inputting trap observations of pheromone traps. The Registered scouts can either enter the number of insects trapped in the trap (trap-wise) or upload photographs showing insects trapped inside the trap for automatic counting. Currently, it is available for the Pink bollworm and the American bollworm in cotton only. This module cannot be accessed by users who don't have a Scout ID &

Password. The uploaded photos are validated by experts through the NPSS Web portal. C) *Qualitative surveillance or roving or farmer survey*: This menu is meant for farmers/laymen who do not give extensive information. *Login ID & Password are not needed*. The farmer is expected to enter details such as his name, village, State, mobile number, date of observation, crop name, type of pest, name of pest and level of infestation (i.e., among Severe, Moderate, Low). On submission of information advisory alert will be shown in the display (advisory corresponding to the level of infestation, *i.e.,* Severe, Moderate, Low).

The Pest Advisory Module can be viewed by farmers and scouts to see the advisory issued by an expert from the NPPS web portal, specific to the village or the whole region. Upon entering your location, name of crop, pest name, etc., the user will see information on the advisory alert in the display.

**The Web Portal** (https://npss.dac.gov.in) consists of a dashboard and pest reporting in different formats. The web portal is meant only for experts/admins to be created by login ID and not for scouts. The data added by scouts can be verified by experts, and advisories issued by experts can be seen in the advisory module of the NPSS app. The information on district-wise/state-wise/country-wise pest situation (Pest reports) at various time intervals and about advisories will be submitted & traced in the web portal.




**Progress:** The NPSS is a significant step toward digital agriculture, integrating AI and surveillance for pest management. It is intended to reduce crop losses by issuing an early alert on pest occurrence and damage. Since its launch, over 16,000 farmers have downloaded the App, signifying progress in adopting digital agriculture for sustainable farming.


**Sources**:

GoI, 2024. User Manual for NPSS Mobile App & Web, Department of Agriculture and Farmers Welfare Directorate of Plant Protection, Quarantine & Storage. Faridabad.
https://npss.dac.gov.in/

## (13) தேசியப் பூச்சி கண்காணிப்பு முகமை (NPSS)

**NPSS என்றால் என்ன?** தேசியப் பூச்சி கண்காணிப்பு முகமை 15 ஆகஸ்ட், 2024 அன்று இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட, செயற்கை நுண்ணறிவு மூலம் இயக்கப்படும் முன்னெடுப்பாகும். இது தாவரப் பாதுகாப்பு, தனிமைப்படுத்தல் மற்றும் சேமிப்பு இயக்குநரகம் (DPPQS), ICAR-ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மைக்கான தேசிய ஆராய்ச்சி மையம் (NRIIPM), ICAR-இந்திய வேளாண்மை புள்ளியியல் ஆராய்ச்சி நிறுவனம் (ICAR-IASRI), பிளான்டிக்ஸ், வத்வனி AI போன்ற தனியார் ஐ.டி. நிறுவனங்களுடன் இணைந்து நாடு முழுவதும் பூச்சி மற்றும் நோய் மேலாண்மையை மேம்படுத்துவதற்காகத் தொடங்கப்பட்டது. இது பயிரைத் தாக்கும் பூச்சி-நோய்களை அடையாளம் காணவும், கண்காணிக்கவும், பூச்சி தாக்குதல்கள், பயிர் நோய்கள் மற்றும் அவற்றின் சேதங்கள் குறித்து விவசாயிகளுக்கு உடனடி பயிர் பாதுகாப்பு ஆலோசனைகளை வழங்க வடிவமைக்கப்பட்ட ஒரு செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் இயந்திர கற்றல் (ML) ஆகியவற்றால் இயக்கப்படும் ஒரு வலைதளமாகும். NPSS-இன் கைபேசி ஆப் (செயலி) மற்றும் வலைதளங்கள் விவசாயிகளுக்கும் பயிர் நிபுணர்களுக்கும் இடையே நேரடித் தொடர்பை உருவாக்குகிறது. NPSS விவசாயிகளுக்கு அறிவியல் தரவு சார்ந்த, பொருத்தமான, பிராந்தியமயமாக்கப்பட்ட ஆலோசனைகளை வழங்குகிறது. மேலும், இது விவசாயிகள் பூச்சிமருந்து விற்பனையாளர்கள் அல்லது நம்பகத்தன்மையற்ற தகவல் அளிக்கும் ஆதாரங்களைச் சார்ந்திருப்பதைக் குறைக்கின்றது.

**NPSS-இல் என்ன அடங்கியிருக்கிறது?** NPSS-ஆனது பயிரைத் தாக்கும் பூச்சிகளை அடையாளம் காணவும், நோய்களைக் குறைக்கவும் ஏதுவான எளிய கைபேசி ஆப் (செயலி) மற்றும் ஒரு வலைதளத்தை உள்ளடக்கியது. விவசாயிகள் பூச்சிகள்/ நோய்களின் படங்களை கைபேசி செயலியில் பதிவேற்றம் செய்தும், வயல்வெளியில் தோன்றும் சில மாற்றங்களை உள்ளீடு செய்தும் விவரங்களைப் பெறலாம். வலைதள போர்டல், கட்டுப்பாட்டகமாகவும், தரவுகளை சிறந்த முறையில் காட்சிப்படுத்தவும் பயன்படுத்தப்படுகிறது. NPSS அமைப்பில் 61 பயிர்களின் பூச்சி மற்றும் நோய்களை அடையாளம் காணவும், மற்றும் பருத்தி, நெல், கோதுமை, மக்காச்சோளம், துவரை, பச்சைப்பயறு, சோயா மொச்சை, கரும்பு, கத்திரிக்காய், தக்காளி, ஆப்பிள், வாழைப்பழம், திராட்சை மற்றும் மாதுளை உள்ளிட்ட 15 முக்கிய பயிர்களுக்கான பூச்சி / நோய் மேலாண்மை ஆலோசனைகளும் உள்ளன. NPSS தற்போது ஆங்கிலம், ஹிந்தி, மராத்தி மற்றும் பஞ்சாபி ஆகிய நான்கு மொழிகளில் தகவல் அளிக்கிறது.




**NPSS கைபேசி செயலி** கூகுள் பிளே ஸ்டோரில் கிடைக்கிறது, இலவசமாக பதிவிறக்கம் செய்யலாம். இந்த செயலியில் மூன்று தொகுதிகள் உள்ளன: (i) பூச்சி/நோய்களை அடையாளம் காணுதல், (ii) பூச்சி/நோய் கண்காணிப்பு மூலம் கிடைக்கப் பெற்ற தரவுகளை சேமித்து வைத்தல், மற்றும் (iii) பூச்சி/நோய் பற்றிய ஆலோசனைகள்.

பூச்சி அடையாளம் காணும் தொகுதியில், 61 பயிர்களின் பூச்சி மற்றும் நோய் அடையாளங்கள் பதிவேற்றப்பட்டுள்ளது. பயனர்கள் நேரடியாக தங்கள் கைபேசி கேமராவிலிருந்து புகைப்படங்களைப் பிடித்தும் அல்லது ஃபோன்


கேலரியிலிருந்தும் இந்த செயலியில் பதிவேற்றலாம். பதிவேற்றப்பட்ட படத்தை ஆராய்ந்து, இருக்கும் தரவுகளைப் பயன்படுத்தி பூச்சி/நோயை அடையாளம் கண்டு, மற்றும் அத்தகைய பூச்சியால் ஏற்படும் அறிகுறிகள் பற்றிய தகவல்களை விவசாயிகளுக்கு வழங்கும். மேலும், ஒருங்கிணைந்த பூச்சி-நோய் மேலாண்மைக்கான பரிந்துரைகளையும் இது உடனடியாக வழங்கும்.

பூச்சி கண்காணிப்பு தொகுதியில் இரண்டு துணை பட்டியல் உள்ளன. அவை: A) அளவு-ரீதியான கண்காணிப்பு (அறிவியல் அடிப்படையிலானது): பொருத்தமற்ற தரவுகளைத் தவிர்ப்பதற்காக இந்த கண்காணிப்பு முறை NPSS-போர்ட்டலில் பதிவுசெய்யப்பட்ட சாரணர்களால் மேற்கொள்ளப்படுகிறது. இது DPPQS, மாநில வேளாண்/ தோட்டக்கலைத் துறைகள், KVK-கள் போன்றவற்றின் மத்திய ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மையம் (CIPMC) நிபுணர்களுக்கானது. இதன் அளவீடு சீரற்ற மாதிரி முறையில் இருக்கும், ஒவ்வொரு பூச்சிக்கும் அளவுகோள்கள் மாறுபடும். சாரணர் அடையாள எண் மற்றும் கடவுச்சொல் இல்லாத பயனர்களால் இந்தத் தொகுதியை பார்க்க இயலாது. B) பொறி அடிப்படையிலான கண்காணிப்பு முறை (அறிவியல் அடிப்படையிலானது): இது இனக்கவர்ச்சி பொறிகளால் ஈர்க்கப்பட்டு வீழும் பூச்சிகளின் எண்ணிக்கையை அடிப்படியாகக் கொண்டது. அங்கீகரிக்கப்பட்ட சாரணர்கள் இனக்கவர்ச்சி பொறியில் சிக்கியுள்ள பூச்சிகளின் எண்ணிக்கையை (பொறி வாரியாக) இந்த செயலியில் உள்ளிடலாம் அல்லது பொறிக்குள் சிக்கியுள்ள பூச்சிகளைக் காட்டும் புகைப்படத்தைப் பதிவேற்றலாம். தற்போது இந்த கண்காணிப்பு முறை, பருத்தி இளஞ்சிவப்பு காய்ப் புழு மற்றும் அமெரிக்கன் காய்ப் புழுவைக் கண்காணிக்க மட்டும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சாரணர்கள் ஐ.டி. மற்றும் கடவுச்சொல் இல்லாத பயனர்களால் இந்தத் தொகுதியை அணுக முடியாது. பதிவேற்றப்பட்ட புகைப்படங்கள் NPSS-இன் வலைதளம் மூலம் நிபுணரால் சரிபார்க்கப்படுகின்றன. இ) தரம் அடிப்படையிலான கண்காணிப்பு அல்லது சுழற்சி முறை ஆய்வு அல்லது விவசாயிகள் மூலம் கணக்கெடுப்பு: இந்த இதில் விரிவான தகவல்களை உள்ளீடு செய்ய இயலாத விவசாயி அல்லது சாமானியருக்கானது. இந்தச் செயலியில் செல்ல உள்நுழைவு ID மற்றும் கடவுச்சொல் தேவையில்லை. விவசாயி தனது பெயர், கிராமம், மாநிலம், மொபைல் எண், பூச்சி/நோய்களைக் கண்ட தேதி, பயிரின் பெயர், பூச்சியின் வகை, பூச்சியின் பெயர் மற்றும் தொற்றின் அளவு (அதாவது, கடுமையான, மிதமான, குறைந்த) போன்ற விவரங்களை உள்ளிட வேண்டும். தகவலைச் சமர்ப்பித்த பிறகு அவருக்கு பூச்சி-நோய் தொற்றின் கடுமைக்கு ஏற்ப ஆலோசனைகள் வழங்கப்படும்.

அடுத்து, பூச்சி-நோய் ஆலோசனை தொகுதி. இதனை விவசாயிகள் மற்றும் சாரணர்கள் பார்க்கலாம். மேலும், இதில் கிராமம் அல்லது முழுப் பிராந்தியத்திற்கும் NPPS வலை போர்ட்டலில் இருந்து நிபுணர்கள் வழங்கிய ஆலோசனைகளையும் பார்க்கலாம். உங்கள் இருப்பிடத்தை உள்ளிடும்போது, பயிரின் பெயர், பூச்சியின் பெயர் போன்றவற்றை உள்ளீடு செய்யும்பொழுது பயனர் தன் மொபைல் போனில் பூச்சி-நோய் பற்றிய ஆலோசனை/எச்சரிக்கைத் தகவல்களைக் காணலாம்.

**NPSS வலைதளம்** (https://npss.dac.gov.in) ஒரு கட்டுப்பாட்டு திரையைக் கொண்டுள்ளது மற்றும் பல்வேறு வடிவங்களில் பூச்சி பற்றியத் தகவல்களை காண்பிக்கும். இந்த வலைதளம் நிபுணர்கள்/ நிர்வாகிகளுக்கு மட்டுமே உருவாக்கப்பட்டது. ஆகவே, இதில் உள்நுழைய ID மற்றும் கடவுச்சொல் உருவாக்கப்பட வேண்டும். இந்தப் போர்டல் சாரணர்களுக்கு அல்ல ஆனால், சாரணர்கள் கைபேசி செயலி மூலம் உள்ளீடு செய்யும் தரவை நிபுணர்களால் சரிபார்க்க முடியும். நிபுணர்களால் வழங்கப்படும் ஆலோசனையை NPSS கைபேசி செயலியின் ஆலோசனை தொகுதியில் காணலாம். மாவட்ட வாரியாக, மாநிலம் வாரியாக, தேசம் முழுதும்

பூச்சி-நோய்கள் நிலவரம் பற்றிய தகவல்கள் (பூச்சி அறிக்கைகள்) மற்றும் ஆலோசனைகள் வலைபோர்ட்டலில் சமர்ப்பிக்கப்பட்டு, கண்காணிக்கப்படுகின்றன.




**முன்னேற்றம்:** NPSS என்பது டிஜிட்டல் விவசாயத்தை நோக்கிய ஒரு முன்னெடுப்பாகும். இது, பூச்சி மேலாண்மையில் செயற்கை நுண்ணறிவு மற்றும் கண்காணிப்பை ஒருங்கிணைத்து, பயிர்களைத் தாக்கும் பூச்சிகளின் அண்மைத் தகவல் மற்றும் சேதம் குறித்த ஆரம்ப எச்சரிக்கையை வெளியிடுவதன் மூலம் பயிர் இழப்புகளைக் குறைக்க உதவுகிறது. NPSS அறிமுகப்படுத்தப் பட்டதிலிருந்து, 16,000-க்கும் மேற்பட்ட விவசாயிகள் இந்த செயலியை பதிவிறக்கம் செய்துள்ளனர். இது நிலையான விவசாயத்திற்கு டிஜிட்டல் தொழில்நுட்பங்களை விவசாயிகள் ஏற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுகின்றது.

**ஆதாரங்கள்:**

GoI, 2024. User Manual for NPSS Mobile App & Web, Department of Agriculture and Farmers Welfare Directorate of Plant Protection, Quarantine & Storage. Faridabad.
https://npss.dac.gov.in/

## (14) Pradhan Mantri Dhan Dhanya Krishi Yojana (PMDDKY)

**What is PMDDKY?** The Pradhan Mantri Dhan Dha(a)nya Krishi Yojana (PMDDKY) is a flagship programme of the Government of India announced in the Union Budget 2025 for transforming agriculture in **100 underperforming districts** in India, through the convergence of multiple ongoing schemes, *i.e.,* convergence of 36 schemes across 11 Ministries to bring coordinated support in the selected districts. This scheme was approved on 16 July 2025. It was modelled based on the NITI Aayog's Aspirational Districts Programme (ADP), but it focuses exclusively on the comprehensive development of agriculture and allied sectors.

**Implementing Agency**

PMDDKY operates under the Ministry of Agriculture and Farmers' Welfare, Government of India. Each selected district in the State will set up a District Dhan-Dhaanya Krishi Yojana (DDKY) Samiti, chaired by the District Collector, to implement the District Agriculture Development Plan (DADP).

**Duration and Coverage**

- Period : 6 years (from FY 2025–26 onwards)
- Coverage : 100 low-performing agricultural districts across India
- Outlay : ₹ 24,000 crore per year.
- Approach : PMDDKY has no separate budget allocation but uses funds of 36 schemes across 11 ministries

**District Selection**

At least one district from each State/UT will be included. Low crop production (e.g., rice below 2.7 t/ha), moderate cropping intensity (<1.5 crops per year), low credit access (limited penetration of bank loans or KCC, often below 30% of farmers in a district), geographical representation (based on net cropped area and operational holding), high post-harvest losses (>20% in case of tomato and mango). In Tamil Nadu, four districts, namely, Ramanathapuram, Sivagangai, Thoothukudi and Virudhunagar, were selected for implementing the scheme.

**Key Features**

- Focused on agriculture and allied sectors like horticulture, livestock, and fisheries.
- District-level plans will be prepared by the District Collectors with technical support from SAUs and Research institutions in the State. *Enhancing agriculture production through crop diversification, improving post-harvest infrastructure, storage facilities at panchayat and block level, strengthening irrigation facilities, delivering better water use efficient technologies, facilitating access to long term and short-term credits, adoption of sustainable and climate-resilient agricultural practices such as soil health/conservation, water conservation, organic farming, market linkages, and value chain development, will be the major action points/priority area*.
- Adoption of a "Saturation-based Convergence" approach, *i.e.,* intensive implementation of multiple schemes in the same district. *This approach aims to deliver services and benefits to all eligible people in a specific area by converging and coordinating multiple government schemes. By focusing on "saturating" a district or population with services, agencies ensure that eligible individuals are covered*

*comprehensively across different programmes related to agriculture, health, education, and other sectors.*

- Monitoring through digital dashboards and performance indicators.
- NITI Aayog to provide overall guidance and periodic review.
- Performance monitoring will use 117 key performance indicators with monthly dashboards.

**Beneficiaries**

- Small and marginal farmers of about 1.7 crores across 100 districts are the main target group, besides Farmer Producer Organizations (FPOs) and cooperatives, Agri-entrepreneurs and start-ups in farm and allied sectors.
- It indirectly benefits rural youth and local agri-based industries.

**Expected Outcomes**

- Increased crop yields and productivity.
- Enhanced farmers' income through diversification and value addition.
- Reduction in post-harvest losses with improved storage and processing.
- Better water management and efficient use of resources.
- Strengthened local agri-infrastructure and market access.
- Promotion of sustainable and climate-smart farming systems.

**How to Register (farmers) under PMDDKY to avail benefits**

1. Verify District Inclusion: Check the website of DA&FW.
2. Contact the District Dhan Dhaanya Samiti of the selected District.
3. Register Details: Provide your name, address, Aadhaar number, land size, crops grown (e.g., rice, pulses, vegetables), and allied activities (e.g., dairy or beekeeping). Registration may be online or offline.
4. Submit Documents: Share required papers such as your Aadhar Card, land ownership details, Address Proof, Passport size photograph, etc. to prove eligibility and farming status.
5. Select Desired Benefits: Choose specific support, such as seeds, irrigation systems, loans, storage access, or training, based on your needs.
6. Verification Process: The Samiti will verify details through document checks, field visits, or digital records to ensure eligibility and prevent fraud.
7. Receive Benefits: Approved farmers will receive subsidies, loans, or access to storage and training within 2-4 weeks of verification.

**Source:**
https://pmddky.com/

## (14) பிரதம மந்திரி வேளாண்மை தானியங்கள் செழிப்புத் திட்டம் (PMDDKY)

**PMDDKY என்றால் என்ன?** பிரதான் மந்திரி தன் தான்ய கிருஷி யோஜனா என்பது 2025-ஆம் ஆண்டு மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட ஒரு பிரதானத் திட்டமாகும். இது இந்தியாவில் 100 பின்தங்கிய மாவட்டங்களில் விவசாயத்தை மேம்படுத்துவதற்காக, நடைமுறையில் உள்ள பல திட்டங்களை ஒன்றிணைத்து, அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சியை மேற்கொள்வதற்காக 11 மத்திய அமைச்சகங்களின் கீழ் செயல்படும் 36 திட்டங்களை ஒருங்கிணைத்து, 16 ஜூலை, 2025 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இது நிதிஆயோக்கின் இலட்சிய மாவட்டங்கள் திட்டத்தின் (ADP) அடிப்படையில் வடிவமைக்கப்பட்டது, ஆனால் இது விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் மட்டுமே விரிவான வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### செயல்படுத்தும் அமைச்சகம்

PMDDKY இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. PMDDKY திட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு மாவட்டத்திலும் விவசாய மேம்பாட்டுத் திட்டத்தை (DADP) செயல்படுத்த மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட தன் தான்ய கிருஷி யோஜனா சமிதி (கூட்டமைப்பு) அமைக்கப்படும்.

### திட்டக் காலம் மற்றும் செயல்படுத்தப்படும் பகுதிகள்

- காலம்: 6 ஆண்டுகள் (நிதியாண்டு 2025–26 முதல்)
- செயல்படுத்தப்படும் பகுதிகள்: இந்தியா முழுவதும், குறைந்த வேளாண்மை உற்பத்தித்திறன் கொண்ட 100 மாவட்டங்கள்.
- நிதி ஒதுக்கீடு: ஆண்டுக்கு ரூ. 24,000 கோடி.
- அணுகுமுறை: PMDDKY-க்கு தனி பட்ஜெட் ஒதுக்கீடு இல்லை, ஆனால் இது 11 அமைச்சகங்களின் கீழுள்ள 36 திட்டங்களின் நிதியைப் பயன்படுத்தும்.

### மாவட்டத் தேர்வு

ஒவ்வொரு மாநிலம்/யூ.பிரதேசத்திலிருந்தும் குறைந்தது ஒரு மாவட்டம் இத்திட்டத்தில் சேர்க்கப்படுகிறது. குறைந்த பயிர் உற்பத்தித்திறன் (எ.கா. நெல்லில் ஹெக்டருக்கு 2.7 டன்னுக்கு குறைவான மகசூல் உள்ள மாவட்டங்கள்), மிதமான பயிர் தீவிரத்தன்மை (<1.5 பயிர்கள்/ஆண்டு), குறைந்த கடன்பெறும் வாய்ப்புள்ள மாவட்டங்கள் (வங்கி அல்லது KCC கடன்கள் குறைவான அளவே பெற்றவை, பெரும்பாலும் ஒரு மாவட்டத்தில் உள்ள விவசாயிகளில் 30% க்கும் குறைவாக), புவியியல் பிரதிநிதித்துவம் (நிகரப் பயிர் பரப்பளவு மற்றும் உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை அடிப்படையில்), அறுவடைக்குப் பிந்தைய இழப்புகள் அதிகமுள்ள மாவட்டங்கள் (தக்காளி மற்றும் மாம்பழத்தைப் பொறுத்தவரை 20%) மற்றும் பிற அளவுகோல்களின் அடிப்படையில் மாவட்டங்கள் தேர்வு செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, இராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய நான்கு மாவட்டங்கள் இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

**முக்கிய அம்சங்கள்**

- வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளான தோட்டக்கலை, கால்நடை மற்றும் மீன்வளம் ஆகியவற்றில் இத்திட்டம் கவனம் செலுத்துகிறது.
- மாவட்ட அளவிலான திட்டங்கள் மாவட்ட ஆட்சியர்களால், மாநிலத்தில் உள்ள வேளாண்மை பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் தொழில்நுட்ப ஆதரவுடன் தயாரிக்கப்படும். பல்வகைப் பயிர்கள் / மாற்றுப் பயிர்கள் பயிரிடுவதன் மூலம் வேளாண் உற்பத்தியை மேம்படுத்துதல், அறுவடைக்குப் பிந்தைய உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், பஞ்சாயத்து மற்றும் தொகுதி அளவில் சேமிப்பு வசதிகள் அமைத்தல், நீர்ப்பாசன வசதிகளை வலுப்படுத்துதல், சிறந்த நீர்ப் பயன்பாட்டு திறமைகொண்ட தொழில்நுட்பங்களை வழங்குதல், நீண்டகால மற்றும் குறுகியகாலக் கடன்கள் பெறுவதை எளிதாக்குதல், மண் வளம்/பாதுகாப்பு, நீர்நிலைகள் பாதுகாப்பு, இயற்கை வேளாண்மை, சந்தை இணைப்புகள் மற்றும் மதிப்புச் சங்கிலி உயர்த்துதல் போன்ற நிலையான மற்றும் காலநிலைக்கு ஏற்ற விவசாய நடைமுறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.
- இத்திட்டத்தில் "செறிவூட்டல் அடிப்படையிலான ஒருங்கிணைப்பு" அணுகுமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது, அதாவது ஒரே மாவட்டத்தில் பல திட்டங்களை தீவிரமாக செயல்படுத்துதல். இந்த அணுகுமுறை பல அரசுத் திட்டங்களை ஒருங்கிணைத்து ஒரு மாவட்டத்தில் செயல்படுத்துவதன் மூலம் அங்குள்ள அனைத்து தகுதியான மக்களுக்கும் அனைத்து சேவைகள் மற்றும் நன்மைகள் எளிதில் சேர்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒரு மாவட்டம் அல்லது மக்கள் தொகையை சேவைகளால் "நிறைவுறச் செய்வதில்" கவனம் செலுத்துவதன் மூலம், விவசாயம், சுகாதாரம், கல்வி மற்றும் பிற துறைகள் தொடர்பான பல்வேறு திட்டங்களில் தகுதியுள்ள நபர்கள் முழுமையாக உள்ளடக்கப்பட்டிருப்பதை இதன் செயல்கள் உறுதி செய்கின்றன.
- டிஜிட்டல் கட்டுப்பாட்டுத் திரை மற்றும் செயல்திறன்-குறிகாட்டிகள் மூலம் கண்காணிப்பு.
- ஒட்டுமொத்த வழிகாட்டுதல் மற்றும் இடையிடையேயான மதிப்பாய்வை நிதி ஆயோக் அளிக்கும்.
- கண்காணிப்பிற்காக மாதாந்திர முகப்புப்பலகையுடன் 117 முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் பயன்படுத்தப்படும்.

**பயனாளிகள்**

- தேர்ந்தெடுக்கப்பட்ட 100 மாவட்டங்களில் உள்ள சுமார் 1.7 கோடி சிறு மற்றும் குறு விவசாயிகள் இத்திட்டத்தின் முக்கிய பயனாளிகளாக இருப்பார்கள். இது தவிர, விவசாய உற்பத்தியாளர் அமைப்புகள், கூட்டுறவு சங்கங்கள், வேளாண் தொழில்முனைவோர் மற்றும் பண்ணை, பண்ணை சார்ந்த துறைகளில் உள்ள புத்தாக்க நிறுவனங்கள்.
- இத்திட்டம் கிராமப்புற இளைஞர்கள் மற்றும் உள்ளூர் விவசாயம் சார்ந்த தொழில்களுக்கு மறைமுகமாக பயனளிக்கிறது.

**இத்திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் பலன்கள்**

- பயிர் மகசூல் மற்றும் உற்பத்தித்திறன் அதிகரிப்பு.
- மாற்றுப் பயிர் சாகுபடி / பயிர் பல்வகைப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டல் மூலம் விவசாயிகளின் வருமானம் உயர்தல்.

- வலுப்படுத்தப்பட்ட சேமிப்பு மற்றும் பதப்படுத்துதல் மூலமாக அறுவடைக்குப் பிந்தைய இழப்புகள் குறையும்.
- சிறந்த நீர் மேலாண்மை மற்றும் வளங்களைத் திறம்பட பயன்படுத்துதல்.
- உள்ளூர் வேளாண் உட்கட்டமைப்பு மற்றும் சந்தை வாய்ப்புகள் வலுப்படுத்துதல்.
- நிலையான மற்றும் மாறிவரும் காலநிலையை எதிர்கொள்ளும் விவசாய முறைகளை ஊக்குவித்தல்.

**விவசாயிகள் எவ்வாறு பதிவு செய்வது?**

1) உங்கள் மாவட்டம் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதை சரிபார்க்க, DA&FW இணையதளத்தைப் பார்க்கவும்.
2) உங்கள் மாவட்டம் தேர்வு செய்யப்பட்டால், மாவட்ட தன் தான்ய சமிதியைத் தொடர்பு கொள்ளவும்.
3) பதிவு விவரங்கள்: உங்கள் பெயர், முகவரி, ஆதார் எண், நில அளவு, பயிரிடப்பட்ட பயிர்கள் (எ.கா., அரிசி, பருப்பு வகைகள், காய்கறிகள்) மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் (எ.கா., பால் அல்லது தேனீ வளர்ப்பு) ஆகியவற்றை வழங்கவும். பதிவு ஆன்லைனில் அல்லது ஆஃப்லைனில் இருக்கலாம்.
4) ஆவணங்களைச் சமர்ப்பிக்கவும்: தகுதி மற்றும் நீங்கள் செய்யும் விவசாயத்தை நிரூபிக்க உங்கள் ஆதார் அட்டை, நில உரிமை விவரங்கள், முகவரிச் சான்று, பாஸ்போர்ட் அளவு புகைப்படம் போன்ற தேவையான ஆவணங்களைப் பகிரவும்.
5) விரும்பிய நன்மைகளைத் தேர்ந்தெடுக்கவும்: உங்கள் தேவைகளின் அடிப்படையில் விதைகள், நீர்ப்பாசன முறைகள், கடன், சேமிப்பு வாய்ப்புகள் அல்லது பயிற்சி போன்ற உதவிகளைத் தேர்வுசெய்யவும்.
6) விண்ணப்பங்களை சரிபார்த்தல்: பயனாளிகள் தகுதியை உறுதிசெய்து மோசடியைத் தடுக்க, ஆவணச் சரிபார்ப்புகள், கள-வருகைகள் அல்லது டிஜிட்டல் பதிவுகள் மூலம் மாவட்ட தன் தானிய சமிதி உங்கள் விவரங்களைச் சரிபார்க்கும்.
7) நன்மைகளைப் பெறுங்கள்: விண்ணப்பங்கள் சரிபார்த்த 2-4 வாரங்களுக்குள் அங்கீகரிக்கப்பட்ட விவசாயிகள் மானியங்கள், கடன்கள் அல்லது சேமிப்பு மற்றும் பயிற்சிக்கான வாய்ப்புகளை/சேவைகளைப் பெறுவார்கள்.

**ஆதாரம்:**
https://pmddky.com/

## (15) Pradhan Mantri Fasal Bima Yojana (PM-FBY)

**What is PM-FBY?** Launched in 2016 by the Government of India, the Pradhan Mantri Fasal Bima Yojana (PM-FBY) aims to provide financial assistance to farmers suffering from crop damage and or crop losses due to **natural disasters** (cyclone, hail, drought, famine), **pests, and diseases**. The PM FBY provides crop insurance at a cost-effective premium to all Indian farmers. By providing financial protection against crop damages /losses, the Government aims to stabilise the income of farmers, thereby ensuring they can continue their farming, encourage farmers to adopt modern and innovative agricultural practices despite anticipated natural calamities and crop losses risks, and ensure crop diversification and enhance the growth and competitiveness of the agriculture sector. This Scheme is implemented in 23 States/ UT by the Department of Agriculture and Farmers' Welfare through a network of insurance companies (empanelled insurance companies) and banks. The PM-FMY (including RWBCIS) is the 1st largest crop insurance scheme in the world in terms of farmer enrolments and the 3rd largest scheme in the World in terms of insurance premiums.

**How much premium?** The maximum premium payable by the farmer will be:

a) For *Kharif* food crops and oilseed crops : 2% of the sum insured
b) For *Rabi* food and oilseed crops : 1.5%
c) For annual commercial or horticultural crops : 5%
d) For perennial commercial or horticultural crops : 5%

The premium rates to be paid by farmers are very low in our country and are uniform across the country. The balance of actuarial premium is being borne by the Government, to be shared equally (50:50) by the State & Central Government, except in North Eastern and Himalayan States. For the farmers residing in North-Eastern States, Jammu, Kashmir, and Himachal Pradesh, the Central Government pays the entire premium.

**Risk Coverage**: PMFBY is **comprehensive**. The scheme covers crop damage/losses due to the following causes.

**A) Base cover**

1) **Yield Losses in standing crops** (sowing to harvest) against non-preventable natural disasters such as drought, flood, cyclone, landslide, lightning, natural fire, pests, diseases, etc.

2) **Risks which prevented sowing**: For example, in insurance notified village, many farmers ploughed their fields, purchased seeds, and enrolled in the insurance scheme, but were unable to sow the seeds/ transplant seedlings due to unprecedented unfavourable weather. These farmers will then become eligible for the **indemnity claims** of up to a maximum of 25% of the sum insured.

3) **Post-harvest Losses**: The scheme covers post-harvest losses of individual farmer(s), up to 14 days from the harvest of the crops and if the harvested materials are stored in 'cut and spread or sun-baked' condition.

**B) Add-on cover**

1) **Localised calamities**: Compensation will be provided against localised calamities on an individual farm basis. Local risk means it may be specific to a particular farm, village

or area, such as water inundation, landslides, wild animal damage, fire, etc., in a particular field/farm, which may or may not be present in a nearby area.

**2) Mid-season adversity**: Loss in case of adverse seasonal conditions during the crop seasons, such as floods, prolonged dry spells, severe drought, etc., wherein the expected yield during the season is likely to be less than 50% of the normal yield. This add-on coverage facility is applicable 30 days after sowing (and within 15 days of cut of date for enrolment) and up to 15 days before the onset of harvest time are covered under this clause. There is a provision for immediate relief to insured farmers in case of the occurrence of such risk (called 'on account payment of claims').

**3. Crop loss due to attack by wild animals**: The States may consider providing add-on coverage for crop loss due to the attack by wild animals wherever the risk is perceived to be substantial and is identifiable. The add-on coverage will be optional for the farmers, and the applicable notional premium will be borne by the farmer.

**Eligibility:**

- All farmers, including tenant farmers and sharecroppers **growing notified crops in notified areas.**
- Farmers must possess a land deed – Patta /Chitta or a valid land tenure agreement.
- The farmer must apply for insurance coverage within the prescribed time frame, usually within 2 weeks of the start of the sowing season.
- Farmers must not have received compensation for the same crop loss from any other medium or source.
- Both loanee and non-loanee farmers are eligible.
- This insurance scheme is optional for all farmers who have taken crop loans under the KCC scheme from the banks (provided they approach the bank and give it writing 7 days before the cut-off date for enrolment of farmers for the crop insurance in the respective season) and voluntary for the non-loanee farmers.

**Ineligible cases or Exclusions**

**1) Non-notified crops and in non-notified areas**: PMFBY applies to notified crops in notified areas. Crop losses in non-notified crops or non-notified areas are generally not covered.

**2) Losses outside the crop cycle:** If the losses are not directly related to the growing season of the insured crop, they may not be eligible for compensation.

**3) Negligence and non-compliance**: Losses resulting from farmer negligence, non-compliance with recommended agricultural practices, or failure to protect the crop adequately may be excluded.

**4) Losses beyond specified limits**: Some losses beyond predefined limits or thresholds may not be covered.

**5) Non-payment of premium:** Farmers who did not pay the premium contributions as required are not eligible for coverage.

**Crops covered**

The Government of India notified the following crops for insurance.

1. Food crops (Cereals, Millets and Pulses).
2. Oilseeds.

3. Annual Commercial / Annual Horticultural crops.

However, depending on the importance or priority or location or season, the concerned State Government will notify the eligible crop(s) for a location and for a particular season. Therefore, farmers are advised to see the list of crops, region and season notified by the State Government for crop insurance.

**Risk-sharing mechanism**

- The Scheme operates on a complete 'risk transfer' approach wherein the entire claim liability shall be borne by the insurance company for the discovered premium.
- However, if the State /UT wish to partake in some of the elements of the risk, they may opt for any one of the three models given in the guidelines, namely, the Profit and Loss Sharing model, cup and cap model (60:130) and cup and cap model (80:110).
- In the Profit and Loss Sharing model, the insurance company will bear up to loss ratios of 100%, and for >100% losses, the insurance company & Government (GoI and State Government) may share the risk.
- In the cup and cap model, the insurance company will bear loss ratios of up to 110 or 130%, as the case may be, and the Government (GoI and State Government equally) will share risk or loss ratios> 130%.

**Assessment of losses /shortfall in yield**

1. *Area-approach (default):* The scheme normally works on a defined Insurance Unit (IU) such as a village / Panchayat/block / Taluk. All insured farmers in that IU are assumed to face similar risk exposures. PMFBY is a technology-driven scheme. The insurance company uses the data from crop cutting experiments (CCE). The best average yield of the past 5 out of the past 7 years is taken as the benchmark yield or threshold yield in that particular village or Insurance unit (IU) area. This benchmark yield will be notified before the start of insurance enrolment. Yield shortfall is assessed for the IU *via* the CCEs and other methods, and then claims are paid to all insured farmers in that IU proportionally.

The State Government/ UT will conduct CCE using the CCE Agri App developed by the Government of India, or may adopt smart sampling methodology, such as remote sensing or new age technologies for crop yield estimation in the insurance-notified area in the current season. The minimum number of CCE at village (Panchayat), taluk (Block) and District levels would be 4, 16 and 24, respectively. If the State/UTs do not conduct their CCE through the CCE-Agri app, then the Yield Estimation System Based on technology (YES-TECH) may be adopted. The YES-TECH is being rolled out widely since the Kharif 2023 season. In case of multi-picking crops like Cotton, Chilli, Tobacco, Tomato, Pea, Fruits (Mango & Apples), etc., the yield in each picking will be estimated as per the guidelines issued by the DA&FW (2023).

*2. Indemnity level (IL):* Indemnity level is the percentage cover of normal yield (guaranteed yield or threshold yield) that the insurance company will compensate farmers for if there is crop loss. The IL is notified for each district and crop. Historically, the IL have been either at 70% (low risk), or 80% (medium risk) or 90% (high risk) (usually notified by the State Government while inviting tender). The IL reflects the risk associated with a crop in a specific area. A higher indemnity level means a larger percentage of the guaranteed yield is insured and compensated, but it may also come with a higher premium. For example, if farmers have chosen 80% indemnity level and their threshold yield is 100 quintal/acre, they would be paid for 20 units (quintal) if their actual

yield is 60 quintal/acre due to covered losses. The State Government will notify the Threshold Yield (TY) in the Tender for the current season, and the same will be used for claim calculation for that season (Pl see the calculation on TY and the relationship between IL and TY below)

*3. Individual basis:* For localised perils (hail, landslide, inundation, fire, etc.) or if the State/tender allows, individual plot-level assessment may be done. From Kharif 2023 onward, blended model- YES-TECH + CCE methods are promoted to speed/strengthen yield estimation.

**Yield losses due to Wide-Spread Calamities (based on season-end yield)**

- All claims will be settled exclusively based on CCE-based yield data available on the national crop insurance portal (NCIP) or a combination of the CCE-based yields and YES-TECH derived yields, as the case may be.
- If the average crop yield in a particular village is above the benchmark yield, then no compensation will be given to the insurer.
- If the yield in the crop cutting experiment is below the benchmark yield, then the percentage of yield losses in that particular village is worked out, and accordingly, compensation is determined.
- In case the total premium to total claims ratio exceeds 1:3.5, or the percentage of claims to Sum Insured exceeds 35%, whichever is higher, at the National Level in a specific crop season, then the Government will protect Insurance Companies.
- Yield Loss due to widespread calamities under Basic Cover: 'Claim' shall be calculated at the IU level as per the following formula:

$$\text{Claim payable to a farmer} = \frac{(\text{Threshold Yield - Actual Yield})}{\text{Threshold Yield}} \times \text{Sum Insured}$$

- Once TY is estimated, then workout threshold yield at 90%, 80% and 70% of indemnity levels.

Where:

1. Average Yield for a crop in a notified IU = average of the best 5 years out of the last 7 years' yields (state-provided CCE data).
2. Threshold Yield (TY) = average yield multiplied by applicable Indemnity Level for that crop as notified by the concerned State for the season.
3. Sum insured by a farmer = Scale of finance per acre × Area insured (or the notified SI).

**Illustration:**

The average yield of paddy in Thanjavur district for the past 7 years is given below.

| Year | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|---|---|
| Yield Kg/ha | 2300 | 2000 | 2400 | 2600 | 2200 | 2000 | 2400 |

The years 2019 and 2023 had the lowest yield, and it may be omitted. The a**verage** of the best five years, excluding the two lowest yield years, will be: 11900/5= **2380 Kg/ha**.

Hence, the threshold yield at 80% of indemnity levels will be **1904 Kg/ha**.

This means: If the actual yield ≥ 1901 Kg/ha, no claim is payable; If the actual yield < 1904 Kg/ha, the shortfall will be compensated using the PM-FBY claim formula.

If for the **crop season 2025,** the sum insured by a farmer is ₹ 30,000 per hectare, the actual yield is 1504 Kg/ha, and the threshold yield calculated above is 1904 Kg/ha, then the claim payable to the farmer would be:

$$\text{Claim Payable} = \frac{(1904-1504)}{1904} \times 30{,}000 = ₹\ 6303/-$$

Thus, the farmer will receive ₹ 6303/ha as compensation under PM-FBY for the loss in yield.

**Prevented/Failed Sowing and Prevented Planting/Germination Claims**

- Notified IUs will be eligible for "Prevented Sowing/ Planting" pay-out **only if more than 75% of the crop-wise**, normal sown area for the notified crop in the IU experienced this problem.
- The risk cover at early stage of sowing which is up to 30 days from the start of sowing but no later than 15 days from cut-off date for enrolment (as notified by the State/UT Government), leading to the total loss of crop or in a condition where farmers are not in a position to either sow or transplant the same crop again.
- The District Level Monitoring Committee (DLMC) will recommend invoking the provision of prevented sowing to the State Nodal Department. State/UT Government Notification will only be issued by the concerned State Nodal Department after consideration and validation using the available proxy data, such as rainfall, satellite images, IMD report, etc.
- The claim amount payable to farmers would be **25% of the gross total sum insured,** and the insurance coverage shall terminate.
- In the case of prevented sowing, farmers can choose alternatives such as sowing short-duration, resistant crops and get crop insurance for them. Enrolment for these alternative crops is allowed up to 15 days after the normal cut-off date, but only if the State/UT Government issues a notification within 15 days after the cut-off date, the premium has already been debited, and the alternative crops are already notified by the State/UT Government.

**Losses due to Mid-Season Adversity**

**a) On-account (advance) Payment**

- When early assessment shows expected loss would be >50% of normal yield, an on-account (advance) payment is permitted to aid farmers immediately.
- Claims are applicable if yield losses due to adverse seasonal conditions occurred due to floods, prolonged dry spells, severe drought, etc., during the crop season, *i.e.,* between the period from 30 days after sowing and up to 15 days before the onset of harvest time.
- If adversity occurs within a period of 30 days from the start of the onset of sowing and within 15 days before the onset of harvesting, then this provision (on-account payment) will not be invoked.
- Loss assessment report at the affected IU level has to be completed by the Joint Committee within 15 days from the occurrence of the adverse seasonal event, and the

loss report should compulsorily be uploaded on NCIP to arrive at the Claim amount of eligible insured farmers from the Portal.

- On-account payment would be calculated as per the following formula:

$$\text{On-account} = \frac{(\text{Threshold Yield} - \text{Estimated Yield})}{\text{Threshold Yield}} \times \text{Sum Insured} \times 25\%$$

- If the affected area is more than 25% of the insured area of the notified crop in the notified insurance unit, then the losses are not considered as individual and are presumed to be widespread. Therefore, the claims of all eligible insured farmers would be paid as per the modalities adopted for "On-Account payment of claims due to mid-season adversity".
- The advance amount payable would be 25% of the likely final claim.

**b) Final Claim**

The final claim will be settled based on yield assessment data received through CCEs and after deducting the on-account payment.

**Localized Calamity**

- This is an add-on cover, hence it will be available if this cover is notified by the State/UT Government.
- Insurance cover is available for localised perils/ calamities *viz.* hailstorm, landslide, inundation, cloud burst and natural fire due to lightning affecting part of a notified unit or a specific land parcel.
- Immediate intimation (within 72 hours) by the insured farmer to the insurance agent or the concerned State Government official /bank is mandatory to process the claim. Intimation must contain details of the insured farmer's name, affected survey number-wise insured crop and acreage affected, farmer's application number as in the NCIP portal, mobile number, bank account number, etc.
- Confirmation of the damage is done by the joint survey of the State Government representative and the Insurance Company in the presence of the concerned farmer. Mobile Apps may be used for quick communication.
- The loss assessment will be completed within the next 10 days, and Claim settlement will be completed in next 15 days.
- The claim amount at the individual farm level shall be calculated as per the following formula:

$$\textbf{\textit{Sum Insured}} \times \frac{\textbf{\textit{Affected Area out of}}}{\textbf{\textit{total Insured Area}}}(\%) \times \frac{\textbf{\textit{Estimated Crop Damage}}}{\textbf{\textit{in Affected Area}}}(\%)$$

*Note: Crop damage should have occurred on account of inundation; mere waterlogging without corresponding crop loss will not be eligible. Inundation peril is not applicable in the case of hydrophilic crops like Paddy, Sugarcane, Jute and Mesta.*

**Post-harvest losses**

- Loss on individual plot basis due to hailstorm, cyclone, cyclonic rains and unseasonal rains (> 20 of the long period average) resulting in damage to harvested crop lying in

the field in 'cut and spread' or small bundled condition, kept solely to dry up to a maximum period of two weeks (14 days) from harvesting are treated under this category.

- The claim amount at the individual farm level shall be calculated as per the following formula:

$$\textbf{Sum Insured} \times \frac{\textbf{Area affected out of}}{\textbf{total Insured Area}}(\%) \times \frac{\textbf{Estimated Crop Damage}}{\textbf{in Affected Area}}(\%)$$

- Documentary evidence: A duly filled intimation through the Crop Insurance App or Krishi Rakshak Portal & Helpline (14447) or any other conventional channels, along with all relevant documents, is necessary for initiation of loss assessment and payment of claims.
- The loss assessors would be appointed by the Insurance Company for assessment of Post-harvest losses.
- The loss assessment will be completed within the next 10 days, and the claim settlement will be completed in next 15 days
- The payout/compensation will be proportional to the actual loss that occurred on the insured plot up to the time of the insured event.

**Timelines & claim settlement process**

1. *Type of claims*: Claims may be grouped into two broad categories: (1) Yield-based claims arising out of widespread calamity as well as post-harvest losses, and (2) Add-on covers such as mid-season adversity (MSA) and localised calamities.
2. *Intimation:* For localised damage, farmers (or bank/agency) must intimate the insurer / local agriculture office typically within 72 hours of loss. For widespread calamities, the State notifies affected IUs.
3. *Loss assessment / Joint inspection:* A Joint Committee (Insurance Company + State officials) or appointed surveyors conduct the assessment. Appointment of assessors and joint inspection timelines are specified, *e.g.*, appointment within 48 hours, assessment report within 15 days for many cases.
4. *On-account (advance) payment:* If expected loss >50%, insurance companies make on-account payments (25% of the estimated claim formula above), subject to State notification and loss report.
5. *Timeline:* The State Government/UT, after completing CCE, will upload the actual yield of the season and threshold yield in the NCIP portal, which will be verified and accepted by the insurance company within the time limit.
6. *Sum insured*: The sum insured for each crop in each district will be calculated by the concerned State Government based on notional average yield, multiplied by the minimum selling price (MSP) or Farm gate price of the crop, if the MSP is not available.
7. *Principle*: The scheme operates on a 'complete risk transfer approach' basis, *i.e.,* the insurance company will bear the entire claim liability for the premium paid.
8. *Claim amount*: The insurance coverage will be equivalent to the sum insured per hectare, as per the Central or State Government's notification or on the Government's

National Crop Insurance Portal (NCIP), multiplied by the insured area for notified crops in the particular season.

9. *Final settlement:* After end-of-season yield data (CCEs/modelled yields) are submitted, final computation is done with the formula above. Claim disbursement to farmers is to be completed within a short window after receipt of the subsidy/premium.

   *Timeline:* The claims have to be processed within two months of the harvest to ensure that farmers get the compensation quickly, preventing them from falling into debt traps. Compensation is paid through the direct benefit transfer (DBT) mode.

**How to apply?**

*1. Documents Required:* Passport–sized Photograph, Passbook, Identity Proof (Aadhaar Card/PAN Card/Voter ID/Bank Passbook with Photo, Kisan Photo Book/NREGA Job Card), Address Proof (Aadhaar Card/PAN Card/Voter ID/Electricity Bill/Bank Passbook with Photo), Evidence of Land records (Patta /Chitta) or Land Possession Certificate or other applicable agreements such as contracts or sharecropping agreements and declaration about the crop sown/intended to be sown.

*2. Loanee farmers:* Farmers who have obtained a crop loan / KCC loan in the insurance notified area and during the notified season may approach the concerned bank and may request the bank to enrol his/him name under insurance cover. The bank normally enrols loanee farmers and collects premiums (or remits to the insurance company on behalf of him/her).

*3) Non-loanee farmers*: All non-loanee farmers and loanee farmers who have opted out of the insurance scheme in the concerned bank and are desirous of availing crop insurance may approach the nearest commercial bank branch, RRB or PACS, DCCB or insurance agencies duly authorised/empanelled by the GoI or State Government or use the Crop Insurance app or AIDE App and submit his application.

*4) Online mode:* Visit the website of Pradhan Mantri Fasal Bima Yojana– http://pmfby.gov.in. Click the "Farmer Corner" tab. In the pop-up window, click the 'Guest Farmer' tab. This will take you to the Online Registration Form. Fill in the details, including Farmer ID Type and ID No. This will register the farmer and create a user ID. In the next step, go to "Farmer Corner (Apply for Crop Insurance Yourself)". In the pop-up window, click Login for Farmer. You will be taken to the Login Page of the https://pmfby.gov.in/farmerLogin. On the Login Page, after providing your details, it will take you to the Farmer Application Form. Fill in all the mandatory fields of the Application Form and upload all the mandatory documents in the specified format and size. You may make a payment at this stage, or you may be paid later on if you click the button "Pay Later". Your application will be deemed to be completed after making payment. Once payment is made, you will get a receipt for the payment. You can track the application status on the PMFBY website through the 'Application Status' option on the home page.

*5. Grievance redressal Krishi Rakshak Portal & Helpline (KRPH)*: A dedicated Centralised Toll-free Number (14447 or WhatsApp No. 7065514447), under the aegis of Krishi Rakshak Portal & Helpline (KRPH), has been set up for query resolution and grievance redressal of farmers. Any query or complaint of the farmer will be registered on the NCIP against a unique ticket number. The farmers' grievances would be registered and transmitted to the concerned Insurance Company, banks, CSC e-Gov, State, and Districts for resolution within a definite turn-around-time

**Implementation of PM-BFY in Tamil Nadu**

- Since its introduction, the PM-FBY scheme has been implemented in Tamil Nadu. In recent years, it has been implemented by integrating it with the 'Kalaignar Uzhavar Kaappu Thittam', a State-sponsored farmer protection scheme.
- The scheme is active during both major cropping seasons in the State – Kuruvai and Samba/Thaladi.
- For more information, contact the District administrations and the State/District agricultural website (TNAGRISNET / district portals).

**Restructured Weather-Based Crop Insurance Schemes (RWBCIS)**

The insurance schemes currently under implementation are: PM-FBY and the Restructured Weather-Based Crop Insurance Scheme (RWBCIS). To provide coverage for those crops for which there is no standard/approved methodology for assessment of yield and to overcome the shortcomings under the erstwhile NAIS, a pilot Weather-Based Crop Insurance Scheme (WBCIS) was launched in 20 States in 2008-09 as a pilot scheme and as a full-fledged scheme from 2015-16. WBCIS intends to provide insurance protection to the farmers against adverse weather incidents, such as deficit and excess rainfall, high or low temperature, and production. It has the advantage of settling claims within the shortest possible time. The scheme was further restructured on the lines of PMFBY and has been available in the country since Kharif 2016 as the Restructured Weather-Based Crop Insurance Schemes (RWBCIS). The Schemes are being implemented in 23 States/ UT through 20 General Insurance Companies, including all the 5 Government Sector Companies. The premium rate is the same as that of PM-FBY.

The basic difference between the PMFBY and RWBCIS is in their methodology for the calculation of admissible claims to the farmers. The RWBCIS utilises advanced technologies like satellite imaging, drones, mobile App, and data for precise estimation of crop losses, ensuring accurate claim settlements. Weather data, such as deficit or excess rainfall, temperature fluctuations, and humidity, are taken as an indicator (proxy) of crop yields. It gives information on whether a large deviation in weather has occurred and caused yield losses or not, on a larger-area, say at the block /district level, helping to settle claims faster than traditional yield-based insurance.

**Sources:**


- DAFW. 2023. Pradhan Mantri Fasal Bima Yojana (PM-FBY). Operational Guidelines (PMFBY)-2023. Department of Agriculture & Farmers Welfare, Government of India.
- http://pmfby.gov.in
- DAFW 2023. YES-TECH manual (2023). Pradhan Mantri Fasal Bima Yojana (PM-FBY). Department of Agriculture & Farmers Welfare, Government of India.
- PIB. 2025. Pradhan Mantri Fasal Bima Yojana turns nine. Press Information Bureau. Posted on 17 Feb 2025. Release ID: 2104175

## (15) பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டம் (PMFBY)

**PMFBY என்றால் என்ன?** 2016 ஆம் ஆண்டு இந்திய அரசால் தொடங்கப்பட்ட, பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா திட்டம், இயற்கை பேரழிவுகள் (சூறாவளி, ஆலங்கட்டி மழை, வறட்சி, பஞ்சம்), பூச்சிகள் மற்றும் நோய்கள் போன்ற காரணங்களால் பயிர்களில் ஏற்படும் சேதம் மற்றும் பயிர் இழப்புகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிதியுதவி வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. PM-FBY அனைத்து இந்திய விவசாயிகளுக்கும் குறைந்த பிரீமியத்தில் பயிர்க் காப்பீட்டை வழங்குகிறது. எதிர்பாராதவிதமாக ஏற்படும் பயிர் சேதங்கள்/ இழப்புகளுக்குப் போதிய நிதியுதவி வழங்கி இழப்பை ஓரளவு ஈடுகட்டுவதன் மூலம், இத்திட்டம் விவசாயிகளின் வருமானத்தை உறுதிப்படுத்துவதையும், இயற்கை பேரழிவுகள் மற்றும் பயிர் இழப்பு அபாயங்கள் இருந்தபோதிலும் நவீன மற்றும் புதுமையான விவசாய நடைமுறைகளை விவசாயிகள் பின்பற்ற ஊக்குவிப்பதையும், பல்பயிர் அல்லது மாற்றுப்பயிர் நடவை உறுதி செய்வதையும், வேளாண் துறையின் வளர்ச்சி மற்றும் போட்டித்தன்மையை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டம் 23 மாநிலங்கள்/ யூ.பிரதேசங்களில் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையால் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் உள்ள காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் தொடர்புகள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இந்த PM-FMY (RWBCIS உட்பட), விவசாயிகளின் சேர்க்கை (எண்ணிக்கை) அடிப்படையில் உலகின் முதல் பெரிய பயிர்க் காப்பீட்டுத் திட்டமாகத் திகழ்கிறது. மேலும், காப்பீட்டு பிரீமியம் தொகையின் அடிப்படையில் இது உலகின் மூன்றாவது பெரிய திட்டமாகும்.

**விவசாயிகள் செலுத்த வேண்டிய காப்பீட்டுத் தவணை (பிரீமியம்)**

அ) காரீஃப் பருவ உணவுப் பயிர்கள், எண்ணெய் வித்துப் பயிர்களுக்கு : காப்பீட்டுத் தொகையில் 2%
ஆ) ரபி பருவ உணவுப் பயிர்கள்மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களுக்கு : 1.5%
இ) வருடாந்திர வணிக அல்லது தோட்டக்கலைப் பயிர்களுக்கு : 5%
ஈ) பல்லாண்டு வணிக அல்லது தோட்டக்கலைப் பயிர்களுக்கு : 5%

நமது நாட்டில், விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரீமியம் தொகை நாடு முழுவதும் மிகக் குறைவாகவும், சமச்சீராகவும் இருப்பதைக் காணலாம். விவசாயிகள் செலுத்தியதுபோக மீதமுள்ள காப்பீட்டு பிரீமியத்தை அரசாங்கமே ஏற்கிறது. இதற்கான செலவை மத்திய மாநில அரசுகள் சமமாக (50:50) பகிர்ந்து கொள்ளும். வடகிழக்கு மாநிலங்கள், ஜம்மு, காஷ்மீர் மற்றும் இமாச்சலப் பிரதேச விவசாயிகளுக்கு மத்திய அரசு முழு பிரீமியத்தையும் செலுத்துகிறது.

**பயிர்க் காப்பீட்டில் உள்ள இழப்புகள்/சேதங்கள்**: இந்தத் திட்டம் பின்வரும் காரணங்களால் ஏற்படும் பயிர் சேதம்/ இழப்புகளுக்கு காப்பீட்டை வழங்குகிறது.

**A) அடிப்படை/குறைந்தபட்சக் காப்பீடு**

**1) வளரும் பயரில் ஏற்படும் இழப்புகள் (விதைப்பு முதல் அறுவடை வரை)**: வறட்சி, வெள்ளம், புயல், நிலச்சரிவு, மின்னல், இயற்கை தீ மற்றும் பூச்சி நோய்கள் போன்ற தடுக்க இயலாத இயற்கை பேரழிவுகளால் ஏற்படும் பயிர்/ மகசூல் இழப்புகள்.

**2) விதைப்பதைத் தடுத்த அபாயங்கள்**: எடுத்துக்காட்டாக, காப்பீடு அறிவிக்கப்பட்ட பகுதியில் பல விவசாயிகள் தங்கள் வயல்களை உழுது, விதைகளை வாங்கி, காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்த பிறகு, முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்கு சாதகமற்ற வானிலை காரணமாக விதைகளை விதைக்கவோ/ நாற்றுகளை நடவோ

முடியவில்லை என்றால் அப்பகுதியில் உள்ள விவசாயிகள் காப்பீட்டுத் தொகையில் அதிகபட்சமாக 25% வரை இழப்பீடு பெற முடியும்.

**3) அறுவடைக்குப் பிந்தைய இழப்புகள்**: ஒரு பயிர் அறுவடை செய்யப்பட்டதிலிருந்து 14 நாட்கள் வரை, அறுவடை செய்யப்பட்ட பொருட்கள் 'அப்படியே அறுவடை செய்து கிடக்கும் நிலை அல்லது வெயிலில் காய்ந்து கிடக்கும் நிலையில்' சேமிக்கப்பட முடியாமல் இருந்தால், தனிநபர்களின் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளை இத்திட்டம் ஈடுகட்டுகிறது.

**B) கூடுதல் காப்பீடு**

**1) உள்ளூர் பேரிடர்கள்:** தனிப்பட்ட பண்ணைகளில் ஏற்படும் உள்ளூர் பேரிடர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும். உள்ளூர் பேரிடர் என்பது ஒரு குறிப்பிட்ட பண்ணை, கிராமம் அல்லது சிறு பகுதியில் ஏற்பட்ட இடர்/சேதமாக இருக்கலாம். உதாரணமாக, திடீரென நீர் சூழ்தல்/ பயிர்கள் நீரில் மூழ்கிவிடுதல், நிலச்சரிவுகள், வனவிலங்குகளால் ஏற்படும் சேதம், தீ போன்றவற்றால் ஏற்படும் சேதங்கள். இவ்வகை ஆபத்துகள் ஒரு குறிப்பிட்ட வயல்/பண்ணையில் மட்டும் இருக்கலாம், அருகிலுள்ள பகுதியில் இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம்.

**2) பருவகாலத்தின் இடைப்பகுதியில் ஏற்படும் பாதிப்புகள்**: வெள்ளம், நீடித்த அல்லது கடுமையான வறட்சி போன்ற பயிர்ப் பருவத்தில் நிலவும் பாதகமான சூழ்நிலைகளால் ஏற்படும் இழப்புகள் சாதாரணக் காலங்களில் கிடைக்கும் மகசூலில் 50%-கும் குறைவாக இருந்தால் அவற்றிற்குரிய இழப்பீடுகள் கிடைக்கும். விதைத்த 30 நாட்களுக்குப் பிறகு (மற்றும் இத்திட்டத்தில் சேர்வதற்கான தேதி அறிவிக்கப்பட்ட 15 நாட்களுக்குள்) மற்றும் அறுவடை நேரம் தொடங்குவதற்கு 15 நாட்களுக்கு முன்பு வரை ஏற்படும் இழப்புகளுக்கு இந்த கூடுதல் காப்பீட்டு வசதி பொருந்தும். மேலும், இதுபோன்ற சமயங்களில், காப்பீடு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கான விதிமுறைகளும் உள்ளன (இதற்கு 'உரிமைகோரல் கணக்கில் பணம் செலுத்துதல்' என்று பெயர்)

**3. வனவிலங்குகளால் ஏற்படும் பயிர் இழப்புகள்**: வனவிலங்குகளின் தாக்குதலால் ஏற்படும் பயிர் இழப்புகள் கணிசமாகவும் அடையாளம் காணக்கூடியதாக இருந்தால் இத்திட்டத்தின் மூலம் கூடுதல் காப்பீடு வழங்குவது குறித்து மாநிலங்கள் பரிசீலிக்கலாம். இந்தக் கூடுதல் காப்பீட்டை தேர்வு செய்வதை விவசாயிகளின் விருப்பத்திற்கு விடவேண்டும், மேலும் அதற்குரிய பிரீமியத்தை விவசாயி(கள்)தான் ஏற்க வேண்டும்.

**காப்பீட்டில் சேர்வதற்கான தகுதிகள்**

- காப்பீடு அறிவிக்கப்பட்ட பகுதிகளில், அறிவிக்கப்பட்ட பயிர்களை பயிர்செய்யும் குத்தகை மற்றும் குத்தகை விவசாயிகள் உட்பட அனைத்து விவசாயிகளும்.
- பட்டா / சிட்டா அல்லது செல்லுபடியாகும் நில உரிமை ஒப்பந்தம் வைத்திருக்க வேண்டும்.
- காப்பீட்டுத் திட்டத்திற்குப் பரிந்துரைக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் விவசாயிகள் விண்ணப்பிக்க வேண்டும், பொதுவாக இந்தக் காலக்கெடு விதைப்பு பருவம் தொடங்கிய 2 வாரங்களுக்குள் இருக்கும்.
- விவசாயிகள், அதே பயிர் இழப்பிற்கு வேறு எந்த அமைப்புகளிடம் அல்லது வேறு வகையில் இழப்பீடு பெற்றிருக்கக்கூடாது.
- வங்கிகளில் கடன் பெற்ற / பெறாத விவசாயிகள் யாவரும் இத்திட்டத்திற்கு தகுதியுடையவர்கள்.
- வங்கிகளில் இருந்து KCC திட்டத்தின் கீழ் பயிர்க்கடன் பெற்ற விவசாயிகளுக்கு இந்த காப்பீட்டுத் திட்டம் விருப்பத் தேர்வாகும் (கட்டாயமில்லை, அந்தந்த

பருவத்தில் பயிர்க் காப்பீட்டில் சேருவதற்கான கடைசி தேதிக்கு 7 நாட்களுக்கு முன்னர் வங்கியை அணுகி, உங்கள் விருப்பத்தை எழுத்துப்பூர்வமாகக் கொடுக்கவேண்டும்).

- வங்கிக் கடன் பெறாத விவசாயிகளுக்கு இந்தத் திட்டம் விருப்பத் தேர்வாகும்.

**தகுதியற்ற விண்ணப்பதாரர்கள் அல்லது விலக்குகள்**

1) **அறிவிக்கப்படாத பயிர்கள் மற்றும் அறிவிக்கப்படாத பகுதிகள்:** PM-FBY அமலில் உள்ள பகுதிகளில் உள்ள அறிவிக்கப்பட்ட பயிர்களுக்கு மட்டும் பயிர்க் காப்பீடு பொருந்தும். அறிவிக்கப்படாத பயிர்கள் அல்லது அறிவிக்கப்படாத பகுதிகளில் ஏற்படும் பயிர் இழப்புகள் பொதுவாகக் காப்பீடு செய்யப்படுவதில்லை.

**2) பயிர் பருவத்திற்கு வெளியே ஏற்படும் இழப்புகள்:** காப்பீடு செய்யப்பட்ட பயிரின் வளரும் பருவத்துடன் நேரடியாகத் தொடர்பில்லாத இழப்புகள் யாவும் காப்பீட்டிற்குத் தகுதியற்றதாக கருதப்படும்.

**3) அலட்சியம் மற்றும் இணங்காமை:** விவசாயிகளின் அலட்சியம், பரிந்துரைக்கப்பட்ட விவசாய முறைகளைப் பின்பற்றாததால் ஏற்படும் இழப்புகள் அல்லது பயிரைப் போதுமான அளவு பாதுகாக்கத் தவறியதால் ஏற்படும் இழப்புகள் காப்பீட்டிலிருந்து விலக்கிவைக்கப்படும்.

**4) சில வரம்புகளுக்கு அப்பாற்பட்ட இழப்புகள்:** முன் வரையறுக்கப்பட்ட இழப்புகள் அல்லது வரம்புகளுக்கு அப்பாற்பட்ட சில இழப்புகள் ஈடுசெய்யப்படாமல் போகலாம்.

**5) பிரீமியம் செலுத்தாத காப்பீடுகள்:** முழு பிரீமியம் செலுத்தாத விவசாயிகள் காப்பீட்டுத் திட்டத்திற்குத் தகுதியற்றவர்கள்.

**காப்பீடு செய்யப்படும் பயிர்கள்**

மத்திய அரசு பின்வரும் பயிர்களைக் காப்பீட்டிற்காக அறிவித்துள்ளது.

1. உணவுப் பயிர்கள் (தானியங்கள், சிறுதானியங்கள், பருப்பு வகைகள்).
2. எண்ணெய் வித்து.
3. வருடாந்திர வணிக, வருடாந்திரத் தோட்டக்கலைப் பயிர்கள்.

இருப்பினும், சில பயிர்களின் முக்கியத்துவம், சாகுபடி செய்யும் இடம் அல்லது பருவத்தைப் பொறுத்து, மாநில அரசுகள் ஒரு குறிப்பிட்ட / பருவத்திற்கும் காப்பீட்டிற்குத் தகுதியான பயிர்(களை) அறிவிக்கும். எனவே, விவசாயிகள் மாநில அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட பயிர்ப் பட்டியல், மண்டலம் மற்றும் பருவங்களைப் பார்க்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

**இடர் பகிர்வு வழிமுறை**

- இந்தத் திட்டம் முழுமையான 'இடர் பரிமாற்ற' அணுகுமுறையில் இயங்குகிறது, அதாவது, பிரீமியத்திற்கான முழு இழப்பீடு பொறுப்பையும் காப்பீட்டு நிறுவனங்கள் ஏற்க வேண்டும்.
- இருப்பினும், சில மாநிலம்/யூ. பிரதேசங்கள் சேதம்/இழப்புகளின் சில கூறுகளில் தாங்கள் பங்கேற்க விரும்பினால், அவர்கள் வழிகாட்டு நெறிமுறைகளில் கொடுக்கப்பட்டுள்ள மூன்று மாதிரிகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்ய வேண்டும். அவை: (அ) இலாப நஷ்டப் பகிர்வு மாதிரி, (ஆ) கப் மற்றும் கேப் மாடல் (60:130) மற்றும் (இ) கப் மற்றும் கேப் மாதிரி (80:110).
- **இலாப நஷ்டப் பகிர்வு மாதிரியில்,** காப்பீட்டு நிறுவனம் 100% வரை இழப்பு விகிதங்களை ஏற்கும், மேலும் 100%-கும் அதிகமான இழப்புகளுக்கு, காப்பீட்டு

நிறுவனம் மற்றும் அரசு (மத்திய மற்றும் மாநில அரசுகள்) இழப்பீட்டை பகிர்ந்து கொள்ளலாம்.

- **கப் & கேப் மாதிரியில்**, காப்பீட்டு நிறுவனம் 110% அல்லது 130% வரை இழப்பு விகிதங்களை சூழ்நிலைக்கேற்ப ஏற்கும். 110% அல்லது 130%-கும் அதிகமான இழப்பு விகிதத்தை மத்திய மற்றும் மாநில அரசுகள் சமமாகப் பகிர்ந்து கொள்ளும்.

**இழப்புகள் / மகசூல் குறைவை மதிப்பீடு செய்தல்**

1. *தொகுதி- அணுகுமுறை (இயல்புநிலை)*: PM-FBY திட்டம் பொதுவாக ஒரு கிராமம் / பஞ்சாயத்து / தொகுதி / தாலுகா போன்ற வரையறுக்கப்பட்ட காப்பீட்டு அலகு (IU)-இல் செயல்படுத்தப்படுகிறது. குறிப்பிட்ட காப்பீடு அலகில் உள்ள அனைத்துக் காப்பீடு செய்யும் விவசாயிகளும் ஏறத்தாழ ஒரே மாதிரியான இழப்புகளை எதிர்கொள்வார்கள் என்ற அனுமானத்தின் அடிப்படையில் இந்த அணுகுமுறை அமைக்கப்பட்டுள்ளது. PM-FBY என்பது தொழில்நுட்பம் சார்ந்த திட்டமாகும். எனவே, காப்பீட்டு நிறுவனங்கள் 'பயிர் அறுத்து விளைச்சல் மதிப்பீடு (CCE)' தரவைப் பயன்படுத்துகின்றன. கடந்த 7 ஆண்டுகளில் 5 சிறந்த ஆண்டின் சராசரி மகசூல், அந்த குறிப்பிட்ட காப்பீட்டு அலகு பகுதியின் அளவுகோல் அல்லது வரம்பு மகசூலாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. காப்பீட்டுச் சேர்க்கை தொடங்குவதற்கு முன்பு இந்த அளவுகோல் மகசூல் அறிவிக்கப்படும். பயிர் அறுத்து விளைச்சல் மதிப்பீடு அல்லது பிற முறைகள் மூலம் ஒவ்வொரு IU-விலும் ஏற்பட்ட மகசூல் இழப்பு மதிப்பிடப்பட்டு, பின்னர் அந்த IU-இல் உள்ள அனைத்து காப்பீடு செய்யப்பட்ட விவசாயிகளுக்கும் விகிதாச்சாரமாக இழபீட்டுத்தொகை செலுத்தப்படும்.

மாநில அரசுகள்/யூ. பிரதேசங்கள், மத்திய அரசு உருவாக்கிய crop cutting experiment (CCE) கைபேசி செயலி அல்லது ஸ்மார்ட் சாம்ப்ளிங், தொலை நுண்ணுணர்வு போன்ற நவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி காப்பீடு அறிவிக்கப்பட்ட பகுதியில் பயிர் மகசூல் மதிப்பீட்டினை நடப்பு பருவம் முதல் பின்பற்றலாம். கிராமம் (பஞ்சாயத்து), தாலுகா (பிளாக்) மற்றும் மாவட்ட அளவில் நடத்தவேண்டிய குறைந்தபட்ச CCE-களின் எண்ணிக்கை முறையே 4, 16 மற்றும் 24 ஆக இருக்க வேண்டும். மாநில/யூ. பிரதேசங்கள் CCE செயலி மூலம் தங்கள் CCE-ஐ நடத்தவில்லை என்றால், YES-TECH தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட மகசூல் மதிப்பீட்டு முறையைப் பின்பற்றலாம். YES-TECH மதிப்பீட்டு முறை 2023-ஆண்டு காரிஃப் பருவத்திலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. பருத்தி, மிளகாய், புகையிலை, தக்காளி, பட்டாணி, பழங்கள் (மாம்பழம் மற்றும் ஆப்பிள்) போன்ற பலமுறை-அறுவடை செய்யும் பயிர்களைப் பொறுத்தமட்டில், ஒவ்வொரு அறுவடையிலும் கிடைக்கும் விளைச்சலைக் கணக்கிட்டு, மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை (2023) வழங்கிய வழிகாட்டுதல்களின்படி மொத்த மகசூல் மதிப்பிடப்படும்.

**2. இழப்பீடு ஈடுகட்டல் அளவு (IL):** இழப்பீடு ஈடுகட்டல் அளவு பயிர் இழப்பு ஏற்பட்டால், காப்பீட்டு நிறுவனம் விவசாயிகளுக்கு ஈடுகட்டும் இயல்பான விளைச்சலின் (உத்தரவாத மகசூல் அல்லது வரம்பு மகசூல்-TY) குறிப்பிட்ட சதவீத அளவை குறிக்கும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ஒவ்வொரு பயிருக்கும் ஈடுகட்டல் அளவு அறிவிக்கப்படும். பல ஆண்டுகளாக, இந்த ஈடுகட்டல் அளவு 70% (குறைந்த அபாயம்) அல்லது 80% (நடுத்தர அபாயம்) அல்லது 90% (அதிக அபாயம்) என இருந்துள்ளது (இது பொதுவாக மாநில அரசால் பயிர்க் காப்பீட்டு ஏலம் விடும்பொழுது அறிவிக்கப்படும்). ஈடுகட்டல் அளவு என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒரு பயிருடன் தொடர்புடைய அபாயத்தைப் பிரதிபலிக்கிறது. அதிக ஈடுகட்டல் அளவு என்பது இயல்பான / உத்தரவாதமான மகசூலில் ஒரு பெரிய

சதவீதம் காப்பீடு செய்யப்பட்டு ஈடுசெய்யப்படுகிறது என்பதைக் குறிக்கும், ஆனால் அது அதிக பிரீமியத்துடன் இருக்கும். எடுத்துக்காட்டாக, விவசாயிகள் 80% இழப்பீட்டு அளவைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் வரம்பு மகசூல் ஏக்கருக்கு 100 குவிண்டால் இருந்து, அவர்களின் உண்மையான மகசூல் ஏக்கருக்கு 60 குவிண்டாலாக இருந்தால், 20 குவிண்டால் விளைச்சல் குறைவிற்கு அவர்களுக்கு இழப்பீடு வழங்கவேண்டும். மாநில அரசு, நடப்பு பருவத்திற்கான ஏலத்தில் மகசூல் வரம்பை (TY) அறிவிக்கும். இது அந்தப் பருவத்திற்கான காப்பீட்டுத் தொகையைக் கணக்கிடும் பொழுது பயன்படுத்தப்படும் (TY-ஐ எப்படி கணக்கிடுவது, மற்றும் IL மற்றும் TY-க்கு இடையேயான தொடர்பைக் கீழே காண்க).

**3. அனைத்து இடங்களிலும் விளைச்சல் மதிப்பீடு**: உள்ளூர்-சார்ந்த பேரிடர்களுக்கு (ஆலங்கட்டி மழை, நிலச்சரிவு, பயிர்கள் நீரில் மூழ்கிவிடுதல், தீ போன்றவை) மாநிலம் / ஏலத்தில் அனுமதித்தால், ஒவ்வொரு நிலமாக இழப்பை மதிப்பீடு செய்யலாம். விளைச்சல் மதிப்பீட்டை விரைவில் கண்டறிய காரீஃப்-2023 முதல் கலப்பு மாடல்- YES-TECH + CCE முறைகள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**பரவலான பேரிடர்களால் ஏற்படும் மகசூல் இழப்புகள்** (பருவ இறுதி மகசூலை அடிப்படையாகக் கொண்டது)

- காப்பீட்டு கோரிக்கைகள் அனைத்தும், பிரத்தியோகமாக தேசிய பயிர் காப்பீட்டு போர்ட்டலில் (NCIP) உள்ளீடு செய்துள்ள CCE அடிப்படையிலான மகசூல் தரவு அல்லது CCE மகசூல் தரவு + YES-TECH மூலம் பெறப்பட்ட மகசூல் தரவு ஆகியவற்றின் அடிப்படையில் தீர்க்கப்படும்.
- காப்பீட்டு அலகிற்கு உட்பட்ட ஒரு கிராமத்தில் சராசரி பயிர் மகசூல், நிர்ணயிக்கப்பட்ட மகசூலை (TY) விட அதிகமாக இருந்தால், காப்பீட்டாளருக்கு எந்த இழப்பீடும் வழங்கப்படாது.
- பயிர் அறுவடை பரிசோதனை (CCE) மகசூல், நிர்ணயிக்கப்பட்ட மகசூலைவிடக் குறைவாக இருந்தால், அந்த குறிப்பிட்ட கிராமத்திற்கான மகசூல் இழப்பு சதவீதம் கணக்கிடப்பட்டு அதற்கேற்ப இழப்பீடு தீர்மானிக்கப்படுகிறது.
- தேசிய அளவில், ஒரு குறிப்பிட்ட பயிர் பருவத்தில், மொத்த பிரீமியத்திற்கும் மொத்த இழப்பீட்டு தொகைக்கும் இடையேயான விகிதம் 1:3.5-ஐ விட அதிகமாக அல்லது காப்பீட்டுத் தொகைக்கான கோரிக்கைகள் மொத்தக் காப்பீடு தொகையில் 35%-ஐ விட அதிகமாக இருந்தால் (இதில் எது அதிகமோ), அரசு காப்பீட்டு நிறுவனங்களுக்கு உரிய பணப் பாதுகாப்பை வழங்கும்.
- அடிப்படை காப்பீட்டின் கீழ் பரவலான பேரிடர்களால் ஏற்படும் மகசூல் இழப்பு: 'கிளைம்ஸ்/ காப்பீடு தொகை' கீழ்க்கண்ட சூத்திரத்தின்படி ஒவ்வொரு IU மட்டத்தில் கணக்கிடப்படும்.

$$\text{Claim payable to a farmer} = \frac{\text{(Threshold Yield - Actual Yield)}}{\text{Threshold Yield}} \times \text{Sum Insured}$$

- TY மதிப்பிடப்பட்டவுடன், வரம்பு மகசூல்கள் 90%, 80% மற்றும் 70% ஈடுகட்டும் அளவுகளில் கணக்கிடப்படும்.

இங்கு,

1. அறிவிக்கப்பட்ட IU-வில் ஒரு பயிரின் சராசரி மகசூல் = கடந்த 7 ஆண்டுகளில் சிறந்த 5 ஆண்டுகளின் சராசரி மகசூல் (மாநில அரசு வழங்கிய CCE தரவு).
2. வரம்பு மகசூல் (TY) = சராசரி மகசூலை அந்தப் பயிருக்கு அந்தந்த பருவத்தில் அறிவிக்கப்பட்ட ஈடுகட்டும் அளவால் (IL) பெருக்க வேண்டும்.

3. மொத்த காப்பீட்டுத் தொகை (SI) = ஒரு ஏக்கருக்கான வங்கி நிதி அளவு × காப்பீடு செய்யப்பட்ட நில அளவு (அல்லது அரசால் அறிவிக்கப்பட்ட SI).

**எடுத்துக் காட்டு**

கடந்த 7 ஆண்டுகளில் தஞ்சை மாவட்டத்தில் அறுவடை செய்த சராசரி நெல் மகசூல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|---|---|
| மகசூல் கிலோ/ஹெக்டேர் | 2300 | 2000 | 2400 | 2600 | 2200 | 2000 | 2400 |

2019 மற்றும் 2023-ஆம் ஆண்டுகளில் குறைந்த மகசூல் கிடைத்துள்ளது, அதைத் தவிர்க்கலாம். இந்த இரண்டு குறைந்த மகசூல் ஆண்டுகளைத் தவிர்த்து, சிறந்த ஐந்து ஆண்டுகளின் சராசரி மகசூல் : 11900/5 = 2380 கிலோ/ ஹெக்டேர்.

ஈடுகட்டும் அளவை (IU) 80% ஆக எடுத்துக்கொண்டால், 80% ஈடுகட்டும் அளவில் சராசரி மகசூல் ஹெக்டேருக்கு 1904 கிலோவாக இருக்கும்.

இதன் பொருள்: சம்பந்தப்பட்ட பருவத்தில் விவசாயிகள் அறுவடை செய்யும் மகசூல் ஹெக்டேருக்கு 1901 கிலோவுக்கு அதிகமாக இருந்தால், எந்த இழப்பீடும் கிடைக்காது; உண்மையான மகசூல் 1901 கிலோவுக்குக் குறைவாக இருந்தால், எவ்வளவு பற்றாக்குறையோ அவற்றிற்கு மேற்கண்ட பத்தியில் உள்ள சூத்திரத்தைப் பயன்படுத்தி இழப்பீடு வழங்குவார்கள்.

உதாரணமாக, 2025 பயிர் பருவத்திற்கு, ஒரு விவசாயி ஒரு ஹெக்டேருக்கு ரூ. 30,000- வீதம் காப்பீடு செய்திருந்து, அவருக்குக் கிடைத்த உண்மையான மகசூல் 1504 கிலோ/ஹெக்டேராக இருந்தால், கணக்கிடப்பட்ட வரம்பு மகசூல் 1904 கிலோ/ஹெக்டேராக இருந்தால்,

$$\text{விவசாயிக்கு செலுத்த வேண்டிய இழப்பீடு} = \frac{(1904-1504)}{1904} \times 30,000 = \text{ரூ. } 6303/-$$

அதாவது, PM-FBY திட்டத்தின் கீழ் விவசாயிக்கு சேர வேண்டிய இழப்பீட்டுத் தொகை ஒரு ஹெக்டருக்கு ரூ. 6303 ஆகும்.

**விதைப்பு/நடவு மேற்கொள்ள இயலாத பேரிடர்கள் மற்றும் விதை முளைக்காத பேரிடர்களின்போது இழப்பீடு உரிமை கோருவது எவ்வாறு?**

- காப்பீடு அறிவிக்கப்பட்ட பகுதிகளில் அறிவிக்கப்பட்ட பயிர்களுக்கான "தடுக்கப்பட்ட விதைப்பு/நடவு" இழப்பீடு தொகையைப் பெற, அப்பகுதியில் 75%-க்கும் அதிகமானோர் இந்தப் பிரச்சனையை சந்தித்திருக்க வேண்டும்.
- விதைப்பு/நடவு தொடங்கியதிலிருந்து 30 நாட்கள் வரை மற்றும் காப்பீடு சேர்க்கைக்கான கடைசி தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் ஏற்படும் (மாநில/யூ. பிரதேச அரசுகள் அறிவித்தபடி) பேரிடர்களுக்கு எதிராகக் காப்பீடு வழங்கப்படுகிறது. இத்தகைய அபாயங்கள் விதைப்பின் ஆரம்பக் கட்டத்தில் தென்படுவதால் விவசாயிகள் தங்கள் பயிரை மொத்தமாக இழக்க நேரிடும் அல்லது விவசாயிகள் அதே பயிரை மீண்டும் விதைக்கவோ அல்லது நடவு செய்யவோ முடியாத நிலையில் இருப்பார்கள்.
- மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு (DLMC), தடுக்கப்பட்ட விதைப்பை மாநிலத் திட்டச் செயலாக்கத் முகமை (நோடல் அலுவலகம்) பரிந்துரைக்கும். மழைப்பொழிவு, செயற்கைக்கோள் படங்கள், IMD அறிக்கை போன்ற

கிடைக்கக்கூடிய தரவுகளைப் பரிசீலித்து, சரிபார்த்த பிறகு, சம்பந்தப்பட்ட மாநில திட்டச் செயலாக்கத் துறை இதற்கான அரசாணையை வெளியிடும்.

- விவசாயிகளுக்கு இன்சூரன்ஸ் நிறுவனம் செலுத்த வேண்டிய இழப்பீடு தொகை மொத்தக் காப்பீட்டுத் தொகையில் 25% ஆக இருக்கும். மேலும், மேற்படி பயிருக்கு அந்த பருவத்திற்கான காப்பீடு அத்துடன் நிறுத்தப்படும்.
- விதைப்பு செய்ய முடியாத நிலை ஏற்பட்டால், விவசாயிகள் குறுகிய காலத்தில் விளையும், எதிர்ப்பு சக்தி கொண்ட பயிர்களை மாற்றுப் பயிராக விதைத்து, அதற்கான பயிர்க் காப்பீட்டையும் பெறலாம். இந்த மாற்றுப் பயிர்களுக்கான காப்பீட்டு விண்ணப்பம் முதல் பயிரின் காப்பீடு இழப்பு அறிவிக்கப்பட்ட கடைசி தேதிக்குப் பிறகு 15 நாட்கள் வரை அனுமதிக்கப்படும். மேலும், இது கீழ்க்கண்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்: மாநில/யூ. பிரதேச அரசு இதுபற்றிய அறிவிப்பை 15 நாட்களுக்குள் வெளியிட வேண்டும், காப்பீட்டுக்கான பிரீமியம் ஏற்கனவே பிடித்தம் செய்யப்பட்டிருக்க வேண்டும், மாற்றுப் பயிர்கள் மாநில/ யூ. பிரதேச அரசால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

**பருவத்தின் நடுப்பகுதியில் உண்டான பாதகத்தால் ஏற்பட்ட இழப்புகள்**

**அ) கணக்கில் (முன்கூட்டியே) பணம் செலுத்துதல்**

- எதிர்பார்க்கப்படும் இழப்பு சாதாரண மகசூலில் 50%-கும் அதிகமாக இருக்கும் என ஆரம்ப மதிப்பீடுகள் மூலம் அறியப்பட்டால், விவசாயிகளுக்கு உடனடியாக உதவுவதற்காக அவர்களுடைய கணக்கில் (முன்கூட்டியே) பணம் செலுத்த இந்தத் திட்டம் அனுமதிக்கிறது.
- பயிர் பருவத்தில், அதாவது விதைத்த 30 நாட்களுக்கு பிறகு அறுவடைக்கு 15 நாட்களுக்கு முன்பு உள்ள காலகட்டத்தில், வெள்ளம், நீடித்த வறட்சி, கடுமையான வறட்சி போன்ற பாதகமான பருவகால பாதகத்தால் விளைச்சல் இழப்பு ஏற்பட்டால், அதற்கான இழப்பீட்டை விவசாயிகள் பெறலாம்.
- விதைப்பு தொடங்கிய 30 நாட்களுக்குள் மற்றும் அறுவடை தொடங்கிய 15 நாட்களுக்குள் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால், இந்த விதி (கணக்கில் முன்பணம் செலுத்துதல்) பொருந்தாது.
- பாதகமான பருவகால நிகழ்வு நடந்த 15 நாட்களுக்குள் பாதிக்கப்பட்ட காப்பீட்டு அலகிலான இழப்பு மதிப்பீட்டு அறிக்கையை மாவட்டக் கூட்டுக் குழு பூர்த்தி செய்து தகுதியான காப்பீடு செய்யப்பட்ட விவசாயிகளின் இழப்பீடு தொகையை NCIP போர்ட்டலில் கட்டாயம் பதிவேற்ற வேண்டும்.
- கணக்கில் செலுத்தும் முன்பணத் தொகை பின்வரும் சூத்திரத்தின்படி கணக்கிடப்படுகிறது.

$$\text{On-account} = \frac{(\text{Threshold Yield} - \text{Estimated Yield})}{\text{Threshold Yield}} \times \text{Sum Insured} \times 25\%$$

- அறிவிக்கப்பட்ட காப்பீட்டு அலகில் காப்பீடு செய்யப்பட்ட பயிரின் சேதம் 25%-கும் அதிகமாக இருந்தால், இழப்புகள் தனிப்பட்டதாகக் கருதப்படாமல் அவை பரவலானதாகக் கருதப்படும். எனவே, தகுதியுள்ள அனைத்துக் காப்பீடு செய்யப்பட்ட விவசாயிகளுக்கும் "பருவகாலத்தின் நடுப்பகுதியில் ஏற்படும் பேரிடர்களுக்கான இழப்பீடு எனக்கருதி அவர்கள் கணக்கில் பணம் செலுத்தப்படும்.

- இவ்வாறு வழங்கப்படும் முன் இழப்பீடு பணம் இறுதி இழப்பீடு தொகையில் 25%-கு மிகாமல் இருக்கும்

### ஆ) இறுதி இழப்பீடு

CCE-கள் வாயிலாகப் பெறப்பட்ட மகசூல் மதிப்பீட்டுத் தரவுகளின் அடிப்படையில் இறுதி மகசூல் இழப்பு தொகைக் கணக்கிடப்பட்டு, ஏற்கனவே செலுத்திய முன்பணம் கழிக்கப்பட்டு, மீதமுள்ள தொகை விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

**உள்ளூர் பேரிடர்கள்**

- இது அடிப்படை காப்பீடு அல்ல, கூடுதல் பயிர்க் காப்பீடு. எனவே, இவை மாநில/யூ. பிரதேச அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டால் மட்டுமே கிடைக்கும்.
- அறிவிக்கப்பட்ட இன்சூரன்ஸ் அலகில் அல்லது சில குறிப்பிட்ட நிலப்பகுதியில் ஏற்படும் ஆலங்கட்டி மழை, நிலச்சரிவு, வெள்ளம், மேகவெடிப்பு மற்றும் இயற்கை தீ போன்ற உள்ளூர் ஆபத்துகள்/பேரழிவுகளுக்கு காப்பீட்டுத் தொகை கிடைக்கிறது.
- காப்பீடு செய்யப்பட்ட விவசாயி உடனடியாகக் காப்பீட்டு முகவர் அல்லது சம்பந்தப்பட்ட மாநில அரசு அதிகாரி / வங்கிக்கு (72 மணி நேரத்திற்குள்) தகவல் தெரிவிக்க வேண்டும். காப்பீடு செய்யப்பட்ட விவசாயியின் பெயர், பாதிக்கப்பட்ட சர்வே எண், காப்பீடு செய்யப்பட்ட பயிர், பாதிக்கப்பட்ட பரப்பளவு, NCIP-இல் உள்ள விவசாயியின் விண்ணப்ப எண், மொபைல் எண், வங்கிக் கணக்கு எண் போன்ற விவரங்கள் விவசாயிகள் அளிக்கும் தகவலில் இருக்க வேண்டும்.
- சம்பந்தப்பட்ட விவசாயி முன்னிலையில், மாநில அரசு பிரதிநிதி மற்றும் காப்பீட்டு நிறுவன பிரதிநிதியின் கூட்டு கணக்கெடுப்பு மூலம் சேதம் உறுதிப்படுத்தப்படுகிறது. விரைவான தகவல் தொடர்புக்கு மொபைல் செயலிகளைப் பயன்படுத்தலாம்.
- இழப்பு மதிப்பீடு செய்யும் பணிகள் அடுத்த 10 நாட்களுக்குள் நிறைவடையும். அதற்கடுத்த 15 நாட்களுக்குள் இழப்பீடு வழங்குவதற்காகத் தீர்மானம் நிறைவேற்றப்படும்.
- தனிப்பட்ட பண்ணையில் ஏற்படும் இழப்பீடுகள் பின்வரும் சூத்திரத்தின்படி கணக்கிடப்படுகிறது.

$$Sum\ Insured \times \frac{Affected\ Area\ out\ of}{total\ Insured\ Area}(\%) \times \frac{Estimated\ Crop\ Damage}{in\ Affected\ Area}(\%)$$

*குறிப்பு: வெள்ளம் காரணமாகப் பயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்க வேண்டும், அதற்குரிய பயிர் இழப்பு இல்லாமல் வெறும் நீர் தேங்கியிருந்தால் அவை காப்பீடு இழப்பு பெற தகுதியற்றவையாகிறது. நெல், கரும்பு, சணல் மற்றும் புளிச்சைக்கீரை போன்ற நீர்நிலைப் பயிர்களுக்கு வெள்ளத்தால் ஏற்படும் இழப்பு, காப்பீடு தொகை பெறுவதற்குத் தகுதியற்றதாகிறது.*

**அறுவடைக்குப் பிந்தைய இழப்புகள்**

- அறுவடை செய்யப்பட்ட பயிர் 'வயலில் பரப்பிய நிலையில்' அல்லது சிறிய மூட்டைகளாக வயலில் கட்டிக்கிடக்கும் நிலையில் ஆலங்கட்டி மழை, சூறாவளி காற்று, சூறாவளியுடன் கூடிய மழை மற்றும் பருவமற்ற மழை (நீண்டகால சராசரியில் >20%-க்கும் மிகையாக) ஆகிய காரணங்களால் இழப்புகள் ஏற்பட்டால் அவற்றிற்கு காப்பீடு இழப்பு வழங்கப்படும். மேலும், இது அறுவடைக்குப் பிறகு

அதிகபட்சமாக இரண்டு வாரங்களுக்குள் (14 நாட்கள் ஏற்படும் சேதங்களுக்கு மட்டும் பொருந்தும்.

- தனிப்பட்ட பண்ணை மட்டத்தில், இழப்பீட்டுத் தொகை பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

$$\textit{Sum Insured} \times \frac{\textit{Area affected out of}}{\textit{total Insured Area}} (\%) \times \frac{\textit{Estimated Crop Damage}}{\textit{in Affected Area}} (\%)$$

- ஆவண ஆதாரங்கள்: பயிர்க் காப்பீட்டு செயலி அல்லது கிருஷி ரக்ஷக் போர்டல் & உதவி எண் (14447) அல்லது பிற வழக்கமான தகவல் பரிமாற்ற முறைகள் மூலம் தேவையான அனைத்து ஆவணங்களுடன் தங்கள் பண்ணையில் ஏற்பட்ட இழப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பிக்க வேண்டும். இதுவே, உங்களுக்கான இழப்பீடு மதிப்பீட்டை தொடங்கவும், காப்பீட்டுக் கோரிக்கை தொகையை வழங்கவும் அவசியமான நிபந்தனையாகும்.
- அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளை மதிப்பிடுவதற்காக இழப்பு மதிப்பீட்டாளர்கள் காப்பீட்டு நிறுவனத்தால் நியமிக்கப்படுவார்கள்.
- இழப்பு மதிப்பீடு அடுத்த 10 நாட்களுக்குள் நிறைவடையும், அதற்கடுத்த 15 நாட்களுக்குள் உரிமைகோரல் தீர்வு நிறைவடையும்.
- காப்பீடு செய்யப்பட்ட பண்ணை/ வயலில் ஏற்பட்ட உண்மையான இழப்பிற்கு ஏற்ப, உங்கள் பயிருக்கான காப்பீடு காலம் வரையில், உரிய இழப்பீடு வழங்கப்படும்.

**காலக்கெடு & உரிமைகோரல் தீர்வு செயல்முறைகள்**

1. *காப்பீடு கோரிக்கைகளின் வகைகள்*: கோரிக்கைகளை இரண்டு பரந்த வகைகளாகப் பிரிக்கலாம், (1) பரவலான பேரிடர் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளுக்கான மகசூல் அடிப்படையிலான உரிமைகோரல்கள், மற்றும் (2) பருவகாலத்தின் நடுப்பகுதியில் ஏற்படும் இழப்புகள் மற்றும் உள்ளூர் பேரிடர்கள் போன்றவற்றுக்கான கூடுதல் காப்பீடு கோரிக்கைகள்.
2. *அறிவிப்பு*: உள்ளூர் சேதத்திற்கு, விவசாயிகள் (அல்லது வங்கி/ நிறுவனம்) பொதுவாக இழப்பு ஏற்பட்ட 72 மணி நேரத்திற்குள் உள்ளூர் விவசாய அலுவலகத்திற்குத் தெரிவிக்க வேண்டும். பரவலான பேரிடர்களுக்கு, பாதிக்கப்பட்ட காப்பீட்டு அலகுகளை அரசே அறிவிக்கும்.
3. *இழப்பு மதிப்பீடு / கூட்டு ஆய்வு*: ஒரு கூட்டு ஆய்வுக்குழு (காப்பீட்டு நிறுவனம் + மாநில அதிகாரிகள்) அல்லது நியமிக்கப்பட்ட மதிப்பீட்டாளர்கள் மதிப்பீட்டை நடத்துகிறார்கள். மதிப்பீட்டாளர்களின் நியமனம் மற்றும் கூட்டு ஆய்வுக்கான காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளன, அதாவது 48 மணி நேரத்திற்குள் ஆய்வுக்குழு நியமனம், 15 நாட்களுக்குள் மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பித்தல்.
4. *கணக்கில் (முன்கூட்டியே) பணம் செலுத்துதல்*: எதிர்பார்க்கப்படும் இழப்பு 50% கும் அதிகமாக இருந்தால், காப்பீட்டு நிறுவனங்கள் காப்பீட்டாளர்களின் கணக்கில் முன்கூட்டியே பணம் செலுத்தும் (மேலே கொடுக்கப்பட்ட மதிப்பீட்டு சூத்திரத்தில் 25%). இந்த முன்பணம் மாநில அரசின் அறிவிப்பு மற்றும் இறுதி இழப்பு அறிக்கைக்கு விதிகளுக்கு உட்பட்டது.
5. *காலக்கெடு*: CCE முடித்த பிறகு, மாநில அரசு/யூ. பிரதேசம், பருவத்தின் உண்மையான மகசூல் மற்றும் வரம்பு நிலை மகசூலை NCIP போர்ட்டலில் பதிவேற்றும், இது காப்பீட்டு நிறுவனத்தால் சரிபார்க்கப்பட்டு, குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் ஏற்றுக்கொள்ளப்படும்.

6. *காப்பீட்டுத் தொகை*: ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு பயிருக்குமான காப்பீடுத் தொகை, அந்தப் பயிரின் சராசரி மகசூலை அதன் குறைந்தபட்ச விற்பனை விலை (MSP), MSP கிடைக்கவில்லை என்றால் பண்ணை விலையால் பெருக்கி நிர்ணயிக்கப்படும்.

7. *மூலக்கொள்கை*: இந்தத் திட்டம் 'முழுமையான இடர் பரிமாற்ற அணுகுமுறை' அடிப்படையில் செயல்படுகிறது, அதாவது செலுத்தப்பட்ட பிரீமியத்திற்கான முழு உரிமைகோரல் பொறுப்பையும் காப்பீட்டு நிறுவனம் ஏற்க வேண்டும்.

8. *கோரிக்கை (இழப்பீடு) தொகை*: காப்பீட்டாளர்களுக்குக் கிடைக்கவேண்டிய இழப்பீடு தொகை எவ்வளவு என்பதை, மத்திய அல்லது மாநில அரசின் அறிவித்த காப்பீடு தொகையை அல்லது NCIP போர்டலில் காப்பீட்டு தொகையை, மேற்படு பயிரின் சாகுபடி பரப்பளவோடு பெருக்கி தெரிந்துகொள்ளலாம்.

9. *இறுதித் தீர்வு*: சம்பந்தப்பட்ட பருவத்தின் இறுதி மகசூல் தரவுகள் (CCE / YES-TECH மாடல் மகசூல் தரவுகள்) சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, முன்னர் பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள சூத்திரத்தைப் பயன்படுத்தி இறுதி கணக்கீடு செய்யப்படுகிறது. விவசாயிகளுக்கு சேரவேண்டிய காப்பீட்டுத்தொகை மானியம்/ பிரீமியம் கிடைக்கப்பெற்ற குறுகிய காலத்திற்குள் பட்டுவாடா செய்யப்படுகிறது.

10. *காலக்கெடு*: விவசாயிகள் கடன் சுமைகளில் வீழாமல் இருக்க, அறுவடை முடிந்த இரண்டு மாதங்களுக்குள் காப்பீடுத் தொகை பரிசீலிக்கப்பட்டு வழங்கப்பட வேண்டும். நேரடிப் பலன் பரிமாற்றம் மூலம் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் இழப்பீடுகள் வழங்கப்படுகின்றன.

**விண்ணப்பிப்பது எப்படி?**

1. *தேவையான ஆவணங்கள்*: பாஸ்போர்ட் அளவிலான புகைப்படம், வங்கி பாஸ்புக், அடையாளச் சான்று (ஆதார் அட்டை/ பான் அட்டை/ வாக்காளர் அட்டை / புகைப்படத்துடன் கூடிய வங்கி பாஸ்புக், கிசான் கார்டு அட்டை / MNREGA அட்டை), முகவரிச் சான்று (ஆதார் அட்டை/ பான் அட்டை/வாக்காளர் ஐ.டி/ மின்சார ரசீது/ புகைப்படத்துடன் கூடிய வங்கி பாஸ்புக்), நிலப் பதிவுகளுக்கான சான்று (பட்டா / சிட்டா ) அல்லது நில உடைமைச் சான்றிதழ் அல்லது ஒப்பந்தங்கள் அல்லது குத்தகை/போக்கிய பயிர் ஒப்பந்தங்கள் போன்ற ஆவணங்கள் மற்றும் விதைத்த / விதைக்க உத்தேசித்துள்ள பயிர் பற்றிய விவரம்.

2. வங்கிக் *கடன் பெற்ற விவசாயிகள்*: காப்பீட்டு அறிவிக்கப்பட்ட பகுதியில் மற்றும் பருவத்தில் பயிர்க்கடன் அல்லது KCC அட்டை மூலம் கடன் பெற்ற விவசாயிகள் சம்பந்தப்பட்ட வங்கியை அணுகி, காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் தங்கள் பெயரைப் பதிவு செய்யுமாறு வங்கி மேலாளரிடம் கோரலாம். பொதுவாக கடன் வழங்கும் வங்கிகள் விவசாயிகள் செலுத்தவேண்டிய பிரீமியத்தை அவரிடமிருந்து வசூலித்து அவர் சார்பாகக் காப்பீட்டு நிறுவனத்திற்கு செலுத்துகிறது.

3) *வங்கிக் கடன் பெறாத விவசாயிகள்*: வங்கிக் கடன் பெறாத விவசாயிகள் மற்றும் வங்கியில் பயிர்க்கடன் பெற்று ஆனால் வங்கிக் காப்பீட்டுத் திட்டத்திலிருந்து விலகி பயிர்க் காப்பீட்டைப் பெற விரும்பும் அனைத்து விவசாயிகளும் அருகிலுள்ள வணிக வங்கி அல்லது மண்டல ஊரக வங்கி அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி அல்லது மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அல்லது மத்திய/மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட/ பதிவு செய்யப்பட்ட காப்பீட்டு நிறுவனங்களை அணுகலாம் அல்லது பயிர்க் காப்பீட்டு செயலி அல்லது AIDE செயலியைப் பயன்படுத்தி தங்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம்.

4) *ஆன்லைன் விண்ணப்ப முறை*: பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா வலைத்தளத்தைப் பார்வையிடவும் (http://pmfby.gov.in). "விவசாயி முற்றம்/ நுழைவாயில்" பொத்தானை கிளிக் செய்யவும். அங்குத் தோன்றும் பாப்-அப் சாளரத்தில், 'விருந்தினர் விவசாயி' என்ற பொத்தானைக் அழுத்தவும். இது உங்களை ஆன்லைன் பதிவு படிவத்திற்கு அழைத்துச் செல்லும். விவசாயி ஐடி-வகை மற்றும் ஐடி-எண் உள்ளிட்ட விவரங்களை நிரப்பவும். இது விவசாயியைப் பதிவுசெய்து பயனர் ஐடியை உருவாக்கும். அடுத்த கட்டத்தில், "விவசாயி முற்றம் (பயிர்க் காப்பீட்டிற்கு நீங்களே விண்ணப்பிக்கவும்)" என்பதற்குச் செல்லவும். அங்கு தோன்றும் பாப்-அப் சாளரத்தில், "விவசாயிக்கான உள்நுழை" என்பதைக் கிளிக் செய்யவும். நீங்கள் https://pmfby.gov.in/farmerLogin இன் உள்நுழைவு பக்கத்திற்கு அழைத்துச் செல்லப்படுவீர்கள். உள்நுழைவு பக்கத்தில், உங்கள் விவரங்களை வழங்கிய பிறகு, அது உங்களை "விவசாயிகள் விண்ணப்பப் படிவத்திற்கு" அழைத்துச் செல்லும். விண்ணப்பப் படிவத்தின் அனைத்துக் கட்டாய இடங்களையும் நிரப்பி, முக்கிய ஆவணங்களைப் பதிவேற்றவும். இந்த கட்டத்தில் நீங்கள் பணம் செலுத்தலாம் அல்லது "பின்னர் பணம் செலுத்து" பொத்தானைக் கிளிக் செய்தால் பின்னர் பணம் செலுத்தலாம். பணம் செலுத்திய பிறகு உங்கள் விண்ணப்பம் நிறைவடைந்ததாகக் கருதப்படும். பணம் செலுத்தப்பட்டதும், பணம் செலுத்தியதற்கான ரசீது உங்களுக்குக் கிடைக்கும். PM-FBY இணையதளத்தில் முகப்புப் பக்கத்தில் உள்ள 'விண்ணப்ப நிலை' என்ற சாளரத்தின் மூலன் உங்கள் விண்ணப்ப நிலையை கண்காணிக்கலாம்.

5. *குறைகளை நிவர்த்தி செய்யும் க்ரிஷி ரக்ஷக் போர்ட்டல் & உதவி எண்கள்* (KRPH): விவசாயிகளின் சந்தேகங்களுக்குத் தீர்வு மற்றும் குறைகளைத் தீர்ப்பதற்காக, KRPH-இன் கீழ் ஒரு பிரத்தியேக, மையப்படுத்தப்பட்ட, கட்டணமில்லா தொலைபேசி எண் (14447 அல்லது வாட்ஸ்அப் எண். 7065514447) ஏற்படுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளின் எந்தவொரு கேள்விகளுக்கும் அல்லது புகார்களுக்கும் ஒரு தனித்துவமான டிக்கெட் எண்ணைப் பயன்படுத்தி NCIP போர்டலில் பதிவு செய்யப்படும். விவசாயிகளின் குறைகள் பதிவு செய்யப்பட்டு, குறிப்பிட்ட நேரத்திற்குள் தீர்வுகாண சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனம், வங்கிகள், CSC மின் ஆளுமை, மாநிலம் மற்றும் மாவட்டங்களுக்கு அனுப்பப்படும்.

**தமிழ்நாட்டில் PM-FBY-ஐ செயல்பாடுகள்**

- அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டு திட்டம் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. சமீப ஆண்டுகளில், இது மாநில அரசு ஆதரவுபெற்ற ‘கலைஞர் உழவர் காப்புத் திட்டம்’ உடன் இணைக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.
- இந்தத் திட்டம் மாநிலத்தின் முக்கியமான இரு பயிர் பருவங்களிலும் – குருவை மற்றும் சாம்பா/தளடி – செயல்பாட்டில் உள்ளது.
- மேலும் தகவல்களுக்கு, மாவட்ட நிர்வாகங்களையும் மாநில/மாவட்ட வேளாண் இணையதளங்களை (TNAGRISNET / மாவட்ட இணையதளங்கள்) தொடர்பு கொள்ளவும்.

**மறுசீரமைக்கப்பட்ட வானிலை அடிப்படையிலான பயிர்க் காப்பீட்டுத் திட்டங்கள் (RWBCIS)**

தற்போது இரண்டு காப்பீட்டுத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. அவை, PM-FBY மற்றும் RWBCIS. மகசூலை மதிப்பிடுவதற்கு நிலையான அல்லது அங்கீகரிக்கப்பட்ட முறை இல்லாத சில பயிர்களுக்குக் காப்பீடு வழங்குவதற்கும், முந்தைய NAIS திட்டத்தின் கீழ் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் வானிலை

அடிப்படையிலான பயிர்க் காப்பீட்டுத் திட்டம் (WBCIS) 2008-09 ஆம் ஆண்டில் 20 மாநிலங்களில் ஒரு முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு, பின்னர் 2015-16 முதல் அது முழுமையான திட்டமாக நாடெங்கும் தொடங்கப்பட்டது. குறைவான அல்லது மிகையான மழைப்பொழிவு, அதிக அல்லது குறைந்த வெப்பநிலை, விளைச்சலுக்கு பாதகமான வானிலை ஆகிய நிகழ்வுகளுக்கு எதிராக விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டுப் பாதுகாப்பை வழங்க WBCIS நோக்கமாகக் கொண்டுள்ளது. மிகக் குறுகிய காலத்திற்குள் காப்பீடு தொடர்பான உரிமைகோரல்களைத் தீர்க்கும் அம்சங்களையும் இது கொண்டுள்ளது. இந்தத் திட்டம் PM-FBY இன் அடிப்படையில் மேலும் மறுசீரமைக்கப்பட்டு, 2016 காரீஃப் பருவம் முதல் நாட்டில் மறுசீரமைக்கப்பட்ட வானிலை அடிப்படையிலான பயிர்க் காப்பீட்டுத் திட்டமாக (RWBCIS) செயல்படுகிறது. இந்தத் திட்டங்கள் 23 மாநிலங்கள்/ யூ. பிரதேசங்களில் 20 பொதுக் காப்பீட்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன, இதில் 5 அரசுத் துறை நிறுவனங்களும் அடங்கும். இத்திட்டத்தில் பிரீமிய விகிதம் PM-FBY திட்டத்தில் உள்ளது போன்றே இருக்கின்றது.

PMFBY மற்றும் RWBCIS திட்டங்களுக்கிடையேயான அடிப்படை வேறுபாடு என்னவெனில் அது காப்பீட்டுத் தொகையை கணக்கிடுவதற்கான வழிமுறைகளாகும். RWBCIS செயற்கைக்கோள் புகைப்படங்கள், ட்ரோன்கள், மொபைல் செயலி போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களை (தரவுகளைப்) பயன்படுத்திப் பயிர் இழப்புகளைத் துல்லியமாக மதிப்பிட்டு, விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குகிறது. குறைந்த அல்லது அதிகப்படியான மழைப்பொழிவு, வெப்பநிலை ஏற்ற-இறக்கங்கள் மற்றும் ஈரப்பதம் போன்ற பிற தரவுகள் பயிர் விளைச்சலின் குறிகாட்டியாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இந்தத் தரவுகள் வானிலையில் பெரிய விலகல் (மாற்றம்) ஏற்பட்டுள்ளதா, அவை மகசூல் இழப்புகளை ஏற்படுத்தியதா அல்லது இல்லையா என்பது தொகுதி/ மாவட்ட அளவில் (பெரிய பரப்பளவில்) வழங்குகிறது. இதன்மூலம், வழக்கமான மகசூல் இழப்பு அடிப்படையிலான பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தைவிட மறுசீரமைக்கப்பட்ட வானிலை அடிப்படையிலான பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் விவசாயிகளின் இன்சூரன்ஸ் கோரிக்கைகள் விரைவாகத் தீர்வு காணப்படுகிறது.

**ஆதாரங்கள்:**


- DAFW. 2023. Pradhan Mantri Fasal Bima Yojana (PM-FBY). Operational Guidelines (PMFBY)-2023. Department of Agriculture & Farmers Welfare, Govt of India.
- http://pmfby.gov.in
- DAFW 2023. YES-TECH manual (2023). Pradhan Mantri Fasal Bima Yojana (PM-FBY). Department of Agriculture & Farmers Welfare, Govt of India.
- PIB. 2025. Pradhan Mantri Fasal Bima Yojana turns Nine. Press Information Bureau. Posted on 17 Feb 2025. Release ID: 2104175

## (16) Pradhan Mantri Kisan Maandhan Yojana (PMKMY)

**What is PM-KMY?** The Pradhan Mantri Kisan Maandhan Yojana (PM KMY) is a voluntary, contributory pension scheme for small and marginal land-holding farmers in India. Launched in Sept 2019, it provides a monthly pension of ₹ 3,000 after the beneficiary turns the age of 60.

**Eligibility**

- Small and marginal farmers with cultivable landholding of up to 2 ha.
- Age 18-40 years
- The farmer's name should appear in the land records as of 01 Aug 2019
- As per the recent guideline, landless farmers were also included in the scheme (PIB 2023 Release ID: 1944374)

**Ineligible farmers**

- Large farmers who have more than 2 ha of land
- Farmers covered under any other statutory pension schemes such as the National Pension Scheme (NPS), Employees' State Insurance Corporation scheme, Employees' Fund Organisation Scheme, etc.
- Farmers who have opted for Pradhan Mantri Shram Yogi Maandhan Yojana and Pradhan Mantri Vyapari Maandhan administered by the Ministry of Labour & Employment.
- Those who have institutional lands (Government lands).
- Former and present constitutional post holders, elected members at the District level, M.Ps and MLAs.
- Retired and serving government officials.
- Income Tax payers

**Benefits**

- A fixed monthly pension of ₹3,000 upon reaching the age of 60 years.
- Voluntary and contributory pension scheme.
- The Central Government, through the Department of Agriculture and Farmers' Welfare, provides matching contributions to the pension fund account of the farmer.
- Family Pension: If a subscriber passes away **while receiving their pension**, their spouse will be entitled to a family pension equal to 50% of the amount. The family pension benefit is exclusively for the spouse.
- The farmer may choose to use their PM-KISAN benefits (i.e., ₹ 6000 per year) to make voluntary contributions to the scheme. For this, an eligible farmer must sign and submit an enrolment-cum-auto-debit-mandate form. This will authorise automatic debit of their contributions from the bank account where their PM-KISAN benefits are credited.

**Premium**

Vary from ₹55 to ₹200 per month, depending on their age at the time of joining.

| Entry Age | Farmers' Contribution (₹) | Governments' Contribution (₹) | Total Contribution (₹) |
|---|---|---|---|
| 18 | 55 | 55 | 110 |
| 19 | 58 | 58 | 116 |
| 20 | 61 | 61 | 122 |
| 21 | 64 | 64 | 128 |
| 22 | 68 | 68 | 136 |
| 23 | 72 | 72 | 144 |
| 24 | 76 | 76 | 152 |
| 25 | 80 | 80 | 160 |
| 26 | 85 | 85 | 170 |
| 27 | 90 | 90 | 180 |
| 28 | 95 | 95 | 190 |
| 29 | 100 | 100 | 200 |
| 30 | 105 | 105 | 210 |
| 31 | 110 | 110 | 220 |
| 32 | 120 | 120 | 240 |
| 33 | 130 | 130 | 260 |
| 34 | 140 | 140 | 280 |
| 35 | 150 | 150 | 300 |
| 36 | 160 | 160 | 320 |
| 37 | 170 | 170 | 340 |
| 38 | 180 | 180 | 360 |
| 39 | 190 | 190 | 380 |
| 40 | 200 | 200 | 400 |

**Implementation Agency**

The Life Insurance Corporation of India (LIC) acts as the Pension Fund Manager.

**How to apply?** Beneficiary registration is facilitated through Common Service Centres (CSCs) and State Governments.

- Visit the nearest Common Service Centre (CSC) or contact the Nodal Officer (PM-KMY) appointed by the State or UT Governments.
- Registration can also be completed through the scheme's official web portal at www.pmkmy.gov.in.
- The beneficiary will provide the following information at the time of registration: Farmer’s / Spouse’s name and date of birth, Bank account number, IFSC/ MICR Code, Mobile Number, and Aadhaar Number.
- Pay the Initial contribution amount, in cash, to the Village Level Entrepreneur (VLE).
- The VLE will make entry of Aadhaar number, Name of subscriber and Date of birth as printed on Aadhaar card for authentication, and complete the online registration by filling up the details like Bank Account details, Mobile Number, Email Address, Spouse (if any) and Nominee details will be captured.

- The computer will auto-calculate the monthly contribution payable according to the age of the Subscriber.
- Enrolment-cum-Auto Debit Mandate Form will be printed and will be further signed by the subscriber. VLE will scan the same and upload it into the system.
- A unique Kisan Pension Account Number (K-PAN) will be generated, and a Kisan Card will be printed.

**Exit from the Scheme**: Farmer (subscriber) may exit the scheme before and after attaining 60 years.

1. If he/she exits less than 10 years after joining, he/she will be provided his contribution plus interest as per saving bank rate.

2. If a subscriber exits after 10 years but before 60-year age, he/she will be provided his/her contribution plus accumulated interest, either as earned by the Pension Fund or at the savings bank rate, whichever is higher.

3. If a subscriber dies while making regular contributions, his/her spouse can continue the scheme with regular contributions (up to the 60$^{th}$ year of the original subscriber) or exit by receiving the subscriber's contribution plus accumulated interest, either as earned by the Pension Fund or at the saving bank rate, whichever is higher.

**Sources:**
https://pmkmy.gov.in/scheme/pmkmy
https://www.pib.gov.in/PressReleaseIframePage.aspx?PRID=2053142

## (16) பிரதம மந்திரி விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் (PMKMY)

**PM-KMY என்றால் என்ன?** பிரதான் மந்திரி கிசான் மான்தன் யோஜனா என்பது நிலம் வைத்திருக்கும் இந்திய சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கான தன்னார்வ, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமாகும். செப்டம்பர் 2019-ல் தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தின் மூலம் பயனாளிகளுக்கு, 60 வயதை அடைந்த பிறகு மாதாந்திர ஓய்வூதியமாக ரூ. 3,000 வழங்கப்படும்.

**தகுதிகள்**

- இரண்டு ஹெக்டேர் வரை சாகுபடி செய்யக்கூடிய நிலம் வைத்திருக்கும் சிறு மற்றும் குறு விவசாயிகள்
- வயது: 18-40 ஆண்டுகள்
- 01.08.2019 அன்றைய தேதிக்கு முன் உள்ள நிலப் பதிவேடுகளில் விவசாயியின் பெயர் இடம் பெற்றிருக்க வேண்டும்
- சமீபத்திய திருத்தத்தின்படி, நிலமற்ற விவசாயிகளும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர் (PIB 2023 வெளியீட்டு ID: 1944374)

**இத்திட்டத்திற்கு தகுதியற்ற விவசாயிகள்**

- இரண்டு ஹெக்டேருக்கும் அதிகமான நிலம் வைத்திருக்கும் பெரிய விவசாயிகள்
- தேசிய ஓய்வூதியத் திட்டம், தொழிலாளர்களுக்கான அரசு காப்பீட்டுக் கழகத்தின் திட்டம், தொழிலாளர் நிதி அமைப்புத் திட்டம் போன்ற பிற சட்டப்பூர்வ ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் பயன்பெறும் விவசாயிகள்.
- தொழிலாளர்கள் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தால் நிர்வகிக்கப்படும் பிரதமரின் ஷ்ரம் யோகி மான்தன் மற்றும் பிரதமரின் வியாபாரி மான்தன் ஆகிய திட்டங்களின் கீழ் பயன்பெறும் விவசாயிகள்.
- அரசு / புறம்போக்கு நிலத்தை வைத்திருப்பவர்கள்.
- முன்னாள் மற்றும் இந்நாள் அரசியலமைப்பு பதவியை வகிப்பவர்கள், மாவட்ட அளவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள்.
- ஓய்வு பெற்ற மற்றும் அரசு பதவியில் உள்ள அரசு அதிகாரிகள்
- வருமானவரி செலுத்துவோர்

**இத்திட்டத்தின் நன்மைகள்**

- 60 வயதை எட்டியவுடன் ரூ 3,000 நிலையான மாதாந்திர ஓய்வூதியம்.
- தன்னார்வ மற்றும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்.
- மத்திய அரசு, வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை மூலம் விவசாயிகளின் ஓய்வூதிய நிதிக் கணக்கிற்கு சமமான பங்களிப்புகளை வழங்குகிறது.
- குடும்ப ஓய்வூதியம்: ஒரு சந்தாதாரர் ஓய்வூதியத்தைப் பெறும்போது இறந்துவிட்டால், அவரது மனைவி 50%-க்கு சமமான குடும்ப ஓய்வூதியத்தைப் பெறத் தகுதியுடையவராகிறார். குடும்ப ஓய்வூதியப் பலன் வாழ்க்கைத் துணைவருக்கு மட்டுமே கிடைக்கும்.

- இந்தத் திட்டத்திற்கு பிரீமியம் செலுத்தும் விவசாயிகள் தங்களுக்குக் கிடைக்கும் PM-KISAN தொகையை (அதாவது ஆண்டுக்கு ரூ. 6000) ஓய்வூதியக் கணக்கில் வரவு வைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்காக, தகுதியான விவசாயிகள் enrolment-cum-autodebit படிவத்தில் கையொப்பமிட்டு வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். பிரதமரின் விவசாயிகள் கௌரவ நிதி வரவு வைக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கிலிருந்து அவர்களின் பிரீமியம் தானாகவே பிடித்தம் செய்யப்பட்டு அவர்களின் ஓய்வூதியக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

**காப்பீட்டுத் தவணை**

இத்திட்டத்தில் ஒருவர் சேரும் நேரத்தில் அவர்களின் வயதைப் பொறுத்து பிரீமியம் மாதத்திற்கு ரூ 55 முதல் ரூ. 200 வரை மாறுபடும்.

| நுழைவு வயது | விவசாயிகளின் பங்களிப்பு (ரூ) | அரசின் பங்களிப்பு (ரூ) | மொத்த பங்களிப்பு (ரூ) |
|---|---|---|---|
| 18 | 55 | 55 | 110 |
| 19 | 58 | 58 | 116 |
| 20 | 61 | 61 | 122 |
| 21 | 64 | 64 | 128 |
| 22 | 68 | 68 | 136 |
| 23 | 72 | 72 | 144 |
| 24 | 76 | 76 | 152 |
| 25 | 80 | 80 | 160 |
| 26 | 85 | 85 | 170 |
| 27 | 90 | 90 | 180 |
| 28 | 95 | 95 | 190 |
| 29 | 100 | 100 | 200 |
| 30 | 105 | 105 | 210 |
| 31 | 110 | 110 | 220 |
| 32 | 120 | 120 | 240 |
| 33 | 130 | 130 | 260 |
| 34 | 140 | 140 | 280 |
| 35 | 150 | 150 | 300 |
| 36 | 160 | 160 | 320 |
| 37 | 170 | 170 | 340 |
| 38 | 180 | 180 | 360 |
| 39 | 190 | 190 | 380 |
| 40 | 200 | 200 | 400 |

**செயல்படுத்தல் முகமை**

இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (எல்.ஐ.சி) இத்திட்டத்திற்கான ஓய்வூதிய நிதி மேலாளராகச் செயல்படும்.

**விண்ணப்பிப்பது எப்படி?** பொது சேவை மையங்கள் (CSCs) மற்றும் மாநில அரசுகள் உதவியுடன் விவசாயிகள் இத்திட்டத்தில் தங்களை பதிவு செய்துகொள்ளலாம்.

- அருகிலுள்ள பொது சேவை மையத்திற்குச் செல்லுங்கள் அல்லது மாநில /யூ. பிரதேச அரசுகளால் நியமிக்கப்பட்ட திட்டச் செயலாக்க அதிகாரியை (PM-KMY) தொடர்பு கொள்ளவும்.

- இத்திட்டத்தின் அதிகாரப்பூர்வ இணையதள வாயிலாகவும் (www.pmkmy.gov.in) பதிவு செய்யலாம்.
- பதிவு செய்யும்போது பயனாளிகள் பின்வரும் தகவல்களை வழங்க வேண்டும்: விவசாயி, அவரது மனைவி/கணவர் பெயர் மற்றும் பிறந்த தேதி, வங்கிக் கணக்கு எண், வங்கியின் IFSC / MICR எண், மொபைல் எண், ஆதார் எண் ஆகியன.
- முதல் பிரீமியம் தொகையை மட்டும் கிராமத் தொழில் முனைவோரிடத்தில் (VLE) ரொக்கமாகச் செலுத்த வேண்டும்.
- கிராமத் தொழில் முனைவோர் ஆதார் எண், சந்தாதாரரின் பெயர், பிறந்த தேதி ஆகியவற்றை ஆதார் அட்டையில் உள்ளவாறு இணையதளத்தில் பதிவேற்றி சரிபார்ப்பார்கள். அத்துடன், பயனாளிகளின் வங்கிக் கணக்கு விவரங்கள், மொபைல் எண், மின்னஞ்சல் முகவரி, மனைவி/கணவர் (இருந்தால்) மற்றும் நியமனதாரர் விவரங்கள் போன்ற விவரங்களைப் பூர்த்தி செய்வதன் மூலம் ஆன்லைன் பதிவு முழுமைபெறும்.
- சந்தாதாரரின் வயதுக்கேற்ப செலுத்த வேண்டிய மாதாந்திர பிரீமியம் தொகையை கணினி தானாகக் கணக்கிடும்.
- இதன்பின்னர், Enrolment-cum-Auto Debit படிவம் அச்சிடப்பட்டு வரும். அதில் சந்தாதாரர் கையொப்பமிட்டவுடன், VLE அதனை ஸ்கேன் (ஒளிவருடி) செய்து கணினியில் பதிவேற்றுவார்கள்.
- இதன்பின்னர், ஒரு தனித்துவமான கிசான் ஓய்வூதிய கணக்கு எண் (K-PAN) உருவாக்கப்பட்டு கிசான் கார்டு அச்சிடப்படும்.

**திட்டத்திலிருந்து வெளியேறுதல்**: விவசாயிகள் (சந்தாதாரர்) 60 வயதை அடைவதற்கு முன் அவர்கள் விரும்பினால் இத்திட்டத்திலிருந்து வெளியேறலாம்.

1. சந்தாதாரர் 10 ஆண்டுகளுக்கும் முன்னமே வெளியேறினால், சேமிப்பு வங்கி வட்டி விகிதப்படி கணக்கிட்டு அவருடைய பிரீமியம் மற்றும் வட்டி சேர்த்து வழங்கப்படும்.
2. சந்தாதாரர் 10 ஆண்டுகள் கழித்து ஆனால் 60 வயதுக்கு முன்பே வெளியேறினால், அதுவரை அவரது பிரீமியம் + ஓய்வூதிய நிதியில் அதுவரை சேர்க்கப்பட்ட மொத்தப் பங்களிப்பு அல்லது அவரது பிரீமியத்திற்கான வட்டி, இதில் எது அதிகமோ அது வழங்கப்படும்.
3. தொடர்ந்து பிரீமியம் செலுத்திக்கொண்டு வரும்பொழுது சந்தாதாரர் இறந்துவிட்டால், அவரது மனைவி பிரீமியம் செலுத்தி இத்திட்டத்தில் தொடரலாம் (சந்தாதாரரின் 60-ஆவது வயது வரை) அல்லது சந்தாதாரரின் அதுவரை திரட்டிய ஓய்வூதிய நிதியை (பிரீமியம் + திரட்டப்பட்ட வட்டி) பெற்றுக்கொண்டு இத்திட்டத்திலிருந்து வெளியேறலாம்.

**ஆதாரங்கள்:**

https://pmkmy.gov.in/scheme/pmkmy
https://www.pib.gov.in/PressReleaseIframePage.aspx?PRID=2053142

## (17) Pradhan Mantri Kisan Samman Nidhi (PM-KISAN)

**What is PM-KISAN?** It is a Central Sector Scheme (fully funded by the Central Government), implemented w.e.f. 1.12.20218 to supplement the financial needs of all landholding farmers' families in procuring various agricultural inputs to ensure proper crop health and to get enhanced yield. Under the Scheme, an amount of ₹6,000/- per year is transferred by the Central Government directly into the bank accounts of the eligible farmers (Aadhar Based Payment System- ABPS), in three equal instalments or once every 4 months @ ₹ 2,000/- per instalment under the Direct Benefit Transfer mode.

**Eligibility**

- All family who has own cultivable land (irrespective of the size of land holding) in their name on or before 1st Feb 2019 (implementation of this scheme).
- Land title or deed transferred after this date shall not be considered for eligibility for benefits under the scheme for the next 5 years, except for the transfer of land on succession in case of the death of the landholder.
- Definition of family for the scheme is husband, wife and minor children.
- In case of landholding owned by family members that are spread across different revenue records in the same or different villages or districts or States, the farmer's family will be entitled to get the benefit at one place only. The State Nodal Officers (SNOs) will ensure that no duplicate payments are released to any family.
- Micro land holdings, which are not cultivable, are excluded from the benefit under the scheme.
- If agricultural land is being used for non-agricultural purposes, then the farmer families are not covered for benefits under the scheme.

**Persons not eligible for the scheme**: Exclusion categories for the scheme are:

1. All Institutional Land holders
2. Farmer families which belong to one or more of the following categories:

- Present and Past-Holders of constitutional posts, Ministers/, MPS, MLAs, Mayors of Municipal Corporations, former and present Chairpersons of District Panchayats.
- Serving or retired employees of Central/ State Government, State PSEs and attached offices /Autonomous Institutions under Government, as well as regular employees of the Local Bodies.
- All superannuated/retired pensioners whose monthly pension is ₹10,000/ p.m. or more
- All Persons who paid Income Tax in the last assessment year (If any one member of the family is an income tax payee in the last assessment year, then the family is not eligible for the benefit under the scheme)

**Procedures**

- State Government and UT administration will identify the farmer families which are eligible for support as per the scheme guidelines.

- The prevailing land-ownership system/record of land in different States/ UT may be used to identify the intended beneficiaries for the transfer of scheme benefits.
- The identified officials by the State /UT Government at the Block/ Taluk/District level will upload the name and other details in the PM-Kisan Portal (www. pmkisan.gov.in).
- Details such as Name, Age, Aadhaar Number, Bank Account details, Land details (Patta / Chitta) and Mobile Number are required (OR) farmers can download the PMKisan Mobile App from https://pmkisan.gov.in or Play Store (OR) go to the website https://pmkisan.gov.in/ and fill the details under '**New Farmer Registration'** or visit to a Common Service Centre (CSC) and fill their details with the help of them.
- Nodal Officers appointed by the State / UT at Block / Taluk/ District level will process the data and transfer it to State Nodal Officers (SNOs).
- SNO finally authenticate the data and uploads them in batches from time to-time on the PMKisan portal.
- The data of beneficiaries uploaded by the SNO passes through a multi-level verification by the National Informatics Centre (NIC), the Public Finance Management System (PFMS) and the banks.
- Based on the verified and validated data, the SNOs sign the **Request for Transfer** (RFT) of funds, containing the total number of beneficiaries contained in a particular batch and the total amount of funds to be transferred for that batch, and upload it on the portal.
- Based on the RFT, the PFMS issues a Fund Transfer Order (FTO).
- Based on the FTO, the Department of Agriculture & Farmers Welfare issues the sanction order for the amount mentioned in the FTO.
- The amount is transferred to the bank accounts of the beneficiaries, held in destination banks, through the accredited bank of the Department and the sponsoring bank of the State/UT Governments, using the PFIMS portal. The destination bank can be a Schedule Bank, Post Office, Rural Bank, Cooperative Bank or any other financial institution. The entire banking transaction is managed and monitored by the National Payment Corporation of India (NPCI).
- The beneficiary lists would be displayed at Panchayats to ensure greater transparency and information.
- **Fill and submit eKYC:** Once the name of the beneficiary appears on the PMKisan portal, fill in your details in the eKYC form and submit. It will help to transfer the money directly to your bank account.
- Farmers can check their status under the PMKisan web portal, including under the rejected List of Beneficiaries.
- If any farmer families are not included in the list of beneficiaries, he or she may approach the District Level Grievance Redressal Monitoring Committee in their district for inclusion of their names in the beneficiary list.

Further, the Government of India has created an exclusive Farmers' Corner in the PM-KISAN web-portal (www.pmkisan.gov.in). This portal provides the following facilities to the farmers through three links:

**1) New Farmer's Registration:** Through this link, the farmers can submit their details online. The online Form has certain mandatory fields as well self-declaration regarding the eligibility. Once the Form is filled-in and submitted successfully by the farmer, the same is forwarded by an automated process to the State Nodal Officer (SNO) for verification. The SNO verifies the details filled-in by a farmer and uploads the verified data on the PM-KISAN portal. Thereafter, the data is processed through an established system for payment.

**2) Edit Aadhaar details**: Through this link, the farmer can edit his/ her name himself/ herself as per the details in the Aadhaar Card. The edited name then gets updated after authentication through the system.

**3) Beneficiary Status**: Through this link, by quoting their Aadhaar Number, Bank Account Number or the registered Mobile Number, the beneficiaries can themselves ascertain the status of payment of their instalments.

**Sources:**

https://pmkisan.gov.in/

https://pmkisan.gov.in/Documents/RevisedFAQ.pdf

## (17) பிரதம மந்திரி விவசாயிகள் கௌரவ நிதித் திட்டம் (PM-KISAN)

**பிஎம்-கிசான் என்றால் என்ன?** இது மத்திய அரசால் முழுமையாக நிதியளிக்கப்படுகின்ற திட்டமாகும். நிலம் வைத்திருக்கும் அனைத்து விவசாயக் குடும்பங்களும் உன்னத முறையில் சாகுபடியை மேற்கொண்டு, அதிக விளைச்சலைப் பெறப் பல்வேறு விவசாய இடுபொருட்களை வாங்குவதற்கான நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய, இத்திட்டம் 1.12.2018 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், தகுதியான விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு (ஆதார் அடிப்படையிலான பணப் பரிவர்த்தனை முறை- ABPS) மத்திய அரசால் ஆண்டிற்கு ரூ. 6,000/- வீதம் நேரடியாக செலுத்தப்படுகிறது. இந்தத் தொகை, நேரடிப் பலன் பரிமாற்ற முறையில், தலா ரூ. 2,000 வீதம், மூன்று சமத் தவணைகளாக அல்லது ஒவ்வொரு 4 மாதங்களுக்கு ஒருமுறை வழங்கப்பட்டு வருகிறது.

**தகுதிகள்**

- 1 பிப்ரவரி, 2019 அன்றோ அல்லது அதற்கு முன்போ தங்கள் பெயரில் சாகுபடி செய்யும் நிலத்தை வைத்திருக்கும் அனைத்துக் குடும்பங்களும் இந்தத் திட்டத்திற்குத் தகுதியுடையவர்கள் (நிலத்தின் அளவைப் பொருட்படுத்தாமல்).
- மேற்படி தேதிக்குப் பிறகு மாற்றப்பட்ட நிலப் பட்டா அல்லது ஆவணம், அடுத்த 5 ஆண்டுகளுக்கு இத்திட்டத்தின் கீழ் பயன் பெற தகுதியற்றவையாகக் கருதப்படும். இருப்பினும், மேற்படி தேதிக்குமுன் வாழ்ந்த நில உரிமையாளர் (குடும்ப தலைவர்/தலைவி) இறந்தால், வாரிசுரிமை அடிப்படையில் பட்டா மாற்றப்படும் பட்சத்தில் அவர்கள் குடும்பமும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும்.
- இத்திட்டத்தில் குடும்பம் என்பதன் வரையறை: கணவர், மனைவி மற்றும் சிறு குழந்தைகள்.
- ஒரே அல்லது வெவ்வேறு கிராமத்தில், மாவட்டத்தில் அல்லது மாநிலங்களில் வெவ்வேறு ஆவணங்களில் குடும்ப உறுப்பினர்கள் நிலங்கள் வைத்திருந்தாலும், மேற்படிக் குடும்பம் ஓர் இடத்தில் மட்டுமே இத்திட்டத்தின் பயனைப் பெற முடியும். எந்தவொரு குடும்பத்திற்கும் இருமுறை பணம் செலுத்தப்படவில்லை என்பதை மாநில ஒருங்கிணைப்பு அதிகாரிகள் உறுதிசெய்ய வேண்டும்.
- பயிர் சாகுபடிக்கு இயலாத மிகக்குறைந்த நிலம் வைத்திருப்பவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியற்றவர்கள்.
- விவசாய நிலமாக இருந்தாலும், விவசாயம் அல்லாத பிற நோக்கங்களுக்காக அந்த நிலம் பயன்படுத்தப்பட்டால், அந்த விவசாயக் குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறத் தகுதியற்றவர்களாகிறார்கள்.

**இத்திட்டத்திற்குத் தகுதியற்ற நபர்கள்**

1. அனைத்து வகையான அரசு / கோயில் நிலங்களை வைத்திருப்பவர்கள்.
2. பின்வரும் வகைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் உள்ள விவசாயக் குடும்பங்கள்:

- தற்போதைய மற்றும் முன்னாள் அரசியலமைப்புப் பதவி வகிப்பவர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர்கள், முன்னாள் மற்றும் தற்போதைய மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள்.
- மத்திய/ மாநில அரசு, பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட அலுவலகங்கள்/ அரசுக்கு உட்பட்ட தன்னாட்சி

நிறுவனங்களில் பணிபுரியும் அல்லது ஓய்வு பெற்ற ஊழியர்கள், மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் நிரந்தர ஊழியர்கள்.

- மாதாந்திர ஓய்வூதியம் ரூ. 10,000/- அல்லது அதற்கு மேல் பெறும் அனைத்து ஓய்வூதியதாரர்கள்.
- கடந்த மதிப்பீட்டு ஆண்டில் வருமான வரி செலுத்திய நபர்கள் (குடும்பத்தில் யாராவது ஒருவர் கடைசி மதிப்பீட்டு ஆண்டில் வருமான வரி செலுத்தியிருந்தாலும், அந்தக் குடும்பம் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறத் தகுதியற்றதாகும்).

**நடைமுறைகள்**

- மாநில அரசு மற்றும் யூனியன் பிரதேச நிர்வாகம், மத்திய அரசின் திட்ட வழிகாட்டுதல்களின்படி நிதி உதவிப் பெறத் தகுதியுள்ள விவசாயக் குடும்பங்களை அடையாளம் காணும்.
- இத்திட்டப் பலன்களைப் பெறுவதற்குத் தகுதியுடைய பயனாளிகளைக் கண்டறிய, மாநிலங்கள்/ யூ. பிரதேசங்களில் தற்போது நடைமுறையில் உள்ள நில உடைமை முறை/ நிலப் பதிவேடுகளைப் பயன்படுத்தலாம்.
- மாநில/ யூ. பிரதேச அரசால் நியமிக்கப்பட்ட வட்டம் / தாலுகா / மாவட்ட அளவிலான அதிகாரிகள், தகுதியான விவசாயிகளின் பெயர் மற்றும் பிற விவரங்களை PMKISAN இணையதளத்தில் (www.pmkisan.gov.in) பதிவேற்றுவார்கள்.
- இத்திட்டத்தில் இணைய, விவசாயிகளின் பெயர், வயது, ஆதார் எண், வங்கிக் கணக்கு விவரங்கள், நில விவரங்கள் (பட்டா/ சிட்டா) மற்றும் மொபைல் எண் போன்ற விவரங்கள் தேவைப்படும்.
- விவசாயிகள் இத்திட்டத்தில் இணைய, PMKISAN மொபைல் செயலியைக் கூகிள் ப்ளே ஸ்டோரிலிருந்து பதிவிறக்கம் செய்து அல்லது https://pmkisan.gov.in/ என்ற இணையதளத்திற்குச் சென்று 'புதிய விவசாயி பதிவு' என்ற சாளரத்தின் கீழ் விவரங்களைப் பூர்த்தி செய்யலாம் அல்லது பொதுச் சேவை மையத்திற்கு சென்று அவர்களின் உதவியுடன் தங்கள் விவரங்களைப் பூர்த்தி செய்யலாம்.
- மாநில/ யூ. பிரதேசத்தால் தொகுதி/ தாலுகா/ மாவட்ட அளவில் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அதிகாரிகள் தரவுகளைப் பரிசீலித்து மாநில ஒருங்கிணைப்பு அதிகாரிகளுக்கு அனுப்புவார்கள்.
- மாநில ஒருங்கிணைப்பு அதிகாரிகள், இறுதியாகத் தரவுகளைச் சரிபார்த்து, தொகுப்புத் தொகுப்பாக பிஎம்-கிசான் இணையதளத்தில் பதிவேற்றுவார்கள்.
- மாநில ஒருங்கிணைப்பு அதிகாரிகளால் பதிவேற்றப்பட்ட பயனாளிகளின் தரவு, தேசியத் தகவல் மையம் (NIC), பொது நிதி மேலாண்மை அமைப்பு (PFMS) மற்றும் வங்கிகள் மூலம் பல-நிலை சரிபார்ப்புக்கு உட்படுத்தப்படுகிறது.
- சரிபார்க்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், மாநில ஒருங்கிணைப்பு அதிகாரிகள், நிதி மாற்றத்திற்கான கோரிக்கையில் (RFT) கையெழுத்திட்டு இணையதலத்தில் பதிவேற்றுவார்கள். இந்த RFT கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகுப்பில் உள்ள மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் அந்தத் தொகுப்பிற்கு மாற்றப்பட வேண்டிய மொத்த நிதியின் அளவு ஆகியவை இருக்கும்.
- RFT கோரிக்கையின் அடிப்படையில், PFMS நிதி பரிமாற்ற உத்தரவை (FTO) வழங்குகிறது.

- நிதி பரிமாற்ற உத்தரவின் (FTO) அடிப்படையில், வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை, நிதி பரிமாற்ற உத்தரவில் உள்ள தொகைக்கான அனுமதி உத்தரவை வெளியிடும்.
- PFMS போர்ட்டலைப் பயன்படுத்தி, மாநில/யூ. பிரதேச அரசுகளின் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள்மூலம், விவசாயிகள் கணக்கு வைத்திருக்கும் வங்கிக்கு இந்தத் தொகை மாற்றப்படுகிறது. விவசாயிகள் கணக்கு வைத்திருக்கும் வங்கி, பட்டியலிடப்பட்ட வங்கியாகவோ, அஞ்சல் அலுவலகம், கிராமப்புற வங்கி, கூட்டுறவு வங்கி அல்லது வேறு ஏதேனும் நிதி நிறுவனமாக இருக்கலாம். இந்த அனைத்து வங்கி பரிவர்த்தனைகளும், இந்தியத் தேசிய கொடுப்பனவு கழகத்தால் (NPCI) நிர்வகிக்கப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.
- வெளிப்படைத்தன்மை மற்றும் தகவலுக்காக, பயனாளிகளின் பட்டியல் பஞ்சாயத்து அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்படும்.
- **eKYC-ஐ நிரப்பிச் சமர்ப்பிக்கவும்**: பயனாளியின் பெயர் PMKisan இணையதளத்தில் தோன்றியவுடன், eKYC படிவத்தில் உங்கள் விவரங்களைப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கவும். இது உங்கள் வங்கிக் கணக்கிற்குப் பணம் நேரடியாக மாற்றப்பட உதவும்.
- விவசாயிகள் தங்கள் விண்ணப்பத்தின் நிலையை PMKisan இணையதளத்தில் சரிபார்க்கலாம். இந்தப் போர்டலில் நிராகரிக்கப்பட்ட பயனாளிகள் பட்டியலையும் காணலாம்.
- பயனாளிகளின் பட்டியலில் ஏதேனும் சில விவசாயக் குடும்பங்கள் விடுபட்டிருந்தால், அவர்கள் தங்கள் பெயர்களைப் பயனாளிகள் பட்டியலில் சேர்ப்பதற்காகத் தங்கள் மாவட்டங்களில் உள்ள மாவட்ட அளவிலான குறைதீர் கண்காணிப்பு முகமைகளை அணுகலாம்.

மேலும், மத்திய அரசு, PMKISAN இணையதளத்தில் (www.pmkisan.gov.in) ஒரு பிரத்தியேக 'விவசாயிகள் பகுதியை' உருவாக்கியுள்ளது. இதில் பின்வரும் வசதிகள் உள்ளன:-

1. ***புதிய விவசாயிகள் பதிவு***: இந்த இணைப்பின் மூலம், விவசாயிகள் தங்கள் விவரங்களை ஆன்லைனில் சமர்ப்பிக்கலாம். ஆன்லைன் படிவத்தில் கட்டாயமாகப் பதிவிட வேண்டிய சில பகுதிகள் மற்றும் தகுதி தொடர்பான சுய உறுதிமொழிகள் உள்ளன. புதிய விவசாயிகளின் ஆன்லைன் படிவம் பூர்த்தி செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டவுடன், தானியங்கி செயல்முறைமூலம் அது மாநில ஒருங்கிணைப்பு அதிகாரிக்கு (SNO) சரிபார்ப்பிற்காக அனுப்பப்படுகிறது. மாநில ஒருங்கிணைப்பு அதிகாரி, புதிய விவசாயியால் பூர்த்தி செய்யப்பட்ட விவரங்களைச் சரிபார்த்து, சரிபார்க்கப்பட்ட தரவை PM-KISAN போர்ட்டலில் பதிவேற்றுகிறார். அதன்பிறகு, இந்தத் தரவுகள், பணம் செலுத்துவதற்கு நிறுவப்பட்ட அமைப்புமூலம் பரிசீலிக்கப்பட்டுத் தீர்வு வழங்கப்படும்.
2. **ஆதார் விவரங்களைத் திருத்துதல்**: மேற்குறிப்பிட்டுள்ள இணைப்பின்மூலம், விவசாயி தனது பெயரை ஆதார் அட்டையில் உள்ளவாறு அவரே திருத்திக்கொள்ளலாம். திருத்தப்பட்ட பெயர் மின்னணு முறையில் அங்கீகரிக்கப்பட்ட பிறகு புதுப்பிக்கப்படும்.
3. **பயனாளிகளின் நிலையை அறிந்துகொள்ளுதல்**: இந்த இணைப்பின் மூலம், விவசாயிகள் தங்களின் ஆதார் எண் அல்லது வங்கிக் கணக்கு எண் அல்லது பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண்ணை உள்ளிட்டு, பயனாளிகள் தங்கள் தவணைத் தொகையின் நிலையைத் தெரிந்துகொள்ளலாம்.

## (18) Pradhan Mantri Krishi Sinchayee Yojana (PMKSY)

**What is PMKSY**? Pradhan Mantri Krishi Sinchayee Yojana was launched by the Central Government in 2015 with mottos like "*Har Khet Ko Pani*" (every field gets water) + *"*More Crop per Drop*" (efficient use of water). The focus of the Centrally sponsored Scheme is to expand assured irrigation (ensure water reaches every farm), improve water use efficiency, restore traditional water bodies, promote micro-irrigation (drip, sprinkler), improve water management/ supply infrastructure, rainwater harvesting, etc.

**Components/Sub-schemes of PMKSY**

1. **Accelerated Irrigation Benefit Programme** (AIBP): This component is implemented by the Department of Water Resources, River Development and Ganga Rejuvenation, Ministry of Jal Shakti. It will focus on faster completion of ongoing *Major and Medium Irrigation* projects. Central funding of 90% of the water component for two national projects, namely the Renukaji Dam Project (Himachal Pradesh) and Lakhwar Multipurpose Project (Uttarakhand), has been provisioned.
2. **Har Khet Ko Pani** (HKKP): This component is implemented by the Ministry of Jal Sakhti. It aims to provide water to every field through various sub-components like Command Area Development & Water Management (CAD&WM), Surface Minor Irrigation (SMI), Repair, Renovation and Restoration (RRR) of Water Bodies and Ground Water Development (GWD).
3. **Per Drop More Crop** (PDMC): This component is implemented by the Department of A&FW, Ministry of Agriculture. From the year 2022-23, the PDMC Scheme is being implemented under the Pradhan Mantri Rashtriya Krishi Vikas Yojana (PM-RKVY), focusses on enhancing water use efficiency on micro irrigation (Drip/Sprinkler).
4. **Watershed Development**: This sub-scheme is implemented by the Department of Land Resources, M/o Rural Development, on ridge area treatment, drainage line treatment, and water harvesting structures.
5. **Sustainable water conservation practices:** The PMKSY also have provision to support activities which enhance recharge of aquifers and introduce sustainable water conservation practices by exploring the feasibility of reusing treated municipal wastewater for peri-urban agriculture and attract greater private investment in precision irrigation systems.

**Implementing Agency**

The PMKSY is implemented by the Ministry of Jal Sakhti, the Ministry of Agriculture and the Ministry of Rural Development as stated above. The implementation is supervised and monitored by an Inter-Ministerial National Steering Committee (NSC), constituted under the Chairmanship of the Prime Minister with Union Ministers from concerned Ministries. A National Executive Committee (NEC) has been constituted under the Chairmanship of the Vice Chairman, NITI Aayog, to oversee programme implementation, allocation of resources, inter-ministerial coordination, monitoring & performance assessment, addressing administrative issues, etc. At the State Level, a Nodal Agency has been identified to implement the Scheme.

**Benefits to farmers**

1. *Subsidy for irrigation equipment*: Farmers get financial assistance/ subsidy to install drip, sprinkler systems, water-lifting devices, etc. This lowers their capital cost.
2. *Efficient water use*: Less wastage of water, reduced irrigation costs (fuel/electricity), and more reliable watering of crops. Enables "more crop per drop."
3. *Assured irrigation*: Through the creation/ repair of water sources, canals, and distribution infrastructure, farmers get more reliability in water supply.
4. *Extended cultivable area*: Fields which were previously uncultivable for lack of water might become usable.
5. *Reduced cost & risk*: Since water supply is better and irrigation more efficient, the risk of crop loss due to water shortage is reduced; input costs (e.g., labour, pumping) can go down.

**Subsidy Rates / Support Patterns**

- Under the PDMC, the Central Government provides financial assistance @ 55% for small and marginal farmers and @ 45% for other farmers for the installation of Drip and Sprinkler systems.
- Besides, some States provide additional incentives/subsidies to farmers in the form of a top-up for encouraging the installation of Micro Irrigation.
- There is often a 'ceiling' on the assistance per beneficiary (for micro-irrigation), *e.g.,* up to 5 hectares in many cases.
- If a farmer has already availed a subsidy, they may not be eligible again for certain components (like renewal of micro-irrigation laterals) for a fixed gap (e.g., 7 years).

**How to apply for a subsidy under PMKSY?**

*1. Eligibility*: The beneficiary must be a farmer (own land or appropriate rights). Small & marginal farmers, as well as other categories (this determines subsidy %) of farmers, are eligible to apply. The land should be within the acreage limits (e.g., up to 5 ha for micro-irrigation subsidy). Should not have availed the benefit for that particular component recently. Hold valid documents like land records (Adangal / Chitta / FMB sketch or equivalent), Aadhaar, Bank account, etc.

*2. Select the irrigation technology or component*: Decide whether drip, sprinkler, or other micro irrigation, or whether the benefit is for water lifting, conveyance, etc. Get estimates/cost quotations from authorised suppliers.

*3. Application Submission:* Apply through the State Horticulture / Agriculture Departments in the respective district or taluk/sub-district level. Fill application Form (physical or online). Include necessary documents (land proof, Aadhaar, bank details, photo, sketches, etc.).

*4. Verification*: The application is cross-verified by the Department. Officials- whether land records, farmer category, etc., are valid; cost estimates verified; whether the technology/item proposed meets specifications.

*5. Approval & Subsidy Disbursement*: Once approved, the subsidy is released (often through DBT) into the farmer's bank account. The farmer procures the equipment or service; sometimes the supplier is empanelled.

6. Installation & Inspection: Installation of the equipment (drip, sprinkler, etc.) may be undertaken in consultation with the supplier/ expert. After installation, inspection/verification is done by the Department Officials to ensure standards. The final subsidy will be released, if pending.

**Implementation in Tamil Nadu**

The Tamil Nadu State has adopted PMKSY and its components thereof, especially in micro irrigation, micro water management, etc. Below are specific features of PMKSY implementation in the State.

| Features | Details |
|---|---|
| Subsidy norms | Subsidies vary from 75% for big farmers or larger area (~ 5 ha) to 100% in certain components (like micro irrigation) under horticulture and for small area (~2 ha). |
| Area ceiling | Subsidy up to 5 ha per beneficiary under micro-irrigation is permitted. |
| Renewal provision | Farmers who had availed of micro irrigation subsidy earlier can renew laterals after seven years. |
| Supplementary water management activities | Specific assistance is available for activities such as the erection/installation of shallow tube wells / bore wells; purchase of diesel / electric motors/conveyance pipes; construction of ground-level storage structures, etc. |
| Online application | The Department of Horticulture use online portals to apply for the subsidy under micro-irrigation / PMKSY. |
| Local level contact | Applications are processed via local Agricultural/ Horticulture or Assistant Director Offices. The farmer must submit Chitta / Adangal, sketch (FMB), Aadhaar, proof of land or lease (if applicable), soil and water test, etc. |

**Micro-Irrigation Fund (MIF)**

- A Micro Irrigation Fund with a corpus of ₹5,000 crore has been established by the Government of India with NABARD to help State Governments mobilise resources for expanding the coverage of micro irrigation.
- This fund supports special and innovative projects and provides additional incentives (top-up subsidies) to promote the adoption of micro irrigation systems by farmers. This is beyond the assistance available under the Per Drop More Crop (PDMC) component.
- As per the Guidelines of the MIF, a Tripartite Memorandum of Agreement has to be signed between the State, NABARD and the Government of India for availing funds. The Government of TN has already executed the agreement.

**Sources:**


- GoI, 2015. Operational Guidelines of Pradhan Mantri Krishi Sinchayee Yojana (PMKSY). https://pmksy.gov.in/pdflinks%5CGuidelines_English.pdf
- DAFW. 2023. Operational Guidelines of Per Drop More Crop. Ministry of Agriculture & Farmers Welfare. Government of India.
- https://pmksy.gov.in/

## (18) பிரதம மந்திரி வேளாண்மை நீர்ப்பாசனத் திட்டம் (PMKSY)

**PMKSY என்றால் என்ன?** பிரதான் மந்திரி கிருஷி சிஞ்சாயி யோஜனா 2015-ஆம் ஆண்டு மத்திய அரசால் 'ஒவ்வொரு நிலத்துக்கும் நீர்' மற்றும் "சிறு துளியில் அதிக விளைச்சல்" (நீரின் திறன் மிகுந்த பயன்பாடுகளை ஊக்குவித்தல்) ஆகிய குறிக்கோள்களுடன் தொடங்கப்பட்டது. மத்திய அரசு நிதியுதவி அளிக்கும் இத்திட்டத்தின் குறிக்கோள்களாவன: திட்டமிட்ட நீர்ப்பாசனத்தை விரிவுபடுத்துதல் (ஒவ்வொரு வயலுக்கும் தண்ணீர் சென்றடைவதை உறுதி செய்தல்), நீர்ப் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்துதல், பாரம்பரிய நீர்நிலைகளை மீட்டெடுத்தல், நுண் நீர்ப்பாசனத்தை ஊக்குவித்தல் (சொட்டுநீர், தெளிப்பு பாசனம்), நீர் மேலாண்மை/ நீர் விநியோக உள்கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் மழைநீர் சேகரிப்பை ஊக்குவித்தல் ஆகும்.

**இத்திட்டத்தின் பல்வேறு கூறுகள்/ துணைத் திட்டங்கள்:**

**1. துரிதப்படுத்தப்பட்ட நீர்ப்பாசன நன்மைத் திட்டம்** (AIBP): இந்தத் துணைத்திட்டம், ஜல்சக்தி அமைச்சகத்தின் நீர்வளம், நதி மேம்பாடு மற்றும் கங்கை புத்துயிர்த் துறையால் செயல்படுத்தப்படுகிறது. இது, தற்பொழுது செயலில் உள்ள பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களை விரைவாக முடிப்பதில் கவனம் செலுத்துகிறது. ரேணுகாஜி அணைத் திட்டம் (இமாச்சலப் பிரதேசம்) மற்றும் லக்வார் பல்நோக்கு திட்டம் (உத்தர காண்ட்) ஆகிய இரண்டு தேசியத் திட்டங்களுக்கும் 90% மத்திய நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

**2. ஒவ்வொரு வயலுக்கும் நீர்** (HKKP): இந்தத் திட்டமும் ஜல்சக்தி அமைச்சகத்தால் செயல்படுத்தப்படுகிறது. பாசனப் பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மை (CAD & WM), மேற்பரப்பு சிறிய நீர்ப்பாசனம் (SMI), நீர்நிலைகளின் பழுது, புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு (RRR), நிலத்தடி நீர் மேம்பாடு (GWD) போன்ற பல்வேறு துணை கூறுகள் மூலம் ஒவ்வொரு வயலுக்கும் தண்ணீர் வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**3. சிறு துளியில் அதிக விளைச்சல்** (PDMC): இந்தத் துணைத்திட்டம் வேளாண் அமைச்சகத்தின், வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையால் செயல்படுத்தப்படுகிறது. 2022-23 ஆம் ஆண்டு முதல், PDMC திட்டம் பிரதான் மந்திரி ராஷ்ட்ரிய கிருஷி விகாஸ் யோஜனா (PM-RKVY) திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இது நுண் நீர்ப்பாசனம் (சொட்டுநீர் / தெளிப்பு பாசனம்) மூலமாக நீர்ப் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.

**4. நீர்வடிப் பகுதி மேம்பாடு**: மத்திய நிலவளத் துறை, மற்றும் கிராமப்புற மேம்பாட்டுத் துறையால் செயல்படுத்தப்படும் இந்தத் துணைத் திட்டம், மேட்டுப் பகுதிகளை சீரமைத்தல் (ridge area treatment), வடிகால் பாதை சீரமைத்தல் (drainage line treatment) மற்றும் நீர் சேமிப்பு கட்டமைப்புகள் (water harvesting structures) உருவாக்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன

**5. நீடித்த நிலையான நீர் பாதுகாப்பு**: மேலும், PMKSY திட்டத்தில் நிலத்தடி நீரை உயிர்ப்பிக்கும் செயல்பாடுகளை ஆதரிப்பதையும், நீடித்த நிலையான நீர் பாதுகாப்பிற்காகச் சுத்திகரிக்கப்பட்ட நகராட்சி கழிவுநீரைப் புறநகர் விவசாயத்திற்காக மீண்டும் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கும், துல்லிய நீர்ப்பாசன அமைப்பில் அதிக தனியார் முதலீட்டை ஈர்ப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**செயல்படுத்தும் நிறுவனம்**

PMKSY திட்டம் ஜல்சக்தி அமைச்சகம், வேளாண் அமைச்சகம் மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் செயல்பாடுகள் பிரதமரின் தலைமையில், சம்பந்தப்பட்ட அமைச்சகங்களின் அமைச்சர்களைக் கொண்ட தேசிய வழிகாட்டுதல் குழு (NSC) மூலம் கண்காணிக்கப்படுகிறது. நிதி அயோக் துணைத் தலைவர் தலைமையிலான ஒரு தேசிய நிர்வாகக் குழு (NEC) திட்ட செயலாக்கம், நிதி ஒதுக்கீடு, அமைச்சகங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு, கண்காணிப்பு மற்றும் செயல்திறன் மதிப்பீடு, நிர்வாக சிக்கல்களைத் தீர்ப்பது ஆகியவற்றை மேற்பார்வையிட அமைக்கப்பட்டுள்ளது. மாநில அளவில், இத்திட்டத்தைச் செயல்படுத்தத் திட்ட ஒருங்கிணைப்பு அலுவலகத்தை மாநில அரசுகள் உருவாக்கியுள்ளன.

**விவசாயிகளுக்கான நன்மைகள்**

1. *நீர்ப்பாசன உபகரணங்களுக்கான மானியம்*: சொட்டுநீர், தெளிப்புநீர் பாசன வசதிகள் மற்றும் நீர் இறைக்கும் சாதனங்கள் வாங்குவதற்கு விவசாயிகளுக்கு நிதி உதவி/ மானியம் வழங்கப்படுகிறது. இதனால், அவர்களின் மூலதனச் செலவு குறைகிறது.
2. *திறன் மிகுந்த நீர்ப் பயன்பாடு*: குறைந்த நீர் விரயம், குறைவான நீர்ப்பாசன செலவுகள் (எரிபொருள் / மின்சாரம்) மற்றும் நம்பிக்கையுடன் பயிர்களுக்கு நீர்ப்பாசனம். இதன் மூலம் "சிறு துளியில் அதிக விளைச்சல்" என்ற இலக்கை எய்துதல்.
3. *நம்பிக்கையான நீர்ப்பாசனம்*: நீர் ஆதாரங்கள், கால்வாய்கள், நீர் செல்லும் (வாய்க்கால்) உள்கட்டமைப்பை உருவாக்குதல்/ பழுதுபார்ப்பதன் மூலம் விவசாயிகள் அணைக்கட்டு/ கால்வாய் நீர்ப் பாசனத்தில் நம்பகத்தன்மையை பெறுகிறார்கள்.
4. *சாகுபடி பரப்பு விரிவடைதல்*: தண்ணீர் கிடைக்காததால் முன்பு பயிரிட முடியாத வயல்கள் சாகுபடி செய்யக்கூடியதாக மாறக்கூடும்.
5. *குறைந்த செலவு மற்றும் அபாயங்கள்*: தண்ணீர் திறப்பு, மேலாண்மை மற்றும் பாசனம் திறமையாக இருப்பதால், வறட்சியால் ஏற்படும் பயிர் இழப்பு அபாயம் குறைக்கப்படுகிறது. மேலும், பாசன மற்றும் இடுபொருட்களுக்கான செலவுகள் கணிசமாகக் குறையக்கூடும்.

**மானியங்கள்/ நிதி உதவி**

- PDMC திட்டத்தின் கீழ், மத்திய அரசு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் தெளிப்புநீர் பாசன அமைப்புகளை நிறுவுவதற்கு 55% நிதி உதவியையும், பிற விவசாயிகளுக்கு 45% நிதி உதவியையும் வழங்குகிறது.
- இதுதவிர, சில மாநிலங்கள் நுண் நீர்ப்பாசனத்தை ஊக்குவிப்பதற்காக நிரப்பு நிதியாக விவசாயிகளுக்கு கூடுதல் ஊக்கத்தொகை/ மானியத்தை வழங்குகின்றன.
- இத்திட்டத்தின் பலன்களை பெறுவதற்குப் பொதுவாக 'உச்சவரம்பு' இருக்கும், அதாவது 5 ஹெக்டேர் வரை நிலமுடைய விவசாயிகள் மட்டும் நுண் நீர்ப்பாசன மானியங்களைப் பெற இயலும்.
- ஒரு விவசாயி ஏற்கனவே மானியத்தைப் பெற்றிருந்தால், சில கால இடைவெளிக்குப் பிறகுதான் (எ.கா. 7 ஆண்டுகள்) அவருக்கு இத்திட்டத்தின் பிற கூறுகளுக்கு நிதி உதவி கிடைக்கும் (எ.கா. சொட்டுநீர்க் குழாய்களைப் புதுப்பித்தல் போன்றவற்றிற்கு).

**PMKSY திட்டத்தில் மானியத்திற்கு விண்ணப்பிப்பது எப்படி?**

*1. தகுதி*: பயனாளி ஒரு விவசாயியாக இருக்க வேண்டும் (சொந்த நிலம் அல்லது பொருத்தமான நில உடமைகள்). சிறு, குறு மற்றும் பிற பிரிவுகளில் உள்ள விவசாயிகள் (இது மானிய சதவிகிதத்தைத் தீர்மானிக்கும்) இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கலாம். நுண் நீர்ப்பாசன மானியத்திற்கு நில உச்சவரம்பு 5 ஹெக்டேருக்குள் இருக்க வேண்டும். சமீபத்தில் இந்தத் திட்டத்தின்கீழ் எந்தவொரு மானியத்தையும் பெற்றிருக்கக்கூடாது. நிலப் பதிவுகள் (அடங்கல்/ சிட்டா/ வரைபடங்கள் அல்லது அதற்கு இணையானவை), ஆதார், வங்கிக் கணக்கு போன்ற செல்லுபடியாகும் ஆவணங்களை வைத்திருக்க வேண்டும்.

2. *செயல்படுத்தப்படும் நீர்ப்பாசனத் தொழில்நுட்பம், அவற்றின் கூறுகளைத் தீர்மானிக்கவும்*: சொட்டுநீர், தெளிப்பு நீர் அல்லது பிற நுண் நீர்ப்பாசனத்தை பயன்படுத்துவதா அல்லது வழக்கமான நிலத்தடிநீரை இறைத்தல், நீர்வழி வாய்க்கால்களை பராமரித்தல் போன்ற கூறுகளை பயன்படுத்து பற்றி முடிவு செய்யவும். அதன்பின்னர், அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களிடமிருந்து மதிப்பீடுகள் / மேற்கோள் பெறவும்.

*3. விண்ணப்பம் சமர்ப்பிப்பு*: சம்பந்தப்பட்ட மாவட்டம் அல்லது தாலுகா மட்டத்தில் உள்ள மாநில தோட்டக்கலை / வேளாண்மைத் துறைகள் மூலம் விண்ணப்பிக்கவும். விண்ணப்பப் படிவத்தை நிரப்பி, தேவையான ஆவணங்களுடன் (நில உடமைச்சான்று, ஆதார், வங்கி விவரங்கள், புகைப்படம், நில வரைபடங்கள் போன்றவை) நேரிலோ அல்லது ஆன்லைன் மூலமாக அனுப்பலாம்.

*4. சரிபார்ப்பு*: துறை அதிகாரிகளால் விண்ணப்பத்தில் உள்ள நிலப்பதிவுகள், விவசாயி வகை போன்றவை சரிபார்க்கப்படுகின்றன. செலவு மதிப்பீடுகள் மற்றும் தொழில்நுட்பம்/ வாங்கப்போகும் பொருட்கள் திட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கிறதா எனவும் சரிபார்க்கப்படுகிறது.

*5. ஒப்புதல் மற்றும் மானியம் வழங்கல்*: ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன் மானியம் விவசாயியின் வங்கிக்கணக்கில் விடுவிக்கப்படும் (DBT மூலம்). அதன்பின்னர், விவசாயிகள் உத்தேசித்துள்ள உபகரணங்கள் அல்லது சேவையை வாங்கலாம். சில நேரங்களில் யாரிடமிருந்து உபகரணங்கள் வாங்கவேண்டும் என்பதும் அறிவிக்கப்படும்.

*6. உபகரணங்களை நிறுவுதல் மற்றும் மறு ஆய்வு*: வாங்கிய உபகரணங்களை நிறுவுவதற்கு (சொட்டுநீர், தெளிப்புநீர் போன்றவை) வினியோகஸ்தர் அல்லது துறை நிபுணர்களுடன் கலந்தாலோசிக்கலாம். உபகரணங்களை நிறுவிய பின், தரநிலைகளை உறுதி செய்வதற்காகத் துறைசார்ந்த அதிகாரிகள் ஆய்வு செய்வார்கள். அதன் பின்னர் நிலுவையில் உள்ள இறுதி மானியம் விடுவிக்கப்படும்.

**தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் செயல்பாடுகள்**

தமிழ்நாடு அரசு, PMKSY திட்டத்தையும் அதன் கூறுகளையும் ஏற்றுக்கொண்டு, நுண் நீர்ப்பாசனம் மற்றும் நுண் நீர் மேலாண்மையில் அதிகக் கவனம் செலுத்தி வருகிறது. இம்மாநிலத்தில் PMKSY திட்டத்திலுள்ள சில அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| **அம்சங்கள்** | **விவரங்கள்** |
|---|---|
| மானிய விதிமுறைகள் & பாதுகாப்பு மானியம் | பெரிய விவசாயிகளுக்கு (5 ஹெக்டேர் வரை) 75% வரை மானியம்; தோட்டக்கலைத் துறையின் கீழ் உள்ள சில கூறுகளில் (நுண் நீர்ப்பாசனம்) 2 ஹெக்டேர் வரை உள்ள சிறு குறு விவசாயிகளுக்கு 100% மானியம். |

| | |
|---|---|
| பரப்பளவு (நில) உச்சவரம்பு | நுண் நீர்ப்பாசனத்தின் கீழ், 5 ஹெக்டேருக்கும் குறைவாக உள்ள பயனாளிக்கு மட்டும் மானியம் அனுமதிக்கப்படுகிறது. |
| புதுப்பித்தல் வாய்ப்பு | ஏற்கனவே நுண் நீர்ப்பாசன மானியத்தைப் பெற்ற விவசாயிகள் ஏழு ஆண்டுகளுக்குப் பிறகுதான் இத்திட்டத்தின் பிற மானியங்களுக்கு, உ.மாக பக்கவாட்டு குழாய்களை புதுப்பித்தல் விண்ணப்பிக்கலாம். |
| கூடுதல் நீர் மேலாண்மை நடவடிக்கைகள் | ஆழமற்ற குழாய்க் கிணறுகள், ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல்; டீசல், மின்மோட்டார்கள், பாசன பைப்புகள் வாங்குதல்; நிலத்தடி நீரைச் சேமிக்க கட்டமைப்புகளை நிறுவுதல் போன்ற நீர் மேலாண்மை நடவடிக்கைகளுக்குக் குறிப்பிட்ட உதவித்தொகை வழங்கப்படுகிறது. |
| ஆன்லைன் விண்ணப்பம் | நுண் நீர்ப்பாசனம்/ PMKSY திட்டத்தின் மானியத்திற்கு விண்ணப்பிக்கத் தோட்டக்கலைத் துறை ஆன்லைன் போர்டல்களைப் பயன்படுத்துகிறது. |
| உள்ளூர் அளவிலான தொடர்பு விவரங்கள் | விண்ணப்பங்கள் உள்ளூர் வேளாண்மை/ தோட்டக்கலைத் துறை அல்லது உதவி இயக்குநர் அலுவலகங்கள் மூலம் பரிசீலிக்கப்படுகின்றது. விண்ணப்பத்துடன் சிட்டா / அடங்கல், நில வரைபடம், ஆதார், நில உடமை அல்லது குத்தகைக்கான சான்று, மண் மற்றும் நீர்ப் பரிசோதனை முடிவுகளை சமர்ப்பிக்க வேண்டும். |

**நுண் நீர்ப்பாசன நிதி (MIF)**

- இந்திய அரசு, நபார்டு வங்கியுடன் இணைந்து ரூ. 5,000 கோடி நிதியுடன் நுண் நீர்ப்பாசன நிதியை நிறுவியுள்ளது. இது மாநில அரசுகள் நுண் நீர்ப்பாசனப் பரப்பை விரிவுபடுத்துவதற்கான வளங்களைத் திரட்ட உதவுகிறது.
- இந்த நிதி சீரிய மற்றும் தகைசால் திட்டங்களை ஊக்குவிக்கிறது. மேலும், விவசாயிகள் நுண் நீர்ப்பாசன முறைகளை மேற்கொள்ளக் கூடுதல் சலுகைகளை வழங்குகிறது. இந்த நிதி உதவிக்கும் சிறு துளியில் அதிக விளைச்சல் (PDMC) கூறுகளின் கீழ் கிடைக்கும் உதவிக்கும் தொடர்பில்லை.
- மேற்படி நிதியைப் பெறுவதற்காக, MIF இன் வழிகாட்டுதல்களின்படி மாநில அரசுகள், நபார்டு வங்கி மற்றும் இந்திய அரசுக்கு இடையே முத்தரப்பு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட வேண்டும். தமிழ்நாடு அரசு ஏற்கனவே இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

**ஆதாரங்கள்:**


- GoI, 2015. Operational Guidelines of Pradhan Mantri Krishi Sinchayee Yojana (PMKSY). https://pmksy.gov.in/pdflinks %5CGuidelines_English.pdf
- DAFW. 2023. Operational Guidelines of Per Drop More Crop. Ministry of Agriculture & Farmers Welfare. Govt. of India.
- https://pmksy.gov.in/

## (19) Rashtriya Krishi Vikas Yojana (RKVY)

**What is RKVY?** Rashtriya Krishi Vikas Yojana (RKVY) was launched as a flagship scheme of the Department of Agriculture & Farmers' Welfare (DA&FW) during 2007-08 to incentivise the State Government to draw up comprehensive agriculture development plans, taking into account agro-climatic conditions, natural resources, and technology for ensuring more inclusive, integrated development of agriculture and allied sectors. A key objective was to achieve 4% annual growth in the agriculture sector by integrating crops, livestock, poultry, fisheries and other related sectors.

The scheme was implemented as a State Plan Scheme till the end of the financial year 2013-14 and in 2014-15 as a Central Sector Scheme (State plan) with 100% funding by the Central Government. Since 2015-16, the funding has been altered from 100% funding by the Central Government to a ratio of 60:40 between the Centre and States. During 2017-18, the Scheme was revamped as the Rashtriya Krishi Vikas Yojana- Remunerative Approaches for Agriculture and Allied Sector Rejuvenation (RKVY-RAFTAAR) with a major focus on pre-& post-harvest infrastructure, promoting agri-entrepreneurship, innovations & value addition. Again in 2022-23, the scheme was restructured by merging some schemes of the Department of Agriculture & Farmers Welfare. The restructured RKVY has 3 components, *viz.* (i) Annual Action Plan (AAP), (ii) Crop Diversification and Detailed Project Report (DPR), and (iii) Administration, Monitoring and Evaluation, including Start-up. The scheme has been available for the various activities of agriculture and allied sectors, such as field and horticulture crops development, mechanisation, marketing, pre- & post-harvest management, integrated pest management, organic farming, research, extension, etc.

As per more recent guidelines, RKVY has been reframed into a “Cafeteria” mode *w.e.f.* 2022-23. Under the Cafeteria model: States can choose among several Annual Action Plan (AAP) components (pre-defined types of interventions) and also propose DPR (Detailed Project Report) based project proposals.

The restructured **PM-RKVY / RKVY Cafeteria** comprises the following AAP:

1. Soil Health Management
2. Rainfed Area Development
3. Agro Forestry
4. Paramparagat Krishi Vikas Yojana / Organic Farming
5. Agricultural Mechanisation including Crop Residue Management
6. Per Drop More Crop
7. Crop Diversification Programme
8. Accelerator Fund for Agri Start-ups

The State Government may submit the DPR-based projects to the DA&FW for approval through the State Level Sanctioning Committee.

In October 2024, the Central Government approved the rationalisation of all Centrally Sponsored Schemes under the Ministry of Agriculture & Farmers Welfare into two umbrella schemes:

1) PM-RKVY – to promote sustainable agriculture, and
2) Krishonnati Yojana (KY)– to address food security and agricultural self-sufficiency.

The total proposed expenditure across PM-RKVY + KY is ₹1,01,322 crores. Out of this, PM-RKVY gets ₹57,075 crore, and KY gets ₹44,247 crore.

**Implementing Agency**

The Department of Agriculture & Farmers' Welfare (DA&FW), Government of India, is the implementing Agency of RKVY Schemes in India. These centrally sponsored schemes are implemented through the State/UT. The State Agriculture Department is the Nodal Department for the implementation of the scheme in the State. A State Level Sanctioning Committee (SLSC) constituted under the chairmanship of the Chief Secretary of the concerned State/UT is empowered to approve projects under the scheme.

**Funding pattern**

- Since FY 2015-16, the assistance pattern has been changed to a 60:40 ratio between the Centre and States for general States and 90:10 for North-Eastern and Himalayan States.
- Under PM- RKVY, fund is provided to the States/UTs as grant in aid. Projects under the scheme are approved and implemented by the States in various agriculture and allied sectors, as per their priorities and available resources, to meet the needs of farmers for the holistic development of this sector
- The funding pattern to UTs continued to be as 100% by the Central Government.
- As per the revised guidelines issued in 2024, the State governments be given flexibility to re-allocate funds from one component to another based on their State-specific requirements.

**Innovation & Agri-Entrepreneurship Programme**

- Innovation and Agri-Entrepreneurship Development programme has been in operation under RKVY-RAFTAAR since 2018-19.
- Its objective is to promote innovation and agri-preneurship by providing financial support and nurturing the incubation ecosystem (strengthening of existing Agribusiness Incubators (ABI) and setting up new ones).
- Start-ups pertaining to agriculture and allied sectors are being encouraged by giving 2 months trainings and technical and financial support.
- About 24 Agribusiness Incubators (RKVY-RAFTAAR Agri-Business Incubators or R-ABIs) have been appointed by DA&FW to advise on the smooth and efficient execution of this programme in various States across the country.
- Mentorship support on technical, IP issues, testing, product & technology validation, etc.
- Seed Stage Funding of R-ABI Incubatees – Funding up to ₹25 lakhs Grant-in-aid.
- Idea/Pre–Seed Stage Funding of Agripreneurs – Funding up to ₹5 lakhs Grant-in-aid.

**Rainfed Area Development (RAD)**

The Rainfed Area Development (RAD) Scheme was operational from 2014-15 in the country as a component of the National Mission for Sustainable Agriculture (NMSA). Since 2022-23, the RAD has been implemented under 'PM-RKVY'. The RAD aims at promoting sustainable agriculture production through the adoption of Agri-climatic zone-wise Integrated Farming System (IFS) models developed by ICAR/SAUs. Under the RAD scheme, multi-cropping, rotational cropping, inter-cropping, mixed-cropping practices

are promoted with allied activities like horticulture, livestock, fishery, apiculture, etc., to enable farmers to maximise the farm returns. This system also mitigates the impacts of drought, flood or other extreme weather events.

A cluster-based approach of 20 ha or more (contiguous with proximity in a village/ adjoining village or non-contiguous in difficult terrain) has been adopted to implement the Scheme. Priority has been given to Gram Panchayat/Blocks having more than 60% of the area under uplands/ rainfed or Natural Farming Clusters or clusters implementing NRLM, Aspirational Districts programmes, etc. Millet cultivation is promoted under the scheme.

**Sources:**


- PIB. 2024. The Cabinet approves the PM Rashtriya Krishi Vikas Yojana (PM-RKVY) to promote sustainable agriculture and Krishonnati Yojana (KY) to achieve food security for self-sufficiency. Press Information Bureau. Release ID: 2061649, Dt 03 Oct 2024.
- DAFW. 2022. Rashtriya Krishi Vikas Yojana (RKVY). https://agriwelfare.gov.in /sites/default/files/rkvy_inro.pdf
- https://agriwelfare.gov.in/en/RashtriyaDiv
- https://rkvy.da.gov.in/RKVY_INDEX.aspx

## (19) தேசிய வேளாண்மை முன்னேற்றத் திட்டம் (RKVY)

**RKVY என்றால் என்ன?** ராஷ்ட்ரிய கிரிஷி விகாஸ் யோஜனா (RKVY) என்பது 2007-08 ஆம் ஆண்டில் மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையால் தொடங்கப்பட்ட ஒரு பிரதானத் திட்டமாகும். இது, வேளாண் காலநிலை, இயற்கை வளங்கள் மற்றும் தொழில்நுட்பத்தை ஆராய்ந்து, மாநில அரசுகள் / யூனியன் பிரதேசங்கள் வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் உள்ளடக்கிய, ஒருங்கிணைந்த வளர்ச்சியை மேற்கொள்வதற்காகவும், மாநில அரசுகள் விரிவான விவசாய மேம்பாட்டுத் திட்டங்களை வகுக்கவும் உதவியளிக்கிறது. மேலும், இத்திட்டம் பயிர்த்தொழில், கால்நடை வளர்ப்பு, கோழிப்பண்ணை, மீன்வளம் போன்ற தொழில்களை ஒருங்கிணைப்பதன் மூலம் விவசாயத் துறையில் 4% ஆண்டு வளர்ச்சியை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்தத் திட்டம் 2013-14 நிதியாண்டின் இறுதி வரை ஸ்டேட் பிளான் திட்டமாகவும், 2014-15 ஆம் ஆண்டில் மத்திய அரசின் 100% நிதியுதவியுடன் கூடிய (ஸ்டேட் பிளான்) திட்டமாகவும் செயல்படுத்தப்பட்டது. இது 2015-16 முதல் மத்திய அரசின் 100% நிதியுதவியிலிருந்து மாற்றியமைக்கப்பட்டு, மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே 60:40 என்ற விகிதத்தில் நிதி பகிரும் திட்டமாக மாற்றப்பட்டது. மேலும், 2017-18 ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் மறுசீரமைக்கப்பட்டு, ராஷ்ட்ரிய கிருஷி விகாஸ் யோஜனா- Remunerative Approaches for Agriculture and Allied Sector Rejuvenation (RKVY-RAFTAAR) என்ற பெயருடன் அறிமுகப்படுத்தப்பட்டது. இது அறுவடைக்கு முந்தைய மற்றும் பிந்தைய உள்கட்டமைப்புகளை உருவாக்குதல், வேளாண்-தொழில்முனைவோர்களை உருவாக்குதல், புதுமை மற்றும் மதிப்புக்கூட்டலை ஊக்குவித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. 2022-23 ஆம் ஆண்டில் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையின் சில திட்டங்களை இணைத்து இத்திட்டம் மீண்டும் மறுசீரமைக்கப்பட்டது. மறுசீரமைக்கப்பட்ட RKVY-இல் 3 கூறுகள் (துணைத் திட்டங்கள்) உள்ளன. அவை: (i) வருடாந்திர செயல் திட்டம் (AAP), (ii) மாற்றுப்பயிர் சாகுபடி மற்றும் விரிவான திட்ட அறிக்கை (DPR), மற்றும் (iii) நிர்வாகம், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு (புத்தாக்க நிறுவனங்கள் உட்பட). இந்தத் திட்டம் விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளான உணவு தானியங்கள் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் மேம்பாடு, இயந்திரமயமாக்கல், சந்தைப்படுத்துதல், அறுவடைக்கு முந்தைய மற்றும் பிந்தைய மேலாண்மை, ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை, உயிர்ம வேளாண்மை, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் போன்றவற்றிற்கு நிதி அளிக்கிறது.

சமீபத்திய வழிகாட்டுதல்களின் படி, RKVY திட்டம் 2022-23 முதல் ‘திட்டக் குழுமம்/ Cafeteria’ முறையில் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. அதாவது, இந்த கேஃப்டீரியா முறைப்படி, மாநிலங்கள் முன்கூட்டியே வரையறுக்கப்பட்ட பல்வேறு ஆண்டு செயல்திட்ட கூறுகளில் தங்கள் மாநிலத்திற்கேற்ற சிலவற்றைத் தேர்வு செய்யலாம். மேலும், விரிவான திட்ட அறிக்கை (DPR) அடிப்படையிலான சில திட்டங்களையும் முன்மொழியலாம்.

தற்போதுள்ள, மறுசீரமைக்கப்பட்ட PM-RKVY / RKVY கேஃப்டீரியா பின்வரும் ஆண்டு செயல் திட்ட (AAP) கூறுகள் உள்ளன.

1. மண்வள மேலாண்மை
2. மானாவாரிப் பகுதி மேம்பாடு
3. வேளாண் காடுகள்
4. பாரம்பரிய வேளாண்மை முன்னேற்றத் திட்டம் / இயற்கை விவசாயம்

5. வேளாண் இயந்திரமயமாக்கல் (பயிர்க் கழிவு/ எச்ச மேலாண்மை உட்பட)
6. சிறு துளியில் அதிகப் பயிர்
7. மாற்றுப்பயிர்த் திட்டம்
8. வேளாண் புத்தாக்க நிறுவனங்களுக்கான ஊக்குவிப்பு நிதி

மேலும், மாநிலங்கள் DPR அடிப்படையிலான திட்டங்களை மாநில அளவிலான ஒப்புதல் குழுக்கள் மூலமாக மத்திய அரசின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கலாம்.

அக்டோபர் 2024 இல், வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் கீழ் உள்ள அனைத்து மத்திய நிதியுதவி பெறும் திட்டங்களையும் இரண்டு குடைத் திட்டங்களாக வகைப்படுத்தி மத்திய அரசு சுற்றறிக்கை வெளியிட்டது.

1. PM-RKVY – இது, நிலையான விவசாயத்தை ஊக்குவிப்பதற்காக, மற்றும்
2. கிருஷ்உன்னதி யோஜனா (KY)- இது, உணவுப் பாதுகாப்பு மற்றும் வேளாண்மையில் தன்னிறைவை நிவர்த்தி செய்ய.

இவ்விரு பெருந்திட்டங்களுக்கும் முன்மொழியப்பட்ட மொத்த செலவு ரூ. 1,01,322 கோடிகளாகும். இதில், PM-RKVY-க்கு ரூ. 57.075 கோடிகள் மற்றும் KY -க்கு ரூ. 44,247 கோடிகள்.

**செயல்படுத்தும் நிறுவனம்**

மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறைதான் இந்தியாவில் RKVY திட்டங்களை செயல்படுத்தும் நிறுவனமாகும். இந்த மத்திய நிதியுதவி பெறும் திட்டம் அனைத்து மாநிலம்/ யூனியன் பிரதேசங்கள் வாயிலாக செயல்படுத்தப்படுகின்றன. மாநிலத்தில் இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான நோடல் துறையாக மாநில வேளாண்மைத் துறை உள்ளது. சம்பந்தப்பட்ட மாநிலம்/ யூனியன் பிரதேசத்தின் தலைமைச் செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்ட மாநில அளவிலான ஒப்புதல் குழு (SLSC) இத்திட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்படும் திட்டங்களுக்கு அனுமதியளிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

**நிதி பகிர்வு**

- பொது மாநிலங்களுக்கு மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான நிதி பகிர்வு 60:40 விகிதமாகவும், வடகிழக்கு மற்றும் இமயமலை மாநிலங்களுக்கு 90:10 விகிதமாகவும் உள்ளது.
- PM-RKVY திட்டத்தின் கீழ், மாநிலங்கள்/ யூ. பிரதேசங்களுக்கு மானியமாக நிதி வழங்கப்படுகிறது. மாநில அரசுகள் அவற்றின் முன்னுரிமை மற்றும் சார்ந்துள்ள வளங்களின் அடிப்படையில் விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தீட்டப்படும் பல்வேறு வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த துறைகளின் வளர்ச்சித் திட்டங்கள், இத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.
- யூனியன் பிரதேசங்களுக்கான மத்திய நிதியுதவி தொடர்ந்து 100% ஆக இருந்து வருகிறது.
- 2024 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட வழிகாட்டுதல்களின்படி, மாநில அரசுகள் சில குறிப்பிட்ட தேவைகளின் அடிப்படையில் இத்திட்டத்தின் ஒரு கூறுகளிலிருந்து மற்றொன்றுக்கு நிதியை மாற்றி ஒதுக்கீடு செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**புதுமை மற்றும் வேளாண் தொழில்முனைவோர் திட்டம்**

- புதுமை மற்றும் வேளாண்-தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் 2018-19 முதல் RKVY-RAFTAAR இன் கீழ் செயல்பட்டு வருகிறது.

- இத்திட்டத்தின் நோக்கம் நிதி உதவி அளித்து, புதுமை மற்றும் வேளாண்-முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் தொழில்முனைவோர்களை உருவாக்குவதாகும் (தற்போதுள்ள வேளாண்-வணிக வளர்ப்பு மையங்களை (ABI) வலுப்படுத்துதல் மற்றும் புதிய வணிக வளர்ப்பு மையங்களை உருவாக்குதல்).
- வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த துறைகளில் 2 மாதப் பயிற்சிகள் அளித்து, தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்கி புத்தாக்க நிறுவனங்கள் உருவாக வழிவகை செய்கிறது.
- நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் இத்திட்டத்தை சுமூகமாகவும் திறமையாகவும் செயல்படுத்துவது குறித்து ஆலோசனைகள் வழங்குவதற்காக, சுமார் 24 வேளாண் வணிக வளர்ப்பு மையங்கள் (RKVY-RAFTAAR Agri-Business Incubators or R-ABIs) மத்திய வேளாண்மை மற்றும் விவசாய நலத்துறையால் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- தொழில்நுட்பம், காப்புரிமை சிக்கல்கள், சோதனை, தயாரிப்பு & தொழில்நுட்ப சரிபார்ப்பு போன்றவற்றிற்கான வழிகாட்டுதல்களை இத்திட்டம் வழங்குகிறது.
- R-ABI இன்குபேட்டிகளுக்கு துவக்க நிலை நிதி – ரூ. 25 லட்சம் வரை நிதி மானியம்.
- வேளாண் தொழில்முனைவோருக்கு யோசனை நிலை / துவக்க முன் நிலை நிதி – ரூ. 5 லட்சம் வரை மானிய உதவி வழங்கப்படுகிறது.

**மானாவாரிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (RAD)**

மானாவாரிப் பகுதி (அ) மழை சார்ந்த பகுதி மேம்பாட்டுத் திட்டம் (RAD), நிலையான விவசாயத்திற்கான தேசிய இயக்கத்தின் (NMSA) ஒரு அங்கமாக, 2014-15 முதல் நம் நாட்டில் செயல்பட்டுவருகிறது. இத்திட்டம் 2022-23 முதல், 'PM-RKVY' இன் கீழ் சேர்க்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் நோக்கம் என்னவெனில், ICAR நிறுவனங்கள் மற்றும் மாநில வேளாண்மை பல்கலைக் கழகங்கள் உருவாக்கிய வேளாண்-காலநிலை மண்டல வாரியான ஒருங்கிணைந்த பண்ணை முறை (IFS) மாதிரிகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நிலையான விவசாய உற்பத்தியை ஊக்குவிக்கலாம் என்பதாகும். இத்திட்டத்தின் கீழ், பலபயிர் சாகுபடி, பயிர் சுழற்சிமுறை, ஊடுபயிர் சாகுபடி, தோட்டக்கலை மேம்பாடு, கால்நடை வளர்ப்பு, மீன்பிடித்தல், தேனீ வளர்ப்பு ஆகிய தொழில்களுடன் கலப்புப் பயிர் சாகுபடி முறைகளும் ஊக்குவிக்கப்படுகின்றன. இதனால் விவசாயிகள் பண்ணை வருமானத்தை அதிகரிக்க முடியும் மற்றும் வறட்சி, வெள்ளம் அல்லது பிற தீவிர வானிலை நிகழ்வுகளின் தாக்கங்களைக் குறைக்க முடியும்.

இத்திட்டத்தைச் செயல்படுத்த 20 ஹெக்டேர் அல்லது அதற்கு மேற்பட்ட பரப்பளவிலான தொகுப்பு (கொத்து) அடிப்படையிலான அணுகுமுறை பயன்படுத்தப்பட்டு வருகிறது (ஒரே கிராமம்/ அருகிலுள்ள கிராமங்களில் தொடர்ச்சியாக அருகருகே அமைந்த நிலப்பரப்புகள் அல்லது கடினமான பகுதிகளில் தொடர்ச்சியற்ற நிலப்பரப்புகள்). பரப்பளவில் 60%-க்கும் அதிகமாக மேட்டு நிலங்கள்/ மானாவாரி நிலங்களைக் கொண்ட பகுதிகள் அல்லது இயற்கை வேளாண்மைத் தொகுப்புகள், NRLM திட்டம் / இலட்சிய மாவட்டத் திட்டம் செயல்படும் கிராமப் பஞ்சாயத்து/ தொகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் சிறுதானிய சாகுபடி ஊக்குவிக்கப்படுகிறது.

## (20) Self-Help Groups (SHGs)

**What is SHG?** Self-Help Groups (SHGs) are voluntary associations of 10 to 20 individuals—typically women farmers or rural entrepreneurs—who come together to save, lend, and invest collectively to improve their livelihoods, economic resilience, and access to institutional credit. A core activity of the SHG is to make regular, small savings. The pooled funds are used to provide low-interest loans to members for needs or small business ventures (microfinancing). The concept was institutionalised in India through the Self-Help Group–Bank Linkage Programme (SHG–BLP) launched by the NABARD in 1992, and has since evolved as a cornerstone of inclusive rural development under various Central and State Government schemes.

### Formation and Functioning of SHG

#### Size of the SHG

- The ideal size of an SHG is 10 to 20 members. (Advantage: in a bigger group, members cannot actively participate. Also, legally, it is required that an informal group should not be more than 20 people. In difficult areas like hill/ tribal/remote areas, and for a specialised group like a physically challenged person, the number may be from 5 to 20.
- Being informal, the SHG need not be registered under the Societies Act or the Co-operative Societies Registration Act, etc.

#### Group formation

- From one family, only one person can become a member of an SHG (more families can join SHGs this way).
- The group normally consists of either only men or only women. Mixed groups are generally not preferred.
- Women's groups are generally found to perform better (they are better in savings, and they usually ensure proper use of loans)

#### Members economic status

- Members should have the same social and financial background. This makes it easier for the members to interact freely with each other.
- If members are both from the rich as well as poor classes, the poor may hardly get an opportunity to express themselves.

#### Savings and Thrift

- All SHG members regularly save a small amount. The amount may be small, but savings have to be a regular and continuous habit with all members.
- "Savings first — Credit later" should be the motto of every SHG member.
- SHG members take a step towards self-dependence when they start small savings. They learn financial discipline through savings and internal lending (Advantage: This is useful when they use bank loans.)
- In SHGs, the word "thrift" refers to members regularly saving small amounts (regular small savings). This is one of the core principles of SHG. These savings later serve as the foundation for providing loans within the group and obtaining larger loans from

banks (e.g., Every member saves a small amount like ₹50 per week or ₹100 per month in the group).

**Internal lending**

- The SHG should use the savings amount to give loans to members.
- The purpose, amount, rate of interest, schedule of repayment, etc., are to be decided by the group itself.
- Proper accounts to be kept by the SHG.

**Pancha sutras:** The SHG must diligently follow the five principles

1. Regular meetings- All group members must participate in monthly or weekly meetings. This strengthens the group's unity and sense of responsibility.
2. Regular savings- Every member must consistently save the minimum possible amount. This increases the financial strength of the group.
3. Regular internal lending- The savings collected by the SHG should be given as loans among its members at low interest rates. This builds self-reliance.
4. Timely loan repayment- Members must repay the loans they have taken on schedule. This ensures the group's credibility and financial discipline.
5. Up-to-date maintenance of books of accounts- Proper accounts and records must be maintained for all savings, loans, expenses, and decisions of the group. This will improve the rating of the SHG for applying to various loans.

After 3 to 6 months of active functioning, your SHG will be graded by officials, including the Project Officer of the Mahalir Thittam or PLF (Panchayat Level Federations).

**Discussing problems**

- In every meeting, the SHG should be encouraged to discuss and try to find solutions to the problems faced by the members of the group.
- Individually, the poor people are weak and lack the resources to solve their problems. When the group tries to help its members, it becomes easier for them to face the difficulties and come up with solutions.
- Taking a bank loan: The SHG takes a loan from the bank and gives it as a loan to its members.

**Support Mechanisms**

- SHGs are linked to institutional credit through banks, NABARD, and State Rural Livelihood Missions (SRLMs), which provide capacity-building assistance, interest subvention, and credit guarantee coverage.
- Central and State Governments often offer matching grants, revolving funds, or capital subsidies to strengthen SHG federations and promote scaling of successful group-based enterprises.
- The SHGs will get collateral free loan (it does not require the SHG to pledge any assets, such as property or vehicles, as security) with terms decided by the group at the market-driven rates.

## Central Government Schemes supporting SHGs

Several central Government schemes support SHGs, including the Deendayal Antyodaya Yojana- National Rural Livelihoods Mission (DAY-NRLM) for poverty alleviation through SHG formation, the Pradhan Mantri Formalisation of Micro Food Processing Enterprises (PMFME) scheme, which offers seed capital and credit-linked grants for food processing enterprises, and the Group Loan Scheme of the National Backward Classes Finance & Development Corporation (NBCFDC) for backward class members.

**DAY-NRLM**: Launched in 2011 (restructured and renamed in 2015) by the Ministry: Ministry of Rural Development, Government of India. This is a large-scale programme focused on organising rural poor women into SHGs to improve their livelihoods, income, and quality of life. It works on providing access to financial services, with an interest subvention scheme to ease credit access. Under the Scheme Revolving Fund (RF) of ₹ 20,000- ₹ 30,000 per SHG to strengthen its institutional and financial management, and Community Investment Fund (CIF), up to ₹ 2,50,000 per SHG, which is used by the SHG to provide loans to its members for economic activities, is granted.

**PM-FME Scheme**: Implemented by the Ministry of Food Processing Industries (MoFPI), Government of India (2020-21 to 2024-25, extended up to 2025-26), the scheme adopts the One District One Product (ODOP) approach in many districts. It provides seed capital of up to ₹40,000 per SHG member for working capital and purchase of small tools. The seed capital is provided free of cost (not a loan, no repayment). Also offer a credit-linked grant of 35% of the project cost with a maximum of ₹10 lakh for individual micro food processing units, including SHG members and federations involved in food processing.

**NBCFDC Group Loan Scheme**: Provides loan assistance to SHGs with a focus on backward classes, but it requires at least 60% of SHG members to belong to backward classes, with an annual family income of up to ₹3.00 lakhs. It offers a maximum loan of ₹ 25 lakhs per SHG or ₹ 1.25 lakh per beneficiary.

## Women Self-Help Groups (WSHG) in TN

A women SHG is a powerful, specialised form of the SHG concept. Key characteristics and impacts of Women SHG are:

**Members:** The number of members in a WSHG may range from 10 to 20. In difficult areas like hill/ tribal,/remote areas, the number may be from 5 to 20. Members should be of a similar socio-economic background. Age usually 18-60 years. They should be from the same village/neighbourhood/area, to ease meeting and operation. They must come together voluntarily, without compulsion. At least 20 to 30% of the members of the group should belong to families below the poverty line, if they wish to get assistance from a bank loan under many schemes.

**Meeting:** The SHG must meet frequently (two times a month is always desirable) to discuss savings, loans, repayment, and planning.

**Minutes/ Agenda**: The group should draw up an agenda for each meeting. For example, the agenda of the first meeting may be to discuss the formation of SHG, the objective of the group, elect promoters/representatives, naming the group, deciding subscription and membership fee, making rules for internal lending, opening a bank account, etc.

**To be decided in the first meeting**: In the first meeting, all members of the group should attend. Ask a senior person to preside over the meeting. They may give a suitable name

for the group, take an oath regarding the objectives and goals of the group. Then elect one Promoter (also called animator/facilitator) and one group Representative who guide, advise and promote the group, maintain an account of the group, etc. The promoter and representative may be authorised to open a bank account and sign the bank cheque book and other documents of the group. In the first meeting, make a resolution regarding subscription amount for regular savings (all members are required to contribute a fixed, regular amount into a common corpus fund, say ₹ 200 or 500 per month). Also, decide the date of subscription (per month or bimonthly interval, etc.). The group also resolve the rate of interest for lending the savings amount as internal loans among the group members (it may be higher than a bank loan, such as 2% or 3%, but lower than the interest rate of an informal lender or local financiers- it may be decided by the group). The group also decide Admission charge for members and internal charges (say ₹ 50 to 100 per member) to cover the day-to-day activities, purchase of records, stationery, etc., and meeting travel expenditure of promoter/ group representative. Obtain sign of all members in the Attendance Register. The SHG should develop financial management norms covering the loan sanction procedure, repayment schedule and interest rates. All these resolutions should be written as proceedings of the meeting in the Minutes book.

**Seal:** The SHG have to make two seals- one seal with the name and address of the SHG and another seal named as Promotor / Representative of the SHG.

**Opening Bank Account**: The group should open and operate a group bank account, preferably in their service area bank branch, so as to deposit the balance amounts left with the group after disbursing loans to its members. Take a xerox of the minute book with resolution, passport-size photos, Aadhar and Address proof of Promotors-Representative, go to any nearest bank and open a bank account for your Group. A savings bank account passbook may be issued to the SHG. This should be in the name of the SHG and not in the name of any individual. For any bank transaction, the sign of two persons – promoter and representative shall be made mandatory.

**Internal lending:** Deposit all subscriptions collected from members in the group bank account, then and there. After saving for a minimum period of 2 to 3 months, the group may withdraw some amount from the bank, which can be used by the SHG for lending to its own members. Internal lending of savings amount and periodical recovery of Principal + interest from members will improve the rating of the SHG for obtaining a bank loan.

**Grading SHG**: As the WSHGs are informal groups, they are not required to be registered under any Act. However, for certain government schemes, seeking bank linkages or credit facilities, SHGs may need to be recognised by relevant government bodies (for example, district or block SHG federations, or Tamil Nadu Corporation for Development of Women, or rural livelihood mission), which is called **Credit Rating / Grading** of SHGs. After about 6 months (or more) of regular operations, savings, meetings, etc., SHGs may be evaluated for credit linkage. In this case, SHG may opt for registration. Parameters like regular conduct of meeting, attendance of members, proper collection of subscription amount, maintenance of record/minute book/cash book, internal lending and recovery, etc., will decide the rating of the SHG, which will be useful for getting a bank loan for the group.

**Corpus Fund**: Funding or Formation of Capital is the second important step after group formation. The SHG should build their corpus through regular savings. The group should collect the minimum voluntary saving amount from all the members regularly in the group meetings. The savings so collected will be the group corpus fund. The corpus fund may be used to advance loans to the members.

**Record maintenance:** The group should maintain simple basic records such as Minutes book (to record the discussions held and decision taken in each meeting, write who was present, savings taken, loans decided, repayments, any business proposals, etc.), Attendance register (to record and track which members attend each meeting), Cash Book (money in/out of the group fund. e.g., savings collection, loans disbursed, repayments, interest, meeting expenses, etc.), Loan ledger (mention each loan given to members: date, amount, purpose, repayment schedule, instalments paid etc.), General ledger (to compile all transactions (incomes, expenses, assets, liabilities) of the SHG in one place) and Bank passbook.

**Impact of WSHG**: Women SHGs are widely recognised as a powerful tool for empowering women, giving them economic independence, a voice in decision-making, and increased social standing. By providing women with access to microloans and encouraging savings, WSHGs help reduce reliance on predatory moneylenders and improve overall financial well-being. Reports showed that women's groups often have better repayment rates and savings discipline compared to their male-only or mixed-gender counterparts. The WSHGs offer a safe space for women to develop leadership and entrepreneurial skills. Many former members of SHG go on to hold political office or become community leaders, which indicates the impact of the Self-Help Group in women's empowerment.

**Schemes supporting WSHG:** In Tamil Nadu, schemes like Mahalir Thittam, Tamil Nadu Corporation for Development of Women (TNCDW) and Tamil Nadu Rural Livelihood Mission promote WSHGs.

**How to obtain Loan / Credit linkage**: In Tamil Nadu, the SHGs can access loans under various schemes, banks, etc., as detailed below.

**1) Bank Linkage *via* Tamil Nadu Gram Bank:** The group will get a loan 6 months after successful/satisfactory operations. The build-up of corpus, record keeping, regular meetings, etc., will decide group loan eligibility. The group will get a loan based on the corpus. For term loans or cash credit, the multiplier (corpus: loan) is 1:1 to 1:8. This means that for every ₹1 saved in corpus, the group can get ₹1 to 8 as a loan. Suppose a SHG has built a corpus fund of ₹50,000 after 6 months, depending on performance, the bank may sanction a loan of ₹ 50,000 (if multiplier is 1:1) to ₹ 4,00,000 (if multiplier is 1:8).

2**) Tamil Nadu State Apex Co-operative Bank**: SHGs are eligible to get a loan from the TN Apex Cooperative Bank if they meet norms (savings, bank account, etc.). The minimum loan is ₹5,000, and the maximum is up to ₹1,50,000 for specific purposes.

**3) Other Government Schemes** (TNCDW, Mahalir Thittam, TN-RLM, etc.): SHGs must be credit-linked, must have a viable business plan/livelihood activity plan, often after 6 months. Training, grading/ rating may be required. The loan amount depends on the corpus and plan. Also, interest subvention may apply up to certain limits (e.g., under NRLM), so the effective interest rate will be lower.

**4) Revolving Fund / Seed Fund from Government**: This loan is available for newly-formed SHGs, often after 6 months if the performance of the group is good. The government allocates a “revolving fund” to begin lending within the SHG. For example, under the NRLM/TN RLM, most SHGs in TN receive ₹15,000 per group.

**Eligibility criteria for SHG to get the Revolving Fund**

| # | Criteria | Description |
|---|---|---|
| 1 | Age of SHG | The SHG must be at least 6 months old from the date of formation and regular functioning. |
| 2 | Regular Meetings | SHG must conduct weekly or fortnightly meetings regularly and record minutes properly. |
| 3 | Regular Savings | Members must contribute savings regularly and maintain proper passbooks. |
| 4 | Internal Lending | The group must be doing internal lending from its savings to its members. |
| 5 | Bookkeeping | All records (minutes book, attendance, savings ledger, loan ledger, cash book) must be properly maintained and verified. |
| 6 | Bank Account | The SHG must have an active savings bank account in its group name (joint account of President /Promoter & Treasurer/Representative). |
| 7 | Grading | The SHG must have **passed the "A" or "B" grade** under the SHG grading norms of TNSRLM. |
| 9 | Affiliation | The SHG must be affiliated with a Panchayat Level Federation (PLF). |

**Procedures to get the Revolving Fund in TN**

Step 1. The SHG must be registered under TNSRLM / Mahalir Thittam through the Village Panchayat Office or Block Mission Unit.

Step 2: Performance and Grading: After 6 months of regular functioning, the SHG is graded by TNSRLM officials or PLF leaders.

Step 3: Recommendation by PLF: The Panchayat Level Federation (PLF) verifies and recommends eligible SHGs for RF to the Block Mission Unit (BMU).

Step 4: Approval by Block Mission Unit (BMU): The Block Mission Manager (BMM) approves the proposal and forwards it to the District Mission Management Unit (DMMU) under TNSRLM.

Step 5: Fund Release: Revolving Fund amount (₹10,000–₹15,000) is released by TNSRLM/DMMU to the SHG's bank account through Direct Benefit Transfer (DBT).

Step 6: Utilisation: The SHG deposits the fund in its group account and uses it for internal lending to members, small businesses or income-generating activities, meeting emergency or short-term needs. **The fund revolves within the group, meaning repaid loans are again lent out to other members.**

Step 7: Monitoring: PLF and TNSRLM officials monitor the utilisation and repayment discipline. Proper maintenance of the loan register and repayment records is essential.

**Note:** *Following the successful use of the Revolving Fund and continued good performance, the SHG can apply for larger loans from banks. The loan amount can increase in multiple doses based on the group's Micro Credit Plan and repayment history. For loans up to ₹10 lakh, no collateral is required.*

**5) Panchayat-Level Federations (PLF) Loan**

- PLF refers to Panchayat-Level Federations of Self-Help Groups (SHGs). These are federated bodies at the Panchayat level, which bring together several SHGs within a Panchayat under their umbrella.
- SHGs often need amounts higher than what they can raise by internal savings or small-scale loans. In this context, the PLF acts as a *financial intermediary* between the SHGs and formal banking/government sources.
- The main role of the PLF is to act as a bridge between the PLF-Executive Committee and SHG members and to disseminate information about PLF– Executive Committee decisions.
- A PLF can obtain *bulk loans* from banks or government schemes, say ₹10 lakh to ₹1.5 crore**,** depending on the number of SHGs, region, etc. and on-lend / distribute them to SHGs or SHG members.
- By providing structured credit through PLFs, SHGs avoid high-interest private lenders. The loan often comes with reasonable interest rates (say 9% per annum), sometimes with interest subvention (discounts or subsidies) under certain programmes for women SHGs, especially for smaller loan amounts (for example, up to ₹3 lakh, etc.).
- Fund sources for the PLF: The funds come from various sources, including the Mahalir Thittam, Community Investment Fund (CIF), and Amudha Surabi fund, which is a corpus fund (max: ₹ 6 lakh) provided by the government. The Community Investment Fund (CIF) is given to SHGs through PLFs for economic activities.
- To avail the PLF loan, the SHG operating within a panchayat limit must be affiliated/ federated (join) to a Panchayat-Level Federation (PLF) in their area (Pl. note that PLF itself must meet certain norms like being registered under the Societies Act, etc.).
- The members of SHG may subscribe certain amount and by remitting the subscriptions to the concerned PLF, they become members of that PLF.
- The SHGs must meet certain criteria to be eligible for credit linkage through the PLF, such as having **undergone capacity-building training** and a **credit rating**. SHGs which are 6 months old and have passed the first credit rating are eligible to become members of PLF.
- The SHG may be graded for quality /activities by the PLF based on savings, internal lending, meeting regularity, etc. Pl. note that ***only graded / mature SHGs may be eligible for certain types of loans.*** So, a rating from the PLF about your SHG is required for getting a loan from certain schemes.
- Secondly, the SHG should prepare a *Micro Credit Plan, i.e.,* how much loan is required, to whom (member name), what they intend to do with the loan, how they will generate income, repayment schedule, etc.
- The SHG may fill the Loan Application Form, fill the promissory note with one rupee revenue stamp, attach the Aadhar copy of the member who require loan, SHG resolution/demand for a loan, and submit the loan application to the PLF.
- The PLF aggregates demands from several SHGs. Once the loan is sanctioned, an intimation will be given to the SHG.

- The SHG must repay the loan to the PLF within a time limit, say 12 to 36 months equal instalments. If SHG has lent the loan to its individual members, then those members have to repay the loan to SHG. SHG then pools its repayments for onward payment to PLF / bank.

**Loan limit**

Banks typically lend to SHGs a multiple of their corpus (savings + internal funds). As mentioned earlier, the multipliers *vis-à-vis* the loan limit may vary depending on the bank norms and functioning/grading of the SHG. The maximum loan limit under NRLM is ₹10 lakh per SHG (can go up to ₹20 lakh for high-performing groups)

| Credit Stage | Multiplier | Remarks |
|---|---|---|
| First linkage, *i.e.,* an SHG obtain loan for the first time. | 1:4 | Suppose, if an SHG with 20 members, each member subscribing ₹ 500 per month, may regularly deposit ₹10,000 per month in banks (corpus fund of an SHG), it will get a 4 times loan amount, say ₹ 40,000 in the first instance. |
| Second linkage, *i.e.,* a SHG obtain loan after repayment of the first/previous loans | 1:4 to 1:8 | If the corpus fund of an SHG is ₹10,000, it will get a loan of ₹40,000 to 80,000. |
| Third and further linkages, *i.e.,* for mature SHG with a good rating and track record. | 1:6 to 1:10 | If the corpus fund of an SHG is ₹10,000, it will get a loan of ₹60,000 to 1,00,000. |

**Interest Rate:** Interest rate for internal lending may be decided by the group, say it may be 20%, although the bank has given a loan to the SHG at 12%. If the group promptly repay the loan within the time limit, say one year, they will get interest subvention for interest rates above 7% (i.e., 4% interest subvention is available to the SHG). Under NRLM, there is an interest subvention (i.e., subsidy) so that the effective rate may become lower (often, banks charge some rate, and the government gives a subsidy to bring down the burden)

**Security:** No collateral is usually needed (for amounts up to certain thresholds). Only hypothecation of assets created via a loan, or book debts, may be asked. However, a grading certificate, Micro Credit Plan and SHG bank passbook are compulsory for granting a loan.

**Repayment period:** Repayment periods depend on the type of loan (term loan or revolving) and amount. *e.g.,* for term loans: up to 36 months or more. For some microcredit / revolving funds, shorter periods.

**Sources:**


- Anon. 2024. Essential Record-Keeping Practices for SHGs. April 18, 2024. https://gender.study/credit-and-finance/ essential-record-keeping- practices-shgs/ ?utm_source =chatgpt.com
- Anon. 2015. Empowerment Activities. Directorate of Town Panchayats, Tamil Nadu. https://www.tn.gov.in/dtp/shg.htm?utm_source=chatgpt.com
- PIB. 2025. Self-Help Groups under NRLM. Press Information Bureau Release ID: 2146872 22 July 2025. Ministry of Rural Development
- https://banklinkage.lokos.in/Circulars/Handbook%20on%20SHG.pdf

- NABARD, 1993. A Handbook on Forming Self-Help Groups (SHGs). Micro Credit Innovations Department. NABARD, Mumbai.
- TNCDW. 2008. Mahalir Thittam. Tamil Nadu Government Detailed Guidelines on Structure and Activities of Panchayat Level Federations (PLFs) and Habitation Level Forums (HLFs). https://www.tnrd.tn.gov.in/State_Schemes/linkfiles/go_125_210708.pdf
- Tamil Nadu State Rural Livelihood Mission (TNSRLM) – https://tnrd.tn.gov.in/

## (20) சுய உதவிக் குழுக்கள் (SHG)

**சுய உதவிக் குழு என்றால் என்ன?** சுய உதவிக் குழு என்பது பொதுவாக 10 முதல் 20 நபர்கள் (பெரும்பாலும் பெண் விவசாயிகள் அல்லது கிராமப்புறத் தொழில்முனைவோர்கள்) தாங்களாகவே இணைந்து உருவாக்கும் தன்னார்வக் குழுவாகும். இவர்கள் ஒன்றாகச் சேமிப்பது, கடன் வழங்குவது மற்றும் குழுவாக முதலீடு செய்வது போன்ற செயல்பாடுகளை ஒருங்கிணைத்து, தங்களின் வாழ்க்கைத் தரம், பொருளாதார நிலைத்தன்மை மற்றும் வங்கிக் கடன்களைப் பெறுதல் ஆகியவற்றில் ஈடுபடுவார்கள். சுய உதவிக் குழுக்களின் முக்கிய செயல்பாடு என்னவெனில் ஒவ்வொரு உறுப்பினரும் தொடர்ந்து, சிறிய அளவிலான சேமிப்புகளை உருவாக்குவதாகும். இவ்வாறு சேமிக்கப்பட்ட/ திரட்டப்பட்ட நிதி, குழு உறுப்பினர்களுக்கே குறைந்த வட்டியில் சிறிய கடனாக வழங்கவும, அவர்களின் குடும்பத் தேவைகள் அல்லது சிறுதொழில்கள் தொடங்குவதற்காகவும் (நுண் நிதி முறை) பயன்படுத்தப்படுகிறது. 'சுய உதவிக் குழுக்கள்' என்ற கருத்துரு இந்தியாவில் 1992-ஆம் ஆண்டு நபார்டு வங்கி அறிமுகப்படுத்திய "சுய உதவிக் குழுக்கள்– வங்கி இணைப்புத் திட்டம்" மூலம் நிறுவன ரீதியாக அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களின் கீழ் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சிக்கான முக்கிய அங்கமாகச் சுய உதவிக் குழுக்கள் உருவெடுத்தன.

### சுய உதவிக் குழுக்களின் உருவாக்கம் மற்றும் செயல்பாடுகள்

#### குழுவின் அளவு

- ஒரு சுய உதவிக் குழுவின் சரியான அளவு 10 முதல் 20 உறுப்பினர்கள் ஆகும். காரணம், மிகப்பெரிய குழுக்களில் உறுப்பினர்கள் முழுமையாகச் செயல்பட முடியாது. மேலும், சட்டப்படி 20 பேருக்கு மேல் உள்ள குழு ஒரு முறைசாரா குழுவாக (அமைப்பாக) கருதப்பட முடியாது. மலைப்பகுதி, பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதி, தூரப்பகுதிகள் மற்றும் உடல் ஊனமுற்றோர் உருவாக்கும் சிறப்புக் குழுக்களில் உறுப்பினர்கள் எண்ணிக்கை 5 முதல் 20 பேர்வரை இருக்கலாம்.
- இது ஒரு முறைசாரா அமைப்பு என்பதால், இதைக் கூட்டுறவு சட்டம் அல்லது கூட்டுறவு பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யத் தேவையில்லை.

#### குழு உருவாக்கம்

- ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒரு உறுப்பினர் மட்டுமே சுய உதவிக் குழுவில் சேர முடியும் (இதனால் அதிகக் குடும்பங்கள் இதில் பங்கேற்க முடியும்).
- குழுவில் பொதுவாக ஆண்கள் அல்லது பெண்கள் மட்டுமே இருப்பார்கள்; கலப்பு குழுக்கள் பெரும்பாலும் விரும்பப் படுவதில்லை.
- பொதுவாக, பெண்கள் சுய உதவிக் குழுக்கள் சிறப்பாகச் செயல்படுகின்றன (அவர்கள் சேமிப்பில் சிறந்தவர்கள், கடனை முறையாகத் திருப்பிச் செலுத்துவதில் அக்கறை உள்ளவர்கள்).

#### உறுப்பினர்களின் பொருளாதார நிலை

- குழு உறுப்பினர்கள் அனைவரும் ஒரே மாதிரியான சமூக மற்றும் பொருளாதாரப் பின்னணியிலிருந்து வந்தால் மிகவும் நல்லது. இது அவர்களுக்குள் கலந்து பேசுவதற்கும் பழகுவதற்கும் எளிமையாக இருக்கும். செல்வந்தரும் ஏழைகளும்

சேர்ந்துள்ள குழுவில், ஏழை உறுப்பினர்கள் தங்கள் கருத்தை வெளிப்படுத்த முடியாமல் போகலாம்.

**சேமிப்பு மற்றும் சிக்கனம்**

- அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களும் விதிவிலக்கின்றி ஒரு சிறிய தொகையைச் சேமிக்க வேண்டும். தொகை குறைவாக இருந்தாலும், தொடர்ச்சியான சேமிப்பு பழக்கம் அனைவரிடமும் இருக்க வேண்டும்.
- 'முதலில் சேமிப்பு, பின்னர் கடன்' என்பது ஒவ்வொரு சுய உதவிக் குழு உறுப்பினரின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.
- உறுப்பினர்கள் சிறிய சேமிப்புகளைத் தொடங்கும்போது, அவர்கள் சுயசார்பு வாழ்க்கைக்கு முதல் படி எடுத்து வைக்கிறார்கள். இந்தச் சேமிப்பு மற்றும் உள் கடன் (குழுவிற்குள்) மூலம் அவர்கள் நிதி ஒழுக்கத்தை கற்றுக் கொள்கிறார்கள். இது அவர்கள் பின்னர் வங்கிக் கடனைப் பெறுவதற்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.
- சுய உதவிக் குழுக்களில் 'சிக்கனம்/ Thrift' என்ற சொல்லாடல் பயன்படுத்தப்படுகிறது. இது, குழுவின் உறுப்பினர்கள் தவறாமல் சிறிய தொகையைச் சேமிப்பதைக் குறிக்கும். சிக்கன-சேமிப்புதான் சுய உதவிக் குழுக்களின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்று. இந்தச் சேமிப்புதான் பிறகு குழுவிற்குள் கடன் கொடுக்கவும், வங்கிகளிடம் பெரிய கடன் பெறவும் அடித்தளமாக அமைகிறது. (உ.ம்: வாரம் ரூ. 50 அல்லது மாதம் ரூ. 100 போன்ற சிறிய தொகையை ஒவ்வொரு உறுப்பினரும் குழுவில் சேமிப்பது).

**உள் கடனளிப்பு**

- சுய உதவிக்குழு சேகரித்த சேமிப்புத் தொகை, உறுப்பினர்களுக்கே கடனாக வழங்கப்பட வேண்டும் என்பது அடிப்படை விதி.
- கடனின் நோக்கம், கடன் தொகை, வட்டி விகிதம், திருப்பிச் செலுத்தும் கால அட்டவணை போன்றவற்றைக் குழுவினரே சேர்ந்து தீர்மானிக்க வேண்டும்.
- அனைத்து நிதி பரிமாற்றங்களுக்கும் முறையான கணக்குகள் பராமரிக்கப்பட வேண்டும்.

**பஞ்ச சூத்திரங்கள்:** சுய உதவிக் குழுக்கள் பின்பற்ற வேண்டிய முக்கியமான ஐந்து அடிப்படை நெறிமுறைகள் பின்வருமாறு:

1. தொடர்ச்சியான கூட்டங்கள்- குழுவினர் அனைவரும் மாதாந்திர அல்லது வாராந்திரக் கூட்டங்களில் பங்கேற்க வேண்டும். இது குழுவின் ஒற்றுமையையும் பொறுப்புணர்வையும் வலுப்படுத்தும்.
2. தொடர்ச்சியான சேமிப்பு- ஒவ்வொரு உறுப்பினரும் தொடர்ந்து, சிறிய தொகையைச் சேமிக்க வேண்டும். இதன் மூலம் குழுவின் நிதி ஸ்திரத்தன்மை அதிகரிக்கும்.
3. தொடர்ச்சியான உள் கடனளிப்பு- குழுவில் திரட்டப்படும் சேமிப்புகள், உறுப்பினர்களுக்கே குறைந்த வட்டியில் கடனாக வழங்கப்பட வேண்டும். இதன் மூலம் சுயநம்பிக்கை வளரும்.
4. சரியான நேரத்தில் கடனைத் திருப்பிச் செலுத்துதல்- உறுப்பினர்கள் வாங்கிய கடனைச் சரியான நேரத்தில் திருப்பிச் செலுத்துவது முக்கியம். இது குழுவின் நம்பகத்தன்மை மற்றும் நிதி ஒழுங்கை உறுதிசெய்கிறது.

5. புதுப்பிக்கப்பட்ட கணக்குப் பதிவுகள்- குழுவின் சேமிப்பு, கடன், செலவுகள், தீர்மானங்கள் அனைத்திற்கும் சரியான கணக்குப் பதிவு பராமரிக்கப்பட வேண்டும். இது வங்கியில் பல்வேறு கடன்களுக்கு விண்ணப்பிக்கும்பொழுது சுய உதவிக் குழுவின் மதிப்பீட்டை மேம்படுத்தும்.

3 முதல் 6 மாதச் செயல்பாட்டிற்குப் பிறகு, சுய உதவிக் குழுக்கள் மகளிர் திட்டம் அல்லது PLF எனப்படும் பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு திட்ட அதிகாரிகளால் தரப்படுத்தப்படும் (grading செய்யப்படும்).

**பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடல்**

- ஒவ்வொரு கூட்டத்திலும், குழு உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் பற்றி விவாதித்துத் தீர்வுகளைக் காண சுய உதவிக் குழுக்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.
- தனிப்பட்ட முறையில், ஏழை எளிய மக்கள் மற்றும் தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கப் போதிய வசதிகள்/வளங்கள் இல்லாதவர்கள் ஒரு குழுவாக இணைந்தால், அவர்கள் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருந்து பிரச்சினைகளை எளிதாகச் சமாளித்து தீர்வுகாண முடியும்.
- வங்கிக் கடன் பெறுதல்: சுய உதவிக் குழுக்கள் வங்கியிலிருந்து கடன் வாங்கி, அதைத் தங்கள் உறுப்பினர்களுக்கு உள் கடனாக வழங்கும்.

**சுய உதவிக் குழுக்களை ஆதரிக்கும் அமைப்புகள்**

- சுய உதவிக் குழுக்கள் வங்கிக் கடனுக்காக, NABARD மற்றும் மாநில ஊரக வாழ்வாதார இயக்கங்கள் (SRLMs) ஆகியவற்றின் மூலம் இணைக்கப்படுகின்றன. இவை திறன் மேம்பாட்டுப் பயிற்சி, வட்டி குறைப்பு மற்றும் கடன் உத்தரவாத பாதுகாப்பு போன்ற ஆதரவுகளை வழங்குகின்றன.
- மத்திய மற்றும் மாநில அரசுகள் சில சமயங்களில் சுழற்சி நிதி, சம நிதி அல்லது மூலதன மானியம் வழங்கி, சுய உதவிக் குழுக்கள் கூட்டமைப்புகளை வலுப்படுத்தவும், குழு அடிப்படையிலான தொழில் முயற்சிகளை விரிவுபடுத்தவும் உதவிபுரிகின்றன.
- சுய உதவிக் குழுக்களுக்கு உடமை அடமானமில்லாத கடனைச் சந்தையில் நிலவும் வட்டிவிகிதத்தில் பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்காகச் சொத்து, நிலம், வாகனம் போன்றவற்றை அடமானமாக வைக்கத் தேவையில்லை.

**சுய உதவிக் குழுக்களை ஊக்குவிக்கும் மத்திய அரசுத் திட்டங்கள்**

சுய உதவிக் குழுக்களுக்குப் பல்வேறு மத்திய அரசுத் திட்டங்கள் நிதி, பயிற்சி மற்றும் வணிக ஆதரவுகளை வழங்குகின்றன. அவற்றில் முக்கியமானவை: தீன்தயாள் அந்த்யோதய (=அடித்தட்டு மக்கள்) யோஜனா – தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் (DAY–NRLM), பிரதம மந்திரி நுண் (சிறிய) உணவுப் பதப்படுத்தும் நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம் (PM–FME), மற்றும் தேசிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான நிதி மற்றும் மேம்பாட்டு கழகம் (NBCFDC) வழங்கும் குழுக் கடன் திட்டம்.

**1. தீன்தயாள் அந்த்யோதய (=அடித்தள மக்கள்) யோஜனா– தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம்:** இந்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் கீழ் செயல்படுத்தப்படும் இத்திட்டம் 2011-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது (2015-ஆம் ஆண்டு மறுசீரமைப்பு செய்யப்பட்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டது). இது கிராமப்புற ஏழைப் பெண்களை சுய உதவிக் குழுக்களில் ஒருங்கிணைத்து, அவர்களின் வாழ்வாதாரம், வருமானம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் பெரிய

திட்டமாகும். இது சுய உதவிக் குழுக்களுக்குத் தேவையான நிதி சேவைகளை எளியமுறையில் வழங்குகிறது, வட்டி குறைப்பு திட்டத்தின் மூலம் கடன் பெறுவதை எளிதாக்குகிறது. ஒவ்வொரு சுய உதவிக் குழுவிற்கும் மறுசுழற்சி நிதியாக ரூ. 20,000 முதல் ரூ. 30,000 வரை வழங்கப் படுகிறது, இது நிறுவன மற்றும் நிதி மேலாண்மையை வலுப்படுத்தப் பயன்படும். மேலும், சமூக முதலீட்டு நிதியாக ஒவ்வொரு சுய உதவிக் குழுவிற்கும் ரூ. 2.5 லட்சம்வரை கடன் வழங்கப்படுகிறது. இந்த நிதியை, குழு உறுப்பினர்களின் பொருளாதார மேம்பாடு நடவடிக்கைகளுக்குக் கடனாக வழங்க முடியும்.

**2. பிரதம மந்திரி நுண் (சிறிய) உணவுப் பதப்படுத்தும் நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம்:** இது இந்திய அரசின் உணவுப் பதப்படுத்துதல் தொழில் அமைச்சகம் (MoFPI) செயல்படுத்தும் திட்டமாகும் (2020-21 முதல் 2024-25 வரை; 2025-26 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது). பல மாவட்டங்களில் ஒரு மாவட்டம்- ஒரு பொருள் அணுகுமுறையைப் பின்பற்றுகிறது. இத்திட்டம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு உணவுப் பதப்படுத்தும் செயல்களுக்கு நிதி உதவி வழங்குகிறது. ஒவ்வொரு சுய உதவிக் குழுவிற்கும் விதை மூலதனமாக ரூ. 40,000 வரை வழங்கப்படுகிறது. மேற்படி தொகை செயல்பாட்டு மூலதனத்திற்கும் மற்றும் சிறிய கருவிகள் வாங்குவதற்காக மட்டும். இது மானியமாக வழங்கப்படுகிறது (கடன் அல்ல, திரும்பச் செலுத்த வேண்டியதில்லை). மேலும், இந்தத் திட்டத்தின் மூலம், உணவுப் பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ள தனிப்பட்ட சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு, திட்டச் செலவில் 35% வரை கடன்-இணைப்பு மானியமாக (அதிகபட்சமாக ரூ. 10 லட்சம்வரை) வழங்குகிறது.

**3. NBCFDC-இன் குழுக் கடன் திட்டம்:** இத்திட்டம் பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்குக் கடன் உதவியை வழங்குகிறது. இதற்குக் குழுவில் குறைந்தது 60 சதவீதம் உறுப்பினர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகவும், அவர்களின் ஆண்டு குடும்ப வருடாந்திர வருமானம் ரூ. 3 லட்சத்திற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். இத்திட்டத்தின் மூலன், ஒவ்வொரு சுய உதவிக் குழுவிற்கும் அதிகபட்சமாக ரூ. 25 லட்சம்வரை அல்லது ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் (தனி நபர்) ரூ 1.25 லட்சம்வரை கடன் வழங்கப்படுகிறது.

**தமிழகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள்**

மகளிர் சுய உதவிக் குழு என்பது, பெண்களைப் பொருளாதார ரீதியாக வலுப்படுத்துவதற்கான சுய உதவிக் குழுவின் ஒரு சிறப்பு வடிவமாகும். பெண்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களின் சில முக்கிய அம்சங்கள் மற்றும் தாக்கங்களைக் காண்போம்.

**உறுப்பினர்கள்**: ஒரு மகளிர் சுய உதவிக் குழுவில் 10 முதல் 20 உறுப்பினர்கள் வரை இருக்கலாம். மலைப்பாங்கான பகுதி, பழங்குடி மக்கள் வசிக்கும் இடம் அல்லது தூரப்பகுதிகளில் ஒரு குழுவில் 5 முதல் 20 பேர் வரை இருக்கலாம். உறுப்பினர்கள் ஒரே மாதிரியான சமூக-பொருளாதாரப் பின்னணியைக் கொண்டிருத்தல் நலம். உறுப்பினர்களின் வயது வரம்பு 18 முதல் 60 ஆண்டுகள்வரை இருக்க வேண்டும். உறுப்பினர்கள் அதே கிராமம், சுற்றுவட்டாரம் அல்லது அதே பகுதியைச் சார்ந்தவராக இருத்தல் நல்லது, இதனால் கூட்டங்கள் மற்றும் குழுவின் செயல்பாடுகள் எளிதாக இருக்கும். குழுவில் உறுப்பினர்கள் தன்னார்வத்துடன் சேர வேண்டும்; எந்தக் கட்டாயமும் இருக்கக் கூடாது. பல திட்டங்களின் கீழ் வங்கிக் கடன் பெற விரும்பும் குழுக்களுக்கு, உறுப்பினர்களில் குறைந்தது 20–30 சதவீதம் பேர் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

**கூட்டம்:** மகளிர் சுய உதவிக் குழுக்கள் மாதத்தில் குறைந்தது இரண்டு முறை கூட்டம் நடத்தி சேமிப்பு, கடன், திருப்பிச் செலுத்தல், திட்டமிடல் போன்றவற்றை விவாதிக்க வேண்டும்.

**நிகழ்ச்சி நிரல்:** முதல் கூட்டம் மற்றும் குழு அமைப்பு: ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒரு நிகழ்ச்சி நிரல் தயாரிக்க வேண்டும். உதாரணமாக, முதற்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் மகளிர் சுய உதவிக் குழு உருவாக்கம் குறித்த விவாதம், குழுவின் நோக்கம், தலைவர், ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகள் தேர்வு, குழுவுக்குப் பெயர் வைப்பது, உறுப்பினர் கட்டணம் மற்றும் மாதாந்திர சந்தா ஆகியவற்றைத் தீர்மானிப்பது, உள் கடன் விதிகள் உருவாக்கம், வங்கிக் கணக்கு திறப்பது போன்றவையாக இருக்கலாம்.

**முதற்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட வேண்டியவை:** முதல் கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களும் பங்கேற்க வேண்டும். அன்றைய கூட்டத்திற்கு ஒரு மூத்த நபர் தலைமை தாங்கலாம். குழுவுக்குப் பொருத்தமான பெயர் சூட்ட வேண்டும். குழுவின் நோக்கத்தையும் இலக்கையும் உறுப்பினர்களுக்கு எடுத்துக்கூறி ஒப்புதல் உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும். பின்னர் ஒரு தலைவர் அல்லது ஊக்குநர் மற்றும் ஒரு குழுப் பிரதிநிதி தேர்வு செய்யப்பட வேண்டும். இவர்கள் குழுவை வழிநடத்தி, ஆலோசனை வழங்கி, கணக்குகளைப் பராமரிப்பார்கள். இவர்களுக்கு வங்கிக் கணக்கு திறப்பு, காசோலை கையொப்பம் போன்ற அதிகாரங்கள் வழங்கப்படும். முதல் கூட்டத்தில் தீர்மானிக்க வேண்டியவை: ஒவ்வொரு உறுப்பினரும் மாதம் எவ்வளவு சந்தா சேமிக்க வேண்டும் (உ.மாக ரூ. 200–500/ மாதம்). இந்தத் தொகை “குழு நிதி” ஆக உருவாகும். உள் கடனுக்கு வட்டி விகிதம் எவ்வளவு என்பதை உறுப்பினர்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டும் (இது வங்கி வட்டியை விடச் சற்று அதிகமாக- 2% அல்லது 3% சதவீதம் வரை- ஆனால் கந்து வட்டிக்கு கடன் வழங்குபவர் அல்லது உள்ளூர் பைனான்ஸியர்களின் வட்டி விகிதத்தைவிடக் குறைவாக இருக்கலாம்). உறுப்பினர் சேர்க்கை கட்டணம் மற்றும் இதர செலவுகளுக்கு ஆகும் தொகையை (உ.மாக ரூ. 50–100/மாதம்) அன்றைய கூட்டத்திலேயே நிர்ணயிக்க வேண்டும். குழுவின் நிதி மேலாண்மை விதிகள், கடன் வழங்கல் நடைமுறை, திருப்பிச் செலுத்தல் கால வரையறை ஆகியவை விவாதிக்கப்பட்டு தீர்மானப் புத்தகத்தில் எழுதப்பட வேண்டும். அனைத்து உறுப்பினர்களும் வருகைப்பதிவு பதிவேட்டில் கையொப்பமிட வேண்டும்.

**குழு முத்திரைகள்:** குழுவிற்கு இரண்டு முத்திரைகள் (சீல்கள்) தயாரிக்க வேண்டும், அவை குழுவின் பெயர் மற்றும் முகவரி கொண்ட முத்திரை மற்றும் தலைவர் /ஊக்குநர்/ பிரதிநிதி என்ற மற்றொரு முத்திரை.

**வங்கிக் கணக்குத் திறப்பு:** சுய உதவிக் குழு, தங்களது சேவைப் பகுதியில் உள்ள வங்கிக் கிளையில் குழு வங்கிக் கணக்கைத் திறக்க வேண்டும். இதன் மூலம், உறுப்பினர்களுக்குக் கடன் வழங்கியபின் குழுவிடம் மீதமுள்ள தொகைகளை அந்தக் கணக்கில் செலுத்த முடியும். தீர்மானப் புத்தகத்தின் நகல், தலைவர்/ஊக்குநர் மற்றும் பிரதிநிதியின் பாஸ்போர்ட் அளவிலான புகைப்படங்கள், ஆதார் அட்டைகள் மற்றும் முகவரி சான்றுகளை இணைத்து அருகில் உள்ள வங்கியில் சேமிப்புக் கணக்கு திறக்க வேண்டும். இவ்வாறு தொடங்கும் சேமிப்புக் கணக்கு குழுவின் பெயரில் இருத்தல் வேண்டும் (தனிநபரின் பெயரில் தொடங்கக் கூடாது). அனைத்து வங்கி பரிவர்த்தனைகளுக்கும் தலைவர்/ ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகள் இணைந்து கையொப்பமிடுவது கட்டாயம்.

**உள் கடனளிப்பு:** உறுப்பினர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட சேமிப்புத் தொகையை உடனுக்குடன் வங்கிக் கணக்கில் வைப்பு வைக்க வேண்டும். குறைந்தது 2–3 மாதங்கள் சேமிப்பிற்குப் பிறகு, குழு வங்கியிலிருந்து ஒரு பகுதியைத் திரும்ப எடுத்து உறுப்பினர்களுக்கு உள் கடனாக வழங்கலாம். சேமிப்புத் தொகையிலிருந்து உள்

கடன் வழங்குதல் மற்றும் உறுப்பினர்களிடமிருந்து கடன் தொகை + வட்டியை அவ்வப்போது வசூலித்தல் ஆகியவை சுய உதவிக் குழுவின் மதிப்பீட்டை (வங்கிக் கடன் பெறும்பொழுது) மேம்படுத்தும்.

**கடன் மதிப்பீடு /கிரேடிங்**: மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஒரு முறைசாரா அமைப்பு என்பதால் சட்டப்படி பதிவு செய்யத் தேவையில்லை. ஆயினும், சில அரசுத் திட்டங்களின் சலுகைகளைப் பெற, உதாரணமாக, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத் திட்டங்கள், மகளிர் திட்டம், மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் போன்ற அமைப்புகளிலிருந்து கடன் வசதிகளைப் பெற, சுய உதவிக் குழுக்கள் சில தொடர்புடைய அரசு அமைப்புகளிடமிருந்து அங்கீகாரம் பெற வேண்டும். இதற்குக் கடன் மதிப்பீடு /கிரேடிங் என்று பெயர். சுமார் ஆறு மாத செயல்பாட்டிற்கு பின், சுய உதவிக் குழுக்கள் கடன் இணைப்பு மதிப்பீட்டிற்காகப் பரிசீலிக்கப்படலாம். கூட்டங்கள் நடத்துதல், வருகைப் பதிவு, சேமிப்பு வசூல், பதிவேடு பராமரிப்பு, உள் கடனளிப்பு, கடனைத் திருப்பிச் செலுத்தல் போன்ற அம்சங்கள் சுய உதவிக் குழுவின் தர மதிப்பாய்வில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**கார்ப்பஸ் நிதி:** குழு உருவாக்கப்பட்ட பின், நிதி திரட்டல் அல்லது மூலதன உருவாக்கம் சுய உதவிக் குழுக்களின் இரண்டாவது முக்கியமான செயலாகும். சுய உதவிக் குழுக்கள் தொடர்ச்சியான சேமிப்புகள் மூலம் தங்களது கார்ப்பஸ் நிதியை உருவாக்க வேண்டும். குழுவின் ஒவ்வொரு உறுப்பினரிடமிருந்தும் குறைந்தபட்ச விருப்பச் சேமிப்பு தொகையைக் குழுக் கூட்டங்களில் முறையாக வசூலிக்க வேண்டும். இவ்வாறு சேகரிக்கப்படும் சேமிப்புகள் தான் குழுவின் கார்ப்பஸ் நிதி ஆகும். இந்தக் கார்ப்பஸ் நிதி, குழு உறுப்பினர்களுக்குக் கடன் வழங்குவதற்காகப் பயன்படுத்தப் படலாம்.

**கணக்குப் பதிவு பராமரிப்பு:** ஒவ்வொரு குழுவும் பின்வரும் அடிப்படை கணக்குப் பதிவுகளைப் பராமரிக்க வேண்டும்: தீர்மானப் புத்தகம் (கூட்டத் தீர்மானங்கள், உறுப்பினர்களின் மொத்த வருகை, சந்தா/ சேமிப்பு, கடன் விபரங்கள், தொழில் தொடங்குதல் குறித்த முன்மொழிவுகள் இதில் பதிவு செய்யப்பட வேண்டும்), வருகைப் பதிவேடு (கூட்டங்களில் பங்கேற்ற ஒவ்வொரு உறுப்பினர்களின் பெயர், கையொப்பம் இதில் பதிவு செய்யப்படும்), பணப்புத்தகம் அல்லது ரொக்கப் பதிவேடு (இதில் சந்தா வசூல், கடன் விநியோகம், திருப்பிச் செலுத்தல், செலவுகள் இடம் பெரும்), கடன் பதிவேடு (கடன் கொடுத்த தேதி, தொகை, நோக்கம், திருப்பிச் செலுத்தல் அட்டவணை ஆகியவற்றை அதிர்வு செய்ய வேண்டும்), பொதுப்பேரேடு (இதில் தினசரி மொத்த வரவு, செலவு, சொத்து, கடன் மற்றும் இதர தகவல்கள் சுருக்கமாகக் குறிப்பிடப்பட வேண்டும்), மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகம் (வங்கி பரிவர்த்தனைகளைப் பதிவு செய்ய).

**மகளிர் சுய உதவிக் குழுக்களின் தாக்கம்**: சுய உதவிக் குழுக்கள் பெண்களுக்குப் பொருளாதார சுய நிறைவு, முடிவெடுக்கும் திறன் மற்றும் சமூக மரியாதைகளை அதிகரிக்கிறது. சிறு கடன்கள் மற்றும் சேமிப்புகள் மூலம் பெண்கள் அதிக வட்டிக்குக் கடன் பெறுவதைத் தவிர்க்கிறார்கள், அவை ஒட்டுமொத்த நிதி நல்வாழ்வை மேம்படுத்துகின்றன. ஆய்வு முடிவுகளின் படி, மகளிர் சுய உதவிக் குழுக்கள், ஆண்கள் அல்லது கலப்பு சுய உதவிக் குழுக்களைவிடக் கடன் திருப்பிச் செலுத்துதல் மற்றும் சேமிப்பு ஒழுக்கத்தை மிகவும் பின்பற்றுகின்றன எனத் தெரியவருகிறது. மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெண்களுக்குத் தலைமைத்துவம் மற்றும் தொழில்முனைவு திறன்களை வளர்க்கும் பாதுகாப்பான தளமாகச் செயல்படுகின்றன. பல முன்னாள் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அரசியல் பதவிகளில் அலங்கரித்துக் கொண்டிருப்பது, சமூகத் தலைவர்களாக உருவாகிக் கொண்டிருப்பது சுய உதவிக் குழுக்களின் தாக்கத்தைப் பறைசாற்றுகிறது.

**தமிழகத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்களை ஊக்குவிக்கும் திட்டங்கள்**

மகளிர் திட்டம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகத் திட்டங்கள், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகிய திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஊக்குவிக்கப்படுகின்றன.

**மகளிர் சுய உதவிக் குழுக்கள் கடன்/ கடன் இணைப்பு பெறும் வழிமுறைகள்**

தமிழ்நாட்டில் சுய உதவிக் குழுக்கள் பல்வேறு வங்கிகள் மற்றும் அரசுத் திட்டங்கள் வழியாகக் கடன் அல்லது நிதி இணைப்பைப் பெறலாம். அவை:

**1. தமிழ்நாடு கிராம வங்கி வழியாக வங்கி இணைப்பு:** ஒரு சுய உதவிக் குழு ஆறு மாதங்கள் முறையாகச் செயல்பட்ட பிறகு அது கடனுக்குத் தகுதியுடையதாகக் கருதப்படும். குழுவின் சேமிப்பு நிதி, கணக்குப் பதிவு பராமரிப்பு, தொடர்ச்சியான கூட்டங்கள் ஆகியவை குழுவின் கடன் தகுதியை நிர்ணயிக்கும். கடன் தொகை, குழுவின் சேமிப்பு நிதியை (கார்பஸ் நிதி) அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும். காலவரையறை கடன் அல்லது ரொக்கக் கடன் வழங்கும்போது, பெருக்கி விகிதம் (கார்ப்பஸ் நிதி: கடன் வரம்பு) 1:1 முதல் 1:8 வரை இருக்கும். இதன் பொருள், கார்ப்பஸ் நிதியில் சேமிக்கப்பட்ட ஒவ்வொரு ரூ. 1-க்கும், குழுவிற்கு ரூ. 1 முதல் 8 வரை கடன் கிடைக்கும். உதாரணமாக, ஒரு சுய உதவிக் குழு 6 மாதங்களில் ரூ. 50,000 கார்ப்பஸ் நிதியை உருவாக்கியிருந்தால், அதன் பிற செயல்பாடுகளைப் பொறுத்து வங்கி ரூ. 50,000 (பெருக்கி 1:1 என்றால்) முதல் ரூ. 4,00,000 (பெருக்கி 1:8 என்றால்) வரை கடனை வழங்கலாம்.

**2. தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி:** சுய உதவிக் குழுக்கள் சேமிப்பு பழக்கம், வங்கிக் கணக்கு மற்றும் நிதி ஒழுங்கு விதிமுறைகளைப் பூர்த்தி செய்வதன் மூலன் அவைகள் வங்கிக் கடனுக்கு தகுதி பெற்றவையாகிவிடும். குறைந்தபட்ச கடனாக ரூ. 5,000 முதல் அதிகபட்சமாக ரூ. 1,50,000 வரை (குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வணிகம், தொழில், சிறு உற்பத்தி, சேவைச் செயல்பாடுகளுக்கு) வழங்கப்படுகிறது.

**3. பிற அரசுத் திட்டங்கள்** (தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழக திட்டங்கள், மகளிர் திட்டம், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் பிற): சுய உதவிக் குழுக்கடன் இணைப்பில் இருத்தல் வேண்டும் மற்றும் தொழில்/ வணிகத் திட்டம் தயாரித்து வைத்திருக்க வேண்டும். குறைந்தது ஆறு மாத செயல்பாட்டிற்கு பிறகு விண்ணப்பிக்கலாம். முன் பயிற்சி/ அனுபவம், தரப்படுத்தல்/ மதிப்பீடு ஆகியவை தேவைப்படலாம். கடன் தொகை குழுவின் சேமிப்பு நிதி மற்றும் திட்டத்தின் அளவைப் பொறுத்து நிர்ணயிக்கப்படும். சில திட்டங்களில் வட்டி குறைப்பு கிடைக்கும் (உ.ம்: NRLM), இதனால் கடனுக்கான வட்டி விகிதம் குறைவாக இருக்கும்.

**4. அரசின் சுழற்சி நிதி / விதை நிதி:** புதிய சுய உதவிக் குழுக்களுக்கு, அவற்றின் சிறப்பான செயல்திறன் காண்பித்த ஆறு மாதங்களுக்குப்பின், அரசின் மறு சுழற்சி நிதி கிடைக்க வாய்ப்புண்டு. இதனைக்கொண்டு குழு உள் கடனளிப்பு நடவடிக்கைகளைத் தொடங்கலாம். உ.ம். NRLM/ TN-RLM திட்டங்களின் கீழ், பெரும்பாலான சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 15,000 வரை விதை நிதி/ சுழற்சி நிதி வழங்கப்படுகிறது.

**சுழற்சி நிதி பெற சுய உதவிக் குழுக்களுக்குத் தேவையான தகுதி நிபந்தனைகள்**

| வ. எண் | தகுதி அளவுகோல்கள் | விளக்கம் |
|---|---|---|
| 1 | சுய உதவிக் குழுவின் வயது | சுய உதவிக் குழு உருவாக்கப்பட்ட நாளிலிருந்து குறைந்தது ஆறு மாதங்களாவது இருக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| 2 | தொடர்ச்சியான கூட்டங்கள் | சுய உதவிக் குழு வாரம் அல்லது இருவாரத்திற்கு ஒருமுறை கூட்டங்களை நடத்தி, அனைத்துத் தீர்மானங்களும் தீர்மானப் புத்தகத்தில் எழுதியிருக்க வேண்டும். |
| 3 | தொடர்ச்சியான சேமிப்பு | உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து சேமிப்பு செய்திருக்க வேண்டும், மேலும் வங்கி சேமிப்புக் கணக்குப் புத்தகம் சரியாகப் பராமரிக்கப்பட வேண்டும். |
| 4 | உள் கடனளிப்பு | குழு தங்களின் சேமிப்பு தொகையிலிருந்து உறுப்பினர்களுக்கு உள் கடன் வழங்கி முறையாக ஆவணங்கள் பராமரித்திருக்க வேண்டும். |
| 5 | கணக்குப் பதிவுகள் பராமரிப்பு | குழுவின் தீர்மானப் புத்தகம், வருகைப் பதிவு, பொதுத் பேரேடு, சேமிப்பு பதிவேடு, கடன் பதிவேடு, ரொக்கப் புத்தகம் ஆகிய அனைத்தும் சரியாகப் பராமரிக்கப்பட்டு, அதிகாரிகளால் சரிபார்க்கப்பட்டிருக்க வேண்டும். |
| 6 | வங்கிக் கணக்கு | சுய உதவிக் குழுவின் பெயரில், செயலில் உள்ள சேமிப்புக் கணக்கு வேண்டும். அந்தக் கணக்கு தலைவர் / ஊக்குநர் மற்றும் பொருளாளர் / பிரதிநிதியின் பெயரில் கூட்டுக் கணக்காக இருக்க வேண்டும். |
| 7 | தரப்படுத்தல் | TN-SRLM-இன் தர நிர்ணய விதிமுறைகளின் கீழ், சுய உதவிக் குழுக்கள் "A" அல்லது "B" தரத்தில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| 8 | PLF உடன் இணைப்பு | சுய உதவிக் குழுக்கள் கிராமப் பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். |

**தமிழ் நாட்டில் உள்ள சுழற்சி நிதி பெறும் நடைமுறைகள்**

1) சுய உதவிக் குழு தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் (TN-SRLM) அல்லது மகளிர் திட்டம் ஆகியவற்றின் கீழ் கிராமப் பஞ்சாயத்து அலுவலகம் அல்லது ஊராட்சி ஒன்றிய திட்டப் பிரிவு வழியாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.

2) செயல்திறன் மற்றும் தர மதிப்பீடு: குழு குறைந்தது ஆறு மாதங்கள் சீராக செயல்பட்ட பின், TN-SRLM அதிகாரிகள் அல்லது பஞ்சாயத்து நிலை கூட்டமைப்பு (PLF) தலைவர்கள் குழுவைத் தர மதிப்பீடு செய்வார்கள்.

3) பஞ்சாயத்து நிலை கூட்டமைப்பு பரிந்துரை: பஞ்சாயத்து நிலை கூட்டமைப்பு குழுவின் செயல்திறனை சரிபார்த்து, தகுதி பெற்ற சுய உதவிக்குழுக்களை ஊராட்சி ஒன்றிய திட்டப் பிரிவிற்குப் பரிந்துரைப்பார்கள்.

4) ஊராட்சி ஒன்றிய திட்டப் பிரிவின் அங்கீகாரம்: ஊராட்சி ஒன்றிய திட்டப் பிரிவின் மேலாளர் பரிந்துரைகளை மதிப்பாய்வு செய்து, மாவட்ட திட்ட மேலாண்மை அலகுக்கு (DMMU) அனுப்புவார்கள். மாவட்ட திட்ட மேலாண்மை TN-SRLM கீழ் செயல்படுகிறது.

5) நிதி வெளியீடு: TN-SRLM / DMMU மூலம், மறு சுழற்சி நிதி தொகை ரூ. 10,000 முதல் 15,000 வரை சுய உதவிக்குழு வங்கிக் கணக்கிற்கு நேரடிப் பலன் பரிமாற்றம்மூலம் அனுப்பப்படும்.

6) நிதி பயன்பாடு: குழு தங்கள் பெற்ற நிதியை வங்கிக் கணக்கில் வைப்பு செய்து, உறுப்பினர்களுக்கான உள் கடன் வழங்குதல், சிறு தொழில்கள்/ வருமானம் உருவாக்கும் நடவடிக்கைகள், அவசர நிதி தேவைகள் போன்றவற்றிற்குப் பயன்படுத்தலாம். இந்த நிதி சுழல் நிதி என்பதால், திருப்பிச் செலுத்தப்பட்ட கடன் தொகைகள் மீண்டும் மற்ற உறுப்பினர்களுக்குக் கடனாக வழங்கப்படும்.

7) கண்காணிப்பு: PLF மற்றும் TNSRLM அதிகாரிகள் நிதி பயன்பாடு மற்றும் திருப்பிச் செலுத்தல் ஒழுக்கத்தைக் கண்காணிப்பார்கள். ஆகையால், கடன் பதிவேடு மற்றும் திருப்பிச் செலுத்தல் பதிவுகள் சரியாகப் பராமரிக்கப்பட வேண்டும்.

குறிப்பு: *சுய உதவிக்குழு சுழற்சி நிதியைச் சிறப்பாகப் பயன்படுத்தி, நல்ல செயல்திறன் காட்டினால், வங்கிகளிலிருந்து அதிக அளவு கடன்களுக்கு விண்ணப்பிக்கலாம். குழுவின் நுண் கடன் திட்டம் மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்திய வரலாற்றைப் பொறுத்து, கடன் தொகை பல மடங்குகளாக அதிகரிக்க வாய்ப்புள்ளது. ரூ. 10 லட்சம் வரையிலான கடன்களுக்கு எந்த அடமானமும் தேவையில்லை.*

**5. பஞ்சாயத்து நிலை கூட்டமைப்பு (PLF) கடன்**

- PLF (Panchayat-Level Federations) என்பது பஞ்சாயத்து அளவிலான சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்பாகும். ஒரே பஞ்சாயத்துக்குள் உள்ள பல சுய உதவிக்குழுக்களை ஒன்றிணைத்து, ஓர் ஒருங்கிணைந்த அமைப்பாக PLF உருவாக்கப்படுகிறது. இந்த PLF-க்கள் சுய உதவிக் குழுக்கள் மற்றும் வங்கிகள்/ அரசுத் திட்டங்களுக்கிடையே ‘*நிதி நடுவர் அமைப்பாக*’ செயல்படும்.
- சுய உதவிக் குழுக்களின் கடன் தேவைகள் பெரும்பாலும் அவர்களது உள் சேமிப்பு நிதியால் பூர்த்தி செய்ய முடியாது. இதற்காக PLF-க்கள் வங்கி/ அரசு வழியாக நிதிப் பெற்று சுய உதவிக் குழுக்களுக்குக் கடனாக வழங்கும். PLF-க்கள் PLF-நிர்வாகக்குழு மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கிடையே இணைப்பாக இருந்து, PLF-நிர்வாகக்குழுவின் திட்டங்கள், தீர்மானங்கள் மற்றும் நிதி தகவல்களை சுய உதவிக் குழுக்களுக்குப் பகிரும்.
- PLF வங்கிகள்/ அரசு திட்டங்களிலிருந்து மொத்தமாகக் கடனைப்பெற்று, அதனை சுய உதவிக் குழுக்களுக்கு அல்லது அவர்களின் உறுப்பினர்களுக்குக் கடனாக வழங்கும். கடன் தொகை ரூ. 10 லட்சம் முதல் 1.5 கோடிவரை இருக்கும். (இது அந்தப் பஞ்சாயத்திற்குள் உள்ள சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை மற்றும் செயல்திறனைப் பொறுத்து வேறுபடும்).
- PLF கடனுக்கான வட்டி விகிதம் பொதுவாகக் குறைவாகவே இருக்கும் (உ.ம். ஆண்டுக்கு 9 சதவீதம் வரை). PLK கடன்கள்மூலம் சுய உதவிக் குழுக்கள் அல்லது உறுப்பினர்கள் தனியாரிடமிருந்து பெறும் கடன் கணிசமாகக் குறையும். சில மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான திட்டங்களில், குறிப்பாக சிறு கடன்களுக்கு வட்டித் தள்ளுபடி/ மானியம் உண்டு (உ.மாக, ரூ. 3 லட்சம்வரை தள்ளுபடி).
- PLF-க்கு நிதி ஆதாரங்கள்: மகளிர் திட்டம், சமுதாய முதலீட்டு நிதி, அமுத சுரபி நிதி (இது அரசால் வழங்கப்படும் கார்பஸ் நிதி (அதிகபட்சம் ரூ. 6 லட்சம்). சமுதாய முதலீட்டு நிதி, PLF வழியாக சுய உதவிக் குழுக்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்குக் கடனாக வழங்கப்படுகிறது.
- PLF கடன் பெறுவதற்கான தகுதிகள்: சுய உதவிக் குழுக்கள் அந்தந்த பஞ்சாயத்து வரம்புக்குள் இணைக்கப்பட்ட/ பதிவு செய்யப்பட்ட PLF-இல் உறுப்பினராக இருத்தல் வேண்டும் (நினைவில் கொள்க: ஒவ்வொரு PLF-வும் ஏதேனும் ஒரு கூட்டுறவு / சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்திருக்க வேண்டும்).
- ஒவ்வொரு சுய உதவிக் குழுவும் PLF-இல் சந்தா செலுத்தி உறுப்பினராகச் சேரலாம்.
- PLF கடன் பெறுவதற்கு சுய உதவிக் குழுக்கள் ஆறு மாதங்கள் செயலிலிருந்து, திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் முதல் கடன் மதிப்பீட்டை (தரப்படுத்தல்) முடித்திருக்க வேண்டும்.

- சுய உதவிக் குழுக்களின் சேமிப்பு, உள் கடன், கூட்டம் நடைபெறும் ஒழுங்கு போன்றவற்றின் அடிப்படையில் PLF மூலம் தரப்படுத்தப்படும் (நினைவில் கொள்க: தரப்படுத்தப்பட்ட / முதிர்ந்த SHG-களுக்கே வங்கிக் கடன் பெற தகுதியுண்டு. எனவே, உங்கள் SHG பற்றிய PLF மதிப்பீட்டை பெறுங்கள். “A” அல்லது “B” கிரேடிங் தேர்ச்சி மிக விரும்பத்தக்கது.
- இரண்டாவது, SHG ஒரு நுண் கடன் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும், அதில் எவ்வளவு கடன் தேவை, எந்த உறுப்பினருக்காக, கடன் எதற்காகப் பயன்படுத்தப்படும், வருமானம் எவ்வாறு பெறப்படும், திருப்பிச் செலுத்தும் அட்டவணை ஆகிய விவரங்கள் சேர்க்கப்பட வேண்டும்.
- சுய உதவிக் குழுக்கள் தங்கள் கடன் விண்ணப்பப் படிவத்தை நிரப்பி அத்துடன் ரூ. 1 வரி முத்திரையுடன் கூடிய கடனுறுதி பத்திரம் (புரோ நோட்டு), கடன் பெறும் உறுப்பினரின் ஆதார் நகல், குழுவின் தீர்மான நகல்/ கோரிக்கை ஆகியவற்றை இணைத்து PLF அலுவலகத்தில் சமர்ப்பிக்கப் வேண்டும்.
- பல SHG-களிடமிருந்து வந்த கோரிக்கைகளை PLF-க்கள் தொகுத்து வங்கிகளுக்கோ அல்லது அரசு அலுவலகங்களுக்கோ அனுப்பும். கடன் ஒப்புதல் கிடைத்தவுடன் அத்தகவலை SHG-க்கு அனுப்பும்.
- சுய உதவிக் குழுக்கள் PLF-க்கு கடனைக் குறிப்பிட்ட காலக்கெடுவில் (உதாரணமாக 12 முதல் 36 மாதங்கள்வரை சம அளவு தவணைகளில்) திருப்பிச் செலுத்த வேண்டும். சுய உதவிக் குழு தனது உறுப்பினர்களுக்குக் கடன் வழங்கியிருந்தால், அவர்கள் திருப்பிச் செலுத்தும் தொகை சுய உதவிக் குழுமூலம் மீண்டும் PLF / வங்கிக்கு செலுத்தப்படும்.

**கடன் வரம்பு:** முன்னர் குறிப்பிட்டுள்ளபடி, ஒரு வங்கி சுய உதவிக் குழுவிற்குக் கடன் வழங்கும்போது, அக்குழுவின் கார்ப்பஸ் நிதியை (சேமிப்பு+உள் நிதிகள்) அடிப்படையாகக் கொண்டு கடன் வரம்பைத் தீர்மானிக்கும். இதற்கான பெருக்கி விகிதம் வங்கியின் விதிகள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் / மதிப்பீட்டைப் பொறுத்து 1:1 முதல் 1:8 வரை மாறுபடும். NRLM திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சுய உதவி குழுக்களுக்கு அதிகபட்சக் கடனாக ரூ. 10 லட்சம் வழங்கப்படுகிறது (சிறப்பாக செயல்படும் குழுக்களுக்கு ரூ. 20 லட்சம்வரை).

| கடன்பெறும் நிலை | சேமிப்பு: கடன் பெருக்கி விகிதம் | விளக்கம் |
|---|---|---|
| முதல் இணைப்பு – ஒரு SHG முதல் முறையாக வங்கிக் கடன் பெறுதல் | 1:4 | ஒரு 20 உறுப்பினர்களுள்ள SHG-இல், ஒவ்வொரு உறுப்பினரும் மாதம் ரூ. 500 சேமித்து, அந்த SHG மாதம் ரூ. 10,000 வங்கியில் செலுத்தினால் (குழு கார்ப்பஸ் நிதி), அந்த SHG-க்கு முதல் கட்டமாக 4 மடங்குக் கடன் தொகை, அதாவது ரூ. 40,000 வழங்கப்படும். |
| இரண்டாம் இணைப்பு- முதல் / முன்னர் பெற்றக் கடனைத் திருப்பிச் செலுத்திய பின் பெறப்படும் மறுகடன் | 1:4 முதல் 1:8 வரை | சேமிப்பு ரூ. 10,000 என்றால் கடன் ரூ. 40,000 முதல் 80,000 வரை. |

| | | |
|---|---|---|
| மூன்றாவது மற்றும் அதற்குப் பிந்தைய இணைப்புகள்- பல ஆண்டுகளாக நன்கு செயல்படும் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் அதிகப்படியான கடன். | 1:6 முதல் 1:10 | சேமிப்பு ரூ. 10,000 என்றால் கடன் ரூ. 60,000 முதல் 1,00,000 வரை. |

**வட்டி விகிதம்**

உள் கடன் வட்டி விகிதத்தை சுய உதவிக் குழுக்களே தீர்மானிக்கலாம். உதாரணமாக ஒரு வங்கி சுய உதவிக் குழுவிற்கு 12% வட்டியில் கடன் வழங்கியுள்ளது என்றால் சுய உதவிக் குழுக்கள் தங்கள் உள் கடனுக்கான வட்டியை 20% ஆக நிர்ணயிக்கலாம். ஒரு குழு கடனை ஒரு வருட காலக்கெடுவுக்குள் சரியாகத் திருப்பிச் செலுத்தினால், 7%-க்கு மேற்பட்ட வட்டிக்கு வட்டி குறைப்பு சலுகை / வட்டி மானியம் கிடைக்கும் (அதாவது SHG-க்கு 4% வட்டி சலுகை கிடைக்கும்). தேசியக் கிராமப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழான கடனுக்கு வட்டி மானியம் வழங்கப்படுகிறது. இதனால் கடனுக்காக உண்மையாக செலுத்தும் வட்டி குறைவாக இருக்கும் (பொதுவாக வங்கிகள் ஒரு குறிப்பிட்ட வட்டியில் கடன் வழங்குகின்றன; அந்த வட்டிக்கு அரசாங்கம் சலுகை வழங்கி விவசாயிகளின் சுமையைக் குறைக்கிறது).

**அடமானம்**

பொதுவாக ரூ. 10 லட்சம் வரையிலான கடன்களுக்கு அடமானம் தேவையில்லை. வங்கிக் கடன் மூலம் உருவான (உருவாகும்) சொத்துக்களின் அடமானம் அல்லது கணக்குப் பற்றுதல்கள் மட்டும் அடமானமாகக் கேட்கப்படலாம். இருப்பினும், கடனை வழங்குவதற்கு SHG-இன் மதிப்பீடு சான்றிதழ், நுண் கடன் திட்டம் மற்றும் சுய உதவிக் குழுவின் வங்கிக் கணக்குப் புத்தகம் ஆகியவை வங்கிகளால் கட்டாயம் கேட்கப்படும்.

**கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம்**

கடன் வகை (காலவரையறைக் கடன்கள், சுழல் கடன்கள்) மற்றும் கடன் தொகை ஆகியவற்றைப் பொறுத்துத் திருப்பிச் செலுத்தும் காலம் மாறுபடும். உதாரணமாக, காலக்கெடுவுள்ள கடனுக்கு- 36 மாதங்கள் அல்லது அதற்கு மேல் வரை இருக்கலாம்; சுழற்சி கடனுக்கு– குறுகிய காலத்திற்குள் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும்.

**ஆதாரங்கள்:**


- Anon. 2024. Essential Record-Keeping Practices for SHGs. April 18, 2024. https://gender.study/credit-and-finance/ essential-record-keeping- practices-shgs/?utm_source =chatgpt.com
- Anon. 2015. Empowerment Activities. Directorate of Town Panchayats, Tamil Nadu. https://www.tn.gov.in/dtp/shg.htm?utm_source=chatgpt.com
- PIB. 2025. Self-Help Groups under NRLM. Press Information Bureau Release ID: 2146872 22 July 2025. Ministry of Rural Development
- https://banklinkage.lokos.in/Circulars/Handbook%20on%20SHG.pdf
- NABARD, 1993. A Handbook on Forming Self-Help Groups (SHGs). Micro Credit Innovations Department. National bank for Agriculture and Rural Development, Mumbai.
- TNCDW. 2008. Mahalit Thittam. Tamil Nadu Govt. Detailed Guidelines on Structure and Activities of Panchayat Level Federations (PLFs) and Habitation Level Forums (HLFs). https://www.tnrd.tn.gov.in/State_Schemes/linkfiles/go_125_210708.pdf
- Tamil Nadu State Rural Livelihood Mission (TNSRLM) – https://tnrd.tn.gov.in/

## (21) Soil Health Card (SHC) Scheme

**What is the SHC Scheme?** The Soil Health Card (SHC) scheme, launched by the Government of India in 2015, provides farmers with a printed report detailing their soil's nutrient status based on 12 parameters. The card offers specific recommendations for fertiliser use and soil amendments to improve soil health, fertility, and crop yields while reducing costs. Soil samples are collected twice a year (preferably after the Kharif and Rabi crops have been harvested) for testing at various labs, and the SHC portal helps generate and access these cards, ensuring farmers can make informed decisions for sustainable agriculture.

*"Swasth Dharaa- Khet Haraa*" (Healthy Earth- Green Farm) is the motto of the scheme

### Objectives of the Scheme

1. To improve soil health and fertility for higher crop yields.
2. To promote the balanced and soil-test-based use of fertilisers.
3. To reduce fertiliser costs for farmers by ensuring appropriate application.
4. To enhance the overall profitability and sustainability of agriculture.

### Implementing Agency

The Department of Agriculture and Farmers Welfare is the implementing agency in collaboration with the Department of Agriculture of the State/UT.

### Information available in SHC

The SHC contains information on the soil health status of 12 nutrients, namely,

| | |
|---|---|
| Macro-nutrients | Nitrogen (N), Phosphorus (P), Potassium (K). |
| Secondary-nutrients | Sulphur (S). |
| Micro-nutrients | Zinc (Zn), Iron (Fe), Copper (Cu), Manganese (Mn), Boron (Bo). |
| Physical Parameters | pH, Electrical Conductivity (EC), Organic Carbon (OC). |

The SHC provides recommendations on nutrient dosages, fertiliser use, and soil amendments based on Soil Test Crop Response (STCR) equations.

### Procedures

*1) Soil Sampling*: For the generation of SHC, farmers should reach out to the District / State Nodal officer if he/she wants to get soil testing done for free. Soil samples are collected from farmers' fields twice a year, usually after the harvest of Rabi and Kharif crops. Soil Samples are collected based on a grid system to ensure comprehensive coverage. In irrigated areas, samples are drawn in a grid of 2.5 ha and in rainfed areas, it is 10 ha. The location is tagged with the help of GPS tools and revenue maps. The State Government will collect samples through the staff of their Department of Agriculture, or through the staff of an outsourced agency or may involve the students of local Agriculture / Science Colleges.

*2) Methods*: Soil Samples will be collected from a depth of 15-20 cm by cutting the soil in a "V" shape. It will be collected from 5 spots - four corners and the Centre of the field and mixed thoroughly, and a part of this will be picked up as a sample. Areas with shade will be avoided. The sample chosen will be bagged and coded. It will then be transferred to the soil test laboratory for analysis.

*3) Soil Testing*: Samples are processed at soil testing laboratories to analyse the 12 key parameters. The soil sample will be tested as per the approved standards for all the agreed 12 parameters in the following labs:

- At the Soil Testing Laboratories (STLs) owned by the Department of Agriculture and analysed by their own staff.
- At the STLs owned by the Department of Agriculture, but by the staff of the outsourced agency.
- At the STLs owned by the outsourced agency and by their staff.
- At ICAR Institutions, including KVKs and SAUs.
- At the laboratories of the Science Colleges/Universities by the students under the supervision of a Professor/ Scientist.

*4) Payment/ Fee*: It is free for farmers. The Central Government pays a sum of ₹ 190 per soil sample to the State Governments. This covers the cost of the collection of soil samples, their test, the generation and distribution of the soil health card to the farmer. The soil samples are also collected under RKVY Schemes. The rate is ₹ 300 per SHC (₹ 40 for soil collection + ₹ 150 for testing (analysing soil samples + cost of chemical) + ₹ 110 for awareness

*5) Card Generation*: The results are compiled into a Soil Health Card, which is provided to the farmer. Generally, the SHC are printed /made available to a particular field/ farmer once in a cycle of 3 years, which will indicate the status of soil health of a farmer's holding for that particular period. The SHC given in the next cycle of 3 years will be able to record the changes in the soil health for that subsequent period. The card/report can be downloaded by the farmers from the SHC portal or through the SMS link received on their mobile.

*6) Advisory:* The card includes an advisory on the appropriate types and quantities of nutrients and soil amendments needed.

**Key Features**

- The scheme will monitor the soil of the farmers ' fields and will give them a formatted report. So, they can decide well which crops they should cultivate and which ones they should skip.
- The authorities will monitor the soil regularly. Once every 3 years, they will provide a report to farmers. So, farmers need not worry if the nature of the soil changes due to certain factors. Also, they will always have updated data about their soil.
- The work of the government does not stop at listing down measures required to improve the quality of the soil. In fact, they will also employ experts to help farmers in carrying out the corrective measures.
- The main aim behind the scheme was to find out the type of soil. And then provide ways in which we can improve it. Even if a soil has some limitations, we can do something to get the most out of it. And that is what the government is trying to do with the help of this scheme.
- A digital SHC platform for uniform generation of SHCs in major Indian languages has been designed.
- Village Level Soil Testing Labs are being created to provide easier access to soil testing.

### SHC Portal and Mobile App

A mobile App (Soil Health Card) developed by the Department of Agriculture and Farmers' Welfare is available in Google Play Store. This App may be downloaded and used by farmers. A user guide is available on the website: https://www.soilhealth.dac.gov.in/. The revamped web portal is also available (https://www. soilhealth.dac.gov.in/home). This is integrated with a Geographic Information System (GIS) system so that all the test results are captured and seen on a map. The new GIS-based sample collection, mobile App and web portal were rolled out in April 2023, and samples are now being collected through the mobile application. Soil Health Cards are now generated on this revamped portal.

### School Soil Health Programme

A pilot project on School Soil Health Programme has been introduced by the DA&FW in collaboration with the Department of School Education & Literacy (DSE&L), ICAR and State Governments in 20 schools (10 Kendriya Vidyalaya & 10 Navodaya Vidyalaya) in rural areas (year 2024). The aim is to make students aware of soil health for sustainable agriculture practices.

### Employment generation for agri graduates

- Under the SHC scheme, it was proposed to set up Village Level Soil Testing Labs (VLSTL).
- The VLSTLs may be set up by individual entrepreneurs, *i.e.*, rural youth and community-based entrepreneurs, including Self Help Groups, Schools, Agriculture Universities, Farmers Producers Organisation, etc. (see guidelines issued in June 2023).
- The beneficiary/village level entrepreneur should be a youth whose age should not be below 18 years and should not be more than 27 years.
- As of February 2025, 665 Village-level Soil Testing Labs have been established in 17 States.

**Sources:**


- DAFW. Soil Health Card (SHC) Scheme. Department of Agriculture & Cooperation, Ministry of Agriculture. Government of India
- https://soilhealth.dac.gov.in/files/ FAQ_Final_English.pdf
- https://www.soilhealth.dac.gov.in

## (21) மண்வள அட்டைத் திட்டம் (SHC)

**மண்வள அட்டைத் திட்டம் என்றால் என்ன?** இந்திய அரசால் 2015-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மண்வளம் அல்லது மண் ஆரோக்கிய அட்டைத் திட்டம், விவசாயிகளுக்கு அவர்களது நிலத்தின் மண் ஊட்டச்சத்து நிலையை 12 ஊட்டச்சத்துக்களை அடிப்படையாகக் கொண்டு விவரிக்கும் அச்சிடப்பட்ட அட்டையை (அறிக்கை) வழங்குகிறது. இந்த அட்டையில் உரப் பயன்பாடு மற்றும் மண் திருத்தி பற்றிய சில பரிந்துரைகள் இருக்கும், இது மண் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், விளைச்சலை அதிகரிக்கவும், செலவைக் குறைக்கவும் உதவும். மண் மாதிரிகள் ஆண்டுக்கு இரு முறை சேகரிக்கப்பட்டு (குறிப்பாக, காரீஃப் மற்றும் ரபி பருவப் பயிர்களின் அறுவடைக்குப் பிறகு), பல்வேறு ஆய்வகங்களில் பரிசோதிக்கப்படுகின்றன. இதன் முடிவுகள் Soil Health Card இணையதளத்தில் பதிவேற்றப்பட்டு, அட்டைகள் உருவாக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. விவசாயிகள் இந்த அட்டையைப் பயன்படுத்தி வளங்குன்றா வேளாண்மைக்குத் தகுந்த முடிவுகளை எடுக்க முடியும்.

இத்திட்டத்தின் கோஷம் “சுவஸ்த் தரா– கேத் ஹரா” என்பதாகும், அதாவது ஆரோக்கியமான பூமி– பசுமையான வயல்.

### திட்டத்தின் நோக்கங்கள்

1. மண் ஆரோக்கியம் மற்றும் வளத்தை மேம்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுதல்.
2. மண் பரிசோதனை அடிப்படையிலான சமநிலை உரப் பயன்பாட்டை ஊக்குவித்தல்.
3. தேவையான அளவு உரத்தைப் பயன்படுத்தி விவசாயிகளின் உரச் செலவைக் குறைத்தல்.
4. நிலையான மற்றும் இலாபகரமான வேளாண்மையை நோக்கி நகர்தல்.

### செயல்படுத்தும் நிறுவனம்

இத்திட்டம், மத்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையால், மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் வேளாண்மைத் துறைகளுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

### மண்வள அட்டையில் உள்ள தகவல்கள்

மண்வள அட்டையில் மண்ணின் பின்வரும் 12 முக்கிய ஊட்டச்சத்துக்கள் பற்றிய தகவல்கள் இடம்பெறும்:

| | |
|---|---|
| முதன்மை ஊட்டச்சத்துக்கள் | நைட்ரஜன் (N), பாஸ்பரஸ் (P), பொட்டாசியம் (K) |
| இரண்டாம் நிலை ஊட்டச்சத்து | சல்பர் (S) |
| நுண்ணூட்டச் சத்துகள் | துத்தநாகம் (Zn), இரும்பு (Fe), காப்பர் (Cu), மாங்கனீசு (Mn) மற்றும் போரான் (Bo) |
| பௌதீகப் பண்புகள் | கார அமிலத்தன்மை (pH), மண் மின்கடத்துத்திறன் (EC), மற்றும் அங்ககச் சத்து (OC) |

மண் பரிசோதனை- பயிர் விளைச்சல் உறவு (STCR) சமன்பாடுகளின் அடிப்படையில் திரட்டப்பட்ட உரம் மற்றும் ஊட்டச்சத்துப் பரிந்துரைகள் ஒவ்வொரு மண் ஆரோக்கிய அட்டையிலும் இடம்பெற்றிருக்கும்.

**செயல்பாடுகள்**

**1. மண் மாதிரி சேகரிப்பு:** இலவச மண் பரிசோதனை செய்ய விரும்பும் விவசாயிகள் மாவட்ட / மாநில ஒருங்கிணைப்பு அதிகாரியைத் தொடர்பு கொள்ள வேண்டும். மண் மாதிரிகள் ஆண்டுக்கு இருமுறை- பொதுவாக ஆடிப்பட்டம் (காரீஃப் பருவம்) மற்றும் ஐப்பசி பட்டம் (ரபி பருவம்) பயிர்களின் அறுவடை முடிந்த பின்- விவசாயிகளின் நிலங்களிலிருந்து சேகரிக்கப்படுகின்றன. மண் மாதிரிகள் எடுக்கப்படும் பரப்பை அதிகரிக்கக் கட்டம் (கிரிட்) அமைப்பின் அடிப்படையில் மாதிரிகள் எடுக்கப்படுகின்றன. அதாவது, நீர்ப்பாசனப் பகுதிகளில் 2.5 ஹெக்டேருக்கு ஒரு மண் மாதிரியும், மானாவாரிப் பகுதிகளில் 10 ஹெக்டேருக்கு ஒரு மாதிரியும் எடுக்கப்படுகின்றன. மாதிரிகள் எடுக்கப்பட்ட இடங்கள் GPS கருவிகள் மற்றும் வருவாய்த் துறை வரைபடங்களின் உதவியுடன் துல்லியமாக tag-செய்யப்படுகிறது. மண் மாதிரிகள் மாநில அரசின் வேளாண்மைத் துறையினர் மூலமாகவோ அல்லது ஒப்பந்த நிறுவன ஊழியர்கள் மூலமாகவோ சேகரிக்கப்படும். தேவையெனில், உள்ளூர் விவசாய/ அறிவியல் கல்லூரி மாணவர்களும் மண் மாதிரி சேகரிப்பில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

**2. வழி முறைகள்**: மண் மாதிரிகள் 15–20 செ.மீ. ஆழத்திலிருந்து எடுக்கப்படுகின்றன. இதற்காக நிலத்தில் “V” வடிவில் வெட்டப்படுகிறது. மண்மாதிரிகள் நிலத்தின் நான்கு மூலைகள் மற்றும் மையப்பகுதியென ஐந்து இடங்களிலிருந்து எடுக்கப்பட வேண்டும். இவ்வாறு சேகரிக்கப்பட்ட மண் நன்றாகக் கலக்கப்பட்டு, அதிலிருந்து ஒரு சிறு பகுதி மாதிரியாக எடுக்கப்படுகிறது. நிழல் அல்லது நீர்த்தேக்கம் உள்ள இடங்களில் மாதிரிகள் எடுப்பதைத் தவிர்க்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி, பைகளில் அடைக்கப்பட்டு, குறியீட்டு எண் வழங்கப்படவேண்டும். அதன்பின், அந்த மாதிரிகள் மண் பரிசோதனை ஆய்வகத்திற்கு அனுப்பப்படுகின்றன.

**3. மண் பரிசோதனை:** மண் மாதிரிகள் மண் பரிசோதனை ஆய்வகங்களில் பரிசோதிக்கப்படுகின்றன. இந்தப் பரிசோதனைகள் மூலம் 12 முக்கிய ஊட்டங்கள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. மண் மாதிரிகள் அரசு அங்கீகரித்த தரநிலைகளின்படி பரிசோதிக்கப்படுகின்றன. கீழ்க்கண்ட ஆய்வகங்களில் பரிசோதனைகள் நடைபெறும்:

- வேளாண்மைத் துறையின் கீழ் இயங்கும் மண் பரிசோதனை (STLs) – துறை ஊழியர்களால் பகுப்பாய்வு செய்யப்படுகிறது.
- வேளாண்மைத் துறை ஆய்வகங்கள் – ஒப்பந்த நிறுவன ஊழியர்களால் பகுப்பாய்வு செய்யப்படுகிறது.
- தனியார் அல்லது வெளி முகவர் நிறுவனங்களின் ஆய்வகங்கள் – அவர்களின் சொந்த ஊழியர்களால் பகுப்பாய்வு செய்யப்படுகிறது.
- ஐ.சி.ஏ.ஆர் நிறுவனங்கள், கே.வி.கே. மற்றும் மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகங்களின் ஆய்வகங்கள்.
- அறிவியல் கல்லூரிகள் மற்றும் பிற பல்கலைக்கழகங்களின் ஆய்வகங்கள் – பேராசிரியர்கள்/ விஞ்ஞானிகளின் மேற்பார்வையில் மாணவர்களால் பரிசோதிக்கப்படுகின்றன.

**4. கட்டணம்**: இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மண் பரிசோதனை முற்றிலும் இலவசமாகச் செய்யப்படுகிறது. மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு ஒரு மண்

மாதிரிக்கு நிதியுதவியாகத் தலா ரூ. 190 வழங்குகிறது. இந்தத் தொகையில் மண் மாதிரி சேகரிப்பு செலவு, மண் பரிசோதனை (இரசாயனப் பொருட்கள் உட்பட) செலவு, மண்வள அட்டையை உருவாக்கி விவசாயிகளுக்கு வழங்கும் செலவுகள் ஆகியவை அடங்கும். சில இடங்களில் ராஷ்ட்ரீய க்ருஷி விகாஸ் யோஜனா திட்டத்தின் கீழும் மண் மாதிரிகள் சேகரிக்கப்படுகின்றன. இந்தத் திட்டத்தில் ஒரு மண் வள அட்டைக்கான செலவு சுமார் ரூ. 300 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது, இதில் மண் சேகரிப்புக்கு ரூ. 40, பரிசோதனைக்கு ரூ. 150, மற்றும் விழிப்புணர்வுக்காக ரூ. 110 ஒதுக்கப்பட்டுள்ளது.

**5. அட்டை உருவாக்கல்:** மண் பரிசோதனை முடிவுகள் தொகுக்கப்பட்டு, விவசாயிகளுக்கான மண்வள அட்டைகள் அச்சிடப்படுகின்றன. பொதுவாக, 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு விவசாயியின் மண் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டு மண்வள அட்டை வழங்கப்படுகிறது. இது, அந்தக் குறிப்பிட்ட காலத்தில் மண்ணின் ஆரோக்கிய நிலையைக் குறிப்பிடும் அறிக்கையாகும். அடுத்த 3 ஆண்டு சுழற்சியில் வழங்கப்படும் புதிய அட்டை, மண்ணின் ஆரோக்கியத்தில் ஏற்பட்ட மாற்றங்களைப் பதிவுசெய்யும். விவசாயிகள் தங்களுக்கான மண் ஆரோக்கிய அட்டையை மண்வள அட்டை இணையதளத்திலிருந்து நேரடியாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம், அல்லது கைப்பேசியில் குறுஞ்செய்தி வந்த இணைப்பு மூலம் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

**6. ஆலோசனை:** மண் ஆரோக்கிய அட்டையில், பயிர் வகைக்கு ஏற்ப உரங்கள், ஊட்டச்சத்துகள் மற்றும் மண் நிலையை மேம்படுத்தத் தேவையான மண் திருத்தி பொருட்கள் பற்றிய பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன.

**முக்கிய அம்சங்கள்**

- இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளின் மண்வளங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன. மண்வளம் தொடர்பான தரவுகள் ஒழுங்குபடுத்தப்பட்ட வடிவில் அட்டையில் வழங்கப்படுவதால், விவசாயிகள் தங்களுக்கு ஏற்றப் பயிர்களைத் தேர்ந்தெடுக்கவும், தேவையற்ற பயிர்களைத் தவிர்க்கவும் முடியும்.
- ஒவ்வொரு மூன்று ஆண்டுகளிலும் மண்வள நிலை புதுப்பிக்கப்பட்டு அட்டை வழங்கப்படும். இதனால், காலநிலை மாற்றம், உரப் பயன்பாடு அல்லது பாசன மாற்றங்களால் மண் பண்புகள் மாறினாலும், விவசாயிகளுக்குப் புதிய தகவல்கள் தொடர்ந்து கிடைக்கும்.
- மண்வளத்தை மேம்படுத்த வேண்டிய திருத்த நடவடிக்கைகள் குறித்து அரசாங்கம் பரிந்துரைகள் வழங்குவதோடு, அவற்றை நடைமுறைப்படுத்தத் துறை நிபுணர்களின் ஆலோசனைகளையும் வழங்குகிறது.
- இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், ஒவ்வொரு நிலத்திற்கும் அதன் மண் வகையை அடையாளம் கண்டு, அதனை மேம்படுத்துவதற்கான அறிவியல் ஆலோசனைகளை வழங்குவதாகும். மேலும், மண்ணில் குறைபாடுகள் இருந்தாலும், அவற்றைச் சரி செய்து அதிக விளைச்சலைப் பெறுவது இத்திட்டத்தின் மற்றொரு அம்சமாகும்.
- நாடு முழுவதும் மண்வள அட்டைகள் உருவாக்குவதை ஒரே மாதிரியாக்குவதற்காக, முக்கிய இந்திய மொழிகளில் மண் ஆரோக்கிய அட்டை டிஜிட்டல் தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

- கிராம அளவிலான மண் பரிசோதனை ஆய்வகங்கள் (VLSTLs) நிறுவப்பட்டு, விவசாயிகளுக்கு மண் பரிசோதனை சேவை எளிதாகக் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### மொபைல் செயலி மற்றும் இணையதளம்

மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை உருவாக்கிய "Soil Health Card" என்னும் மொபைல் செயலி கூகுள் Play Store-இல் கிடைக்கின்றது. இதனைப் பதிவிறக்கம் செய்து விவசாயிகள் பயன்படுத்தலாம். இதனைப் பயன்படுத்தும் கையேடு https://www.soilhealth.dac.gov.in/ என்ற இணையத்தில் உள்ளது. மேலும், ஒருங்கிணைந்த ஒரு புதிய இணையதளம் https://www.soilhealth.dac.gov.in/home என்ற முகவரியில் செயல்படுகிறது. இத்தளம் புவியியல் தகவல் அமைப்பு (GIS) உடன் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது, இதன் மூலம் மண் பரிசோதனை முடிவுகள் வரைபடத்தில் காண்பிக்கப்படுகின்றன. ஏப்ரல் 2023 முதல், புதிய GIS அடிப்படையிலான மண்மாதிரிகள் சேகரிப்பு மற்றும் அட்டை உருவாக்கும் முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.

### பள்ளியில் மண்வளத் திட்டம்

பள்ளியில் மண்வளத் திட்டம் என்னும் முன்முயற்சி (pilot) திட்டம், மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை, பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறை, இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகம் மற்றும் மாநில அரசுகள் ஆகியவற்றுடன் இணைந்து ஊரகப் பகுதிகளிலுள்ள 20 பள்ளிகளில் (10 கேந்திர வித்யாலயா மற்றும் 10 நவோதயா பள்ளிகள்) அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் மாணவர்களுக்கு மண் ஆரோக்கியம், மண் ஊட்டச்சத்து மேலாண்மை, மற்றும் நிலையான விவசாய நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

### வேளாண் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புகள்

- மண் ஆரோக்கிய அட்டைத் திட்டத்தின் ஒரு பகுதியாக, கிராம அளவிலான மண் மண் பரிசோதனை ஆய்வகங்கள் (VLSTL) நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.
- இதுபோன்ற VLSTL ஆய்வகங்களை, ஊரக இளைஞர் தொழில்முனைவோர் அல்லது சமூக தொழில்முனைவோர், சுய உதவிக் குழுக்கள், பள்ளிகள், வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் தொடங்கலாம்.
- பயனாளர்கள் 18 முதல் 27 வயது நிறைந்தவர்களாக இருக்க வேண்டும். வேளாண்மை அல்லது அறிவியல் பின்னணியுடைய இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- பிப்ரவரி 2025 வரையில் 17 மாநிலங்களில் மொத்தம் 665 கிராம மண் பரிசோதனை ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

**ஆதாரங்கள்:**


- DAFW. Soil Health Card (SHC) Scheme. Dept of Agriculture & Cooperation Ministry of Agriculture. Govt of India
- https://soilhealth.dac.gov.in/files/ FAQ_Final_English.pdf
- https://www.soilhealth.dac.gov.in

## (22) The National Beekeeping and Honey Mission (NBHM)

**What is NBHM?:** India has witnessed many revolutions in agriculture and allied sector such as the green revolution (increase in food grain production), white revolution or operation flood (increase in milk production), yellow revolution (oilseed production), blue revolution or *neel kranti* (fish production), golden revolution (horticulture sector development/fruits production), pink revolution (meat/ poultry processing sector), silver revolution (egg production /poultry farming), red revolution (tomato and meat production), round revolution (potato production), sugar revolution (sugar and jaggery production) and recently the rainbow or evergreen revolution (integrated development of all agricultural sectors).

In 2016, the Hon'ble PM Modi called for the Sweet Revolution or Mithi Granti in 2016 with the vision to double the income of the farmers by 2024. To give a push to Mithi Granti, the National Beekeeping and Honey Mission (NBHM), a Central Sector Scheme (100 % funded by the Central Government) under Atmanirbhar Bharat (self-reliant India) was launched by the Government of India in 2020.

Implemented through the National Bee Board (NBB) / Honey & Pollinators Board of India (HPBI) of the M/o Agriculture &Farmers' Welfare, the mission aims to promote scientific beekeeping and holistic growth of beekeeping industries across the country to enhance income generation, employment opportunities, agricultural productivity through pollination and to achieve the goal of "Sweet Revolution" or 'Mithi Granti' in the country. The NBHM are being implemented across 150 districts in 30 States and UT. Between 2020 and 2025, a total of 298 projects were initiated under the mission.

The Bees/pollinators covered under the mission are *Aphis cerana indica (Indian honey bee), A. mellifera (Italian bee), A. florea (Little bee), A. dorsata (rock bee)*, *Tetragonula iridipennis* (Indian stingless bee or dammar bee), and bumble bees, which are either producing honey or helping in pollination.

**Budget Outlay:** ₹ 500 crores for 3 years (2020-21 to 2002-23). This scheme is extended for another three years, *i.e.,* 2023-24 to 2025-26, with the remaining available budget of ₹ 370 crores.

**Mode of operation**: The scheme is being implemented through the Implementing Agency shown below through 3 Mini Missions (MMs), *i.e.,* MM-I, MM-II, & MM-III.

*Mini Mission 1:* Focuses on enhancing crop production and productivity through pollination by adopting scientific beekeeping practices.

*Mini Mission 2:* Addresses post-harvest management, including processing, storage, marketing, and value addition of beekeeping products.

*Mini Mission 3*: Supports research and technology generation to advance the beekeeping sector.

**Implementing Agency**: The scheme is implemented through Organization / Agencies listed below, with overall supervision and guidance of NBHM of the M/o Agriculture and Farmers' Welfare.

1. National Cooperative Development Cooperation (NCDC)
2. National Dairy Development Board (NDDB)
3. National Agricultural Cooperative Marketing Federation of India Ltd. (NAFED)

4. Small Farmers' Agri-Business Consortium (SFAC)
5. National Institute for Micro, Small and Medium Enterprises (NI-MSME)
6. National Horticulture Board (NHB)
7. Khadi and Village Industries Commission (KVIC)
8. Tribal Cooperative Marketing Development Federation of India (TRIFED) of the M/o Tribal Affairs
9. North East Region Agricultural Marketing Corporation (NERAMAC) of the M/o DONER
10. Organizations/ Agencies of M/o Environment, Forest & Climate Change
11. Organisations/ Agencies of M/o Food Processing Industries
12. National Medicinal Plants Board (NMPB) of M/o AYUSH
13. State Rural Livelihood Mission (SRLM)/ National Rural Livelihood Mission (NRLM) of the M/o Rural Development
14. ICAR, CAUs and SAUs

At the State level, the State Level Steering Committee (SLSC) under the Chairmanship of Secretary/ Principal Secretary of Agriculture/ Horticulture /APC constituted under NBHM or SLSC constituted under Mission for Integrated Development of Horticulture (MIDH) / Rashtriya Krishi Vikas Yojana (RKVY) is authorised to approve, implement and monitor the proposal/projects under the mission. Similarly, a District Level Committee (DLC) constituted under the Chairmanship of DM/ DC/ CDO under NBHM/MIDH/RKVY is also empowered to authorise the approval, implementation, and monitoring of the projects.

**What is the fund is available?** The fund is being spent on creating awareness, capacity building/ trainings, focus on women empowerment through beekeeping, setting up of requisite infrastructural facilities like Integrated Beekeeping Development Centres (IBDCs), Honeybees Disease Diagnostic Labs, Setting/ upgradation of State of Art Honey Testing labs, setting up of Honey Corridors in potential areas, Beekeeping Centres, Api therapy Centres, Development of Quality Nucleus Stock Centres & Bee Breeders, Distribution of Bee Colonies, formation of SHGs/ FPOs/ Beekeepers Cooperatives/ Federations, Digitization/ online registration, honey processing, value addition, market support, and R&D supports.

**How much assistance?**

1) **To produce quality nucleus stock of honeybees/ bees:** Assistance @ 100% for the public sector & 50% of the total cost of the project to the expert member societies/ firms/ companies of NBB, limited to a maximum of ₹30 lakhs per project.

2) **Development of Bee Breeders:** To make the availability of honeybee colonies in large scale, multiplication of quality Nucleus Stock is essential, and for that, Bee Breeders will be encouraged to submit a proposal. Assistance may be given to experienced Member Beekeepers/ Member Societies/ Firms,/ Companies of NBB. The Bee breeders promoted/ developed under this component are supposed to produce a minimum of **2000 quality bee colonies per year** for a continuous three years. The cost for this component has been estimated at ₹12.50 lakhs, out of which maximum assistance up to ₹ 5 lakhs/ per project will be given.

3) **Establishing Integrated Beekeeping Development Centre (IBDC) / Centre of Excellence (CoEs)/ Technical Centres:** Maximum assistance is available up to ₹ 750 lakhs per IBDC

4) **Establishing or Strengthening Regional-level Honey & other Bee Hive Products testing labs:** The cost of the lab has been estimated to be ₹ 2000 lakhs per lab, out of which assistance, maximum up to ₹ 800 lakhs per lab, will be given.

5) **Establishing or Strengthening Mini/ Satellite Honey Testing Labs at the District level:** The cost of the lab has been estimated to be ₹ 200 lakhs per lab, out of which assistance max. Up to ₹ 100.00 lakhs per lab will be given.

6) **Setting up of Honeybees Disease Diagnostic & Treatment Labs/ Mobile Labs:** The cost of the lab has been estimated to be ₹ 30 lakhs, out of which 100% assistance, up to ₹ 30 lakhs, will be given to the Institutes of the National Agricultural Research System (ICAR/CAUs / SAUs).

7) **Setting up of Beekeeping Equipment Manufacturing Units and Standardisation of Beekeeping Equipment:** Assistance will be given for the procurement of raw material, tools, equipment, machinery related to the manufacture of beehives, frames, supers, comb foundation sheets making machine, bee veils, brush, queen cage, feeder, smoker, knife, net, etc. The cost of the Centre has been estimated at ₹ 25 lakhs, out of which maximum assistance up to ₹ 18.80 lakhs will be given as per the eligibility of the organisation/ agency, etc.

8) **Promoting Custom Hiring Centres (CHCs) on beekeeping**: To get assistance, a CHC should maintain at least 1000 honeybee colonies along with all requisite tools, machinery, equipment, etc. The cost of the Centre has been estimated at ₹ 75 lakhs, out of which maximum assistance up to ₹ 56.20 lakhs will be given as per the eligibility of the organisation/ agency, etc.

9) **Setting up of Api-Therapy Centre**: It is like a health clinic in which the health issues of humans/animals like cancer, joint pain, impotency, digestion, dental, throat sore, healing of wounds will be addressed by using Honeybees & various beehive products like Propolis, Royal jelly, Pollen, etc. The cost of the Centre has been estimated to be ₹ 5 lakhs, out of which maximum assistance of ₹ 3.80 lakhs will be given as per the eligibility of the organisation/ agency, etc.

10) The CAUs/ SAUs, organisations/ societies/ agencies, etc., involved in digitisation/computerisation, developing a beekeeper database, **traceability system, baseline survey, bee surveillance and Disaster Management, etc., may also apply for assistance.**

11) **Empowerment of Women:** The scheme provide incentive for women interested in beekeeping. A group/cluster of women may be formed, and they may be given training on beekeeping. Assistance of ₹ 20,000 per group is provided for the formation of a new group and ₹ 50,000 per group as working capital to sustain the activity. The trained women can be used as Master Trainers/ Guiding factor of the scheme and serve as role models for beekeeping by women in other areas.

12) **Technology Demonstrations:** To demonstrate the impact of honeybees/ beekeeping, in enhancing the yield/ productivity of crops as well as quality of produce (seeds/ fruits) in farmers' fields, maximum assistance @ of ₹ 10,000 per hectare will be provided for the ICAR/CAUs/ SAUs, etc.

13) Assistance is available for **the distribution of specialised beekeeping equipment for the production of high-value beehive products,** *viz.* Royal Jelly, Bee Venom, Comb Honey, Bee Pollen, etc.

14) **Promotion of Plantations, Bee-friendly Plants/Flora/ Bee Gardens, etc.:** Maximum assistance @ ₹ 50,000 per hectare will be provided.

15) **Assistance to State Governments for Strengthening of Institutional framework/ setting up of State Bee Boards/Missions/ Cooperatives:** ₹ 25 lakhs per State Bee Boards/ Missions/ Cooperatives/ FPOs of Beekeepers promoted by State Governments, etc., will be given

16) **Organising National /State level Seminar/ Workshop/ Conference etc., arranging training / Exposure visits**: Assistance is available as per guidelines.

17) **Awards**: Best Beekeeper award, Best Innovator in Beekeeping Award and Awards for diversification in beekeeping are available under the Mission. Each award carries ₹ 2.00 lakhs plus a citation.

**Who can apply?** NBHM provides financial incentives, such as subsidies, to the interested and eligible beekeepers through implementing agencies. So, anyone can apply for the scheme as shown below.

- **Individual farmers/ Beekeepers**: Individuals engaged in or aspiring to take up scientific beekeeping may apply for this Scheme. In this case, a subsidy will be given for a person who has or will set up an economically viable unit, *i.e.,* at least 50 honeybee colonies, each of 10 frames in beehives with supers, etc.
- **Entrepreneurs/ Start-up/ Farmer Producer Organizations**: Groups or Entities who are interested in developing as entrepreneurs and willing to provide custom hiring services to the farmers who are not able to do beekeeping themselves but need pollination support for their crops may apply for this scheme. The financial support will be given to establish Custom Hiring Centres (CHCs). One CHC should at least maintain 1000 honeybee colonies along with all requisite tools, equipment, machinery, etc.
- **Implementing Agency** recognised under the NBHB mission.

**How to apply?**

i. Except for Training/Seminar/Exposure visits, all the component Schemes of the NBHM mission are project-based.

ii. All the implementing agencies may submit their project proposals (offline) to the National Bee Board (NBB) in the prescribed format along with DPR and supporting documents.

iii. State Government Agencies such as societies/ firms/ companies/ agencies/ organizations/ FPOs/ cooperatives, etc.; State Horticulture Mission/HM-NEH/State Bee Boards/ State Bee Missions, etc.; State Rural Livelihood Mission (SRLM), Krishi Vigyan Kendras (KVKs), State Khadi and Village Industries Boards, State Agro-Corporations / State Cooperatives, etc.; Member societies/ firms/ companies, etc. of NBB may submit the project proposals to the State Departments of Horticulture/Agriculture or State Level Steering Committees (SLSCs) for approval.

iv. The agencies/organisations, individuals mentioned above working at the regional level may submit the proposals through the District Level Committee, which will examine and recommend the proposals to the State Level Steering Committees (SLSCs) for approval.

v. The proposals approved/ recommended by the SLSC shall have to be submitted to NBB for consideration under NBHM.

vi. National Level Agencies/Organizations / Boards/ Missions, etc., may submit their proposals to the NBB through the concerned Ministries.

vii. The Dairy Cooperatives/ Milk Unions/ Federations/ GCMMF & other National/ State level Dairy Cooperatives associated/ working under NDDB may submit their proposals to NBB through NDDB

viii. ICAR and its institutions, AICRP on Honey Bees and Pollinators, KVKs, CAUs, SAUs, Indian Institutes of Technology (IITs), National Institute of Nutrition (NIN), ICMR, NCDC, NAFED, & other Central Government Organizations/Agencies involved in beekeeping may submit their proposals directly to NBB

ix. Guidelines and Proforma for various projects may be downloaded from the website: https://nbb.gov.in. Interested applicants may obtain information and send their application through the myScheme platform (https://www.myscheme.gov.in) if already registered.

x. In case of setting up / upgradation of honey testing labs, mini/ satellite honey testing labs, the proposals should be submitted to NBB through FSSAI. The experienced agencies/organisations/ companies having food quality testing labs with two to three years' experience in food quality testing may also submit proposals to NBB through FSSAI for upgradation of labs for testing of all parameters of honey & other beehive products as per notifications of standards for these products issued by FSSAI. FSSAI, after scrutiny, will recommend the eligible proposals to NBB for consideration.

xi. The Project will be examined/apprised by the Project Appraisal Committee (PAC), chaired by the Horticulture Commissioner. The PAC appraise & recommends projects costing up to 1 crore or recommends to Execute Committee (EC) of the Board if a project costs 1 to 5 crore or recommends to the Project Appraisal & Monitoring Committee (PA&MC), chaired by the Secretary (Agriculture), for Project more than 5 crore.

xii. Once the project is approved, an applicant must register on the Madhukranti Portal (https://madhukranti.in/NBB/) for traceability.

**Sources:**

- https://nbb.gov.in/default.html
- https://madhukranti.in/NBB/
- https://www.myscheme.gov.in/schemes/nbhm

## (22) தேசிய தேனீ வளர்ப்பு மற்றும் தேன் இயக்கம் (NBHM)

**தேனீ வளர்ப்பு மற்றும் தேன் இயக்கம் என்றால் என்ன?** இந்தியா வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த துறைகளில் பல புரட்சிகளைக் கண்டுள்ளது. உதாரணமாக: பசுமைப் புரட்சி (உணவு தானிய உற்பத்தி அதிகரிப்பு), வெண்மைப் புரட்சி/ ஆபரேஷன் ஃப்ளட் (பால் உற்பத்தி அதிகரிப்பு), மஞ்சள் புரட்சி (எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி), நீலப் புரட்சி/ நீல் கிராந்தி (மீன் உற்பத்தி), பொன்னிறப் புரட்சி (தோட்டக்கலைத் துறையில் மேம்பாடு/ பழ உற்பத்தி), இளஞ்சிவப்புப் புரட்சி (இறைச்சி/ கோழி பதப்படுத்தும் துறை), வெள்ளிப் புரட்சி (முட்டை உற்பத்தி/ கோழி வளர்ப்பு), சிவப்புப் புரட்சி (தக்காளி மற்றும் இறைச்சி உற்பத்தி), வட்டப் புரட்சி (உருளைக்கிழங்கு உற்பத்தி), சர்க்கரை புரட்சி (சர்க்கரை மற்றும் வெல்லம் உற்பத்தி) மற்றும் சமீபத்தைய வானவில் அல்லது என்றென்றும்-பசுமைப் புரட்சி (அனைத்து விவசாயத் துறைகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சி).

மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள், 2024-ம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க வேண்டும் என்ற நோக்கில் 2016-ம் ஆண்டில் ‘*இனிப்புப் புரட்சிக்கு*’ (*மித்தி கிரந்தி*) அழைப்பு விடுத்தார்கள். இந்த இனிப்புப் புரட்சிக்கு உத்வேகம் கொடுக்கும் வகையில், தேசிய தேனீ வளர்ப்பு மற்றும் தேன் இயக்கம் (NBHM) என்ற மத்தியத் துறைத் திட்டம் (100% மத்திய அரசால் நிதியளிக்கப்படுகிறது) *ஆத்ம நிர்பார் பாரத்* (தற்சார்பு இந்தியா) திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய தேனீ வாரியம் (NBB) / இந்திய தேன் மற்றும் மகரந்தச் சேர்க்கை வாரியம் மூலம் (HPBI) இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த இயக்கம், அறிவியல்பூர்வமாகத் தேனீ வளர்ப்பை ஊக்குவித்தல் மற்றும் நாடு முழுவதும் தேனீ வளர்ப்புத் தொழிலில் முழுமையான வளர்ச்சியை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன்மூலம் விவசாயிகளின் வருமானம் அதிகரிக்கும், வேலைவாய்ப்பு உருவாகும், மற்றும் மகரந்தச்சேர்க்கை மூலம் வேளாண் உற்பத்தித் திறன் உயரும்.

இத்திட்டம், 30 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 150 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. 2020 மற்றும் 2025-ஆம் ஆண்டிற்கு இடையில், இந்த இயக்கத்தின் கீழ் மொத்தம் 298 செயல்திட்டங்கள் தொடங்கப்பட்டன.

இந்த இயக்கத்தின் கீழ் வரும் தேனீக்களின் வகைகள்*: ஏபிஸ் செரானா* (இந்தியத் *தேனீ*), *ஏ. மெலிஃபெரா* (இத்தாலி *தேனீ*), *ஏ. ஃப்ளோரியா* (கொம்புத் *தேனீ*), *ஏ. டோர்சட்டா* (*மலைத்தேனீ*), *டெட்ராகோனுலா இரிடிபென்னிஸ்* (கொட்டாத தேனீக்கள்/ கொசுத் தேனீ) மற்றும் கருங்குளவி ஆகிய தேனை உற்பத்தி செய்யும் அல்லது மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் தேனீ/ பூச்சி வகைகள்.

**நிதி ஒதுக்கீடு**: 3 ஆண்டுகளுக்கு (2020-21 முதல் 2022-23 வரை) ரூ. 500 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இந்தத் திட்டம் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது, அதாவது 2023-24 முதல் 2025-26 வரை மீதமுள்ள ரூ. 370 கோடி பட்ஜெட்டுடன்.

**திட்டச் செயல்பாட்டு முறை:** இத்திட்டம் கீழே காட்டப்பட்டுள்ள 3 மினி இலக்குகள் (MMs) மூலம் செயல்படுத்தப்படுகிறது, அதாவது MM-I, MM-II & MM-III.

*மினி இலக்கு-1:* அறிவியல் ரீதியான தேனீ வளர்ப்பு முறைகளைப் பின்பற்றி, மகரந்தச் சேர்க்கை வாயிலாகப் பயிர் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதில் கவனம் செலுத்துகிறது.

*மினி இலக்கு-2:* தேனீ வளர்ப்பு மூலம் கிடைக்கும் பொருட்களைப் பதப்படுத்துதல், சேமித்தல், சந்தைப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டல் உள்ளிட்ட அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மையில் இது கவனம் செலுத்துகிறது.

*மினி இலக்கு-3:* தேனீ வளர்ப்புத் துறையை மேம்படுத்தக்கூடிய ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பக் கட்டமைப்புகளை உருவாக்கத்தில் கவனம் செலுத்துகிறது.

**செயல்படுத்தும் முகமைகள்:** இத்திட்டம் கீழ்க்கண்ட அமைப்புகள் / நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்படுகிறது. ஆயினும், ஒட்டுமொத்த மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதல்களை மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் தேனீ வளர்ப்பு மற்றும் தேன் இயக்ககம் வழங்குகிறது.

1. தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் (NCDC)
2. தேசிய பால்வள மேம்பாட்டு வாரியம் (NDDB)
3. இந்திய தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை கூட்டமைப்பு லிமிடெட் (NAFED)
4. சிறு விவசாயிகள் வேளாண் வணிகக் கூட்டமைப்பு (SFAC)
5. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான தேசிய நிறுவனம் (NI-MSME)
6. தேசிய தோட்டக்கலை வாரியம் (NHB)
7. காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம் (KVIC)
8. பழங்குடியினர் நல அமைச்சகத்தின் கீழ் உள்ள பழங்குடியினர் கூட்டுறவு வணிக மேம்பாட்டுக் கூட்டமைப்பு (TRIFED)
9. DONER அமைச்சகத்தின் கீழ் உள்ள வடகிழக்கு பிராந்திய வேளாண் வணிகக் கழகம் (NERAMAC)
10. சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் கீழ் உள்ள அமைப்புகள்/ முகமைகள்
11. உணவு பதப்படுத்துதல் தொழில்கள் அமைச்சகத்தின் கீழ் உள்ள அமைப்புகள்/ முகமைகள்
12. ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய மருத்துவத் தாவரங்கள் வாரியம் (NMPB)
13. ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் கீழ் உள்ள மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (SRLM) / தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் (NRLM)
14. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் (ICAR), மத்திய வேளாண்மை பல்கலைக் கழகங்கள் (CAUs), மாநில வேளாண் பல்கலைக் கழகங்கள் (SAUs)

மாநில அளவில், ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டு இயக்கம் (MIDH) / ராஷ்டிரிய கிருஷி விகாஸ் யோஜனா (RKVY) இன் கீழ் அமைக்கப்பட்ட வேளாண்மை/ தோட்டக்கலைத்துறை செயலர்/ முதன்மைச் செயலாளர் தலைமையிலான மாநில அளவிலான வழிகாட்டுதல் குழு (SLSC) அல்லது NBHM குழு இந்த இயக்கத்தின் கீழ் பெறப்படும் திட்ட முன்மொழிவுகளுக்கு (திட்டங்கள்) ஒப்புதல் அளிக்கவும், செயல்படுத்தவும், கண்காணிக்கவும் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. இதேபோல், மாவட்ட ஆட்சியர்/ மாவட்ட நீதிபதி/ மாவட்ட முதன்மை அதிகாரி) அவர்களின் தலைமையின் கீழ் அமைக்கப்பட்ட மாவட்ட அளவிலான வழிகாட்டுதல் குழு (DLC) NBHM-இன் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்க, செயல்படுத்த, கண்காணிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**இந்த நிதி எதற்காகச் செலவிடப்படுகிறது?** விழிப்புணர்வு ஏற்படுத்துதல், திறன் மேம்பாடு/ பயிற்சிகள், தேனீ வளர்ப்பின்மூலம் பெண்களுக்கு அதிகாரமளித்தல், ஒருங்கிணைந்த தேனீ வளர்ப்பு மேம்பாட்டு மையங்கள் (IBDCs) மற்றும் தேனீ நோய்

கண்டறியும் ஆய்வகங்கள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை அமைத்தல், அதிநவீன தேன் பரிசோதனை ஆய்வகங்களை அமைத்தல் அல்லது மேம்படுத்துதல், சாத்தியமான பகுதிகளில் தேன் வளர்ப்பு கோரிடர்/ வழித்தடங்களை அமைத்தல், தேனீ வளர்ப்பு மையங்கள், தேனீ சிகிச்சை மையங்கள், தரமான தேனீ தாய்ப் பூச்சுகளை உருவாக்கும் மையங்கள் மற்றும் தேனீ வளர்ப்பாளர்களை உருவாக்குதல், தேனீ காலனிகளை/ பெட்டிகளை விநியோகம் செய்தல், சுய உதவிக் குழுக்கள்/ உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள்/ தேனீ வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்கள்/ கூட்டமைப்புகள் உருவாக்குதல், டிஜிட்டல் மயமாக்கல்/ ஆன்லைன் பதிவு, தேன் பதப்படுத்துதல், மதிப்புக் கூட்டல், வணிக ஆதரவு மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு உதவுதல் ஆகியன.

**எவ்வளவு உதவி?**

1. **தரமான மூலக்கரு (தாய்ப் பூச்சுகளை) தேனீக்கள் உற்பத்தி செய்ய:** பொதுத் துறைக்கு @ 100% மற்றும் நிபுணத்துவம் பெற்ற உறுப்பினர்கள் உள்ள சங்கங்கள்/ நிறுவனங்கள்/ பெரிய வணிக அமைப்புகளுக்கு மொத்தத் திட்டச் செலவில் 50% என, ஒரு திட்டத்திற்கு அதிகபட்சம் ரூ.30 லட்சம்வரை உதவி வழங்கப்படும்.
2. **தேனீ இனப்பெருக்கம் செய்பவர்களின் மேம்பாடு**: தேனீக் காலனிகளை (கூட்டங்களை) பெரிய அளவில் உற்பத்தி செய்து, பிறருக்குக் கிடைக்கச் செய்ய, தரமான நியூக்ளியஸ் ஸ்டாக்குகளை (மூலக்கரு) பெருக்குவது அவசியம். அதற்காகத் தேனீ இனப்பெருக்கம் செய்பவர்கள் இது சார்ந்த திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க ஊக்குவிக்கபடுகிறார்கள். தேசிய தேனீ வாரியத்தின் (NBB) அனுபவம் பெற்ற உறுப்பினர் தேனீ வளர்ப்பாளர்கள்/ உறுப்பினர் சங்கங்கள்/ நிறுவனங்கள்/ கம்பெனிகளுக்கு உதவிகள் வழங்கப்படும். இந்தப் பிரிவின் கீழ் ஊக்குவிக்கப்படும்/ உருவாக்கப்படும் தேனீ இனப்பெருக்கம் செய்பவர்கள் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு ஆண்டொன்றிற்கு குறைந்தது 2,000 தரமான தேனீ காலனிகளை உற்பத்தி செய்ய வேண்டும். இதற்கான செலவு ரூ. 12.50 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் அதிகபட்சமாக ஒரு திட்டத்திற்கு ரூ. 5 லட்சம்வரை உதவி வழங்கப்படும்.
3. **ஒருங்கிணைந்த தேனீ வளர்ப்பு மேம்பாட்டு மையங்கள்/ தகைசால் மையங்கள்/ தொழில்நுட்ப மையங்கள் நிறுவுதல்**: ஒரு ஒருங்கிணைந்த தேனீ வளர்ப்பு மேம்பாட்டு மையத்திற்கு (IBDC) அதிகபட்சமாக ரூ. 750 லட்சம்வரை உதவி வழங்கப்படுகிறது.
4. **மண்டல அளவிலான தேன் மற்றும் பிற தேன் கூட்டின் பொருட்களை சோதனை செய்யும் ஆய்வகங்களை நிறுவுதல்/ வலுப்படுத்துதல்**: ஆய்வகத்தின் செலவு ரூ. 2000 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில், ஒரு ஆய்வகத்திற்கு அதிகபட்சமாக ரூ. 800 லட்சம் வரை உதவி வழங்கப்படும்.
5. **மாவட்ட அளவில் சிறிய/ சாட்டிலைட் தேன் பரிசோதனை ஆய்வகங்களை நிறுவுதல்/ வலுப்படுத்துதல்:** ஒரு ஆய்வகத்திற்கு ரூ. 200 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில், அதிகபட்சம் ரூ. 100 லட்சம்வரை உதவி வழங்கப்படும்.
6. **தேனீ நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை ஆய்வகங்கள்/ நடமாடும் ஆய்வகங்கள் அமைத்தல்:** இந்த ஆய்வகத்திற்கு ரூ. 30 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில், 100 சதவீத நிதியுதவி அதிகபட்சமாக ரூ.30 லட்சம்வரை தேசிய வேளாண் ஆராய்ச்சி அமைப்பு நிறுவனங்களுக்கு (ICAR/CAUs/ SAUs) வழங்கப்படும்.

7. **தேனீ வளர்ப்பிற்கான உபகரணங்கள் உற்பத்தி அலகுகள் அமைத்தல் மற்றும் தேனீ வளர்ப்பு உபகரணங்களை தரப்படுத்துதல்:** மூலப்பொருட்கள், கருவிகள், உபகரணங்கள், தேன்கூடுகள் தயாரிக்கும் இயந்திரங்கள், மரச்சட்டங்கள், சூப்பர்கள், தேன்கூடு அறைகளுக்கான மெழுகுத்தாள்கள் தயாரிக்கும் இயந்திரம், தேனீ திரைகள், தூரிகை, ராணி கூண்டு, தீவனம், புகை உண்டாக்கும் கருவி, கத்தி, வலை ஆகியவற்றை கொள்முதல் செய்ய உதவிகள் வழங்கப்படும். இந்த மையத்திற்கான செலவு ரூ. 25 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில், அதிகபட்சமாக ரூ. 18.80 லட்சம் வரை உதவித் தொகை நிறுவனம்/ முகமைகளின் தகுதிக்கேற்றவாறு வழங்கப்படும்.

8. **தேனீ வளர்ப்பு வாடகை மையங்களை (CHCs) ஊக்குவித்தல்:** இத்திட்டத்தில் உதவி பெற, ஒரு தேனீ வளர்ப்பு வாடகை மையம், தேவையான அனைத்து கருவிகள், இயந்திரங்கள், உபகரணங்கள் போன்றவற்றுடன் குறைந்தது 1000 தேனீ காலனிகளைப் பராமரிக்க வேண்டும். இந்த மையத்தின் செலவு ரூ. 75 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் அதிகபட்சமாக ரூ. 56.20 லட்சம்வரை உதவி வழங்கப்படும்.

9. **தேன் சிகிச்சை மையங்கள் அமைத்தல்**: தேன் சிகிச்சை மையம் என்பது, தேனீகள் மற்றும் தேனீப் பண்ணை உற்பத்திகள் (ப்ரோபோலிஸ், ராயல் ஜெல்லி, மகரந்தம் போன்றவை) பயன்படுத்தி மனிதர்கள் மற்றும் கால்நடைகளின் சில உடல்நலப் பிரச்சினைகள் (புற்றுநோய், மூட்டு வலி, பாலியல் குறைபாடுகள், செரிமானக் கோளாறுகள், பல் மற்றும் தொண்டைச் சிக்கல்கள், காயம் ஆறுதல் போன்றவை) தொடர்பாக சேவைகள் வழங்கப்படும் ஒரு சுகாதார மையமாகும். இது ஒரு சுகாதார கிளினிக் போன்றது. இதில் மனிதர்கள்/ விலங்குகளின் சில ஆரோக்கியப் பிரச்சினைகளான புற்றுநோய்/ மூட்டு வலி/ ஆண்மைக் குறைவு/ செரிமானம்/ பல்/ தொண்டைப் புண்/ காயங்கள் ஆகியவற்றை தேனீக்கள் மற்றும் தேனின் பிற பொருட்களான ப்ரோபோலிஸ், ராயல் ஜெல்லி, மகரந்தம் ஆகியவற்றைப் பயன்படுத்தி தீர்க்கப்படும். இந்த மையத்திற்கான செலவு ரூ. 5 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில், அதிகபட்சமாக ரூ. 3.80 லட்சம்வரை சம்பந்தப்பட்ட நிறுவனம்/ முகமையின் தகுதிக்கேற்ப வழங்கப்படும்.

10. **டிஜிட்டல் மயமாக்கல் / கணினிமயமாக்கல்**, தேனீ வளர்ப்போர் தரவுத்தளத்தை உருவாக்குதல், தடமறிதல் அமைப்பு, அடிப்படைக் கணக்கெடுப்பு, தேனீ கண்காணிப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை போன்றவற்றில் ஈடுபட்டுள்ள CAUs/ SAUs/ அமைப்புகள்/ சங்கங்கள்/ முகமைகள் உதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

11. **மகளிருக்கு அதிகாரமளித்தல்**: தேனீ வளர்ப்பில் ஆர்வமுள்ள பெண்களுக்கு இத்திட்டம் ஊக்கத்தொகை அளிக்கிறது. மகளிர் குழுக்கள்/ தொகுப்புகள் உருவாக்கப்பட்டு, அவர்களுக்கு தேனீ வளர்ப்பு குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. புதிய குழு அமைக்க ஒரு குழுவிற்கு ரூ. 20,000 வீதமும், ஒரு குழுவிற்கு மத்திற்கு செயல்பாட்டு மூலதனமாக ரூ. 50,000 வீதமும் வழங்கப்படுகிறது. பயிற்சி பெற்றப் பெண்கள், முதன்மை பயிற்சியாளர்களாக/ திட்டத்தின் வழிகாட்டியாகப் பயன்படுத்தப்படலாம், மற்றும் பிற பகுதிகளில் உள்ள பெண்களுக்கு தேனீ வளர்ப்பில் முன்மாதிரி பெண்களாகச் செயல்படலாம்.

12. **தொழில்நுட்ப செயல் விளக்கங்கள்**: தேனீக்கள்/ தேனீ வளர்ப்பின் தாக்கத்தைப் பயிர்களின் விளைச்சல்/ உற்பத்தித் திறனை அதிகரிப்பதி லும், விவசாயிகளின் விளைபொருட்களின் தரத்தை (விதைகள்/ பழங்கள்) மேம்படுத்துவதிலும் நிரூபிப்பதற்கான செயல்விளக்கத் திடலுக்கு, அதிகபட்சமாக ரூ. 10,000 ICAR/ CAUs / SAUs-க்களுக்கு வழங்கப்படும்.

13. ராயல் ஜெல்லி, தேனீ விஷம், தேன்கூடு, தேனீ மகரந்தம் போன்ற உயர் மதிப்பு கொண்ட பொருட்களை உற்பத்தி செய்வதற்கான சிறப்புத் தேனீ வளர்ப்பு உபகரணங்களை வாங்க இத்திட்டத்தில் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

14. **தோட்டங்கள்/ தோப்புகள்/ தேனீக்களுக்கு உகந்த தாவரங்கள் / தேனீ தோட்டங்கள் போன்றவற்றை ஊக்குவித்தல்:** அதிகபட்சமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ.50,000 வரை வழங்கப்படும்.

15. **மாநில தேனீ வாரியங்கள்/ இயக்கங்கள்/ கூட்டுறவு அமைப்புகளை அமைப்பதற்கு மாநில அரசுக்கு உதவி:** மாநில தேனீ வாரியங்கள்/ இயக்கங்கள்/ கூட்டுறவு சங்கங்கள்/ மாநில அரசுகளால் ஊக்குவிக்கப்படும் தேனீ வளர்ப்போரைக் கொண்ட உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு ரூ. 25 லட்சம் வழங்கப்படும்.

16. **தேசிய/ மாநில அளவிலான கருத்தரங்குகள்/ பயிலரங்குகள்/ மாநாடு ஏற்பாடு செய்தல், பயிற்சி/ கண்டுணர் சுற்றுலா ஏற்பாடு செய்தல்:** திட்ட வழிகாட்டுதலின்படி உதவிகள் கிடைக்கும்.

17. **விருதுகள்:** இந்த இயக்கத்தின் கீழ் சிறந்த தேனீ வளர்ப்பாளர் விருது, தேனீ வளர்ப்பில் சிறந்த கண்டுபிடிப்பாளர் விருது மற்றும் தேனீ வளர்ப்பில் பன்முகப்படுத்தலுக்கான விருதுகள் கிடைக்கின்றன. ஒவ்வொரு விருதும் தலா ரூ. 2 லட்சம் மற்றும் பாராட்டுப் பத்திரமும் கொண்டது.

**யார் விண்ணப்பிக்கலாம்?** ஆர்வமுள்ள மற்றும் தகுதியான தேனீ வளர்ப்போருக்குத் தேசிய தேனீ வளர்ப்பு இயக்கம், திட்டச் செயலாக்க முகமைகள் மூலம் மானியம் போன்ற ஊக்கத்தொகைகளை வழங்குகிறது. எனவே, கீழே குறிப்பிட்டுள்ள யார் வேண்டுமானாலும் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

- **தனிப்பட்ட விவசாயிகள்/ தேனீ வளர்ப்போர்கள்:** அறிவியல்பூர்வமான தேனீ வளர்ப்பில் ஈடுபட்டுள்ள அல்லது விரும்பும் தனிநபர்கள் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம். பொதுவாக, வணிக ரீதியான சாத்தியமான தேன் கூடுகளை அமைத்திருக்கும் அல்லது அமைக்கவிருக்கும் நபர்களுக்கு மானியம் வழங்கப்படும். அதாவது, குறைந்தபட்சம் 50 தேன்கூடுகளை வைத்திருக்க வேண்டும், அவை ஒவ்வொன்றும் சூப்பருடன் கூடிய, 10 பிரேம்கள் கொண்ட கூடுகளாக இருக்க வேண்டும்.
- **தொழில்முனைவோர்/ புத்தாக்க நிறுவனம்/ உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள்:** தேனீ வளர்ப்பில் ஈடுபட இயலாத நிலையிலுள்ள, ஆனால் தங்கள் பயிர்களுக்கு மகரந்தச் சேர்க்கை உதவித் தேவைப்படும் விவசாயிகளுக்கு வாடகை சேவைகளை வழங்கவிரும்பும் குழுக்கள் (CHCs)/ நிறுவனங்கள்/ தொழில்முனைவோர் / நிறுவனங்கள் இந்தத் திட்டத்தில் விண்ணப்பிக்கலாம். வாடகை மையங்களை உருவாக்க நிதி உதவி வழங்கப்படும். ஒரு வாடகை மையத்தில் குறைந்தது 1000 தேனீ காலணிகள் மற்றும் தேவையான உபகரணங்கள், இயந்திரங்கள் போன்றவற்றைப் பராமரிக்க வேண்டும்.
- NBHB இயக்கத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட **திட்டச் செயலாக்க முகமைகள்**/ நிறுவனங்கள்.

**விண்ணப்பிப்பது எப்படி?**

i. NBHM-இன் பயிற்சி /கருத்தரங்கு/ கண்டுணர் சுற்றுலாத் தவிர, ஏனைய அனைத்து துணைக்கூறுகளுக்கும் திட்ட அறிக்கை அடிப்படையில் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

ii. அனைத்துத் திட்ட செயலாக்க முகமைகளும் தங்கள் திட்ட முன்மொழிவுகளை தேசிய தேனீ வாரியத்திடம் விரிவான திட்ட அறிக்கை மற்றும் துணை ஆவணங்களுடன் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் சமர்ப்பிக்கலாம் (ஆஃப்லைன் முறையில்).

iii. சங்கங்கள்/ நிறுவனங்கள்/ முகமைகள்/ அமைப்புகள்/ எஃப்.பி.ஓ-கள்/ கூட்டுறவுகள் போன்ற மாநில அரசு முகமைகள்; மாநில தோட்டக்கலை இயக்கம்/ வடகிழக்குப் பிராந்தியத் தோட்டக்கலை இயக்கம் /மாநில தேனீ வாரியங்கள்/ மாநில தேனீ வளர்ப்பு இயக்கங்கள்; மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்/ வேளாண் அறிவியல் மையங்கள்/ மாநில காதி மற்றும் கிராமத் தொழில் வாரியங்கள்/ மாநில வேளாண் பல்கலைக்கழகங்கள்/ மாநில கூட்டுறவு சங்கங்கள் போன்றவை; NBB-இன் சங்கங்கள்/ நிறுவனங்கள்/ பெரு நிறுவனங்கள் போன்றவை திட்ட முன்மொழிவுகளை மாநில தோட்டக்கலை/ விவசாயத் துறைகள் அல்லது மாநில வழிகாட்டுக் குழுவிற்கு (SLSCs) ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கலாம்.

iv. மாவட்ட அளவில் செயல்படும் மேலே குறிப்பிடப்பட்ட முகமைகள்/ நிறுவனங்கள்/ அமைப்புகள், தனிநபர்கள் தங்கள் திட்ட முன்மொழிவுகளை மாவட்ட வழிகாட்டுக் குழுவிற்கு சமர்ப்பிக்கலாம். இந்த முன்மொழிவுகள் மாநில வழிகாட்டுதல் குழுக்களுக்கு (SLSCs) ஒப்புதலுக்காகப் பரிந்துரைக்கப்படும்.

v. SLSC-ஆல் அங்கீகரிக்கப்பட்ட / பரிந்துரைக்கப்பட்ட முன்மொழிவுகள் NBHM இன் கீழ் பரிசீலனைக்காகத் தேசிய தேனீ வாரியத்திற்கு (NBB) சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

vi. தேசிய அளவிலான முகமைகள்/ நிறுவனங்கள்/ வாரியங்கள்/ இயக்கங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் மூலம் தங்கள் முன்மொழிவுகளை NBB-க்கு சமர்ப்பிக்கலாம்.

vii. தேசிய பால் வளர்ச்சி வாரியத்தின் கீழ் செயல்படும் பால் கூட்டுறவு சங்கங்கள் / கூட்டமைப்புகள்/ GCMMF மற்றும் பிற தேசிய/மாநில அளவிலான பால் கூட்டுறவு சங்கங்கள் தங்கள் முன்மொழிவுகளை NDDB மூலம் NBB-க்கு சமர்ப்பிக்கலாம்.

viii. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழக நிறுவனங்கள், தேனீக்கள் மற்றும் மகரந்தச் சேர்க்கையாளர்கள் குறித்த அனைத்து இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்ட முகமை, வேளாண் அறிவியல் மையங்கள், மத்திய / மாநில வேளாண் பல்கலைக் கழகங்கள், இந்திய தொழில்நுட்பக் கழகங்கள், தேசிய ஊட்டச்சத்து நிறுவனம், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழக நிறுவனங்கள், தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம், தேசிய வேளாண் கூட்டுறவு வணிகக் கூட்டமைப்பு, மற்றும் தேனீ வளர்ப்பில் ஈடுபட்டுள்ள மத்திய, மாநில அரசு அமைப்புகள்/ முகமைகள் தங்கள் முன்மொழிவுகளை நேரடியாக NBB-யிடம் சமர்ப்பிக்கலாம்.

ix. திட்டம்குறித்த விவரக்குறிப்புகளை/ விண்ணப்பப் படிவங்களை https://nbb.gov.in என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். ஏற்கனவே பதிவு செய்த விண்ணப்பதாரர்கள் myScheme என்ற இணையதளம் மூலம் (https://www.myscheme.gov.in) தகவல்களைப் பெற்று தங்கள் விண்ணப்பத்தை அனுப்பலாம்.

x. தேன் பரிசோதனை ஆய்வகங்கள், மினி/ சாட்டலைட் தேன் சோதனை ஆய்வகங்களை அமைப்பது/ மேம்படுத்துவது ஆகிய திட்டங்களுக்கு, முன்மொழிவுகளை FSSAI மூலம் NBB-க்கு சமர்ப்பிக்க வேண்டும். உணவுத் தரப் பரிசோதனையில் இரண்டு, மூன்று ஆண்டுகள் அனுபவம் வாய்ந்த முகமைகள் /

நிறுவனங்கள் /கம்பெனிகள் தேன் மற்றும் தேன்சார்ந்த பொருட்களின் அனைத்துத் தரத்தையும் சோதிக்கும் ஆய்வகங்களை அமைக்க/ மேம்படுத்துவதற்கான முன்மொழிவுகளை FSSAI மூலம் NBB-க்கு சமர்ப்பிக்கலாம். ஆய்வுக்குப் பிறகு FSSAI தகுதியான முன்மொழிவுகளை பரிசீலனைக்கு NBB-க்கு பரிந்துரைக்கும்.

xi. NBB-யில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து திட்ட முன்மொழிவுகளும் தோட்டக்கலை ஆணையர் தலைமையிலான திட்ட மதிப்பீட்டுக் குழு (PAC) மூலம் பரிசீலிக்கப்படும்/ மதிப்பிடப்படும். ரூ. 1 கோடி வரையிலான திட்டங்கள் PAC மூலம் மதிப்பிடப்பட்டு பரிந்துரைக்கப்படும், ரூ. 1 முதல் 5 கோடி வரையிலான திட்டங்கள் வாரியத்தின் செயலாக்கக் குழுவிற்கு (EC) பரிந்துரைக்கப்படும், ரூ. 5 கோடிக்கு மேற்பட்ட திட்டங்கள் மத்திய வேளாண்மைச் செயலாளர் தலைமையிலான திட்ட மதிப்பீட்டு மற்றும் கண்காணிப்பு குழுவிற்கு (PA&MC) பரிந்துரைக்கப்படும்.

xii. திட்டத்திற்கு ஒப்புதல் கிடைத்தவுடன், விண்ணப்பதாரர் தங்கள் திட்ட விவரங்களை மதுகிராந்தி போர்ட்டலில் (https://madhukranti.in/NBB/) தடையத்திற்காக பதிவு செய்ய வேண்டும்.

**ஆதாரங்கள்:**

- https://nbb.gov.in/default.html
- https://madhukranti.in/NBB/
- https://www.myscheme.gov.in/schemes/nbhm

## (23) Schemes related to Natural and Organic Farming

**Natural Farming** refers to chemical-free farming, often integrating crop, livestock, on-farm biomass recycling, diversified cropping, etc., with low/no external inputs. Zero Budget Natural Farming (ZBNF) is one type under the broader natural farming umbrella. It emphasises minimal external inputs, biomass mulching, use of cow dung/urine formulations, etc.

**Organic Farming** refers to a system of farm design and management that creates an ecosystem which can achieve sustainable productivity without the use of synthetic external inputs such as chemical fertilisers, pesticides, and synthetic growth regulators (NPOP). Organic farming relies on crop rotation, green manure, compost, biological pest control, and mechanical cultivation to maintain soil productivity and control pests, excluding or strictly limiting synthetic fertilisers and pesticides, plant growth regulators, and livestock feed additives.

**The key features of natural farming and organic farming are given below.**

| Aspects | Natural Farming | Organic Farming |
|---|---|---|
| Definition | A system of farming that completely avoids chemical fertilisers and pesticides and minimises external inputs, relying mainly on locally available natural resources. | A system that prohibits chemical fertilisers and pesticides, but allows the use of organic inputs like compost, manures, biofertilizers, and approved biopesticides. |
| Basic Philosophy | *Farming in harmony with nature* promotes self-sustaining, closed-cycle systems. Based on traditional wisdom and 'Do Nothing (Natural) Farming model' promoted by Japanese farmer Masanobu Fukuoka (1913–2008) in his book "The One-Straw Revolution' and Padma Shree Subhash Palekar's "Zero Budget Natural Farming (ZBNF)". | *Farming using organic inputs* promotes ecological balance, soil fertility, and certified supply chains for safe food production. |
| Main inputs used | Locally prepared natural inputs: Jeevamrutham, Beejamrutham, Panchagavya, Agniastra, Neemastra, etc. Mulching, crop residues, cow dung/urine, green manures. | Certified organic inputs: Compost, FYM, biofertilizers, neem cake, vermicompost, bone meal, plant extracts, etc. |
| External inputs / purchased Materials | Almost no dependence on external or purchased inputs. | Permitted organic inputs can be bought from the market if certified. |
| Certification | Not compulsory yet; no formal certification system specific to natural farming. Often, self-verification or local documentation. | Requires certification: *PGS-India* for the domestic market & *NPOP (APEDA)* for exports. |

| | | |
|---|---|---|
| Government Scheme support | Supported under the National Mission on Natural Farming (NMNF, 2023-26) | Supported under Paramparagat Krishi Vikas Yojana (PKVY) and Mission Organic Value Chain Development for North Eastern Region (MOVCDNER). |
| Use of livestock | Livestock (especially desi cows) are central to the system — cow dung and urine are used to make all formulations. | Livestock is important but not mandatory; manure can come from any organic source. |
| Crop diversity | Promotes multi-cropping, intercropping, agroforestry, and biodiversity. | Also encourages crop rotation, intercropping, but may allow monocropping with organic inputs. |
| Soil health management | Focuses on biological activity and natural soil regeneration through minimal disturbance, mulching, and microbial activity. | Focuses on soil fertility through organic manure and compost. Soil organic carbon is monitored through certification. |
| Pest & Disease management | Uses *natural formulations* (Agniastra, Dashparni Ark, Neem extract, etc.) and ecosystem balance (predators, trap crops). | Uses *approved bio-pesticides* and integrated pest management (IPM) practices. |
| Water use | Emphasises minimal irrigation and moisture conservation through mulching and soil cover. | Water use depends on crop and system; generally lower than conventional but not as minimal as natural farming. |
| Cost of cultivation | Very low 'Zero Budget' concept (no external input cost). | 'Moderate' – cost of certified organic inputs and certification adds expense. |
| Yield | Initially low (1–2 years), stabilizes later with improved soil health. | Often similar trend; yields recover after a conversion period (3 years). |
| Market access | Local markets, direct sales, FPOs; lacks strong certification for export. | Certified produce can access premium domestic & export markets. |
| Training & Demonstration | Promoted *via* BRCs (Bio-Input Resource Centres), KVKs, and model farms under NMNF. | Promoted through cluster formation, training under PKVY / NMSA. |
| Focus area | Self-sustaining, external input-free, low-cost, environment-friendly farming system. | Market-oriented, certified organic produce with premium pricing. |
| Example States | Andhra Pradesh, Gujarat, Himachal Pradesh, and Tamil Nadu (through Pilot clusters). | Sikkim (100% organic State), Uttarakhand, Madhya Pradesh, Maharashtra. |

**Schemes promoting organic /naturing Farming**

There are several Schemes/ related initiatives by the Government of India concerning organic/natural/chemical-free farming. The important ones are given below.

1. National Mission on Natural Farming (NMNF)
2. Paramparagat Krishi Vikas Yojana (PKVY)

3. National Programme for Organic Production (NPOP)
4. Jaivik Kheti / Organic Marketing & Certification

The National Centre for Organic and Natural Farming (NCONF), Ghaziabad, is a nodal organisation for the promotion of organic farming in India. It is working under the Department of Agriculture & Farmers Welfare, Government of India. It has five Regional Centres located at Ghaziabad (North Zone), Bengaluru (South Zone), Bhubaneshwar (East Zone), Nagpur (West and Central) and Imphal (North East Zone).

## 23.1 Jaivik Kheti Portal / Organic Product Marketing

The Jaivik Kheti (Organic Farming) Portal (https://www.jaivikkheti.in) was launched by the Ministry of Agriculture and Farmers' Welfare in 2018 to bridge the gap between organic farmers and buyers. It is an e-commerce + knowledge platform to facilitate marketing/sales of organic produce by organic farmers. This portal is part of the Central Government scheme "Paramparagat Krishi Vikas Yojana (PKVY). It improves market access for organic produce, helps to reduce middlemen and increases visibility of organic produce. This portal also acts as a repository of case studies, training, best practices, etc.

## 23.2 National Mission on Natural Farming (NMNF)

**Launch & Status**: Approved by the Cabinet in November 2024 as a standalone Centrally Sponsored Scheme under M/o Agriculture & Farmers Welfare.

**Outlay**: ₹ 2,481 crore (Central share ₹1,584 crore, State share ₹897 crore) till the 15th Finance Commission period (*i.e.,* up to 2025-26).

**Objectives**: Promote natural farming practices to give safe and nutritious food; reduce input costs; reduce dependence on external chemical inputs; improve soil health; enhance biodiversity; make farming climate resilient.

**Scale & Implementation**

1. Will be implemented in 15,000 clusters of Gram Panchayats over the next two years.
2. The target is to reach 1 crore farmers and cover 7.5 lakh hectares under natural farming.
3. Priority to areas where natural farming is already being practised, and via institutions like SRLMs (State Rural Livelihood Missions), PACS, FPOs, etc.
4. Will set up ~10,000 Bio-Input Resource Centres (BRCs) to ensure easy availability and access to inputs required for natural farming.
5. About 2,000 model demonstration farms will be set up in KVKs, Agricultural Universities, and farmer fields with farmer master-trainers for training-cum-demonstration.

**General information**

1. Financial support is provided for setting up Model Farm on Natural farming in KVKs, SAUs and farmers' fields. It provides a direct financial incentive of ₹4,000 per acre per year for two years to eligible farmers. Pl check the website - https://nmnfresearch.in/ & https://modalfarm.nmnfresearch.in/

2. The MANAGE, Hyderabad, is providing an online training course on natural farming. Pl see the website for the training schedule- https://www.manage.gov.in.
3. The ICAR-Indian Institute of Farming Systems Research, Modipuram, periodically invites *Competitive Research Grants Proposals* in the area of on-field, multidisciplinary research for the wider spread of Natural Farming in India. All the Central Universities, SAUs, ICAR Institutes and other government institutions, NGOs engaged in research are eligible to apply.

## 23.3 National Programme for Organic Production (NPOP)

- The National Programme for Organic Production (NPOP) is India's system for ensuring organic product quality and facilitating organic exports. Launched in 2001 by the Department of Commerce and managed by APEDA (Agricultural and Processed Food Products Export Development Authority), the Ministry of Commerce and Industry. It establishes standards for organic farming, accredits certification bodies, and includes the India Organic logo to guarantee products meet stringent quality and safety criteria.
- NPOP sets standards for organic farming practices, including crops, livestock, aquaculture, wild harvest and apiculture to ensure products are free from harmful chemicals.
- NPOP standards are recognised by the European Commission, Switzerland, the US, etc. for unprocessed plant products, thereby allowing Indian organic products to be exported in these markets.
- The APEDA / NPOP is promoting the "India Organic" logo, which provides consumers with assurance of product authenticity and compliance with organic standards.
- The exports of organic products from India are growing; States like Madhya Pradesh, Maharashtra, etc., are leading in exports.

## 23.4 Paramparagat Krishi Vikas Yojana (PKVY)

**Launch & Status**: Paramparagat Krishi Vikas Yojana (PKVY) is an acronym for "Traditional Agriculture Development Scheme", launched in 2015 under the National Mission on Sustainable Agriculture (NMSA). The objective of the scheme is to promote organic farming through a *cluster approac*h; improve soil health, reduce chemical usage, and enable farmers to produce chemical-free/ low-chemical residue food. The scheme supports farmers with training, marketing assistance, and decentralized certification system called '*Participatory Guarantee System (PGS) India'.*

**Funding pattern**: The funding pattern under the scheme is in the ratio of 60:40 by the Central and State Governments, respectively. In case of North-eastern and Himalayan States, Central Assistance is provided in the ratio of 90:10 (Centre: State) and for Union Territories, the assistance is 100%. The Scheme proposes to cover an additional 6 lakh hectare area under organic farming till 2025-26.

**Key Features**

| Features | Details |
|---|---|
| Eligibility | All farmers and institutions with up to 2 hectares of land are eligible to participate. |
| Cluster-based approach | Groups of farmers form clusters (say ***~20 hectares,*** or groups of 20 farmers, etc., depending on the state) to collectively practice organic farming. This helps economies of scale, peer learning, group inputs, etc. |
| Certification | The scheme promotes the *Participatory Guarantee System (PGS) India* for domestic certification, which is a group-based certification that relies on mutual trust and local involvement.<br>It also supports Third-Party Certification *(e.g., NPOP)* for export/ domestic sale purposes. |
| Financial Support / Incentive | Farmers get assistance for 3 years. The support includes organic inputs, certification & residue testing, marketing/branding/training. The exact per-hectare amounts vary by state, but generally, the subsidy or assistance over 3 years is 31,500/ha. The support is structured as follows:<br>• On-farm & off-farm organic inputs : ₹15,000 (DBT)<br>• Marketing, packaging & branding : ₹4,500<br>• Certification & residue analysis : ₹3,000<br>• Training & capacity building : ₹9,000<br><br>Under the PKVY Scheme, assistance of ₹ 4,500/ha is provided in total in 3 years to facilitate value addition, marketing and publicity. Assistance is provided for certification & training and handholding & capacity building @ ₹ 3.000/-ha for 3 years and ₹ 7,500/- ha respectively for 3 years under PKVY for farmers. |
| Duration | Conversion period of 3 years is typical (since organic farming requires time for transition, soil health, etc.) |

**Certification Bodies & Standards**

A major barrier for organic farmers in the past was the absence of credible certification. PKVY addressed this through two distinct systems:

1. **Third-Party Certification (NPOP):** Implemented by Accredited Certification Agency under the National Programme for Organic Production (NPOP) of the Ministry of Commerce and Industry. This system ensures compliance with international standards. It covers the entire value chain — from production and processing to trading and exports — enabling Indian farmers to access and expand in global organic markets. The NPOP has developed organic process/ production standards for various categories (crops, livestock, wild harvest, etc.). This Third- Party Certificate (NPOP) is useful for export. When the full standard requirements are met, the product can be sold as "Organic". On proper certification by the certification agency "India Organic" logo can be used on the product

2. **Participatory Guarantee System for India (PGS-India)**: Operated under the Ministry of Agriculture & Farmers Welfare. This is a farmer-centric, community-based and lower-cost certification system. Farmers and producers collectively participate in

decision-making, peer inspections, and mutual verification of practices, ultimately declaring the produce as *organic*. PGS-India Certificate is useful for the domestic market (https://pgsindia-ncof.gov.in).

**PGS-India Logo**: Two separate logos are granted under PGS India, *i.e.*, 'PGS organic logo' is for the products from the Organic Farms that have completed the organic conversion process and meet the PGS standard; and the PGS-India Green logo is for products from farms that are in the *process of conversion* to organic and have stopped using chemicals.

### Application Process (By the State and Farmers)

Step 1: Interested applicant should contact the Regional Council of their respective State.
Step 2: Regional Council consolidates all the applications and develop Annual Action Plan
Step 3: The compiled Annual Action plan by the Regional Councils is submitted to the M/o Agriculture & Farmers Welfare through the State Government
Step 4: Funds released to States by the Central Government
Step 5: Further funds are released to Regional Councils to benefit the farmers/individuals.

**Progress:** As of March 2025, about 60 lakh hectares have been covered under organic farming in India since 2015-16 and under NPOP certification (both cultivable and wild harvest).

**Sources:**


- DAC&FW. 2017. Paramparagat Krishi Vikas Yojana (PKVY) Manual for District- Level Functionaries. Department of Agriculture, Cooperation & Farmers Welfare. Government of India.
- Director, NCOF. 2017. Organic Agriculture: Concept, Scenario, Principles and Practices. National Centre of Organic Farming. Department of Agriculture and Cooperation, Ministry of Agriculture, Government of India.
- MANAGE. 2023. Study Material on Natural Farming. National Institute of Agricultural Extension Management, Hyderabad
- NCOF. 2024. Organic Farming- Booklet. Ministry of Agriculture and Farmers' Welfare and National Centre of Organic Farming, Ghaziabad
- NMNF. 2025. Technical Manual on Natural Farming. Integrated Nutrient Management Division Department of Agriculture, & Farmers Welfare, New Delhi
- NMSA. 2015. Participatory Guarantee System for India (PGS-India). Operational Manual for Domestic Organic Certification (National Mission for Sustainable Agriculture). Department of Agriculture and Co-operation, Ministry of Agriculture and National Centre of Organic Farming, Ghaziabad
- Patel, N., Athira, S., Sethi, T. and Meena, S. 2022. Compendium of Success Stories of Natural Farming. NITI Aayog, Government of India.
- PIB. 2025. PKVY: Nurturing Organic Farming in India. Press Information Bureau. Release ID: 2175205, Dt 06 Oct 2025
- https://apeda.gov.in/national-programme-for-organic-production-npop
- https://naturalfarming.dac.gov.in/
- https://pgsindia-ncof.gov.in/PKVY/index.aspx
- https://www.myscheme.gov.in/schemes/pkvy
- https://pgsindia-ncof.gov.in/

## (23) இயற்கை மற்றும் அங்கக வேளாண்மை சார்ந்தத் திட்டங்கள்

**இயற்கை வேளாண்மை** என்பது இரசாயனம் அல்லாத விவசாயத்தைக் குறிக்கிறது. இதில் பயிர்கள், கால்நடைகள், பண்ணையில் உயிரி மறுசுழற்சி மூலம் உருவாகும் உயிர்க்கூளங்கள், பல்வகை பயிரிடல் போன்றவை இணைக்கப்பட்டு, வெளியிலிருந்து குறைந்த அளவு அல்லது பூஜ்ஜிய அளவு இடுபொருட்களுடன் விவசாயம் நடைபெறும். பூஜ்ஜிய பட்ஜெட் இயற்கை வேளாண்மை (ZBNF) என்பது பரந்த இயற்கை விவசாய முறையின் ஒரு வகையாகும். இவ்வகை விவசாயம் வெளியிலிருந்து மிகக்குறைந்த அளவிலான இடுபொருட்களை உபயோகிப்பது, உயிரி தழைக்கூளம் (போர்வை), மாட்டுச் சாணம்/ சிறுநீர் கரைசல்களைப் பயன்படுத்துதல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது.

**அங்கக அல்லது உயிர்ம வேளாண்மை** என்பது இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் செயற்கை வளர்ச்சி ஊக்கிகள் போன்ற செயற்கை இடுபொருள்கள் பயன்படுத்தாமல் நீடித்த, நிலையான உற்பத்தித்திறனை அடையக்கூடிய ஒரு சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்கும் பண்ணை வடிவமைப்பு மற்றும் பண்ணையத்தைக் குறிக்கிறது (NPOP). அங்கக வேளாண்மை பயிர் சுழற்சி முறை, பசுந்தாள் உரம், தொழு உரம், மக்கிய உரங்கள், உயிரியல் பூச்சி கட்டுப்பாடு மற்றும் இயந்திரச் சாகுபடியை அடிப்படையாகக் கொண்டது. இவை மண்ணின் உற்பத்தித்திறனைப் பேணுவதற்கும், பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கும் பயன்படுகின்றன. அங்கக வேளாண்மையில் செயற்கை உரங்கள், பூச்சிக்கொல்லிகள், தாவர வளர்ச்சி ஊக்கிகள் மற்றும் இரசாயன கால்நடை தீவனங்கள் முற்றிலும் தவிர்க்கப்படுகின்றன.

**இயற்கை வேளாண்மை மற்றும் அங்கக வேளாண்மையின் முக்கிய அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.**

| அம்சங்கள் | இயற்கை வேளாண்மை | அங்கக வேளாண்மை |
|---|---|---|
| வரையறை | இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளை முற்றிலுமாகத் தவிர்த்து, முக்கியமாக உள்ளூரில்/ சொந்தப் பண்ணையில் கிடைக்கும் இயற்கை வளங்களைச் சார்ந்த ஒரு விவசாய முறை. | இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளைத் தடைசெய்து, இயற்கை உரங்கள், தொழு உரங்கள், நுண்ணுயிர் உரங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட உயிரி பூச்சிக்கொல்லிகள் போன்ற அங்ககப் பொருள்களை மட்டும் பயன்படுத்தும் ஒரு பண்ணைய முறை. |
| அடிப்படை தத்துவம் | *இயற்கையுடன் இயைந்த விவசாயம்*- தற்சார்பு மற்றும் மூடிய-சுழற்சி அமைப்புகளை ஊக்குவிக்கின்றன. இது, ஜப்பானிய விவசாயி மசனோபு ஃபுகுவோகா (1913–2008) தனது "The One-Straw Revolution" மற்றும் பத்மஸ்ரீ விருது பெற்ற சுபாஷ் பலேகரின் "ஜீரோ பட்ஜெட் இயற்கை விவசாயம் (ZBNF)" ஆகிய புத்தகங்களில் | *அங்கக இடுபொருள்கள் பயன்படுத்தி விவசாயம் செய்தல்*- சுற்றுச்சூழல் சமநிலை, மண் வளம் மற்றும் பாதுகாப்பான உணவு உற்பத்திக்கான சான்றளிக்கப்பட்ட விநியோகச் சங்கிலிகளை ஊக்குவிக்கின்றன. |

| | | |
|---|---|---|
| | குறிப்பிடப்பட்டுள்ள 'Do Nothing Farming இயற்கை விவசாயம் மாதிரி' மற்றும் பாரம்பரிய ஞானம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. | |
| பயன்படுத்தப்படும் முக்கிய இடுபொருள்கள் | உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இயற்கை இடுபொருட்கள்: ஜீவாம்ருதம், பீஜாம்ருதம், பஞ்சகாவ்யா, அக்னியாஸ்திரம், நீமாஸ்திரம் போன்றவை. தழைக்கூளம், பயிர் எச்சங்கள், மாட்டுச் சாணம்/ சிறுநீர், பசுந்தாள் உரங்கள். | சான்றளிக்கப்பட்ட அங்கக இடுபொருட்கள்: இயற்கை உரம், தொழு உரம், நுண்ணுயிர் உரங்கள், வேப்பம் புண்ணாக்கு, மண்புழு உரம், எலும்புத் தூள், தாவரச் சாறுகள் போன்றவை. |
| புறத்தில் தயாரிக்கப்பட்ட / வாங்கப்பட்ட இடுபொருள்கள் | இந்த விவசாய முறை, வெளியில் இருந்து வாங்கப்படும் இடுபொருள்கள் சார்ந்திருக்காது. | அனுமதிக்கப்பட்ட அங்கக இடுபொருட்களைச் சந்தையில் வாங்கலாம் (சான்றளிக்கப்பட்ட பொருட்களை). |
| சான்றளிப்பு முறை | இதுவரை கட்டாயமில்லை; இயற்கை விவசாயத்திற்கு குறிப்பிட்ட சான்றளிப்பு அமைப்பு இல்லை. பெரும்பாலும் சுய சரிபார்ப்பு அல்லது உள்ளூர் ஆவணங்கள் மூலம் நம்பகத்தன்மையைப் பெறுகிறது. | சான்றளிப்பு தேவை: உள்நாட்டு சந்தைக்கு PGS-இந்தியா & ஏற்றுமதிக்கு APEDA-வின் NPOP சான்றுகள் தேவை. |
| அரசுத் திட்ட ஆதரவு | தேசிய இயற்கை வேளாண்மை இயக்கத்தின் (NMNF, 2023-26) கீழ் ஆதரிக்கப்படுகிறது. | பரம்பரகாத் கிருஷி விகாஸ் யோஜனா (PKVY) மற்றும் வடகிழக்கு பிராந்தியத்திற்கான அங்கக மதிப்பு சங்கிலி மேம்பாட்டு இயக்கம் (MOVCDNER) ஆகியவற்றின் கீழ் ஆதரிக்கப்படுகிறது. |
| கால்நடைகளின் பயன்பாடு | கால்நடைகள் (குறிப்பாக நாட்டு மாடுகள்) இந்த அமைப்பின் மையக் கூறாகும்- பல்வேறு கரைசல்களைத் தயாரிக்க மாட்டுச் சாணம் மற்றும் சிறுநீர் பயன்படுத்தப்படுகிறது. | கால்நடைகள் முக்கியம் ஆனால் கட்டாயமில்லை; இயற்கை உரங்கள் எந்தவொரு அங்கக மூலப்பொருளிலிருந்தும் வரலாம். |
| பயிர்ப் பன்முகத்தன்மை | பல பயிர் சாகுபடி, ஊடுபயிர் சாகுபடி, வேளாண் காடுகள் வளர்ப்பு மற்றும் பல்லுயிர்ப் பெருக்கத்தை ஊக்குவிக்கின்றன. | பயிர் சுழற்சி, ஊடுபயிர் சாகுபடியை ஊக்குவிக்கிறது, ஆனால் அங்கக இடுபொருள்களுடன் ஒற்றைப் பயிர் சாகுபடியை அனுமதிக்கலாம். |
| மண்வள மேலாண்மை | குறைந்த உழவு/ மண் கிளறல்கள், தழைக்கூளம் மற்றும் | அங்கக மற்றும் இயற்கை உரங்கள் மூலம் மண் வளத்தை |

| | | |
|---|---|---|
| | நுண்ணுயிரிகள் செயல்பாடுகள் மூலம் மண்ணின் உயிரியல் செயல்பாடுகள் மற்றும் இயற்கையாக மண் வளத்தை மீளுருவாக்கம் செய்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. | மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. சான்றளிப்பு முறை மூலம் மண்ணின் அங்கக கார்பன் அளவு கண்காணிக்கப்படுகிறது. |
| பூச்சி மற்றும் நோய் மேலாண்மை | இயற்கை கரைசல்கள் (அக்னியாஸ்திரம், பத்து இலை அர்க்கம்/கஷாயம், வேப்பம் சாறு போன்றவை) மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பு சமநிலைப் படுத்தும் உயிரிகளை (இரை விழுங்கிகள், ஒட்டுண்ணிகள், பொறி பயிர்கள்) பயன்படுத்துகிறது | அங்கீகரிக்கப்பட்ட உயிரி பூச்சிக்கொல்லிகள் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) நடைமுறைகளைப் பயன்படுத்துகிறது. |
| நீர் பயன்பாடு | குறைந்தபட்ச நீர்ப்பாசனம்; தழைக்கூளம் மற்றும் மண் மூடாக்கு மூலம் ஈரப்பத பாதுகாப்பை வலியுறுத்துகிறது | நீர் உபயோகம் பயிர் மற்றும் பண்ணை முறையைப் பொறுத்து மாறும்; இது வழக்கமான விவசாய முறையை விடக் குறைவாக, ஆனால் இயற்கை விவசாயத்தை விட அதிகமாக இருக்கும். |
| சாகுபடி செலவு | 'ஜீரோ பட்ஜெட்' கருத்துரு முறையைக் கையாள்வதால் குறைவாக இருக்கும் (புற இடுபொருள்கள் பயன்படுத்துவது இல்லை, செலவு குறைவு). | 'மிதமானது' - சான்றளிக்கப்பட்ட அங்கக இடுபொருள்களின் விலை மற்றும் சான்றளிப்பு செலவுகள் அதிகம். |
| மகசூல் | ஆரம்பத்தில் குறைவாக (1-2 ஆண்டுகள்), பின்னர் மேம்பட்ட மண்வளத்துடன் மகசூல் நிலைப்படுத்தப்படுகிறது. | பெரும்பாலும் ஒரே சீராக இருக்கும்; மாற்றுக் காலத்திற்குப் பிறகு (3 ஆண்டுகள்) மகசூல் மீண்டும் சமநிலைக்கு வரும். |
| வணிகம் | உள்ளூர் சந்தைகள், நேரடி விற்பனை, FPO-கள் மூலம் விற்பனை; ஏற்றுமதிக்கு வலுவான சான்றிதழ் இல்லை. | சான்றளிக்கப்பட்ட விளைபொருள்கள் அதிக விலையில் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைகளில் விற்கலாம். |
| பயிற்சி மற்றும் செயல்விளக்கம் | NMNF இன் கீழ் BRC எனப்படும் உயிரி இடுபொருள் வளங்கள் மையம், KVK-கள் மற்றும் மாதிரி பண்ணைகள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. | PKVY/ NMSA-இன் கீழ் பயிற்சி மற்றும் தொகுப்பு/குழுக்கள் உருவாக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. |
| இலக்கு | தன்னிறைவு பெற்ற, புற-இடுபொருட்கள் சார்பற்ற, குறைந்த செலவிலான, சுற்றுச்சூழலுடன் இயைந்த | சந்தை-சார்ந்த, உயர் விலையுடன் கூடிய சான்றளிக்கப்பட்ட அங்கக |

| | | |
|---|---|---|
| | விவசாய முறையை உருவாக்குதல். | விளைபொருட்களை உருவாக்குதல். |
| பின்பற்றும் மாநிலங்கள் | ஆந்திரப் பிரதேசம், குஜராத், இமாச்சலப் பிரதேசம், தமிழ்நாடு (முன்னோடி தொகுப்பு மூலம்). | சிக்கிம் (100% அங்கக மாநிலம்), உத்தரகாண்ட், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா. |

**அங்கக / இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும் திட்டங்கள்**

இந்திய அரசாங்கத்தால் அங்கக /இயற்கை வேளாண்மை அல்லது இரசாயனம் இல்லாத விவசாயத்தை ஊக்குவிக்கும் பல திட்டங்கள்/ முன்னெடுப்புகள் உள்ளன. அவற்றில் முக்கியமானவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. தேசிய இயற்கை வேளாண்மை இயக்கம் (NMNF)
2. பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (PKVY)
3. தேசிய அங்கக உணவு உற்பத்தித் திட்டம் (NPOP)
4. ஜெய்விக் கேத்தி (இயற்கை வேளாண்மை) / அங்ககப் பொருட்கள் வாணிபம் கரிம வேளாண் சந்தைப்படுத்தல் மற்றும் சான்றிதழ் வழங்கல்.

காஜியாபாத்தில் உள்ள தேசிய அங்கக மற்றும் இயற்கை வேளாண்மை மையம் (NCONF), இந்தியாவில் அங்கக வேளாண்மையை மேம்படுத்துவதற்கான ஒரு மைய நிறுவனமாகும். இது இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையின் கீழ் செயல்படுகிறது. இதன் 5 பிராந்திய மையங்கள் காஜியாபாத் (வடக்கு மண்டலம்), பெங்களூரு (தெற்கு மண்டலம்), புவனேஸ்வர் (கிழக்கு மண்டலம்), நாக்பூர் (மேற்கு மற்றும் மத்திய) மற்றும் இம்பால் (வடகிழக்கு மண்டலம்) ஆகிய இடங்களில் உள்ளது.

## 23.1 ஜெய்விக் கேத்தி இணையதளம் / அங்ககப் பொருட்களை சந்தைப்படுத்துதல்

இயற்கை வேளாண் முறையைக் கடைபிடிக்கும் விவசாயிகளுக்கும் உயிர்ம வேளாண் பொருட்களை வாங்குபவர்களுக்கும் (நுகர்வோர்கள்) இடையிலான இடைவெளியைக் குறைக்க, 2018-ஆம் ஆண்டு வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தால் இயற்கை வேளாண்மை இணையதளம் ஒன்று (https://www.jaivikkheti.in) தொடங்கப்பட்டது. இது இயற்கை விவசாயிகள் அங்கக வேளாண் விளைபொருட்களின் விற்பனையை எளிதாக்குவதற்கான ஒரு மின் வணிகம் மற்றும் அறிவுத் தளமாக செயல்படுகிறது. இந்த இணையதளம் மத்திய அரசின் " பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் (PKVY)" ஒரு பகுதியாகும். இது இயற்கை விளைபொருட்களுக்கான சந்தைப்படுத்துதலை மேம்படுத்துகிறது, இடைத்தரகர்களைக் குறைக்கின்றது மற்றும் இயற்கை விளைபொருட்களின் புழக்கத்தை அதிகரிக்கிறது. இந்த இணையதளம் கள ஆய்வுகள், பயிற்சி, சிறந்த விவசாய நடைமுறைகள் போன்றவற்றை உள்ளடக்கிய தகவல் களஞ்சியமாகவும் செயல்படுகிறது.

## 23.2 தேசிய இயற்கை வேளாண்மை இயக்கம் (NMNF)

**தொடக்கம் & தற்போதைய நிலை:** மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையின் கீழ் செயல்படும் தனித்த மத்திய நிதியுதவி பெறும் திட்டமாக (CSS) நவம்பர் 2024 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

**திட்டச் செலவு:** ரூ. 2,481 கோடி (மத்தியப் பங்கு ரூ. 1,584 கோடி, மாநில பங்கு ரூ. 897 கோடி) 15-வது நிதி ஆணைய காலம் வரை (அதாவது 2025-26 வரை).

**நோக்கங்கள்:** பாதுகாப்பான மற்றும் சத்தான உணவை வழங்க இயற்கை விவசாய முறைகளை ஊக்குவித்தல்; வேளாண் இடுபொருட்களின் செலவுகளைக் குறைத்தல்; இரசாயன இடுபொருட்களின் சார்ந்திருப்பைக் குறைத்தல்; மண் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல்; பல்லுயிர்ப் பெருக்கத்தை மேம்படுத்துதல்; வேளாண்மையைக் காலநிலை மீள் தன்மை கொண்டதாக மாற்றுதல்.

**திட்ட அளவு மற்றும் செயல்படுத்தும் முறை**

1) அடுத்த இரண்டு ஆண்டுகளில் 15,000 கிராம பஞ்சாயத்துத் தொகுப்புகளில் செயல்படுத்தப்படும்.
2) ஒரு கோடி விவசாயிகளைச் சென்றடைந்து, 7.5 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் இயற்கை விவசாயத்தை மேற்கொள்வதே இலக்கு.
3) இயற்கை விவசாயம் ஏற்கனவே நடைமுறையில் உள்ள பகுதிகளுக்கு SRLM, PACS, FPO-கள் வழியாக முன்னுரிமை அளிக்கப்படும்.
4) இயற்கை விவசாயத்திற்குத் தேவையான இடுபொருள்கள் எளிதாகக் கிடைப்பதை உறுதி செய்ய 10,000 உயிரி இடுபொருள் வள மையங்கள் (BRC-கள்) அமைக்கப்படும்.
5) பயிற்சி மற்றும் செயல்விளக்கக் காட்சிக்காக சுமார் 2,000 மாதிரி செயல்விளக்கப் பண்ணைகள் KVK-கள், வேளாண் பல்கலைக்கழகங்கள், விவசாயிகளின் வயல்கள் ஆகிய இடங்களில், விவசாயி-மாஸ்டர் பயிற்சியாளர்களைக் கொண்டு அமைக்கப்படும்.

**பொதுத் தகவல்கள்**

1. KVKs, SAUs மற்றும் விவசாயிகளின் வயல்களின் இயற்கை வேளாண்மை மாதிரி பண்ணைகள் அமைப்பதற்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. தகுதியுள்ள விவசாயிகளுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு ஏக்கருக்கு ஆண்டுக்கு ரூ. 4,000 வீதம் நேரடி நிதி ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு வலைத்தளத்தைப் பார்க்கவும்- https://nmnfresearch.in/ & https://modalfarm.nmnfresearch.in/
2. ஹைதராபாத்தில் உள்ள MANAGE நிறுவனம், இயற்கை வேளாண்மை குறித்த ஆன்லைன் பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது. பயிற்சி அட்டவணைக்கு அவர்களின் வலைத்தளத்தைப் பார்க்கவும்- https://www.manage.gov.in.
3. மோதிபுரத்தில் உள்ள ICAR- இந்திய வேளாண் அமைப்பு ஆராய்ச்சி நிறுவனம் (ICAR–Indian Institute of Farming Systems Research), இயற்கை வேளாண்மையை இந்தியா முழுவதும் விரிவுபடுத்தும் நோக்கில், புல அடிப்படையிலான, பல்துறை ஆராய்ச்சிகளுக்கான போட்டி ஆராய்ச்சி மானியத் திட்ட முன்மொழிவுகளை காலந்தோறும் அழைப்பு விடுக்கிறது. அனைத்து மத்திய மற்றும் மாநில வேளாண் பல்கலைக்கழகங்கள், ICAR நிறுவனங்கள் மற்றும் பிற அரசுத் துறை நிறுவனங்கள், ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள NGO-கள் இந்த நிதியுதவியைப் பெற விண்ணப்பிக்கலாம்.

## 23.3 தேசிய அங்கக உணவு உற்பத்தித் திட்டம் (NPOP)

- தேசிய அங்கக உணவு உற்பத்தித் திட்டம் என்பது இந்திய அங்கக/ உயிர்மப் பொருட்களின் தரத்தை உறுதி செய்வதற்கும், ஏற்றுமதியை எளிதாக்குவதற்கும் ஏற்படுத்தப்பட்ட அமைப்பாகும். இது 2001 ஆம் ஆண்டு இந்திய வணிகத் துறையால் தொடங்கப்பட்டு, வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தால் (APEDA) நிர்வகிக்கப்படுகிறது. இது அங்கக வேளாண்மைக்கான தரநிலைகளை உருவாக்குகிறது, சான்றிதழ் அளிக்கும் அமைப்புகளை அங்கீகரிக்கிறது. மேலும் இந்திய அங்கக வேளாண் பொருட்கள் கடுமையான தரம் மற்றும் பாதுகாப்பு அளவுகோல்களைப் பூர்த்தி

செய்வதை உறுதி செய்ய இந்திய அங்கக இலச்சினையை (லோகோ) பிரபலப்படுத்துகிறது.

- NPOP-ஆனது பயிர்கள், கால்நடைகள், மீன்வளர்ப்பு, வன சேகரிப்பு மற்றும் தேனீ வளர்ப்பு உள்ளிட்ட அங்கக வேளாண்மை நடைமுறைகளுக்கான தரநிலைகளை நிர்ணயிக்கிறது, இதன் மூலம், இத்தகைய பொருட்கள் தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள் இல்லாததவை என்பதை உறுதி செய்கிறது.
- பதப்படுத்தப்படாத தாவரப் பொருட்களுக்கான NPOP-வின் தரநிலைகள் ஐரோப்பிய ஆணையம், சுவிட்சர்லாந்து, USAD ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இந்திய அங்ககப் பொருட்களை மேற்படி நாட்டின் சந்தைகளில் ஏற்றுமதி செய்ய முடிகிறது.
- APEDA/ NPOP "இந்திய ஆர்கானிக்" லோகோவை ஊக்குவிக்கிறது. இது நுகர்வோருக்கு இத்தகைய இலச்சினை பொறிக்கப்பட்ட தயாரிப்புகளின் நம்பகத்தன்மை மற்றும் அவைகள் அங்கக தரநிலைகளுக்கு உட்பட்டுள்ளதை உறுதி செய்கிறது.
- இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் உயிர்மப் பொருட்களின் ஏற்றுமதி வளர்ந்து வருகிறது; மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்கள் ஏற்றுமதியில் முன்னணியில் உள்ளன.

## 23.4 பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (PKVY)

**தொடக்கம் & தற்போதைய நிலை:** பரம்பரகத் கிருஷி விகாஸ் யோஜனா (PKVY) என்பது "பாரம்பரிய வேளாண் மேம்பாட்டுத் திட்டம்" என்பதன் சுருக்கமாகும், இது 2015-ஆம் ஆண்டு தேசிய வளங்குன்றா (நிலையான) வேளாண்மை இயக்கத்தின் (NMSA) கீழ் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் நோக்கம், தொகுப்பு அணுகுமுறை மூலம் அங்கக (உயிர்ம) விவசாயத்தை ஊக்குவிப்பது, மண் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல், இரசாயனப் பயன்பாட்டைக் குறைத்தல், விவசாயிகள் இரசாயனம் இல்லாத அல்லது குறைந்த இரசாயன எச்சமுள்ள உணவை உற்பத்தி செய்ய உதவுதல் ஆகியனவாகும். இந்தத் திட்டம் விவசாயிகளுக்குப் பயிற்சி, உயிர்ம விளைபொருட்களைச் சந்தைப்படுத்தல் மற்றும் *'பங்கேற்பு உத்தரவாத அமைப்பு (PGS)- இந்தியா'* எனப்படும் பரவலாக்கப்பட்ட சான்றளிப்பு முறையை அறிமுகப்படுத்தி உதவி வருகிறது.

**நிதியளிப்பு முறை:** இத்திட்டத்தின் கீழ் நிதி மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது. வடகிழக்கு மற்றும் இமயமலை மாநிலங்களைப் பொறுத்தவரை, நிதியுதவி 90:10 (மையம்: மாநிலம்) என்ற விகிதத்திலும், யூனியன் பிரதேசங்களுக்கு 100 சதவிகிதமாகவும் உள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் 2025-26 வரை கூடுதலாக 6 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் அங்கக விவசாயத்தைப் பரவலாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**முக்கிய அம்சங்கள்**

| அம்சங்கள் | விவரங்கள் |
|---|---|
| தகுதி | 2 ஹெக்டேர் வரை நிலம் கொண்ட அனைத்து விவசாயிகளும் நிறுவனங்களும் இத்திட்டத்தில் பங்கேற்கத் தகுதியுடையவர்கள். |
| தொகுப்பு அடிப்படையிலான அணுகுமுறை | பல விவசாயிகள் கூட்டாக அங்கக விவசாயத்தை மேற்கொள்ள குழுக்களை (தொகுப்பு) உருவாக்குகின்றனர் (உ.மாக 20 ஹெக்டேர் அல்லது 20 விவசாயிகள் கொண்ட குழுக்கள் என மாநிலத்தைப் பொறுத்து மாறுபடும்). இது தங்கள் தொழிலை விரிவுபடுத்தவும், சக |

| | |
|---|---|
| | விவசாயிகளிடமிருந்து கற்றலை மேம்படுத்தவும், குழுவாகச் சேர்ந்து இடுபொருட்களை எளிதில் பெறவும் உதவுகிறது. |
| சான்றளிப்பு | இத்திட்டம் உள்நாட்டு சான்றளிப்பிற்காக '*பங்கேற்பு உத்தரவாத அமைப்பு (PGS)- இந்தியாவை*' ஊக்குவிக்கிறது. இந்த PGS-இந்தியா என்பது பரஸ்பர நம்பிக்கை மற்றும் உள்ளூர் மக்கள் ஈடுபாட்டுடன் செயல்படுத்தப்படும் தொகுப்பு அடிப்படையிலான சான்றளிப்பாகும். இத்திட்டம் ஏற்றுமதி/ உள்நாட்டு விற்பனை நோக்கங்களுக்காக மூன்றாம் தரப்பு சான்றளிப்பையும் (உ.ம். NPOP) ஆதரிக்கிறது. |
| நிதி உதவி / ஊக்கத் தொகை | விவசாயிகளுக்கு 3 ஆண்டுகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. இதில், அங்கக இடுபொருட்கள், சான்றளிப்பு & சோதனை செலவுகள், சந்தைப்படுத்தல்/ பிராண்டிங்/ பயிற்சி செலவுகள் ஆகியவையும் அடங்கும். சரியான உதவித் தொகை மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடும், ஆனால் பொதுவாக 3 ஆண்டுகளில் மானியம் அல்லது உதவி ஹெக்டேருக்கு ரூ. 31,500 வரை வழங்கப்படுகிறது. இந்த நிதி ஆதரவு பின்வருமாறு கட்டமைக்கப்பட்டுள்ளது:<br>• பண்ணை-சார் /புற அங்கக இடுபொருட்கள் : ரூ. 15,000 (DBT)<br>• சந்தைப்படுத்தல், பேக்கேஜிங் & எச்ச பகுப்பாய்வு : ரூ. 4,500<br>• சான்றளிப்பு & எச்ச பகுப்பாய்வு : ரூ. 3,000<br>• பயிற்சி & திறன் மேம்பாடு : ரூ. 9,000<br>PKVY திட்டத்தின் கீழ் அங்ககப் பொருட்களின் மதிப்புக் கூட்டல், சந்தைப்படுத்துதல் மற்றும் விளம்பரப்படுத்துவதற்காக 3 ஆண்டுகளில் ஹெக்டேருக்கு ரூ. 4,500 மானியம் வழங்கப்படுகிறது. மேலும், சான்றிதழ் & பயிற்சி மற்றும் பயிற்சிக்குப் பிந்தைய-கண்காணிப்பு & திறன் மேம்பாட்டிற்கு 3 ஆண்டுகளுக்கு முறையே ஹெக்டேருக்கு ரூ. 3,000 மற்றும் ரூ. 7,500/- நிதியுதவி வழங்கப்படுகிறது. |
| கால அளவு | இயல்பான விவசாயத்திலிருந்து அங்கக வேளாண்மைக்கு மாறும் மாற்றுக் காலம் வழக்கமா 3 ஆண்டுகள் ஆகும் (ஏனெனில் அங்கக வேளாண்மைக்கு மாற, மண் ஆரோக்கியம் மேம்பட நேரம் தேவைப்படுகிறது) |

**சான்றளிப்பு அமைப்புகள் & அங்கக வேளாண்மை தரநிலைகள்**

கடந்த காலங்களில் அங்கக விவசாயிகளுக்கு நம்பகமான சான்றளிப்பு முறை இல்லாதது ஒரு பெரிய குறையாக இருந்தது. PKVY திட்டம் இரண்டு தனித்துவமான அமைப்புகள் மூலம் இதை நிவர்த்தி செய்கிறது:

**1. மூன்றாம் தரப்பு சான்றளிப்பு முறை (NPOP):** மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் அங்கக உற்பத்திக்கான தேசியத் திட்டத்தின் (NPOP) அங்கீகாரம் பெற்ற சான்றளிப்பு நிறுவனத்தால் இம்முறை செயல்படுத்தப்படுகிறது. இந்த சான்றளிப்பு முறை நமது உற்பத்தி சர்வதேச தரங்களுடன் இணங்குவதை உறுதிசெய்கிறது. இந்த சான்றளிப்பு முறை உற்பத்தி தொடங்கி அறுவடைக்குப் பிந்தைய பதப்படுத்துதல் வரை- வர்த்தகம் முதல் ஏற்றுமதி வரையிலான முழு மதிப்புச் சங்கிலியையும் கண்காணித்து சான்றளிக்கின்றது. இதன் மூலம், இந்திய விவசாயிகள் உலக அங்கக சந்தைகளை அணுகவும், தங்கள் விற்பனையை விரிவுபடுத்தவும் முடியும். NPOP பல்வேறு வகைகளுக்கான (பயிர்கள், கால்நடைகள், காட்டு சேகரிப்பு போன்றவை) அங்கக உற்பத்தி முறை மற்றும் தரங்களை உருவாக்கியுள்ளது. இந்த மூன்றாம் தரப்பு

சான்றிதழ் (NPOP) ஏற்றுமதிக்குப் பயனுள்ளதாக இருக்கும். ஒரு வேளாண் உற்பத்தி அணைத்து தரநிலை தேவைகளையும் பூர்த்தி செய்யும்பொழுது, அத்தயாரிப்பை/ பொருட்களை "ஆர்கானிக் / அங்கக/உயிர்ம" என்று சட்டப்படி விற்கலாம். சான்றளிப்பு நிறுவனத்தால் ஆர்கானிக் சான்றிதழ் வழங்கப்பட்டபின் "இந்தியா ஆர்கானிக்" இலச்சினையை அத்தயாரிப்பில் பயன்படுத்தலாம்.

**2. உள்நாட்டு வியாபாரத்திற்கான பங்கேற்பு உத்தரவாத அமைப்பு (PGS-இந்தியா):** இந்த அமைப்புமுறை வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தால் செயல்படுத்தப்படுகிறது. இது விவசாயிகளை மையமாகக் கொண்ட, சமூகம்/ தொகுப்பு அடிப்படையிலான, குறைந்த செலவில் சான்றளிப்பு அளிக்கும் அமைப்பாகும். விவசாயிகளும் உற்பத்தியாளர்களும் ஒன்றிணைந்து முடிவெடுப்பதில் பங்கேற்பது, சக ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் பரஸ்பர சரிபார்ப்பில் ஈடுபடுகின்றனர். இறுதியில் அவர்களே தங்கள் விளைபொருட்களை 'ஆர்கானிக்' என்று அறிவிக்கின்றனர். PGS-India சான்றிதழ் உள்நாட்டு சந்தையில் பயனுள்ளதாக இருக்கும் (https://pgsindia-ncof.gov.in).

**PGS- இந்தியா இலச்சினை:** PGS-இந்தியா சான்றளிப்பின் கீழ் இரண்டு தனித்தனி இலச்சினைகள் வழங்கப்படுகின்றன. 'PGS ஆர்கானிக்' இலச்சினை என்பது அங்கக மாற்றக் காலம் மற்றும் பிற செயல்முறைகளை முடித்து, அங்ககத் தரநிலைகளைப் பூர்த்தி செய்யும் பண்ணைகளின் தயாரிப்புகளுக்கு வழங்கப்படுகின்றது. 'PGS-இந்தியா (கிரீன்) பசுமை' என்ற இலச்சினை அங்கக மாற்றுக் காலத்தில் இருக்கும் பண்ணைகள் மற்றும் இரசாயன இடுபொருட்கள் பயன்பாட்டை நிறுத்திய பண்ணைகளின் தயாரிப்புகளுக்கு வழங்கப்படுகின்றது.

**விண்ணப்ப நடைமுறை (மாநிலம் மற்றும் விவசாயிகளால்)**

படி 1: ஆர்வமுள்ள விண்ணப்பதாரர் அந்தந்த மாநிலத்தின் பிராந்திய கவுன்சிலைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

படி 2: பிராந்திய கவுன்சில் அனைத்து விண்ணப்பங்களையும் ஒருங்கிணைத்து வருடாந்திர செயல் திட்டத்தை உருவாக்குகிறது.

படி 3: பிராந்திய கவுன்சில்களால் தொகுக்கப்பட்ட வருடாந்திர செயல் திட்டம் மாநில அரசுகள் மூலம் மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்திடம் சமர்ப்பிக்கப்படுகிறது.

படி 4: மத்திய அரசால் மாநிலங்களுக்கு நிதி விடுவிக்கப்படுகிறது.

படி 5: விவசாயிகள்/ தனிநபர்களுக்குப் பயனளிக்கும் வகையில் பிராந்திய கவுன்சில்களுக்கு கூடுதல் நிதி விடுவிக்கப்படுகிறது.

**முன்னேற்றம்:** மார்ச் 2025 நிலவரப்படி, 2015-16 முதல் இந்தியாவில் சுமார் 60 லட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பு அங்கக வேளாண்மையின் கீழ், NPOP சான்றளிப்புடன் கொண்டுவரப்பட்டுள்ளது (பயிர்கள் மற்றும் வன சேகரிப்பு இரண்டும்).

**ஆதாரங்கள்:**


- DAC&FW. 2017. Paramparagat Krishi Vikas Yojana (PKVY) Manual for District- Level Functionaries. Dept. of Agriculture, Cooperation & Farmers Welfare. Govt. of India.
- Director, NCOF. 2017. Organic Agriculture: Concept, Scenario, Principles and Practices. National Centre of Organic Farming. Department of Agriculture and Cooperation, Ministry of Agriculture, Govt. of India.
- MANAGE. 2023. Study Material on Natural Farming. National Institute of Agricultural Extension Management, Hyderabad

- NCOF. 2024. Organic Farming- Booklet. Ministry of Agriculture and Farmers' Welfare and National Centre of Organic Farming, Ghaziabad
- NMNF. 2025. Technical Manual on Natural Farming. Integrated Nutrient Management Division Department of Agriculture, & Farmers Welfare, New Delhi
- NMSA. 2015. Participatory Guarantee System for India (PGS-India). Operational Manual for Domestic Organic Certification (National Mission for Sustainable Agriculture). Department of Agriculture and Co-operation, Ministry of Agriculture and National Centre of Organic Farming, Ghaziabad
- Patel, N., Athira, S., Sethi, T. and Meena, S. 2022. Compendium of Success Stories of Natural Farming. NITI Aayog, Govt of India.
- PIB. 2025. PKVY: Nurturing Organic Farming in India. Press Information Bureau. Release ID: 2175205, Dt 06 Oct 2025
- https://apeda.gov.in/national-programme-for-organic-production-npop
- https://naturalfarming.dac.gov.in/
- https://pgsindia-ncof.gov.in/PKVY/index.aspx
- https://www.myscheme.gov.in/schemes/pkvy
- https://pgsindia-ncof.gov.in/

## (24) Schemes Related to Chemical Fertilizers

The Government of India provides subsidies on chemical fertilizers to assist farmers in buying them at affordable prices, even when the input costs and global fertilizer prices are high. Urea continues to be made available to farmers at the statutorily notified Maximum Retail Price (MRP) irrespective of production costs. In the case of Phosphatic (P) and Potassic (K) fertilizers, the Government of India has implemented Nutrient Based Subsidy (NBS) Policy. Under the policy, a fixed amount of subsidy, decided on an annual or bi-annual basis, is provided to manufacturers/importers on subsidized P&K fertilizers depending on the nutrient content of the fertilizers. In addition, the Government have been announcing special packages on DAP over and above the NBS subsidy rates on a need basis so that the MRP of the fertilizers remains stable and market volatility is subsumed. In 2024-25, the Government has approved a one-time special package on DAP beyond the NBS rates on actual PoS (Point of Sale) sale of DAP @ ₹ 3,500 per MT to the fertilizer companies to ensure availability of DAP at affordable prices to the farmers. Thus, the entire subsidy schemes on fertilizers are focused towards timely availability of fertilizers at affordable prices to farmers.

Under the fertilizer Direct Benefit Transfer (DBT) system, 100% subsidy is released to the fertilizers companies on the basis of actual sales made by the retailers to the farmers. To ensure that the subsidy reaches the intended beneficiary, under DBT, sale of all subsidized fertilizers to farmers/ buyers is made through Point of Sale (PoS) devices installed at each retailer shop and the beneficiaries are identified through Aadhaar Card, KCC, Voter Identity Card, etc.

Setting up and revival of 6 urea production units at Chambal Ferti Ltd, Kota, Rajasthan, Matix Ltd. Panagarh, West Bengal, Fertilizer Plants at Ramagundam-Telangana, Gorakhpur-UP, Sindri-Jharkhand and Barauni-Bihar since 2018 is helping the country's atmanirbhar in terms of urea production and availability. Indigenous production of urea has increased. By 2026, eight nano urea plants will be commissioned.

The NBS scheme is helping to reduce skewed fertilizer use (excessive urea leading to nitrogen overuse and soil nutrient depletion). Over recent years (e.g., 2022-23 to 2024–25), subsidies under NBS for P&K fertilizers exceeded ₹2 lakh crore in total allocation. The scheme has driven significant growth in domestic fertilizers output, with P&K (DAP & NPKS) fertilizers production increasing from 112 LMT in 2014 to 169 LMT in 2025. All these measures will reduce our current import dependency.

The Government of India have been promoting judicious use of fertilizer through the Soil Health Card scheme since 2014-15. Organic farming is promoted through the Paramparagat Krishi Vikas Yojana (PKVY) in all the States/UTs (except the North Eastern States) and the Mission Organic Value Chain Development for North Eastern Region (MOVCDNER) in the North Eastern States. The Government has notified alternative fertilizers namely, Organic Fertilizers, Bio-fertilizers, De-oiled cakes, Organic Carbon Enhancers and Nano Fertilizers in the Fertilizer Control Order, 1985 to ensure supply and quality of such fertilizers.

New measures launched by the Govt. of India as part of the fertilizer reform in India are given below.

### 1) Pradhan Mantri Bhartiya Jan Urvarak Pariyojana (PMBJP) or One Nation One Fertilizer (ONOF)

- The One Nation One Fertilizer scheme was introduced in Oct 2022 to bring uniformity in branding and ensure transparency in the fertilizer sector. It mandates that all subsidized fertilizers (Urea, DAP, MOP, NPK) sold across the country be marketed under a single brand name, "**Bharat**".
- Printing on the bag: The top two-thirds portion of the fertilizer bag (one side) is reserved for printing the unified Bharat branding. On this, the official logo of Pradhan Mantri Bhartiya Jan Urvarak Pariyojna, fertilizer name with prefix Bharat (Bharat urea, Bharat DAP, Bharat NPK, etc), scheme name Pradhan Mantri Bhartiya Janurvarak Pariyojna will be printed. The lower one-third space will be used for printing the fertilizer companies' name, their logo, product details and other information as required in different rules.
- The idea is to reduce confusion among farmers. In the earlier years, the same fertilizer was sold under multiple brand names, which made it difficult for buyers to judge quality. This new branding approach ensures that farmers across states receive the same quality product with the assurance of government support.
- Fertilizer Companies were advised not to procure old-designed bags w.e.f. 15.09.2022 and use the new bags with the One Nation One Fertilizer concept w.e.f. 2.10.2022.

### 2) Pradhan Mantri Kisan Samriddhi Kendras (PMKSK)

- This scheme was launched in 2022 by the Ministry of Chemicals & Fertilisers.
- PM-KSK is a one-stop centre for farmers to provide quality agri-inputs (seeds, fertilizers, pesticides) and services like soil testing, drones, and equipment under one roof.
- These centers also provide information regarding government schemes, agricultural technology, and best practices.
- The Primary Agricultural Cooperative Credit Societies (PACS) of each States are being enabled to operate as PMKSK to increase accessibility to farmers.
- More than 3 lakh retail fertiliser shops in the country will be converted into PMKSK in a phased manner.

### 3) Fertilizer subsidy schemes

Current subsidy policies for inorganic fertilizers include frameworks like New Pricing Scheme (NPS-III), Modified NPS-III, New Investment Policy (NIP)-2012, and New Urea Policy (NUP)-2015 which are periodically updated by the government. The major subsidy schemes currently in operation are:

1. Urea Subsidy Scheme (for nitrogenous fertilizer- Urea)
2. Nutrient Based Subsidy (NBS) Scheme (for non-urea fertilizers including phosphatic and potassic fertilizer grades such as DAP, MOP, SSP, NPK blends)

These two are the Central sector schemes (fully financed by the Govt. of India) operated through the Ministry of Chemicals & Fertilizers.

### 3.1 Urea Subsidy Scheme

#### 3.1.1 Why urea gets a separate subsidy?

- Urea is the most widely used nitrogenous fertilizer in India and is essential for higher crop yield.
- To promote food security and reduce farmers' cost burden, urea sales are regulated at a controlled price (at statutory MRP).
- Fertilizer pricing, distribution, and sale norms are broadly governed by the Fertilizer (Control) Order, 1985 made under the Essential Commodities Act, which empowers the government to regulate fertilizer quality, distribution, and pricing (including subsidy-linked MRP control).
- Urea is treated as an Essential Commodity and its price, sales, quality, etc. is regulated by the Government.
- The government has kept the urea price constant since 2018, despite global price fluctuations, by providing high subsidies to manufacturers and importers.
- The government pays as subsidy to the fertilizer company, the difference between the 'actual cost of production or import' and the 'price paid by farmers, i.e. the maximum retail price or MRP'.
- As urea has been historically heavily price-controlled and not deregulated like most P&K fertilizers a separate scheme for urea subsidy has been continued in India.

**3.1.2 Subsidy Details**

- The Government of India notifies a statutory Maximum Retail Price (MRP) for urea.
- Since 2024, the Government of India has been maintaining a stable MRP for Urea to support farmers. The price of urea as of January 2026 is as follows.
    - 45 Kg Bag: ₹242 per bag (exclusive of taxes and neem coating charges).
    - 50 Kg Bag: ₹268 per bag.
    - Neem-Coated Urea: The price for neem-coated urea remains capped at ₹266.5 per 45 kg bag.
- Urea subsidy has three components:
    - Indigenous (domestic) production subsidy — supports domestic urea units.
    - Imported urea subsidy — covers imports made to bridge the domestic demand gap.
    - Uniform Freight Subsidy — helps transport of urea across regions.
- Farmers purchase urea at the government notified MRP. The government compensates manufacturers or importers for the difference between the delivered cost and net market realization.
- *100% DBT & PoS Machines:* 100% of the subsidy is released to companies only after the urea is sold to farmers via Point of Sale (PoS) devices installed at retail outlets.
- *Biometric Authentication:* Farmers must authenticate their purchase using an Aadhaar card, Kisan Credit Card (KCC), or Voter Identity Card, which allows for tracking the exact buyer, quantity, and time of sale.
- *Monitoring*: The fertilizer subsidy in India is monitored through a comprehensive digital, real-time mechanism managed by the Department of Fertilizers (DoF), centred around the Direct Benefit Transfer (DBT) system and the Integrated Fertilizer

Management System (iFMS). The iFMS is an online web-based system that tracks the entire supply chain, from production/import to the retailer level, providing real-time data on stock availability and movement.

### 3.1.3 Neem Coated Urea (NCU)

- Urea (carbamide) is a white crystalline substance with the chemical formula $NH_2$-CO-$NH_2$. It is highly water-soluble and contains 46% nitrogen. Urea is used extensively as a chemical fertilizer as well as for industrial uses.
- Prilled urea (size 0.85 to 2.8 mm) and granular urea (size 2 to 4.75 mm) are two types of solid nitrogen fertilizers that are used in agriculture. In India, prilled urea has historically been the most widely used form of solid nitrogen fertilizer due to its lower production costs and fast-dissolving nature.
- However, the country is increasingly shifting toward granular urea, which is preferred for its better handling characteristics and suitability for mechanised farming.
- At present, almost all urea used in India is Neem Coated Urea (NCU), regardless of whether it is prilled or granular to prevent industrial diversion of subsidized urea.
- Neem-coated urea is regular urea fertilizer coated with neem oil. This coating slows down the release of nitrogen into the soil. As a result, the plant receives nitrogen gradually, based on its need.
- Until 2014, only around 25 per cent of the entire urea produced in the country was neem-coated. Since 2015, the government has mandated 100% neem coating for all agricultural-grade urea (both domestic and imported) to prevent its diversion for non-agricultural industrial uses and to improve nitrogen use efficiency.
- The subsidized MRP of Neem Coated Urea is **₹242 per 45 kg bag** (exclusive of taxes and neem coating charges).
- The NCU is less hygroscopic compared to prilled urea, so chances of forming lumps/cakes in bags are reduced. The NCU is slightly less soluble compared to common urea, so the chances of leeching loss in excess field moisture or during rainfall also reduce. Due to coating of neem oil, volatilization loss due to direct exposure to sun is also reduced, which also reduces nitrification and denitrification losses, pest incidence and enhances crop yield.

### 3.1.4 Sulphur Coated Urea (SCU)

- Sulphur coated Urea is another initiative by the government, introduced in the country for the first time on June 28, 2023.
- The SCU is a slow-release, inorganic fertilizer created by coating urea granules with sulfur (as sealant- like wax) to regulate nitrogen release. The SCU typically contains 30 to 40% nitrogen and 10 to 30% sulphur.
- SCU was originally developed at the Tennessee Valley Authority (TVA) Laboratories and manufactured commercially for almost 30 years in the USA. Now, India started producing sulphur-coated urea domestically, with the Rashtriya Chemicals and Fertilisers Limited (RCF) Trombay plant leading commercial manufacturing, and other players like the National Fertilizers Limited (NFL) Panipat plant exploring production technology.
- In India, the SCU is marketed as "**Urea Gold**". It **contains 37% N and 17% Sulphur.**

- SCU is more economical and efficient than the common urea and the currently used neem-coated urea. The SCU leads to a reduction in urea consumption by 25%. It will address Sulphur deficiency for the soil in the country, save input costs for the farmers and also raise incomes for farmers with enhanced production & productivity.
- The Urea Gold is sold in 40 kg bags at the same MRP as a 45 kg bag of neem-coated urea, which is ₹266.50, but varies slightly depending on bag size, location and brand.

### 3.1.5 Nano Urea

- Nano Urea is a nanotechnology-based **liquid** fertilizer which provides nitrogen to the plants.
- Nano urea is created by breaking down conventional urea into tiny particles that are around 20–50 nanometers in size. This process is achieved using nanotechnology techniques such as high-pressure homogenisation and sonication. The tiny size nano particle provides a larger surface area, making it easier for plants to absorb nutrients. Also, these particles can store nutrients and release them gradually, ensuring a steady supply over time.
- Nano Urea (liquid) contains **4.0% nitrogen** (w/v) as encapsulated nitrogen analogues or forms embedded on an organic matrix. Compared to conventional urea, it has a desirable particle size of about 20-50 nm and more surface area (10,000 times over 1 mm urea prill) and number of particles (55,000 nitrogen particles over 1 mm urea prill).
- The Government of India has notified the specifications of Nano Urea and Nano DAP under Fertilizer Control Order, 1985.
- Nano urea is high-efficiency liquid fertilizer, to be sprayed on leaves, offering >80% nitrogen use efficiency (NUE), whereas conventional, granular urea has low efficiency (30-50%) due to losses. Hence, the nano urea significantly reduces fertilizer use (one 500 ml bottle is often equated to one bag of common urea) and environmental impact.
- Nano urea is produced by an energy efficient environment friendly production process with less carbon footprints. Hence, it reduces environmental pollution.
- Its application as foliar fertilization enhances crop productivity with commensurate benefits in terms of better soil, air and water, and farmers' profitability.
- Studies conducted by the ICAR show that two foliar sprays of nano urea, along with 2/3 of the recommended N and full doses of PK, increased crop yields by 3-8% (Pl see Lok Sabha unstarred question No. 5564 dt 04.04.2025).
- Spraying of Nano fertilizers through drones has emerged as a cost-effective method.
- The IFFCO Nano Urea (liquid) is the world's first Nano fertilizers which has been notified by Fertilizer Control Order (FCO, 1985), Government of India.
- Nano Urea (liquid) is recommended for application ***only as a foliar spray*** at critical growth stages of crops. Mix 2-4 ml of Nano urea in one litre of water and spray on crop leaves at its active growth stages. Note: Don't cut off basal nitrogen supplied through DAP or complex fertilizers. Reduce only the top-dressed Urea, which is being applied in 2-3 splits. The number of sprays of Nano Urea can be increased or decreased depending upon the crop, its duration and overall nitrogen requirement.
- Price of Nano Urea (liquid) may range from Rs 225 to 325 per 500 ml bottle.

- Nano Urea (liquid) is marketed by the IFFCO, Ray Nano Science & Research Centre, Meghmani Crop Nutrition Ltd, Zuari Farm Hub Ltd and Coromandel International Ltd.
- At present, subsidy is not provided to the nano urea, but the Department of Fertilizers is encouraging its companies to set up Nano fertilizer plants. As of January 2026, 7 Nano urea plants and 4 Nano DAP plants have been set up by PSU and private companies in India.

### 3.2 Nutrient-Based Subsidy (NBS) Scheme

- Implemented from 1st April 2010 by the Department of Fertilizers, Ministry of Chemicals & Fertilizers, Govt. of India, marking a shift from product-based subsidies to nutrient-based ones for non-urea fertilizers.
- Applies to **phosphatic and potassic (P&K) fertilizers.** Currently, it covers over 28 grades of P&K fertilizers.
- Under NBS, subsidy is fixed per kilogram of each nutrient (Nitrogen (N), Phosphate (P), Potash (K), Sulphur (S)).
- MRP is deregulated (left open) — fertilizer manufacturers/marketers can set reasonable prices; the subsidy amount paid is fixed and notified.
- Freight subsidy is also provided to reduce distribution cost.

**Objectives**

The main reasons for introducing NBS were:

1. To rationalize subsidy on non-urea fertilizers based on nutrient content rather than fixed product prices.
2. To encourage balanced use of N, P, K, S fertilizers and avoid over-dependence on one nutrient *(i.e.* the urea), which can harm soil health.
3. Encourage the application of secondary nutrients like Sulphur (S) and support sustainable agriculture by addressing soil degradation.
4. To link subsidy with global price trends and nutrient requirements, making pricing more transparent and nutrient supply more efficient.

**Implementation**

- Companies can fix Maximum Retail Prices (MRP) at reasonable levels (monitored by the government).
- The government regularly announces NBS rates (usually annually or biannually during Kharif and Rabi seasons) based on global prices, forex rates, domestic supply, and market conditions.
- Subsidy calculation: Subsidy is provided at a fixed rate per kg of nutrient (₹/kg) for Nitrogen (N), Phosphorus (P), Potash (K), and Sulphur (S) contained in the P&K fertilizers. This nutrient-linked approach is converted into a product-specific per-ton subsidy (₹/MT) for different fertilizer grades. Thus, the subsidy amount will be proportional to the nutrient composition of each fertilizer grade.
- Manufacturers get subsidy reimbursements based on actual sales recorded through the electronic system (like DBT/IFMS).

- Additional support: Freight subsidies are provided for movement, and special packages (e.g. for DAP) are sometimes announced. Fortified/coated grades may attract extra incentives.
- To ensure transparency, accountability, and fair pricing in the implementation of the NBS Scheme, the fertilizer companies are required to comply with the following regulatory and operational measures:
  1. Fertilizer companies must submit audited cost data indicating the reasonableness of the MRP fixed by them for P&K fertilizers. This enables the Department of Fertilizers (DoF) to assess whether the declared MRPs are justified.
  2. Any profit earned by the Fertilizer Company beyond the prescribed limit will be treated as unreasonable and recovered from the concerned company (profit margin of up to 8% for importers, 10 % for manufacturers and 12% for Integrated manufacturers over the cost of production of the final P&K product is considered reasonable).
  3. Each fertilizer bag must clearly display MRP and applicable subsidy per bag and per kilogram. Charging more than the printed MRP is an offence and is punishable under the Essential Commodities Act, 1955.
  4. All manufacturers, marketers, and importers of P&K fertilizers, including Single Super Phosphate (SSP) manufacturers, must ensure that fertilizers are transported up to the retail point on a Freight on Road (F.O.R.) delivery basis.
  5. Based on the assessed requirement, the Department of Fertilizers allocates adequate quantities of fertilizers to the States and UTs through a monthly supply plan and continuously monitors their availability across regions. The movement of all major subsidized fertilizers is tracked through an online, web-based Integrated Fertilizer Management System (iFMS) digital portal. Additionally, the DA&FW and DoF hold weekly video conferences with State Agriculture Officials to ensure effective coordination and resolve any emerging supply issues.

**Recent Subsidy Rate**

During January 2026, the government has approved the updated NBS rates for the Rabi 2025-26 season, effective from October 2025 to March 2026, as follows.

**Per kg nutrient subsidies contained in P&K fertilizers grades:**

- Nitrogen (N) : ₹43.02
- Phosphate (P) : ₹47.96
- Potash (K) : ₹2.38
- Sulphur (S) : ₹2.87

**Product-wise subsidy on 28 grades of P&K fertilizers (₹/MT) are as follows**

| Sr.No. | Name of Fertilizers | NBS Rate (₹/MT) |
|---|---|---|
| 1 | DAP 18-46-0-0 | 29,805 |
| 2 | MOP 0-0-60-0 | 1,428 |
| 3 | SSP 0-16-0-11 | 7,408 |
| 4 | NPS 20-20-0-13 | 18,569 |
| 5 | NPK 10-26-26-0 | 17,390 |
| 6 | NP 20-20-0-0 | 18,196 |
| 7 | NPK 15-15-15 | 14,004 |

| | | |
|---|---|---|
| 8 | NP 24-24-0-0 | 21,835 |
| 9 | AS 20.5-0-0-23 | 9,479 |
| 10 | NP 28-28-0-0 | 25,474 |
| 11 | NPK 17-17-17 | 15,871 |
| 12 | NPK 19-19-19 | 17,738 |
| 13 | NPK 16-16-16-0 | 14,938 |
| 14 | NPS 16-20-0-13 | 16,848 |
| 15 | NPK 14-35-14 | 23,142 |
| 16 | MAP 11-52-0-0 | 29,671 |
| 17 | TSP 0-46-0-0 | 22,062 |
| 18 | NPK 12-32-16 | 20,890 |
| 19 | NPK 14-28-14 | 19,785 |
| 20 | NPKS 15-15-15-09 | 14,262 |
| 21 | NP 14-28-0-0 | 19,452 |
| 22 | PDM 0-0-14.5-0 | 345 |
| 23 | Urea-SSP Complex (5-15-0-10) | 9,088 |
| 24 | NPS 24-24-0-8 | 21,835 |
| 25 | NPK 8-21-21 | 14,013 |
| 26 | NPK 9-24-24 | 15,953 |
| 27 | NPK 11-30-14 | 19,453 |
| 28 | SSP 0-16-0-11 | 7,408 |

Any P&K fertilizer covered under the NBS Scheme that is **fortified or coated with Boron or Zinc** (as specified in the Fertilizer Control Order) will continue to receive subsidy, *i.e.* Rs. 300 / MT and Rs 500 / MT additional subsidy is provided on subsidized P&K fertilizers fortified/coated with micronutrients, namely Boron and Zinc, respectively.

**4) PM-PRANAM** (Prime Minister Programme for Restoration, Awareness, Nourishment and Amelioration of Mother Earth)

- Mother Earth has always provided plentiful sources of sustenance to mankind. It is the need of the hour to go back to more natural ways of farming and promotion of balanced / sustainable use of chemical fertilizers. Promoting natural/organic farming, alternate fertilizers, innovations like nano fertilizers and bio-fertilizers can help in restoring the fertility of our Mother Earth.
- To incentivize States/Union Territories to promote balanced fertilizers usage, promote alternate fertilizers like organic and bio-fertilizers, a scheme called PM-PRANAM (Prime Minister Programme for Restoration, Awareness, Nourishment and Amelioration of Mother Earth) was launched in 2023.
- It aims to reduce chemical fertilizer usage by incentivizing states to adopt sustainable alternatives. Under the scheme, 50% of the subsidy saved by States/UTs through reduced consumption (compared to the previous three-year average) of Urea, DAP, NPK, and MOP is passed back as a grant.
- The States/UTs may use 70% of the grant for creating assets (e.g., bio-fertilizer production units, technological adoption), while 30% for incentivising farmers, panchayats, and SHGs.
- The calculation of the fertilizer subsidy savings will be based on data entered into the Integrated Fertilizer Management System (iFMS) portal.

### 6) Digital Interventions

The Government of India has introduced key technological tools to improve fertilizer delivery and monitoring. Some of the digital interventions are given below.

**6.1. iFMS** (Integrated Fertilizer Management System): This system tracks the entire Fertilizer supply, from production to retailer. It helps the Department of Fertilizers monitor movement in real time and manage stock availability across states.

**6.2. mFMS** (Mobile Fertilizer Management System): This digital platform/mobile app is improving fertilizer distribution by offering online services such as dealer registration, real-time stock tracking, and access to MIS (Management Information System) and DBT (Direct Benefit Transfer) reports. It also helps farmers to find nearby dealers and check fertilzier availability.

**Sources:**


http://nanourea.in/ (IFFCO)
https://fert.gov.in/en
https://fert.gov.in/offerings/schemes-services/pm-pranam#
https://sansad.in/getFile/loksabhaquestions/annex/1710/AU1642.pdf?source=pqals
https://sansad.in/getFile/loksabhaquestions/annex/184/AU5564_eZ6FfM.pdf?source=pqals
https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=1868496, Dated 17 Oct 2022
https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=1935896, Dated 28 June 2023
https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=2079050, Dated 29 Nov 2024
https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=2159809, Dated 22 Aug 2025
https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=2211384, Dated 05 Jan 2026

## (24) இரசாயன உரங்கள் தொடர்பானத் திட்டங்கள்

இந்திய அரசு, விவசாயிகள் இரசாயன உரங்களைக் குறைந்த விலையில் வாங்கும் பொருட்டு மானியம் வழங்கி வருகிறது. உற்பத்திச் செலவு மற்றும் உலக சந்தையில் உர விலைகள் அதிகரித்தாலும், யூரியா விவசாயிகளுக்குச் சட்டரீதியாக அறிவிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையில் (MRP) கிடைக்கிறது. மணிச்சத்து/பாஸ்பேட் (P) மற்றும் சாம்பல்சத்து/பொட்டாஷ் (K) உரங்களுக்கு இந்திய அரசு ஊட்டச்சத்து அடிப்படையிலான உதவித்தொகை (Nutrient Based Subsidy-NBS) கொள்கையை அமல்படுத்தியுள்ளது. இதன்படி, P&K உரங்களில் உள்ள ஊட்டச்சத்து அளவுக்கு ஏற்ப உற்பத்தியாளர்கள்/இறக்குமதியாளர்களுக்கு ஆண்டு அல்லது அரை ஆண்டு அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட நிலையான மானியம் வழங்கப்படுகிறது. மேலும், DAP உரத்தின் விலை சீராக இருக்க, NBS விகிதங்களுக்கு மேலாக சிறப்புத் தொகுப்புகள் அறிவிக்கப்படுகின்றன. இதனால் உரங்களின் அதிகபட்ச சில்லறை விலை நிலையாகவும், சந்தை ஏற்ற இறக்கங்களால் ஏற்படும் பாதிப்புகள் கட்டுக்குள் இருப்பதையும் உறுதி செய்ய முடிகிறது. 2024-25-ஆம் ஆண்டில், DAP-யின் PoS விற்பனை அடிப்படையில், NBS மானிய விகிதங்களுக்கு மேலாக, ஒரு முறை சிறப்பு மானியமாக டன் ஒன்றிற்கு ரூ. 3,500 பல உர நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. இவ்வாறாக, உர மானிய திட்டங்கள் அனைத்தும் விவசாயிகளுக்கு சரியான நேரத்தில், மலிவு விலையில் உரங்கள் கிடைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

உர நேரடி பலன் பரிமாற்ற (DBT) முறையின் கீழ், சில்லறை வியாபாரிகள் விவசாயிகளுக்கு உண்மையாக விற்ற உரங்களின் அடிப்படையில், 100% மானியம் உர நிறுவனங்களுக்கு விடுவிக்கப்படுகிறது. மானியம் சரியான பயனாளியை அடைவதை உறுதி செய்ய, அனைத்து மானிய உரங்களும் PoS கருவிகள்மூலம் விற்கப்படுகின்றன. பயனாளிகள் ஆதார் அட்டை, கிசான் கிரெடிட் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை போன்றவற்றை அடையாளமாகக் காண்பித்து மானிய விலையில் உரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

2018-ஆம் ஆண்டு முதல் இன்று வரை, கோட்டா (ஜம்பல் உர லிமிடெட், ராஜஸ்தான்), பனகர் (மேட்ரிக்ஸ் லிமிடெட், மேற்கு வங்கம்), ராமகுண்டம் (தெலங்கானா), கோரக்பூர் (உத்தர பிரதேசம்), சிந்திரி (ஜார்கண்ட்), பரௌனி (பீகார்) ஆகிய இடங்களில் 6 யூரியா உற்பத்தி ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளன/ மறுசீரமைக்கப்பட்டுள்ளன. இது யூரியா உற்பத்தி மற்றும் சேமிப்பில் நாட்டின் சுயசார்பு/ஆத்மநிர்பர் இலக்கை எய்த உதவுகிறது. இதனால் நாட்டின் யூரியா உற்பத்தி அதிகரித்து வருகிறது. 2026-ஆம் ஆண்டிற்குள் 8 நானோ யூரியா ஆலைகள் தொடங்கப்பட உள்ளன.

NBS திட்டம் அதிக யூரியா பயன்பாட்டால் ஏற்படும் மிகை நைட்ரஜன் பயன்பாடு மற்றும் மண் ஊட்டச்சத்துக் குறைபாட்டை குறைக்க உதவுகிறது. சமீப ஆண்டுகளில் (2022-23 முதல் 2024-25 வரை) P&K உரங்களுக்கு NBS மானியமாக ரூ. 2 லட்சம் கோடிக்கு மேல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் உள்நாட்டு உர உற்பத்தியைக் கணிசமாக அதிகரித்துள்ளது; P&K (DAP & NPKS) உர உற்பத்தி 2014-இல் 112 லட்சம் மெட்ரிக் டன் (LMT) ஆக இருந்தது, இது 2025-இல் 169 LMT ஆக உயர்ந்துள்ளது. இது இறக்குமதி சார்பைக் குறைக்க உதவும்.

2014-15 முதல் மண் ஆரோக்கிய அட்டைத் திட்டம்மூலம் உரங்களைச் சமச்சீர் அளவில் பயன்படுத்த ஊக்குவிக்கப்படுகிறது. பாரம்பரிய வேளாண் வளர்ச்சி திட்டம் (PKVY) மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் செயல்படுத்தப்படும் MOVCDNER திட்டங்களின் மூலம் இயற்கை விவசாய முறை ஊக்குவிக்கப்படுகின்றன. உரக் கட்டுப்பாட்டு

ஆணை- 1985இன் கீழ், உயிர்ம உரங்கள், உயிரியல் உரங்கள், புண்ணாக்கு, கார்பன் அதிகரிப்பிகள், நானோ உரங்கள் போன்ற மாற்று உரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நம் நாட்டில் உர சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக விளங்கும் சில புதிய திட்டங்களை இங்குக் காண்போம்.

### 1) பிரதான் மந்திரி பாரதிய ஜன் உர்வரக் பரியோஜனா (PMBJP) அல்லது ஒரே நாடு ஒரே உரம் (ONOF)

- 2022 அக்டோபரில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- மானிய உரங்கள் (யூரியா, DAP, MOP, NPK) அனைத்தும் "**பாரத்**" என்ற ஒரே பிராண்ட் பெயரில் விற்கப்பட வேண்டும்.
- உர மூட்டையில் அச்சிடுதல்: உர மூட்டையின் மூன்றில் இரண்டு பங்கு பகுதி (ஏதேனும் ஒரு பக்கத்தில்) ஒருங்கிணைந்த பாரத் பிராண்டிங்கை அச்சிடுவதற்காக ஒதுக்கப்பட வேண்டும். உரச் சலுகை திட்டத்தின் லோகோ/இலச்சினை, அதாவது பிரதம மந்திரி பாரதிய ஜன உர்வரக் பரியோஜனா, உரப் பெயருக்கு முன் பாரத் என்ற சொல் (உ.ம். பாரத் யூரியா, பாரத் DAP, பாரத் NPK, etc), திட்டத்தின் பெயர் பிரதம மந்திரி பாரதிய ஜன உர்வரக் பரியோஜனா ஆகியவை அச்சிடப்பட வேண்டும். மூட்டையின் மூன்றில் ஒரு பங்கு அடிப்பகுதியில், உரம் தயாரிக்கும் நிறுவனங்களின் பெயர், அவர்களின் லோகோ, தயாரிப்பு விவரங்கள் மற்றும் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பிற தகவல்களை அச்சிட வேண்டும்.
- முந்தைய ஆண்டுகளில், ஒரே உரம் பல்வேறு பிராண்ட் பெயர்களில் விற்கப்பட்டது. இதனால் நுகர்வோர்கள் தரத்தை மதிப்பிடுவதில் குழப்பம்/ சிரமம் ஏற்பட்டது. புதிய பிராண்டிங் முறை, விவசாயிகள் அனைவரும் ஒரே தரமான உரத்தை அரசாங்க ஆதரவுடன் பெறுவதை உறுதி செய்கிறது.
- உர நிறுவனங்கள் 15.9.2022 முதல் பழைய வடிவமைப்பிலான உர சாக்குகளை வாங்க வேண்டாம் என்றும், 02.10.2022 முதல் ‘ஒரே நாடு ஒரே உரம்’ என்ற கருத்துடன் கூடிய புதிய சாக்குகளை பயன்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### 2) பிரதான் மந்திரி கிசான் சம்ரித்தி கேந்த்ராஸ் (PMKSK)

- பிரதான் மந்திரி விவசாயி செழிப்பு/சேவை மையங்கள் 2022-இல் இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது.
- இந்த PM-KSK மையங்கள் விவசாயிகள் ஒரே இடத்தில் பல வசதிகளைப் பெறும் மையங்களாகச் செயல்படும். இதில் தரமான வேளாண் இடுபொருட்கள் (விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள்) மற்றும் மண் பரிசோதனை, ட்ரோன் சேவைகள், உபகரணங்கள் விற்பனை போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன.
- மேலும், இம்மையங்கள் மூலம் அரசுத் திட்டங்கள், வேளாண் தொழில்நுட்பம், சிறந்த விவசாய நடைமுறைகள்பற்றிய தகவல்களும் வழங்கப்படும்.
- விவசாயிகள் எளிதில் அணுகும் வண்ணம், மாநிலத்தில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் (PACS) PM-KSK மையங்களாகச் செயல்பட முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- நாடு முழுவதும் உள்ள சுமார் 3 லட்சத்துக்கும் மேற்பட்ட உரக்கடைகள் படிப்படியாக PM-KSK மையங்களாக மாற்றப்படும்.

## 3) உர மானிய திட்டங்கள்

தற்போது இரசாயன உரங்களுக்கு வழங்கப்படும் மானியங்கள் New Pricing Scheme (NPS-III), Modified NPS-III, New Investment Policy (NIP)-2012, New Urea Policy (NUP)-2015 ஆகிவற்றை அடிப்படையாகக் கொண்டது. இவை, அரசால் காலத்திற்கு ஏற்றவாறு புதுப்பிக்கப்படுகிறது. தற்போது இரசாயன உரங்களுக்கு வழங்கப்படும் இரண்டு முக்கிய மானியத் திட்டங்கள்:

1. யூரியா மானியத் திட்டம் (நைட்ரஜன் உரம் – யூரியா)
2. சத்துக்களை அடிப்படையாகக் கொண்ட உர மானியத் திட்டம் (NBS) – யூரியா அல்லாத உரங்களுக்கு (DAP, MOP, SSP, NPK கலப்புரங்கள் போன்ற பாஸ்பேட் (P) மற்றும் பொட்டாசியம் (K) உரங்கள்)

- இவை இரண்டும் இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின் மூலம் செயல்படுத்தப்படும் மத்திய துறைத் திட்டங்கள் (மத்திய அரசின் முழு நிதியுடன் கூடிய) ஆகும்.

### 3.1 யூரியா மானிய திட்டம்

**3.1.1 யூரியாவுக்கு தனி மானியம் ஏன்?**

- யூரியா இந்தியாவில் அதிகம் பயன்படுத்தப்படும் நைட்ரஜன்/தழைச்சத்து உரமாகும்; இது, அதிக விளைச்சலுக்கு அவசியமானது.
- உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தவும், விவசாயிகளின் செலவுச் சுமையைக் குறைக்கவும், யூரியா விற்பனை கட்டுப்படுத்தப்பட்ட முறையில்/விலையில் (MRP) நடைபெறுகிறது.
- அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின் கீழ் வரும் உரங்கள் கட்டுப்பாட்டு ஆணை-1985இன் மூலம் இந்தியாவில் உர விலை, விநியோகம், விற்பனை போன்றவை நிர்வகிக்கப்படுகின்றன.
- யூரியா அத்தியாவசிய பொருள் எனக் கருதப்படுகிறது; அதன் விலை, தரம், விற்பனை அனைத்தும் அரசால் கட்டுப்படுத்தப்படுகிறது.
- உலகளாவிய விலை மாற்றங்கள் அவ்வப்பொழுது நிகழ்ந்தாலும், உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களுக்கு மானியம் வழங்கி 2018 முதல் அரசு யூரியா விலையை ஒரு சீரான நிலையில் வைத்திருக்கிறது.
- அரசு, உர நிறுவனங்களுக்கு ‘உற்பத்தி அல்லது இறக்குமதிக்கான உண்மையான செலவு’ மற்றும் விவசாயிகள் செலுத்தும் விலை (அதாவது அதிகபட்ச சில்லறை விலை–MRP) ஆகியவற்றிற்கு இடையிலான வித்தியாசத் தொகையை மானியமாகச் செலுத்துகிறது.
- பெரும்பாலான பாஸ்பேட் (P) மற்றும் பொட்டாஷ் (K) உரங்களைப் போல விலை தளர்வுபடுத்தப்படாமல், நீண்ட காலமாக யூரியாவின் விலை கடுமையான கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வருவதால், இந்தியாவில் யூரியாவிற்கு தனி மானியத் திட்டம் தொடர்கிறது.

**3.1.2 மானிய விவரங்கள்**

- மத்திய அரசு யூரியாவுக்கு சட்டப்படியான அதிகபட்ச சில்லறை விலையை (MRP) அறிவிக்கிறது.
- 2024 முதல், யூரியா விலையை அரசு ஒரே சீராக வைத்திருக்கிறது. 2026 ஜனவரி நிலவரப்படி யூரியாவின் விலை:

    - 45 கிலோ மூட்டை: **ரூ. 242** (வரி மற்றும் வேம்பு பூச்சுக் கட்டணங்கள் தவிர்த்து).
    - 50 கிலோ மூட்டை: ரூ. 268
    - வேம்பு பூசப்பட்ட யூரியா: 45 கிலோ பைக்கு ரூ.266.50.
- யூரியா மானியத்தில் மூன்று கூறுகள் உள்ளன:
    - உள்நாட்டு உற்பத்தி மானியம்.
    - இறக்குமதி யூரியா மானியம்.
    - ஒரே மாதிரி போக்குவரத்து மானியம்.
- விவசாயிகள் அரசு நிர்ணயித்த MRP விலையில் யூரியாவை வாங்குகிறார்கள்; உர உற்பத்தியாளர்கள்/இறக்குமதியாளர்களுக்கு உற்பத்தி மற்றும் விற்பனைக்கு இடையில் ஏற்படும் விலை வித்தியாசத்தை அரசு ஈடு செய்கிறது.
- *100% DBT & PoS கருவிகள்:* யூரியா விவசாயிகளுக்கு PoS கருவிகள்மூலம் விற்கப்பட்டு, விற்பனை முடிந்த பிறகே மானியம் உர நிறுவனங்களுக்கு 100% மானியம் விடுவிக்கப்படுகிறது.
- அடையாளத்தை உறுதிப்படுத்தல்: விவசாயிகள் யூரியாவை வாங்கும்பொழுது ஆதார் அட்டை, உழவர் கடன் அட்டை, வாக்காளர் அட்டை ஆகியவைகள் மூலம் தங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். இதன் மூலம், சரியான பயனாளிகளுக்கு மானிய உரம் சென்றதை அரசு உறுதி செய்கிறது.
- *கண்காணிப்பு:* இந்தியாவில், உர மானியங்கள் DBT மற்றும் iFMS (Integrated Fertilizer Management System) போன்ற டிஜிட்டல் முறையில் கண்காணிக்கப்படுகிறது. iFMS என்பது உற்பத்தி அல்லது இறக்குமதி முதல் சில்லறை விற்பனைவரை உரங்களின் கையிருப்பு, இயக்கம், விற்பனை உள்ளிட்ட முழு விநியோகச் சங்கிலியையும் கண்காணிக்கும், நிகழ் நேர தரவுகளை வழங்கும், இணையதள அடிப்படையிலான போர்ட்டலாகும்.

### 3.1.3 வேப்ப எண்ணெய் பூசப்பட்ட யூரியா (NCU)

- யூரியா (கார்பமைடு) என்பது NH2-CO-NH2 என்ற மூலக்கூறு வாய்ப்பாட்டால் விவரிக்கப்படும் ஒரு கரிம, வெள்ளை படிகப்பொருள். நீரில் மிக எளிதாகக் கரையும் தன்மை கொண்ட இதில் 46% நைட்ரஜன்/ தழைச்சத்து உள்ளது. யூரியா விவசாய துறையில் இரசாயன உரமாகவும், தொழில்துறையில் பிற பயன்பாடுகளுக்கும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.
- துகள் (பிரில்டு) யூரியா (அளவு 0.85 முதல் 2.8 மிமீ) மற்றும் குருணை (க்ரானுலார்) யூரியா (அளவு 2 முதல் 4.75 மிமீ) ஆகியவை வேளாண்மையில் பயன்படுத்தப்படும் இரண்டு வகை திட நைட்ரஜன் உரங்களாகும். குறைந்த உற்பத்திச் செலவு, விரைவாகக் கரையும் தன்மை போன்ற காரணங்களால், இந்தியாவில் திவலை (பிரில்டு) யூரியா அதிகம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.
- எனினும், சிறந்த கையாளுதல் தன்மை, இயந்திரமயமான விவசாயம் போன்ற காரணங்களால், தற்போது நம் நாடு குருணை யூரியா பயன்பாட்டை நோக்கி மெல்ல நகர்ந்து வருகிறது.
- பிரில்டு அல்லது க்ரானுலார் யூரியா எதுவாக இருந்தாலும், தற்போது, இந்தியாவில் பயன்படுத்தப்படும் யூரியாவின் பெரும்பகுதி வேம்பு பூசிய யூரியா ஆகும். இது மானியத்துடன் கூடிய யூரியா பிற தொழில்துறை பயன்பாட்டிற்கு மாற்றப்படுவதை தடுக்க உதவுகிறது.

- வேம்பு பூசிய யூரியா என்பது சாதாரண யூரியா உரத்தின் மேல் வேப்ப எண்ணெய் பூசப்பட்ட வடிவமாகும். இந்தப் பூச்சு மண்ணில் நைட்ரஜன் கசியும் வேகத்தை மெதுவாக்குகிறது. இதனால் தாவரங்களுக்குப் படிப்படியாக நைட்ரஜன் சத்து கிடைக்கிறது.
- கடந்த 2014 வரை, நம் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட யூரியாவில் சுமார் 25 சதவீதம் மட்டுமே வேம்பு பூச்சிடப்பட்டதாக இருந்தது. 2015 முதல், விவசாய உபயோகத்திற்கான யூரியா அனைத்திற்கும் (உள்நாட்டு மற்றும் இறக்குமதி யூரியா ஆகிய இரண்டும்) 100% வேம்பு பூச்சு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன் நோக்கம், வேளாண்மை அல்லாத தொழில்துறை பயன்பாட்டிற்காக மாற்றப்படும் மானிய உரத்தைத் தடுத்தலும், நைட்ரஜன் பயன்பாட்டு திறனை மேம்படுத்துதலும் ஆகும்.
- வேம்பு பூச்சிடப்பட்ட யூரியாவிற்கு அதிகபட்ச MRP **45 கிலோ மூட்டைக்கு ரூ. 242** என அரசு நிர்ணயித்துள்ளது (வரி மற்றும் வேம்பு பூச்சிடல் கட்டணங்கள் நீங்கலாக).
- சாதாரண (துகள்) யூரியாவுடன் ஒப்பிடுகையில், வேம்பு பூச்சிடப்பட்ட யூரியாவிற்கு குறைந்த ஈரப்பதம் ஈர்க்கும் தன்மை இருப்பதால், மூட்டைகளில் உரம் கட்டியாக மாறும் வாய்ப்பு குறைகிறது. மேலும், சாதாரண யூரியாவை விட இது சற்றே குறைந்த கரையும்/கசியும் தன்மை கொண்டதால், அதிக மண் ஈரப்பதம் அல்லது மழைக்காலங்களில் ஏற்படும் நைட்ரஜன் கழிவு அளவு குறைகிறது. வேப்ப எண்ணெய் பூச்சு காரணமாக, நேரடி சூரிய வெப்பத்தால் ஏற்படும் ஆவியாகும் இழப்பு குறைகிறது; நைட்ரிபிகேஷன் மற்றும் டீநைட்ரிபிகேஷன் இழப்புகள், பூச்சி தாக்கம் குறைகிறது; பயிர் விளைச்சல் மேம்படுகிறது.

**3.1.4 சல்ஃபர் பூச்சிடப்பட்ட யூரியா (SCU)**

- சல்ஃபர் (கந்தகம்) பூசப்பட்ட யூரியா இந்திய அரசின் ஒரு முன்முயற்சியாக, 28 ஜூன் 2023 அன்று நாட்டில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- SCU என்பது மெதுவாக ஊட்டச்சத்தை வெளிப்படுத்தும் அனங்கக நைட்ரஜன் உரமாகும். இது யூரியா துகள்களின் மேல் சல்ஃபர் பூசப்பட்டு (மெழுகு போன்ற ஒட்டுப் பூச்சு) தயாரிக்கப்படுகிறது. இதநாள் நைட்ரஜன் சத்து வெளியீட்டு/கசிவு வேகம் கட்டுப்படுத்துகிறது.
- பொதுவாக SCUவில் 30–40% நைட்ரஜன் சத்தும், 10–30% சல்ஃபர் (கந்தகம்) சத்தும் இருக்கும். இதனால் பயிர்களுக்கு நைட்ரஜன் (தழைச்) சத்துடன், மண்ணில் காணப்படும் சல்பர் பற்றாக்குறை சரிசெய்யப்பட்டு கந்தக சத்தும் கிடைக்கிறது.
- SCU உரம் முதலில் அமெரிக்காவின் டென்னசீ வேலி அத்தாரிட்டி (TVA) ஆய்வகங்களில் உருவாக்கப்பட்டு, சுமார் 30 ஆண்டுகள் வணிக ரீதியாகத் தயாரிக்கப்பட்டது. தற்போது, இந்தியாவில் இதன் உள்நாட்டு உற்பத்தி தொடங்கியுள்ளது. இதில், ராஷ்ட்ரிய கெமிக்கல்ஸ் & ஃபெர்டிலைசர்ஸ் லிமிடெட் (RCF), ட்ராம்பே முன்னணி வகிக்கிறது. மேலும் நேஷனல் ஃபெர்டிலைசர்ஸ் லிமிடெட் (NFL), பானிபட் உள்ளிட்ட நிறுவனங்கள் SCU வணிக உற்பத்தி சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து வருகின்றன.
- இந்தியாவில் சல்பர் பூசப்பட்ட யூரியா, "**யூரியா கோல்ட்**" என்ற பெயரில் விற்பனை செய்யப்படுகிறது. இதில் **37% நைட்ரஜன் மற்றும் 17% சல்ஃபர் சத்து உள்ளது**.
- வழக்கமான யூரியா மற்றும் தற்போது பயன்பாட்டில் உள்ள வேம்பு பூசப்பட்ட யூரியாவை விட SCU அதிக செயல்திறன் மற்றும் குறைந்த உற்பத்தி செலவு கொண்டது. SCU பயன்பாட்டால் யூரியா பயன்பாடு சுமார் 25% வரை குறையும்.

மண்ணில் பரவலாகக் காணப்படும் சல்ஃபர் (கந்தகம்) சத்துக் குறைபாட்டைச் சரி செய்யவும், விவசாயிகளின் இடுபொருள் செலவுகளைக் குறைக்கவும், உற்பத்தி மற்றும் விளைச்சலை அதிகரிக்கவும், அதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும் சல்பர் பூசப்பட்ட யூரியா உதவுகிறது.

- யூரியா கோல்ட் உரம் 40 கிலோ மூட்டைகளில் விற்பனை செய்யப்படுகிறது. இதன் அதிகபட்ச சில்லறை விலை (MRP), 45 கிலோ வேம்பு பூசப்பட்ட யூரியா மூட்டையின் விலையான ரூ. 266.50 ஆகவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மூட்டை அளவு, இடம் மற்றும் உர நிறுவனகளைப் பொறுத்து சிறிய மாற்றங்கள் இருக்கலாம்.

**3.1.5 நானோ யூரியா**

- நானோ யூரியா என்பது நானோ தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட **திரவ** நைட்ரஜன் உரமாகும். இது உர பயன்பாட்டு திறனை உயர்த்தவும், ஊட்டச்சத்து இழப்புகளைக் குறைக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- சாதாரண யூரியாவை, 20–50 நானோ மீட்டர் அளவுள்ள மிகச் சிறிய துகள்களாக (நானோ யூரியா) மாற்றப்படுகிறது. இதற்கு உயர் அழுத்த ஹோமோஜனைசேஷன் மற்றும் சோனிகேஷன் போன்ற நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- மிகச் சிறிய துகளளவு காரணமாக, நானோ யூரியா அதிக மேற்பரப்பைக் கொண்டுள்ளது. இதனால் பயிர்களின் இலைகள் வழியாக நைட்ரஜன் எளிதில் உறிஞ்சப்படுவதுடன் மெதுவாகவும், தொடர்ச்சியாகவும் ஊட்டச்சத்து நானோ யூரியாவிலிருந்து வெளிப்படும்.
- நானோ யூரியா (திரவம்) **4.0% நைட்ரஜன்** (w/v) கொண்டது. இதில் நைட்ரஜன், அங்கக மேட்ரிக்ஸில் பொதிந்து அல்லது நைட்ரஜன் ஒத்த வடிவங்களில் அகவுறையிடப்பட்டு இருக்கும். வழக்கமான 1 மிமீ யூரியா துகளுடன் ஒப்பிடும்போது, நானோ யூரியா 10,000 மடங்கு அதிக மேற்பரப்பை கொண்டிருக்கும் மற்றும் 1 மிமீ யூரியா துகளில் உள்ள நைட்ரஜன் துகள்களைக் காட்டிலும் சுமார் 55,000 அதிக நைட்ரஜன் துகள்கள் இருக்கும்.
- இந்திய அரசு நானோ யூரியா மற்றும் நானோ DAP-க்கான தரநிலைகளை உரக் கட்டுப்பாட்டு ஆணை-1985-இன் கீழ் அறிவித்துள்ளது.
- நானோ யூரியா, உயர் செயல்திறன் கொண்ட திரவ உரம் ஆகும். இது இலை வழி தெளிப்பு (foliar spray) முறையில் பயன்படுத்தப்படுகிறது.
- நானோ யூரியாவை **இலைகளில் தெளிக்கும் உரமாகப்** பயன்படுத்த அறிவுறுத்தப்படுகிறது. இது >80% நைட்ரஜன் பயன்பாட்டு திறனை (NUE) வழங்குகிறது. சாதாரண துகள்மயமான யூரியாவுக்கு NUE 30–50% மட்டுமே உள்ளது. இதனால் உர பயன்பாடு கணிசமாகக் குறைகிறது. ஒரு 500 மில்லி நானோ யூரியா பாட்டிலின் சத்து ஒரு மூட்டை சாதாரண யூரியாவின் சத்தோடு ஒப்பிடப்படுகிறது.
- நானோ யூரியா குறைந்த கார்பன் தடம் கொண்ட, ஆற்றல் திறன் மிகுந்த முறையில் தயாரிக்கப்படுகிறது. இதனால், சுற்றுச்சூழல் பாதிப்பு குறைகிறது.
- இலை வழி உரமாகப் பயன்படுத்துவதன் மூலம், பயிர் விளைச்சல் அதிகரிப்பதுடன், மண், காற்று மற்றும் நீரின் தரம் மேம்படுகிறது, மேலும் விவசாயிகளின் லாபமும் உயரும். ICAR மேற்கொண்ட ஆய்வுகள் தெரிவிப்பதாவது- பரிந்துரைக்கப்பட்ட நைட்ரஜனின் 2/3 பகுதி + முழு P & K அளவு

மற்றும் நானோ யூரியாவை இரண்டு முறை இலை வழி தெளித்ததில், பயிர் விளைச்சல் 3–8% வரை அதிகரித்துள்ளது (*லோக் சபா எழுத்துப்பூர்வ கேள்வி எண் 5564, தேதி 04.04.2025*).

- ட்ரோன் மூலம் நானோ உர தெளிப்பு செலவு குறைந்த, பயனுள்ள முறையாகத் தற்போது உருவெடுத்துள்ளது.
- IFFCO நானோ யூரியா (திரவம்) என்பது FCO-1985 அங்கீகாரம் பெற்ற உலகின் முதல் நானோ உரமாகும்.
- நானோ யூரியா பயிரின் முக்கிய வளர்ச்சி நிலைகளில் **இலை வழி தெளிப்பாக மட்டுமே** பயன்படுத்தப் பரிந்துரைக்கப்படுகிறது. 1 லிட்டர் தண்ணீரில் 2–4 மில்லி நானோ யூரியா கலந்து பயிரின் முக்கிய வளர்ச்சி பருவங்களில் தெளிக்க வேண்டும். குறிப்பு: மண்ணில் அடியுரமாக இடும் நைட்ரஜனை (DAP அல்லது கலப்பு உரங்கள் வழியாக) குறைக்கக் கூடாது. மேலுரமாக 2–3 கட்டங்களில் வழங்கப்படும் யூரியாவை மட்டுமே குறைக்க வேண்டும். பயிர் வகை, கால அளவு மற்றும் நைட்ரஜன் தேவையைப் பொறுத்து நானோ யூரியாவின் இலைவழித் தெளிப்பு எண்ணிக்கை 2–3 ஆக மாறுபடும்.
- 500 மில்லிநானோ யூரியா பாட்டிலில் ரூ. 225 முதல் ரூ. 325 வரை விற்கப்படுகிறது.
- இஃப்கோ, ரே நானோ சயின்ஸ் & ரிசர்ச் சென்டர், மேக்மணி கிராப் நியூட்ரிஷன் லிமிடெட், ஜுவாரி ஃபார்ம் ஹப் லிமிடெட், கோரோமண்டல் இன்டர்நேஷனல் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் நானோ யூரியா தயாரிப்பு/விற்பனையில் ஈடுபட்டுள்ளன.
- தற்போதைக்கு நானோ யூரியாவுக்கு மானியம் வழங்கப்படவில்லை. இருப்பினும், மத்திய அரசின் இரசாயனங்கள் மற்றும் உரத்துறை நானோ உர தொழிற்சாலைகள் அமைக்க ஊக்குவித்து வருகிறது. ஜனவரி 2026 நிலவரப்படி, இந்தியாவில் 7 நானோ யூரியா தொழிற்சாலைகள் மற்றும் 4 நானோ DAP தொழிற்சாலைகள் பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்களால் நிறுவப்பட்டுள்ளன.

### 3.2 ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியத் திட்டம் (NBS Scheme)

- ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியத் திட்டம் (NBS), 1 ஏப்ரல் 2010 முதல், இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின் உரத்துறை மூலம் செயல்படுத்தப்படுகிறது.
- இது, யூரியா அல்லாத உரங்களுக்கு, உற்பத்தி அடிப்படையிலான மானியத்திலிருந்து வேறுபட்டு, ஊட்டச்சத்து அடிப்படையிலான மானிய முறைக்கான மாற்றத்தைக் குறிக்கிறது.
- இந்தத் திட்டம் **பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் (P&K) உரங்களுக்கு மட்டும்** பொருந்தும். தற்போது, 28 வகையான P&K உரங்கள் இத்திட்டதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
- NBS திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஊட்டச்சத்திற்கும் (நைட்ரஜன்–N, பாஸ்பேட்–P, பொட்டாஷ்–K, சல்பர்–S) அதன் கிலோகிராம் அடிப்படையில் மானியம் நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.
- இத்திட்டத்தின்படி, அதிகபட்ச சில்லறை விலை (MRP) கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது; அதாவது உர உற்பத்தியாளர்கள்/வினியோகஸ்தர்கள் தங்கள் உரங்களுக்கு நியாயமான விலையை நிர்ணயிக்கலாம். ஆனால், அந்த உரங்களுக்கு வழங்கப்படும் மானியத் தொகை அரசுமூலம் முன்கூட்டியே நிர்ணயித்து அறிவிக்கப்படுகிறது.

- உரங்களின் விநியோகச் செலவைக் குறைக்க, போக்குவரத்து மானியமும் வழங்கப்படுகிறது.

**திட்டத்தின் நோக்கங்கள்:** NBS திட்டத்தை அறிமுகப்படுத்தியதற்கான முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

- யூரியா அல்லாத உரங்களுக்கு, தயாரிப்பு/உற்பத்தி விலை அடிப்படையில் அல்லாமல், ஊட்டச்சத்து உள்ளடக்கத்தின் அடிப்படையில் மானியத்தை நிர்ணயித்து வழங்குதல்.
- N, P, K, S ஊட்டச்சத்துக்களின் சமச்சீர் பயன்பாட்டை ஊக்குவித்து, யூரியா போன்ற சில உரங்களின் மிகை பயன்பாட்டைக் குறைத்தல்; இதனால் மண் ஆரோக்கியம் பலப்படும்.
- சல்பர் (S) போன்ற இரண்டாம் நிலை ஊட்டச்சத்துக்களின் பயன்பாட்டை ஊக்குவித்து, மண் ஆரோக்கியம் சார்ந்த பிரச்சினைகளை சமாளித்து, நீடித்த நிலையான வேளாண்மையை ஆதரித்தல்.
- உலகளாவிய உர விலை மாற்றங்கள் மற்றும் ஊட்டச்சத்து தேவைகளுடன் மானியத்தை இணைத்து, விலை நிர்ணயத்தில் வெளிப்படைத்தன்மையை அதிகரித்து, உர ஊட்டச்சத்து விநியோகத்தை செயல்திறன் வாய்ந்ததாக மாற்றுதல்.

**செயல்படுத்தும் முறை**

- உர நிறுவனங்கள் தங்கள் உரங்களுக்கு நியாயமான அளவில் MRP-ஐ நிர்ணயிக்கலாம்; இதை அரசு தொடர்ந்து கண்காணிக்கும்.
- அரசு, உலகளாவிய விலைகள், வெளிநாட்டு நாணய மாற்று விகிதம், உள்நாட்டு உற்பத்தி மற்றும் சந்தை நிலவரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், NBS விகிதங்களை ஆண்டுதோறும் அல்லது அரையாண்டு பருவங்களில் (கரீஃப் மற்றும் ரபி) அறிவிக்கிறது.
- மானிய கணக்கீடு: P&K உரங்களில் உள்ள நைட்ரஜன் (N), பாஸ்பரஸ் (P), பொட்டாஷ் (K), சல்பர் (S) ஆகிய ஒவ்வொரு ஊட்டச்சத்திற்கும் அதன் கிலோகிராம் அடிப்படையில் (ரூ/கிலோ ஊட்டச்சத்து) மானியம் நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.
- இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியம், பின்னர் ஒவ்வொரு P&K உர தரத்திற்கும் ஒரு மெட்ரிக் டன்னுக்கான உரத்திற்கான மானியமாக (ரூ/கிலோ உரம்) மாற்றப்படுகிறது. அதாவது, உரத்தில் உள்ள ஊட்டச்சத்து அளவுக்கு ஏற்ப மானியத் தொகை விகிதாசாரமாக மாறும்.
- உர விற்பனைக்குப் பின், உர நிறுவனங்களுக்கு மின்னணு விற்பனை பதிவுகள் (DBT / iFMS போன்ற தளங்கள்) அடிப்படையில், மானியத் தொகை விடுவிக்கப்படுகிறது.
- கூடுதல் ஆதரவு: உர போக்குவரத்திற்கான மானியம், சில நேரங்களில் சிறப்பு உதவித் திட்டங்கள் (உதா: DAP-க்கு கூடுதல் மானியம்), ஊட்டச்சத்து சேர்க்கப்பட்ட/பூசப்பட்ட உரங்களுக்குக் கூடுதல் ஊக்கத்தொகை ஆகியன கூடுதல் மானியமாக வழங்கப்படுகிறது.
- NBS திட்டத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் கட்டுப்பாடு: NBS திட்டம் வெளிப்படையாகவும், பொறுப்புடன் செயல்படுவதை உறுதி செய்ய உர நிறுவனங்கள் பின்வரும் விதிமுறைகளைக் கடைப்பிடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளன.

1. உர நிறுவனங்கள், P&K உரங்களுக்கு நிர்ணயித்த MRP நியாயமானதா என்பதை மதிப்பிடுவதற்காக, தணிக்கை செய்யப்பட்ட செலவுக் கணக்குகளை உரத் துறைக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

2. நிர்ணயிக்கப்பட்ட வரம்பை மீறிக் கிடைக்கும் லாபம் அநியாய லாபமாகக் கருதப்பட்டு, அந்தத் தொகை சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து வசூலிக்கப்படும் (இறுதி P&K உர வகையின் உற்பத்தி செலவின் அடிப்படையில் இறக்குமதியாளர்களுக்கு 8% வரை, உற்பத்தியாளர்களுக்கு 10% வரை ஒருங்கிணைந்த உற்பத்தியாளர்களுக்கு 12% வரை நியாயமான லாபமாகக் கருதப்படுகிறது).

3. ஒவ்வொரு உர மூட்டையிலும் தெளிவாக MRP, ஒரு கிலோ ஊட்டச்சத்து மற்றும் ஒரு மூட்டைக்கு வழங்கப்படும் மானியத் தொகை ஆகியவை அச்சிடப்பட்டிருக்க வேண்டும். அச்சிடப்பட்ட MRP-ஐ விட அதிகமாக வசூலித்தால், அது அத்தியாவசிய பொருட்கள் சட்டம், 1955இன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும்.

4. SSP உற்பத்தியாளர்கள் உட்பட, P&K உரங்களை உற்பத்தி செய்யும்/விற்பனை செய்யும்/இறக்குமதி செய்யும் அனைத்து நிறுவனங்களும், உரங்களை F.O.R. அடிப்படையில் சில்லறை விற்பனை மையங்கள்வரை கொண்டு சேர்க்க வேண்டும்.

5. தேவையின் அடிப்படையில், உரத் துறை மாதாந்திர வழங்கல் திட்டம்மூலம் உரங்களை மாநிலங்களுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் ஒதுக்குகிறது மற்றும் அவற்றின் இருப்பை தொடர்ந்து கண்காணிக்கிறது. அனைத்து முக்கிய மானிய உரங்களின் நகர்வுவும் iFMS (Integrated Fertilizer Management System) என்ற இணையவழி மின்னணு தளத்தின் மூலம் கண்காணிக்கப்படுகிறது. மேலும், மத்திய வேளாண்மை, உரங்கள் துறைகள் அதிகாரிகள் மாநில வேளாண்மை அதிகாரிகளுடன் வாரந்தோறும் காணொளி கலந்துரையாடல் நடத்தி, உர விநியோகச் சிக்கல்களை உடனடியாகத் தீர்க்கின்றனர்.

**சமீபத்திய NBS மானிய விகிதங்கள்**

ஜனவரி 2026 இல், மத்திய அரசு ரபி 2025–26 பருவத்திற்கான புதுப்பிக்கப்பட்ட NBS விகிதங்களை அறிவித்துள்ளது. இவை 1 அக்டோபர் 2025 முதல் மார்ச் 2026 வரை நடைமுறையில் இருக்கும்.

**P&K உரங்களில் உள்ள ஒவ்வொரு ஊட்டச்சத்திற்கும் (ரூ/கிலோ ஊட்டச்சத்து) மானிய விகிதம்:**

- நைட்ரஜன் (N) : ரூ. 43.02
- பாஸ்பேட் (P) : ரூ. 47.96
- பொட்டாஷ் (K) : ரூ. 2.38
- சல்பர் (S) : ரூ. 2.87

**28 வகையான P&K உரங்களுக்கு வழங்கப்படும் கலப்புரம் வாரியான (ரூ/டன்) மானிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.**

| வ.எண். | உரத்தின் பெயர் | NBS மானியம் (ரூ/டன்) |
|---|---|---|
| 1 | DAP 18-46-0-0 | 29,805 |
| 2 | MOP 0-0-60-0 | 1,428 |
| 3 | SSP 0-16-0-11 | 7,408 |
| 4 | NPS 20-20-0-13 | 18,569 |
| 5 | NPK 10-26-26-0 | 17,390 |
| 6 | NP 20-20-0-0 | 18,196 |

| | | |
|---|---|---|
| 7 | NPK 15-15-15 | 14,004 |
| 8 | NP 24-24-0-0 | 21,835 |
| 9 | AS 20.5-0-0-23 | 9,479 |
| 10 | NP 28-28-0-0 | 25,474 |
| 11 | NPK 17-17-17 | 15,871 |
| 12 | NPK 19-19-19 | 17,738 |
| 13 | NPK 16-16-16-0 | 14,938 |
| 14 | NPS 16-20-0-13 | 16,848 |
| 15 | NPK 14-35-14 | 23,142 |
| 16 | MAP 11-52-0-0 | 29,671 |
| 17 | TSP 0-46-0-0 | 22,062 |
| 18 | NPK 12-32-16 | 20,890 |
| 19 | NPK 14-28-14 | 19,785 |
| 20 | NPKS 15-15-15-09 | 14,262 |
| 21 | NP 14-28-0-0 | 19,452 |
| 22 | PDM 0-0-14.5-0 | 345 |
| 23 | Urea-SSP Complex (5-15-0-10) | 9,088 |
| 24 | NPS 24-24-0-8 | 21,835 |
| 25 | NPK 8-21-21 | 14,013 |
| 26 | NPK 9-24-24 | 15,953 |
| 27 | NPK 11-30-14 | 19,453 |
| 28 | SSP 0-16-0-11 | 7,408 |

உரக் கட்டுப்பாட்டு ஆணையில் குறிப்பிடப்பட்டபடி, **போரான் (கார்மம்) அல்லது சிங்க் (துத்தநாகம்) செறிவூட்டப்பட்ட/சேர்க்கப்பட்ட** எந்த P&K உரமும் NBS திட்ட மானியத்திற்கு தகுதியானதாக இருக்கும். அதாவது, மானியமளிக்கப்பட்ட P&K உரங்களில் போரான் (Bo) சேர்க்கப்பட்டிருந்தால்/செறிவூட்டப்பட்டிருந்தால் டன் ஒன்றுக்கு ரூ. 300, சிங்க் (Zn) சேர்க்கப்பட்டிருந்தால் டன் ஒன்றுக்கு ரூ. 500 கூடுதல் மானியம் வழங்கப்படுகிறது.

**4) பி.எம். ப்ரணாம்** (தாய் பூமியின் மீளுருவாக்கம், விழிப்புணர்வு, பேணுதல் மற்றும் நலன் உயர்த்தலுக்கான பிரதமர் திட்டம்)

- பூமித்தாய் மனிதகுலத்திற்கு எப்போதும் போதுமான வாழ்வாதார வளங்களை வழங்கி வந்துள்ளார்கள். இயற்கைக்கு ஏற்ற விவசாய முறைகளுக்குத் திரும்புவதும், இரசாயன உரங்களைச் சமநிலையுடன்/நிலைத்தன்மையுடன் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதும் இன்றைய காலகட்டத்தின் அவசியமாகும். இயற்கை/உயிர்ம விவசாயம், மாற்று உரங்கள், புதுமை உரங்கலான நானோ உரங்கள், உயிரி உரங்கள் ஆகியவற்றின் பயன்பாட்டை ஊக்குவிப்பது பூமித்தாயின் வளத்தை மீட்டெடுக்க உதவும்.

- மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் சமநிலை உரப் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காகவும், உயிர் உரங்கள் மற்றும் அங்கக/இயற்கை உரங்கள் போன்ற மாற்று உரங்களைப் பயன்படுத்துவதை மேலும் ஊக்குவிப்பதற்காகவும், PM-PRANAM (தாய் பூமியின் மீளுருவாக்கம், விழிப்புணர்வு, பேணுதல் மற்றும் நலன் உயர்த்தலுக்கான பிரதமர் திட்டம்) என்ற திட்டம் 2023-இல் தொடங்கப்பட்டது.

- இந்தத் திட்டத்தின் நோக்கம்: இரசாயன உரப் பயன்பாட்டைக் குறைத்து, வளங்குன்றா வேளாண்மைக்கு மாநிலங்கள் மாற்று உரங்கள் பயன்படுத்துவதை

ஊக்குவிப்பதாகும். இத்திட்டத்தின் கீழ், யூரியா, DAP, NPK, MOP ஆகியவற்றின் பயன்பாட்டை (குறைத்த மாநிலங்களுக்கு / யூனியன் பிரதேசங்களுக்குக் கடந்த 3 ஆண்டுகளின் சராசரியுடன் ஒப்பிடும்போது), அவர்களின் சேமிப்பு மானியத்தின் 50% மானியமாக மீண்டும் வழங்கப்படும்.

- இந்த மானியத் தொகையில் 70%-ஐ சொத்துக்கள் உருவாக்கப் பயன்படுத்தலாம் (உ.மாக: உயிர் உர உற்பத்தி அலகுகள் அமைத்தல், மேம்பட்ட வேளாண் தொழில்நுட்பகளை அமல்படுத்துதல்); மீதமுள்ள 30%-ஐ விவசாயிகள், பஞ்சாயத்துகள் மற்றும் சுய உதவி குழுக்கள் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காகப் பயன்படுத்தலாம்.
- மாநிலங்களின் உர மானிய சேமிப்புத் தொகை, iFMS போர்டலில் உள்ள தரவின் அடிப்படையில் கணக்கிடப்படும்.

## 5) டிஜிட்டல் முன்முயற்சிகள்

இந்திய அரசு உர விநியோகம் மற்றும் கண்காணிப்பை மேம்படுத்த சில நவீன தொழில்நுட்ப அம்சங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. அவற்றில் சில கீழே கொடுக்கப்பப்பட்டுள்ளன.

### 5.1 iFMS (ஒருங்கிணைந்த உர மேலாண்மை அமைப்பு)

இந்த இணையதள அமைப்பு, உற்பத்தி மையத்திலிருந்து சில்லறை விற்பனையாளர் வரையிலான முழு உர விநியோகச் சங்கிலியையும் உரத் துறை கண்காணிக்க உதவுகிறது. இந்தப் போர்டல் மூலம், உரங்களின் நகர்வை நிகழ் நேரத்தில் கண்காணிக்கவும், மாநிலங்களுக்கிடையிலான கையிருப்பு நிலையை நிர்வகிக்கவும் முடியும்.

### 5.2 mFMS (மொபைல் உர மேலாண்மை அமைப்பு)

இந்த டிஜிட்டல் தளம்/மொபைல் செயலி, விற்பனையாளர் பதிவு, நேரடி கையிருப்பு கண்காணிப்பு, MIS (Management Information System) மற்றும் DBT (Direct Benefit Transfer) அறிக்கைகள் போன்ற ஆன்லைன் சேவைகள்மூலம் உர விநியோகத்தை மேம்படுத்துகிறது. இந்த செயலிமூலம் விவசாயிகள் அருகில் உள்ள உர விற்பனையாளர்களைக் கண்டறிந்து, உரங்களின் கையிருப்பை அறிந்துகொள்ள முடியும்.

**ஆதாரங்கள்:**


http://nanourea.in/ (IFFCO)
https://fert.gov.in/en
https://fert.gov.in/offerings/schemes-services/pm-pranam#
https://sansad.in/getFile/loksabhaquestions/annex/1710/AU1642.pdf?source=pqals
https://sansad.in/getFile/loksabhaquestions/annex/184/AU5564_eZ6FfM.pdf?source=pqals
https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=1868496, Dated 17 Oct 2022
https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=1935896, Dated 28 June 2023
https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=2079050, Dated 29 Nov 2024
https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=2159809, Dated 22 Aug 2025
https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=2211384, Dated 05 Jan 2026

# (25) Recently launched Schemes

## 25.1 Mission for Atmanirbharta in Pulses (Self-reliance in Pulses)

- The Mission for Atmanirbharta in Pulses was announced in the Union Budget 2025–26 and was formally launched in October 2025.
- The mission will run for six years, from FY 2025-26 to 2030-31.
- Financial outlay of Rs 11,440 crore has been announced for the six years.
- The Mission aims to boost domestic pulse production so that it can meet rising demand, reduce import dependency, and increase farmers' income, through a cluster-based approach in 416 districts in India
- It covers components like research, seed systems, expanding area under pulses, procurement, and ensuring price stability.
- Emphasis on developing/disseminating pulse varieties that are high-yielding, pest-resistant, and climate-resilient.
- Free seed kits: 88 lakh seed kits will be distributed free of cost.
- Rolling seed production plans: States to prepare 5-year rolling seed plans. The ICAR will supervise breeder seed production. The Foundation / Certified seed production agencies will supply seeds to farmers.
- Set up 1,000 processing/packaging units; subsidy up to ₹ 25 lakh for each such unit.
- Assured (100%) procurement (PM-AASHA, Price Support Scheme by the NAFED and NCCF) for red gram, black gram and masoori dhal in participating States for the next 4 years (for farmers who register and enter agreements) and at MSP rate.

**Mission Targets**

| Parameter | Current level (2024-25) | Target by 2030-31 |
|---|---|---|
| Area under pulses | ~101 lakh hectare | 310 lakh hectares |
| Production | ~242-250 lakh tonnes | 350 lakh tonnes |
| Yield | ~ 881 kg/ha) | 1130 kg/ha |

## 25.2 Mission for Cotton Productivity (Cotton Mission)

- It is a five-year mission introduced in Budget 2025-26. For the FY 2025-26, an allocation of ₹ 500 crore has been made.
- Cotton yield in India is relatively low (around 450-500 kg/ha) versus global benchmarks. The Cotton Mission targets an increase in cotton productivity, ensure supply of quality cotton for the textile industry, reduce dependence on imports of cotton, especially of higher quality (longer staple) cotton.
- This mission is aiming to provide science & technology support to farmers, to boost cotton productivity in India, especially to improve yield per hectare, quality, etc., through developing climate-smart and high-yielding cotton varieties, improved seeds, agronomic practices such as High-Density Planting System, Crop rotation,

demonstrations/extension of best practices across cotton-growing States, and to improve sustainability in cotton farming.

- The Mission also promotes the cultivation of extra-long staple (ELS) cotton varieties.
- Nodal Agency: The Department of Agricultural Research & Education (DARE) is the nodal department, with the Ministry of Textiles as a partner.

### 25.3 National Mission on High-Yielding Seeds (NMHYS)

- Announced in the Budget speech of 2025-26. The mission will run over the period of seven years (2025-30)**.**
- Budget outlay: ₹ 100 crore
- Strengthening research, *i.e.,* to develop new high-yielding, pest-resistant, and climate-resilient seeds, ensuring food security and sustainable farming practices.
- To improve the seed industry, *i.e.,* the mission is expected to boost India's seed industry, fostering growth in both public and private sectors.
- To make commercially available more than 100 seed varieties that have been released since July 2024**.**
- Establishment of infrastructure- regional service labs for genotyping and phenotyping; modern infrastructure for seed testing and production.
- Focused research on important crops- pulses, oilseeds, maize (including for bioethanol), selected vegetable crops.
- Implementing Centres: The ICAR will undertake research on these seeds in a participatory mode with the Regional Centre of Excellence/ SAUs.

**Sources:**


- https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=2099411
- https://www.pib.gov.in/PressReleaseIframePage.aspx?PRID=2098404
- https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=2177847

# (25) சமீபத்தில் தொடங்கப்பட்ட திட்டங்கள்

## 25.1 பருப்பு உற்பத்தி ஆத்மநிர்பார் இயக்கம் (பருப்பு வகைகளில் தன்னிறைவு)

- பருப்பு வகைகளில் ஆத்மநிர்பார் இயக்கம் 2025–26 மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டு, அக்டோபர் 2025-இல் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப்பட்டது.
- இத்திட்டம் 2025-26 நிதியாண்டு முதல் 2030-31 வரை ஆறு ஆண்டுகள் செயல்படும்.
- இத்திட்டதிற்கு சுமார் 11,440 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த இயக்கம், இந்தியாவில் 416 மாவட்டங்களில் தொகுப்பு அடிப்படையிலான அணுகுமுறையைப் பின்பற்றி, உள்நாட்டு பருப்பு உற்பத்தியை அதிகரித்து, அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்யவும், இறக்குமதி சார்பைக் குறைக்கவும், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டத்தின் கூறுகளாவன: ஆராய்ச்சி, விதை சார்ந்த செயல்பாடுகள், பருப்புவகைப் பயிர்களின் பரப்பளவை விரிவுபடுத்துதல், கொள்முதல் மற்றும் சீரான விலையை உறுதிப்படுத்துதல் ஆகியனவாகும்.
- உயர் விளைச்சல் தரும், பூச்சி-நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் மாறிவரும் காலநிலையைத் தாங்கும் மீள் தன்மை கொண்ட பருப்பு வகைகளை உருவாக்குதல்/ பிரபலப்படுத்துதல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது.
- இலவச விதைத் தொகுப்புகள்: 88 இலட்சம் விதைத் தொகுப்புகள் இலவசமாக விநியோகிக்கப்படும்.
- விதை உற்பத்தித் திட்டங்கள்: மாநிலங்கள் 5 ஆண்டு சுழற்சி முறையில் விதை உற்பத்தித் திட்டங்களைத் தயாரிக்க வேண்டும். வல்லுநர் விதை உற்பத்தியை ஐ.சி.ஏ.ஆர் நிறுவனங்கள் மேற்பார்வையிடும். ஆதார விதை / சான்றளிக்கப்பட்ட விதைகளை விதை உற்பத்தி நிறுவனங்கள் விவசாயிகளுக்கு வழங்கும்.
- சுமார் 1,000 விதைப் பதப்படுத்தும்/சிப்பம் கட்டும் அலகுகளை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது, ஒவ்வொரு அலகுக்கும் ரூ. 25 லட்சம் வரை மானியம் கிடைக்கும்.
- இத்திட்டத்தில் பங்கேற்கும் மாநிலங்களில் உள்ள பதிவுசெய்து ஒப்பந்தங்களில் ஈடுபடும் விவசாயிகளிடமிருந்து அடுத்த 4 ஆண்டுகளுக்கு, குறைந்தபட்ச ஆதரவு விலையில் துவரை, உளுந்து, மசூரி பருப்புகளை 100% கொள்முதல் செய்ய (PM-AASHA, மற்றும் NAFED மற்றும் NCCF இன் விலை ஆதரவு திட்டங்களின் கீழ்) உறுதியளிக்கப்பட்டுள்ளது.

**மிஷன் இலக்குகள்**

| அளவுரு | தற்போதைய நிலை (2024-25) | 2030-31-கான இலக்கு |
|---|---|---|
| பருப்பு வகைகள் பயிரிடும் பரப்பு | ~1 01 லட்சம் ஹெக்டேர் | 310 லட்சம் ஹெக்டேர் |
| உற்பத்தி | ~242-250 லட்சம் டன்கள் | 350 லட்சம் டன்கள் |
| மகசூல் | ~ 881 கிலோ/ ஹெக்டேர் | 1130 கிலோ/ ஹெக்டேர் |

## 25.2 பருத்தி உற்பத்தித்திறனுக்கான இயக்கம் (பருத்தி இயக்கம்)

- இது 2025-26 பட்ஜெட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ஐந்தாண்டு கால இயக்கமாகும். 2025-26 நிதியாண்டிற்கு, ரூ. 500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- உலகளாவிய உற்பத்தித்திறனுடன் ஒப்பிடும்போது இந்தியாவில் பருத்தி மகசூல் குறைவாக உள்ளது (சுமார் 450-500 கிலோ/ ஹெக்டேர்). இந்த இயக்கம், பருத்தி உற்பத்தித்திறனை அதிகரிப்பது, நூற்பாலை (ஜவுளி) தொழிலுக்குத் தேவையான தரமான பருத்தி விநியோகத்தை உறுதி செய்வது, பருத்தி இறக்குமதி சார்பைக் குறைப்பது (குறிப்பாக உயர்தர நீண்ட இழைப் பருத்தி) ஆகியவற்றை இலக்காகக் கொண்டுள்ளது.
- பருத்தி இயக்கத்தின் பிற நோக்கங்களாவன: விவசாயிகளுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் தகவல்களை வழங்குதல், இந்தியாவில் பருத்தி உற்பத்தித்திறனை அதிகரிப்பது, குறிப்பாக காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற உயர் விளைச்சல் மற்றும் உயர்தர இழைகளைக் கொண்ட பருத்தி இரகங்களை உருவாக்கி மகசூல் மற்றும் தரத்தை மேம்படுத்துவது, மேம்படுத்தப்பட்ட விதைகள் உற்பத்தி, அடர் பருத்தி நடவு முறை, பயிர் சுழற்சி போன்ற சிறந்த வேளாண் சாகுபடி முறைகளை பருத்தி வளரும் மாநிலங்களில் செயல்விளக்கங்கள்/ வேளாண் விரிவாக்கம் மூலம் பரப்புதல் மற்றும் பருத்தி விவசாயத்தில் நிலைத்தன்மையை உருவாக்குதல் ஆகியனவாகும்.
- இந்த இயக்கத்தில், மிக நீண்ட இழைப் பருத்தி (ELS) இரகங்களின் சாகுபடியில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.
- திட்ட செயலாக்க முகமை: மத்திய வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறை (DARE) இத்திட்டத்தின் செயலாக்கத் துறையாகவும், மத்திய ஜவுளி அமைச்சகம் ஒரு துணை துறையாகவும் இருக்கும்.

## 25.3 உயர் விளைச்சல் விதைகளுக்கான தேசிய இயக்கம் (NMHYS)

- காலம்: 2025–26 பட்ஜெட் உரையில் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டம் 7 ஆண்டுகள் (2025–30) நடைபெறும்.
- நிதி ஒதுக்கீடு: ரூ. 100 கோடி.
- ஆராய்ச்சி வலுப்படுத்தல்: அதிக விளைச்சல் தரும், பூச்சி எதிர்ப்பு மற்றும் காலநிலை மாற்றத்தை தாங்கும் விதைகளை உருவாக்கும் ஆராய்ச்சிகளை ஊக்குவித்து, இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் வளங்குன்றா நிலைத்த வேளாண் செயல்முறைகளை உறுதி படுத்துதல்.
- விதைத் துறையை மேம்படுத்துதல்: அரசு மற்றும் தனியார் துறைகளில் பங்களிப்போடு இந்தியாவின் விதைத் துறையை மேம்படுத்துதல்.
- வணிக ரீதியாகக் கிடைக்கும் விதைகள்: 2024 ஜூலை மாதத்திலிருந்து வெளியிடப்பட்ட 100-கும் மேற்பட்ட பயிர் இரகங்களின் தரமான விதைகளை வணிக ரீதியாகக் கிடைக்கச் செய்தல்.
- பயிர் இரகங்களின் மரபணு மற்றும் புறத்தோற்ற ஆய்வுகளை மேற்கொள்ள தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை- பிராந்திய சேவை ஆய்வகங்களை நிறுவுதல்; விதை உற்பத்தி மற்றும் விதை ஆய்வுக்கான நவீன உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.

- முக்கிய பயிர்களில் சிறப்பு ஆராய்ச்சி மேற்கொள்ளல்: பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், மக்காச்சோளம் (பயோ எத்தனால் உற்பத்திக்காகவும்), மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட காய்கறி பயிர்கள்.
- செயலாக்க மையங்கள்: ICAR நிறுவனங்கள் பல்வேறு பிராந்திய தகைசால் மையங்கள் மற்றும் மாநில வேளாண் பல்கலைக்கழகங்களுடன் (SAUs) இணைந்து, கூட்டு பங்கேற்பு முறையில் விதை ஆராய்ச்சியை மேற்கொள்ளும்.

**ஆதாரங்கள்:**


- https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=2099411
- https://www.pib.gov.in/PressReleaseIframePage.aspx?PRID=2098404
- https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=2177847








ISBN: 978-93-85267-50-5